உரிமையும் — — கடமையும்

ம. ராதாகிருஷ்ண பிள்ளை, பி. ஏ., பி. எல்.

அல்லயன்ஸ் வெளியீடு

அல்லயன்ஸ் அரிய வெளியீடுகள்

கதைக் கோவை - முதல் தொகுதி

40 எழுத்தாளரின் சிறுகதைகள் 40

"ஹிந்து" உதவி ஆசிரியர் நா. ரகுநாதன், எம். ஏ., பி. எல்., அவர்கள், இத் தொகுதிக்கு எழுதியுள்ள முன்னுரையின் சாரம் :

* இப்புத்தகத்தில் பல எழுத்தாளர்கள் பலவிதத் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். * இக்கதைக் கோவையில் அடங்கிய கதைகளில் அத்தகைய ஜீவகளை நிரம்பியிருக்கிறதை அறிஞர் நன்குணர்வார்கள். இந்த 40-கதைகளும், தமிழ்நாட்டின் அன்பையும் மதிப்பையும் பெற்ற எழுத்தாளர்களாலே எழுதப்பட்டவை. * இந்த 40-கதைகளில் காணப்படும் பாவ புஷ்டியும், வைசித்திரியமும், உலகப்போக்கின் சூட்சுமங்களும், இயற்கை அழகும், கருத்தோத்த நடைச்செல்வமும் வியப்பை அளிக்கின்றன. இந்த ஊக்கத்தை விருத்தி செய்து, இக்கதைக் கோவை எழுத்தாளர்கள் மேன்மேலும் கற்பனா சக்தியைக் காட்டவும், புதுப்புது எழுத்தாளர்கள் வெளிவரவும், இப்புத்தகம் பேருதவி செய்யக்கூடும் என்பதைத் தமிழ் அபிமானிகள் உணர்ந்து இப்புத்தகத்தை ஆதரித்தலே இதன் பிரசுரகர்த்தர்கள் தமிழ்த்தாய்க்குப் புரிந்து வரும் அரிய தொண்டுக்குத் தகுந்த கைம்மாறாகும்.

கதைக் கோவை - இரண்டாம் தொகுதி

50 எழுத்தாளரின் சிறுகதைகள் 50

எஸ். வி. வி. அவர்கள் எழுதியுள்ள முன்னுரையின் சாரம் :

* கதைக் கோவையின் முதல் தொகுதிக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்ட புகழைப் பார்த்தபோது தமிழர்களுக்கெல்லாம் பெருமையாகவே இருந்தது. * வேறு வேறு சுவைகளை இத் தொகுதியில் உள்ள கதைகளில் காணலாம். * இத் தொகுதியில் பெண்மணிகள் 11 பேர்களின் கதைகள் இருக்கின்றன வென்பதை நினைக்கும்போது நமக்கு ஸந்தோஷம் அளவுக்கு மீறி உண்டாகிறது. இயற்கையான கருத்தும், இயற்கையான நடையும், பெண்மை நலம் கனிந்த போக்கும் அவற்றில் உள்ளன. அவைகளுக்குள்ளே தனித்தனியான சுவை வேறு.

கதைக் கோவை - மூன்றாம் தொகுதி

60 எழுத்தாளரின் சிறுகதைகள் 60

சென்னை, ஸர்விஸ் கமிஷன் அங்கத்தினர், திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள் எழுதியுள்ள முன்னுரையின் சாரம் :

* * * பல எழுத்தாளர்களின் கதைகளை ஆராய்ந்து அவற்றுள் சிறந்தவற்றைத் சேர்ந்து தொகுத்து நல்ல முறையில் அழகாக வெளியிடும் இந்தத் தொண்டை அல்லயன்ஸ் கம்பெனியார் மேற்கொண்டு தமிழ்நாட்டின் பாராட்டை முன்பே பெற்றிருக்கிறார்கள். கதைக் கோவையின் முதல் இரண்டு தொகுதிகளும் சிறந்த வெளியீடுகளாக நிலவுவதைத் தமிழர்கள் நன்கு அறிவார்கள். இயல்பாகவே பாராட்டுவதற்குரிய இந்த வெளியீடு இந்த யுத்த காலத்தில் இவ்வளவு சிறப்பாக அமைந்ததற்குக் காரணமான இதன் பதிப்பாளரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தமிழ்நாட்டார் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

உரிமையும் கடமையும்

உரிமையும் கடமையும்

(கட்டுரைகள்)

சென்னை மேயர் :

ம. ராதாகிருஷ்ண பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் : : சென்னை

உரிமை பதிவு] 1945 [விலை ரூ. 2/-

பொருளடக்கம்

Printed by Sadhu Press, Royapettah, Madras Q. H. No. M. S. 115 for The Alliance Company, Madras Q. H. No. M. S. 109—1100 Copies—17-11-45

முன்னுரை

தமிழ்நாடெங்கும் புத்துணர்ச்சி ததும்பி வழிகிறது. தமிழர் மனம்பல பூத்துப் புதுமணம் வீசக் காண்கிறோம். எதிர்பாராத வர்களை எல்லாம் இந்த இன்பம் பூங்காவில் காண்கிறோம். சிலபோது ஒன்று சேர்ந்தும், சிலபோது முரணிநின்றும் அனைவரும் தமிழ்ப் பொழிலை வளர்க்கின்ற காட்சி கண்டுகளிக்கத் தக்கதொரு காட்சியே ஆகும். இங்கு என்னுடைய நண்பர் இராதாகிருஷ்ணனும் ஓய்ந்த போதெல்லாம் உலாவிப் புதிய பாத்திகளை அமைத்தும், புதிய வாய்க் கால்களை வெட்டியும், பழங்காலை மறைத்த தூர் வாரிப் புதுக்கியும் வரக் காண்கிறோம். ஆண்டில் இளையராயினும் அரசியலிலும் சமுதாயத் தொண்டிலும் ஈடுபட்டுச் சென்னை நகராண்மைக் கழகத் தலைவர் என்ற வகையில் நகரத் தந்தையாராக விளங்குகின்றார். பலபல துறை களிலும் சென்றுலாவிய இவர் மனம் அங்கெழுந்த பலபல கருத்துக் களையும் பச்சைத் தமிழில் வெளியிட வந்தது நமது நல்ல காலமே ஆம். உரிமை கடமை பொருளாதாரம் பூண்டித் தேக்கம் போன்ற புதிய ஒட்டுமாங்கனிகளும் இவர் பாத்தியில் பழுக்கக் காண்கிறோம். கம்பனும், ஆண்டாளும், திருத்தக்கதேவரும், சாத்தனுருமாம் பழைய ஆலமரங்களின் உள்ளழகைக் காட்டவும் உடன்வருகின்றார். இவர் அமைத்த செய்குன்றிலிருந்து மகாபலிபுரம், பண்டைத் தமிழர் அரசியல் முதலிய பழங் காட்சிகளையும் காணலாம். பழமையும் புதுமையும் ஒன்றாகிச் செல்வதனை இவர் நடையிலும் காண்கின்றோம். இவரது தமிழுள்ளம் வாழ்க.

அண்ணாமலைநகர்,
14—11—1945

தெ. பொ. மீனாக்ஷிசுந்தரன்

ஆசிரியர் குறிப்பு

'உரிமையும் கடமையும்' என்ற கட்டுரை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. பால் பண்ணை, பூண்டித் தேக்கம், கம்பர் கண்ட வீரம் என்னும் கட்டுரைகள் முறையே சக்தி, கலைமகள், ஹநுமான் முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தவை. 'பண்டைத் தமிழர் அரசியல்' குமரி மலரில் வெளிவந்தது. 'மகாபலிபுரம்', 'திருப்பாவை' ஆகிய கட்டுரைகள் முறையே 'சரித்திரக் கட்டுரை'ப் போட்டியிலும் சமயக் கட்டுரைப் போட்டியிலும் 1930, 1931 ஆண்டுகளில் எனக்கு முதற் பரிசு, வாங்கிக்கொடுத்த கட்டுரைகள். இவற்றில் மணிமேகலையும் பௌத்தமும் என்ற கட்டுரையை எழுத எனக்குப் பேருதவியா யிருந்தவர் பௌத்த சமய நூல்களை நன்குணர்ந்த ஒரு பெரியார். அவருக்கு எனது நன்றி. அடியேனுடைய வியாசங்களைத் தமிழுலகம் அன்புடன் வரவேற்று எனக்கு ஊக்கம் அளிக்கும் எனக் கருதுகிறேன்.

சென்னை
14—11—45

இப்படிக்கு:
ம. ராதாகிருஷ்ணன்.

உரிமையும் கடமையும்

உரிமை, கடமை என்ற சொற்கள் விரிந்த பொருளை உடையன. கடமை, உரிமைகளைக் கொண்டுதான் நாம் உயிர் வாழ முடிகின்றது. முற்றிய கடமைகளே நமக்கு உரிமைகளைத் தருகின்றன. எனவே இச் சொற்கள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பலவற்றைக் குறிக்கின்றன. உரிமை, கடமை என்பவற்றை அறிவது பிழைக்கும் வழியை அறிவதாகும்.

உலகம் பலவிதம் என்பது பழமொழி. வெவ்வேறு நாடுகளில் வாழும் மக்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றிய வண்ணம் சமூகங்களையும் அரசாங்கங்களையும் அமைத்துக்கொள்கின்றனர். சமூகங்கள் காலப் போக்கில் மாறுபாடு அடைகின்றன. சில சமூகங்கள் நன்முய் வாழாமல் மூப்படைந்து அழிந்ததையும், சில என்றைக்கும் மூவாமல் ஓங்கி நிற்பதையும் நாம் உலக சரித்திரத்தினின்று அறிகிறோம். உலகத்தார் அனைவரும் உரிமை கடமைகளைப் பெற்றுள்ளார். ஆகவே இவை இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு பொருள் வேறுபடுகின்றன.

கடமைக்கும் உரிமைக்கும் உரிய பொருளை விளக்க வெளிவந்துள்ள நூல்கள் பல. பெரியோர் யாவரும் இவ்விஷயத்தைப் பற்றி நெடிது சிந்தித்திருக்கின்றனர். ஆயினும் இவற்றை முற்றும் உணர்ந்தவர் இல்லை. உணர முயன்றவரில் பலர்

இடர்ப்பட்டே போனூர் என்பதற்கு மனித சமூகத்தின் நிலையில் சான்றுகளைக் காண்கிறோம்.

சமூகத்தை ஆதரவாகக்கொண்டே எவ்வுயிரும் வாழ்கிறது. அவ்வாழ்க்கை நடப்பது, உரிமை கடமைகளின் சேர்க்கையினுல் தான். இவ்வுண்மையை அறியாமல் கடமையினின்றும் தவறுவதையும் உரிமையைக் கேட்பதையும் நாம் குழந்தைகளிடம் காண்கிறோம். பெரியோர்களே கடமையில் தவறியதாலும், கூடா உரிமையை நாடியதாலுந்தான், இன்றைக்கு உலகம் முழுவதும் நிலை அறியாமல் தவிக்கிறது என்று அறிந்தோர் பேசுவதையும் கேட்கிறோம். இப்பொழுதுதான் நின்ற கொடியயுத்தம் ஜெர்மனியரின் மண்ணாசையால் வந்தது என்கிறார் சிலர். ஜெர்மனியர் விருப்பங்களுக்கெல்லாம் ஆங்கிலேயர் இணங்கிப் போனதனுல்தான் இப்பெருங் கேடு விளைந்தது என்பர் மற்றும் சிலர். அமெரிக்கர் எட்டி நின்று வேடிக்கை பார்த்துவந்ததே இதற்குக் காரணம் என்பாரும் உளர்.

நம்முடைய கடமை, உரிமைகள் எவ்வளவு சிக்கலானவை என்பதை இவற்ருல் அறிகின்றோம். ஆயினும் நம் சமூகத்தார் அனைவரும் இவற்றின் எளிய பொருளையேனும் அறியச் செய்வது நமது கடமையாகும்.

ஒருவன் நீதி முறையில் எதைக் கொள்ளலாமோ, அது அவனது உரிமை என்னலாம். எதை அவன் கொடுக்க வேண்டுமோ அது அவனது கடமை எனப்படும்.

இதை விளக்க, ஓர் உதாரணத்தைக் கவனிப்போம். ஒருவன் என்னிடம் வேலைசெய்து கூலி பெறுகிறுன். அவன் கடமைசெய்து உரிமை பெறுபவன் ஆகின்றுன் அல்லவா? இதில், வேலை அவனுக்குக் கடமை என்ருலும், அது எனக்கு உரிமை ஆகிறது. கூலி கொடுப்பது என் கடமை; அதைப் பெறுவது அவனுக்கு உரிமை ஆகின்றது.

உரிமை கடமையாக மாறுவதும், கடமை உரிமையாக மாறுவதும், இவை இரண்டும் சேர்வதன் பயனுக ஒரு காரியம் நிகழ்வதும் இவ்வாறு அறிய வரும்.

நான் ஒன்றை வாங்கும்பொழுது அப்பண்டம் எனக்கு உரிமை ஆகிறது. அதன் விலை கடைக்காரனுக்கு உரிமையாகிறது.

இவ்வுதாரணங்களில் கூலியும், விலையும், பண்டமும், வேலையும் கொள்பவர்க்கு உரிமையாய், கொடுப்பவர்க்குக் கடமையாய் நிற்கின்றன.

கொள்ளலை அளவிடுவது உரிமை. கொடுத்தலுக்கு அளவுகோல் கடமை. இவை இரண்டும் சமமாக இருக்கையில்தான் நாம் இவற்றை ஒன்று சேர்த்துப் பயன்பெறக் கூடும். ஒரு வண்டியில் பூட்டிய காளைகள் இரண்டும் ஒத்து இழுத்தால் தானே வண்டி முன் செல்லும் ?

தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள உறவை ஆராய்ந்தால் சமூக வாழ்க்கை என்பதன் விரிந்த பொருளும் ஒருவாறு புலனுகும். இது ஒரு சிறிய காரியத்தின் பொருட்டுத் தோன்றி மறைகிற உறவு அல்ல. விடாமல் நிற்கின்ற உறவு இது. தாய், குழந்தையை ஊட்டி வளர்க்கிருள். குழந்தை, தன் விளையாட்டினுல் தாய்க்கு இன்பம் தருகிறது. இவர்கள், உணராமலே தம்தம் கடமைகளைப் புரிகின்றனர்.

கணவனும் மனைவியும் இது போலவே, உரிமையை நாடாமல் பெற்றும், கடமையைத் தப்பாமல் செய்தும் ஒட்டி இணைந்து வாழ்கிருர்கள்.

பலர் சேர்ந்த ஒரு குடும்பத்தில் அவரவரும் கடமையைச் செய்வராயின் உரிமையைப் பெறுவர். ஓர் ஊரைச் சேர்ந்த அனைவருக்கும் இதுவே முறையாகும். தம் கடமை உரிமைகளை அவர் உணராவிடின், நலம் மிக்க வாழ்வைக் காணுர்.

ஒரு நாட்டில் பிறந்த மக்கள், ஒரு குடும்பத்தினரைப் போலவே, தம்தம் கடமைகளைச் செய்துகொண்டு இனிமை நிறைந்த வாழ்வைப் பெறலாம். இவ்வாறு வாழ்வதே சமூக வாழ்க்கை எனப்படும். வெறும் ஜனத்தொகை சமூகம் ஆகாது. அதைக் கூட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த ஜனங்களே ஒன்று சேர்ந்து, தங்களுக்கென ஓர் அரசாங்கம் அமைத்துக் கொள்வாராயின், அதன் மூலம் அவர் பெறக்கூடிய நன்மைகளுக்கு எல்லை இராது. அப்படி அவர் ஐக்கியம் ஆக மாட்டார் என்ருல், அந்நாட்டில் எவருடைய வாழ்வு நிலைத்திருக்கும் ? இவ்வுண்மையை எல்லோரும் அறியும் பொருட்டே, கவி பாரதியார் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" எனக் கூறுகிருர். "நாடு அழிந்தால் எவன் வாழ்வான் ? நாடு வாழ்ந்தால் எவன் அழிவான் ?" எனக் கேட்கிருர் ஓர் ஆங்கில ஆசிரியர்.

பிரஜைகள் தங்களுடைய சமூகத்திற்கு இயற்றும் கடமையும், அதனிடமிருந்து அவர் பெறும் உரிமையுமே நூல்களில் வகுத்துப் பேசப்படுகின்றன. சமூகத்துடன் அரசாங்கம் ஒட்டி நிற்கின்றது - உயிரைத் தாங்கும் உடம்புபோல். எனவே, அரசாங்கத்திற்கும் தனி மனிதனுக்கும் உள்ள உறவே கடமைகளாகவும் உரிமைகளாகவும் நிர்ணயம் செய்து, சட்ட புத்தகங்களில் பதிக்கப் பெறுகின்றது.

கடமைகளில் பல, வரியினுல் அளக்க இயலும்; ஆதலால் வரி செலுத்துவோர் கடமை தவருத பிரஜைகள் ஆவர். சட்ட வரம்புக்கு உள் நிற்றல் என்பது வரிப் பணத்தில் அடங்கக் கூடியது அன்று. இதுவும் ஒவ்வொரு தனி மனிதனின் கடமையாகும். சட்டங்களில் விலக்கப்பட்ட தொழில்களை விடுத்து, விதிக்கப்பட்டவற்றைக் கொண்டே, பிரஜைகள் பொருள் தேடலாம். யுத்தம் நேரும்பொழுது ராணுவ சேவை மக்கள் அனைவர்க்கும் கடமையாவதும் உண்டு. சமூகத்திற்கு எந் நாளும் துரோகம் நினையாமல் அதை ஆதரித்து நிற்பது எல்லாக் கடமைகளிலும் சிறந்ததாகும்.

'ஓட்டை' வழங்குவதும் ஓர் பொதுக் கடமை என்று சில நூலோர் கூறுகின்றனர். எல்லாப் பிரஜைகளும் வாக்குரிமை பெறுகின்ற நாகரிக வாழ்க்கையில் இதுவும் ஓர் கடமை யாதல் அழகே.

கல்வியோ செல்வமோ மிகுந்தோர் புரியவேண்டிய தனிக் கடமைகள் சில உள. மற்றவருடைய ஆதரவை நாடி, சட்ட சபைகளுக்குச் சென்றும், வேறு வகைகளிலும், நாட்டில் அநீதி வாராமல் காப்பது இவர்களது கடனுகும். எனினும் இது எந்த நாட்டிலும் ஓர் கட்டளையாக வழங்குவதில்லை. அரசாங்கத்தை நடத்தும் கட்சியினர் தோல்வி யுற்ருல், வெற்றி பெற்றவர் பொறுப்பை ஏற்று ஆட்சி நடத்தலும் கடமையே.

முன்னேறிய நாடுகளில், பிரஜைகள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுகின்றனர். அரசாங்கத்தின் சிறு பிழைகளையும் அவர் பொறுக்கின்ருர். ஆகையால், கடமைகளைச் சட்டம் ஆக்குவதும் அவற்றை மக்களிடம் இருந்து அரசாங்கம் பெறுவதும் எளிதாகின்றன.

இனி உரிமைகளைச் சற்று ஆராய்வோம். உண்ண உணவும், உடுக்கத் துணியும், தங்குவதற்கு வீடும், இவை போன்ற

வேறு சில சாதனங்களும் இல்லையேல் வாழ்க்கையும் இல்லை. இயற்கையாக அன்றி உடலுக்கு அழிவு நேருமோ அல்லது பொருள் கொள்ளை போகுமோ என்று குடிகள் அஞ்சுவதற்கு இடமிருப்பின், வாழ்க்கை நலம் குன்றி விடும். இதை நீக்குகின்ற காப்பு முறைகளும், தேவையாயுள்ள பொருளாதாரமும் மக்களுடைய உரிமைகள் எனப்படும். கல்வி, வைத்திய வசதி, போக்கு வரவுச் சாதனங்கள், தொழில்கள் என்பன உரிமைகளுள் அடங்கும்.

இவை உரிமைகள் அல்ல என்று எந்த அரசாங்கமும் கூருது. என்ருலும், பல நாடுகளில் மக்கள் இவ் வுரிமைகளை இழந்து அழிந்ததை உலக சரித்திரம் அறிவிக்கின்றது. இந் நாளிலும் லட்சக் கணக்கான மனிதர் வங்காளத்தில் உணவு கிடைக்காததால் மாண்டனர் அன்ருே?

இத்தகைய விபத்து நேரிடுவதன் மூல காரணத்தை அறிந்தாலன்றி இதிலிருந்து மனித சமூகத்தைத் தப்புவித்தல் இயலாது. பணம் சேர்ப்பதையே குறியாகக் கொண்டுள்ள மனிதர் எங்கும் இருக்கின்றனர். இவர், அரசாங்கங்களையும் வசப்படுத்தி விடுகின்றனர். இவருக்குத் தனி உரிமைகள் கிடைக்கின்றன. சிறிது காலத்தில் நாட்டின் நிலங்களும், வளங்களும் இவர் உடைமை ஆகின்றன. மற்ற எல்லாரும் இல்லாதார் ஆகிருர்கள். இக் காரணம் பற்றியே, மனிதர் திரள் திரளாக அழிகிருர்கள்; அல்லது நாட்டை விட்டு வெளியேறுகிருர்கள்; அல்லது சில பிரபுக்களுக்கு அடிமை ஆகிருர்கள்.

ஆகையால், அடிமைத்தனம் நீங்கிய வாழ்க்கையே முதல் உரிமை. அதுவே மனிதனது பிறப்புரிமை எனப் பெரியோர் கூறுகின்றனர். 'தடைப் படாது வாழ உரிமை இல்லையேல் மற்றவை எதற்கு?' என்ற கேள்வியே எங்கும் எழுகின்றது. "இஷ்டம்போல் வாழப் பிறக்கின்ற மனிதன், கட்டுக்கு உள்ளாவதே உலக வழக்குப்போலும்" என்கிருர் ஒரு மேல் நாட்டு அறிவாளர்.

பிறப்புரிமையாகிய சுதந்தரத்தைப் பற்றிக் கவிஞர்கள் பாடி யிருக்கிருர்கள். அதற்காக உயிரையும் கொடுத்த மேலோர் எண்ணுள் அடங்கார். நான்கு சுதந்தரங்கள் உலக மக்கள் அனைவருக்கும் வேண்டும் என்ருர் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு. பேசும் உரிமை, நினைத்த வகையில் கடவுளை வழிபடும் உரிமை,

வறுமை நீங்கிய வாழ்வு, அச்சம் தீர்ந்த வாழ்வு - என்பவை அவர் கூறிய நான்கும்.

மக்கள் கேடு இன்றி வாழ்வதற்கான உபாயத்தைப் பிரஞ் சுக்காரர் மூன்று வார்த்தையில் அடக்கி விட்டார். சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் - என்பதே அவருடைய அரசியல் மந்திரம்.

சுதந்தரத்தை அடுத்து வரவேண்டியது சமத்துவம். அதாவது, நாட்டில் எவருக்கும் ஏகதேச உரிமை கிடைத்தல் ஆகாது. நல்ல லாபம் தருகின்ற தொழில்களைச் செய்ய எல்லோருக்கும் உரிமை இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தன் நன்மையை நேர்வழியில் நாடும் பொழுது, இடையூறு நேராமல் அவனைக் காத்தல் நாட்டின் கடமை என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் நிபுணர்கள் முக்கிய உரிமைகள் என்ற கோட்டையை எழுப்புகிறார்கள்.

கடமையைப் பணமாகச் செலுத்த முடிவதுபோல் உரிமையைப் பணமாகப் பெறுவது இரண்டொரு காரியத்தில்தான் சாத்தியமாகிறது. வேலை அகப்படாமல் நிற்கும் தொழிலாளருக்கும் வயசு முதிர்ந்த ஏழைகளுக்கும் உபகாரச் சம்பளம் ஓர் உரிமையாகத் தரப்படலாம். மற்றெல்லா உரிமைகளும் பொது நன்மைகளாகவே கிடைக்கவேண்டும்.

உரிமைகளைத் தொகுப்பது எளிய காரியமன்று. சமூகத்தின் வளர்ச்சிக்குத் தக்கவாறே பிரஜா உரிமைகள் அமையும். பொதுக் கல்வி, தொழிற் கல்வி, தொழிலாளரின் ஊதியம், குடும்ப வாழ்க்கை, என்பன போன்ற பல துறைகளில் ஒரு நாட்டு உரிமைகளைப் போல் இன்னொரு நாட்டில் இல்லை. என்றாலும் ஒவ்வொரு சமூகமும், தன்னால் இயன்ற அளவு, வரியாகக் கொள்ளும் பணத்தைப் பொதுநல சாதனங்களாக மாற்றி, தன் மக்களுக்குக் கொடுத்தல் முறை என்றும், அரசியல் சட்டத்தில் அது வரையறையாக மொழியப்பெறல் வேண்டும் என்றும் நூலோர் கூறுகின்றனர்.

இந்திய சமூகம் வெகு காலமாய் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட அரசியல் சட்டத்தைக் கொண்டு இயங்கி வந்தது. அந் நிலைமை மாறுங்காலம் அணுகிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தை இந்தியர் அமைத்துக் கொள்வதுதான்

முறை என்று ஆங்கிலேயரும் ஒப்புக்கொண்டு விட்டனர். சில மாதங்களில் நாம் இவ் வேலையை, நம் பிரதிநிதிகள் மூலம் மேற்கொள்ளப் போகின்றோம். இது நம்முடைய தேச சரித்திரத்தில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

அரசியல் சட்டம், மற்றெல்லாச் சட்டங்களையும் தாங்கக் கூடியதாய் அமைய வேண்டும். ஆகையால் அதை இயற்றுவது அரும் பெரும் வேலையாகும். அச்சமயம் பலர் வெவ்வேறு உரிமைகளை வேண்டுவர். அவை அவ்வளவையும் விவரித்து ஓர் சாஸனமாகக் காட்ட வேண்டும் எனச் சிலர் பிடிவாதம் செய்வர். அதுதான் சிறுபான்மையோருக்குக் கதி என அவர் வாதாடுவர். பொதுவாக எல்லோரும் பெறக் கூடிய உரிமைகள் மட்டுமே சட்டத்தில் காணப்படவேண்டும் என்று வேறு சிலர் கூறுவர். இவை, ஓர் உறுதிமொழி ஆகாவிட்டால், அதிகாரம் செலுத்துபவர் பிரஜைகளின் உரிமைகளைப் பறிமுதல் செய்து விடக் கூடும். என்பது இவர்கள் வாதம் ஆகும்.

ஒரு நாட்டின் அரசியல் சட்டத்தைப்போல் மற்றொரு நாட்டின் சட்டம் இல்லை. சிலவற்றில் உரிமைகள் வெகு விரிவாகக் காணக் கிடக்கின்றன. உரிமைகளைப் பற்றி இங்கிலாந்தின் சட்டத்தில் எதையும் காணோம். உரிமைகளைச் சட்டத்தில் எழுதுவது என்பது, அவைகளுக்கு வரம்பு கட்டுவதே யாகும். எழுதாமல் விட்டுவைத்தால், வரம்பின்றிப் பல உரிமைகளைப் பிரஜைகள் பெறக்கூடுமென்பது ஆங்கிலேயரின் நம்பிக்கை.

நமக்கு உரிமைகள் வேண்டும். ஆயினும் அவை நிலையற்றவை. இங்கிலாந்திலேயே இப்பொழுது பல மனிதர், வீடுகளையும் வேறு பொருள்களையும் இழந்து நிற்பதை அறிவோம். உரிமைகளைப் பெருக்கிக் கொண்டே போவது முறையல்ல என்பதை இதிலிருந்து யாவரும் உணர வேண்டும். அப்படியே, பல உரிமைகள் கிடைத்தாலும், உடனே நாம் திருப்தி அடைவோமா? "ஆசைக்கோர் அளவில்லை" என்பது மிக உண்மையான பழமொழி. தவிர, ஒவ்வொருவனும் தனது நாட்டிற்கு இயற்றுகின்ற தொண்டு எவ்வளவோ அவ்வளவுக்கு மேற்பட்ட உரிமையை அவன் விரும்புவது நீதியாகாது. மிகுதியாக உரிமையை அவன் கொள்வானுகில் பின்பு. அதை இழந்தே விடுவான். ஒரு சாராருக்கு ஒன்றை உரிமை ஆக்குவதென்றால் பிற

மக்களுக்கு அது உரிமை இல்லாததாகிவிடும் என்ற மற்றோர் உண்மையைச் சிம்லா மகாநாட்டில் கண்டோம்.

வேண்டா உரிமையை வேண்டியே, மனிதர் வேற்றுமையையும் கலகத்தையும் உண்டாக்கி யிருக்கின்றனர். அவை காரணமாகவே நாடுகள் சிதைந்திருக்கின்றன. அவற்ருல் உண்டான இரண்டு யுத்தங்களில் சிக்கி, மனித வர்க்கம் முழுவதும் சீர்குலைந்தது இந்நாளிலேயே அன்ரே?

மனிதன் பல வித்தைகளைக் கற்றிருக்கிருன். மனிதனுய் வாழ்வது என்ற ஒன்றை மட்டும் இன்னும் அவன் அறிந்து கொள்ளவில்லை. "மனிதனுடைய கல்விகளில் உயர்ந்தது மனிதனே" என ஓர் அறிவாளர் எடுத்துக் கூறுகிருர். இதை நாம் அனைவரும் உணர்ந்தாலன்றி, "எமது நாடு, எமது அரசாங்கம், எமது சட்டம்" என்று நாம் பெருமை கொள்ள இயலாதாகிவிடும். மனிதன் பெருமை, அவன் மனத்தின் பெருமையளவே ஆகும்.

இப்பொழுது உலகெங்கும் ஒரு புத்துணர்ச்சி தோன்றி, ஸான்பிரான்ஸிஸ்கோவில் உருவம் பெற்றிருக்கிறது. ஐம்பது நாடுகள் சேர்ந்து, ஓர் உலக அரசாங்கத்தை அமைத்திருக்கின்றன. இது ஒன்றுதான் உலகில் சமாதானத்தைக் காக்கக் கூடிய ஆயுதம் என்பதை அறிந்து இதற்குப் பொருத்தமான பெயரும் கொடுத்திருக்கின்றனர். 'ஒன்று பட்ட நாடுகள்' (United Nations) என்பதே இதன் பெயர்.

உலக நன்மைக்கு, முன்னிலும் இப்பொழுது, நாடுகள் இன்றியமையாதன என்பது தெரியவே, சமூக முன்னேற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சி பல தேசங்களில் நிகழ்கின்றது. இவ்வைம்பது நாடுகளின் சமூகங்களில் மிகப் பெரிய மூவர் அல்லது நால்வர், உலகம் முழுவதற்கும் மேற்பார்வை இடுவது சரியாகும் என எண்ணுகின்றனர். சிறு நாடுகள் சேர்ந்து நிற்க விரும்புகின்றன. பற்றுகின்ற மதத்தால் அல்லது பேசுகின்ற பாஷையால் வேருக வாழ்ந்து வந்த நாடுகள் இனம் பற்றி அல்லது பொருள் பற்றி ஓர் பெரிய நாட்டுடன் ஐக்கியம் ஆவதை ரஷ்யாவில் காண்கிருேம். இங்கிலாந்தும் பிரான்ஸும் இரண்டறக் கலந்துகொள்ளக் கூடும். அமெரிக்கருடன் ஐக்கியம் ஆகவும் ஆங்கிலேயர் விரும்புகின்றனர்.

இதற்கு நேர் மாறுன கொள்கை இந்தியாவில் இடம் பெற்றிருக்கிறது. ஒன்ருகி நின்று வரும் நமது பெரிய நாடு இப்படியே நிற்குமா? அல்லது அது பல பகுதிகளாகச் சிதைந்து போகுமா? இதை நாம் விரைவில் அறிவோம். இந்தியா, உலகின் பெரிய நாடுகளில் ஒன்ருகவே இருப்பின், இந்தியர் வாழ்க்கை சீர் பெறும்; பிற நாட்டினர்க்கும் மன அமைதி கிடைக்கும். ஒரு நாட்டில் பல சமூகங்கள் வாழ்வது அருமை. மதம், பாஷை, இனம் என்பவற்றில் ஒன்றையே ஆதாரமாக்கி, இந்நாளில் சமூகங்கள் அமைக்க எண்ணுவதும் பேதைமை.

நாடு என்ற மரம் நாம் அளிக்கும் கடமை என்ற நீரைப் பருகுகிறது. அம் மரத்தில் உரிமைகள் என்ற மலர்கள் தோன்றி உடைமைகள் என்ற பழங்களாகின்றன. இவற்றைப் பிறர்க்கும் கொடுத்து நாமும் உண்டு இன்புறலாம்.

கம்பர் கண்ட வீரம்

"படிகொண்ட கீர்த்தி ராமாயணம் என்னும் பக்திவெள்ளம்" என்று புகழ்ந்தார்கள் இராமாயணத்தை நம் முன்னோர்கள். இஃது ஒரு புண்ணிய கதையாக இந்துக்களுள் பெரும் பான்மையோரால் போற்றப்பட்டு வந்தது. இக்கதை அடங்கிய நூலை வடமொழியில் முதல் முதல் இயற்றியவர் ஆதி கவி எனப் புகழ்பெற்ற ஸ்ரீ வான்மீகி முனிவர். இராம கதை மக்கள் உள்ளத்தை ஈர்த்தது. இராமாயணம் ஆதியில் வடமொழியில் மட்டும் இயற்றப் பெற்றிருந்ததால், அம்மொழி யில் அறிவில்லாத பலருக்கு அதனைப் படித்து அனுபவிப்பது கடினமாயிற்று.

தமிழ்ப் புலவர்கள் சங்க காலத்திலேயே வடமொழியில் இருந்த இராம கதையைத் தமிழ்மொழியில் நூலாகச் செய்து மேற்சொன்ன குறையைப் போக்கினர். சங்க காலத்திலேயே இராமாயணம் தமிழில் இருந்ததற்குச் சான்று உண்டு. தொல்காப்பிய உரைகளிலே அச் சங்க காலத்துத் தமிழ் இராமாயணத்தின் சில பகுதிகள் உரையாசிரியர்களால் மேற் கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன.

வெண்பாவினாலாகிய இராமாயணம் ஒன்றும் தமிழில் இருந்ததாகத் தெரிகின்றது. யாப்பருங்கல விருத்தியுரைகாரர், "பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா" என்ற சூத்திர உரையில், 'பலவடியானும் வந்த பஃறொடை வெண்பா, இராமா யணமும் புராண சாகரமும் முதலாய செய்யுட்களைக் கண்டு கொள்க' என்று கூறுமாற்றால் அஃது அறியக்கிடக்கின்றது.

ஸ்ரீ புராணம் என்ற மணிப்பிரவாள நூலில், அகவற்பா விருத்தப்பா முதலியவற்றில் இராம கதை அடங்கிய சில பாடல்கள் காணப்படுகின்றன.

கம்பர் காலத்தில் மேற்குறித்த தமிழ் இராம கதைக ளெல்லாம் வழக்கற்றுப் போயின. கம்பரது காலம் தமிழ் நாட்டில் தமிழர் இராமனைத் துணிவுடன் தெய்வமாகக் கொண்டு போற்றிய காலம். திருமாலின் அவதார மூர்த்தி

யாகவே இராமனை நம் முன்னோர் கருதினர் என்பதற்குச் சான்றுகள் பல காட்டலாம். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், "தொல்லிலங்கை கட்டழித்த சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே, திருமால்சீர் கேளாத செவி என்ன செவியே" என்று போற்றுமாற்றால் சங்ககாலத் தமிழர்களே இராமனைத் திருமாலெனக் கருதிப் போற்றின ரென்பது வெள்ளிடைமலை. நான்கு முதல் எட்டாம் நூற்றாண்டுவரையில் இருந்த ஆழ்வார்கள் பலரும் இராமனைத் திருமாலின் அவதார மூர்த்தியாகப் போற்றிப் பண்சுமந்த தோத்திரப் பாடல்கள் இயற்றிச் சென்றுள்ளமை யாவரும் அறிந்த ஒன்று.

கம்பர் இராம பக்தர்; இராமனுடைய குணக்கடலிலே திளைத்தவர். 'காசில் கொற்றத் திராமன் கதையை ஆசைபற்றி அறையலுற்றேன்' என்று அவர் கூறுகின்றார். 'நாராயணனுடைய பாராளும் பாதத்தை நன்னெஞ்சர் பணிந்தேத்துமாறு அறியேன்' என்பது அவருடைய பணிவுரை. 'அவனுக்காராதனம் என் அறியாமை' என்பது அவருடைய வினய மொழி. தமிழிலக்கியத்தை யெல்லாம் வற்றக் குடித்த அவர் சிந்தை, இராமனுடைய புகழ் வெள்ளத்தில் தோய்ந்து நின்றது. சடையப்ப வள்ளல், கம்பரைப் பார்த்து, அப்புகழ் வெள்ளத்தில் தமிழறிவுடையோ ரெல்லாம் தோயுமாறு உதவுக என்றார். சடையப்பரருள் நமக்கு இராமகதை என்ற ஒரு சிறந்த நூலைத் தந்தது.

'நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலை இராமன் தோள்வலி' கூறுவது கம்பராமாயணம்.

காவிய இலக்கணம்

வீரச்சுவை அமையாத காவியம் முன்னணியில் வைத்துப் போற்றத்தக்கதும், ஒப்புயர்வற்றதும் ஆகாது. ஆண்மக்களுக்குக் கல்வி, உடலுரம் முதலியவற்றால் அமையும் வீரத்தைப்போன்று பெண்மக்களுக்கும் ஒழுக்கத்தின் உயர்வு, கற்பின் திண்மை முதலியவற்றால் மிளிரும் வீரமும் உண்டு. சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவனுடைய உடல் ஆண்மையையும் கண்ணகியின் கற்பு வீரத்தையும் காணுதல்போலக் கம்பராமாயணத்திலும் இராமன் முதலிய ஆண் மக்களின் கல்வி உடலுரம் முதலிய

வற்ருல் தோன்றும் வீரத்தையும், சீதை முதலிய பெண்மணி களின்பால் ஒழுக்கத்தினுயர்வு, கற்பின் திண்மை முதலிய வற்ருல் மிளிரும் வீரத்தையும் காணலாம்.

பெருமிதமாகிய வீரச் சுவையையுடைய நாடே அயல் நாட்டார்பால் அச்சமின்றி வாழும். அச்சத்தை அறவே நீக்கிச் சுதந்தரத்துடன் வாழும் நாடே அறம் பொருள் இன்பங்களை முறையே அடைந்து இம்மைப் பயனை இனிதுறத் துய்த்து மறுமைப் பயனுக்குரிய சாதனங்களை எளிதில் அடையும். இக் காரணம் பற்றியே தொல்காப்பியரும், அச்சத்திற்கு மறுதலையாகிய பெருமிதத்தினை அதன்பின் வைத்தார். இக் குறிப்பைப் பேராசிரியரும் விளக்கியிருத்தலைத் தொல்காப்பியத்துள் காண்க. எனவே, வீரமே நாடு, வீரமே மக்கள், வீரமே உயிர் என்பது வெள்ளிடை மலை. இக்கருத்தைக் கொண்டே பிற்காலத்துக் கவிஞராகிய பாரதியாரும்,

> "வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
> வீரம் செறிந்த தமிழ்நாடு"

என விளக்கிப் போந்தனர்.

இனி, புவியரசரும் புகழும் மதிப்பினையுடைய கவியரசரும் கல்வியிற் பெரியாருமாகிய கம்பநாட்டாழ்வார், தாம் யாத்துள்ள சுமார் பத்தாயிரத்தைஞ்ஞூறு பாக்களுள் ஆங்காங்குக் கதைப் பாத்திரத்திற்கு அமையப் பல காரணங்களால் தோன்றப்பெற்ற வீரச்சுவையை வனப்புற அமைத்துள்ளதை ஆராய்வோம்.

வீரச்சுவையின் இலக்கணம்

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனப்படும் எண்வகைச் சுவைகளுள், தலை சிறந்து விளங்குவது பெருமிதச் சுவையாகும். இச்சுவை, காவியப் பண்பை எழிலுறச் செய்வதற்கு இன்றியமையாததாகத் திகழ்கிறது. இப் பெருமிதம் கல்வி, தறுகண், புகழ், கொடை முதலியவற்றின் காரணமாகப் பிறக்கும். ஆசிரியர் தொல்காப்பியரும்,

> "கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
> சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

(தொல். மெய்ப்பாட்டியல், 9)

எனக் கூறினர். 'சொல்லப் பட்ட பெருமிதம் என்ற இலேசி ஞல், காமம் முதலியவற்றைப் பற்றிவரும் பெருமிதச் சுவை யினையும் கொள்க' என்ருர் அந்நூலுக்கு உரைகண்ட பேராசிரியர்.

'பெருமிதம்-வீரம்; கல்வி-தவம் முதலிய விச்சை; தறுகண்-அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமை; இசைமை-இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவனவற்றைப் புரியாமையால் தோன்றும் புகழ்; கொடை-உயிர் உடல் உறுப்பு பொருள் முதலியவற்றைச் சமயம் நேர்ந்தபோது பிற ருக்குக் கொடுத்தல்' என்ற கருத்துப்படப் பேராசிரியர் விளக்கி ஞர். எனவே, வீரமானது பல காரணங்களால் பிறக்கும் என்பதை அறிகிருேம்.

கல்வி பற்றிய வீரம்

இராம லக்குமணர் விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச் சென்றனர்; அவ் வரசனின் ஆத்தான மண்டபத்தில் அமர்ந்தார். ஆங்கு வைக்கப்பட்டிருந்த பேராற்றல் வாய்ந்த சிவதனுசை இறுத்தவரே சீதையை மணக்கலாம் என்ற நியதியிருந்தது. ஆங்கமர்ந்திருந்த மன்னர்களுள் பலர் அவ் வில்லை எடுக்கவோ எடுத்தபின் வளைக்கவோ முடியாதென்கிற கருத்தை உட் கொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவண்ணமா யிருந் தனர். அச்சமயத்தில், விசுவாமித்திரன் காட்டிய முகக் குறிப் பால் இராமன் தான் கற்றிருந்த வில் வித்தையின் வீரத்தைக் காட்டப் பொலிவுடன் எழுந்தான்; மடங்கலும், மால்விடையும், பொன்மலையும், கைம்மலையும் ஆகியவை நாணுமாறு கம்பீர மாக வில்லிருந்த இடத்திற்குச் சென்ருன். அவன் அவ்வில்லைப் பின்னர்ச் சீதைக்குச் சூட்டப்போகும் பூமாலையைப்போல எளி தாக எடுத்தான்; உடனே, தன் விற்கல்வியின் ஆற்றலால் எளி தாகவும் விரைவாகவும் ஒடித்தான். அச்சபையில் இருந்தவர்கள், இராமன் வில்லை எடுத்ததைக் கண்டனர். அஃது இற்றதைக் கேட்டனர். ஆனல் அவன் வில்லை எவ்வாறு தாளில் வைத் தான், எவ்வாறு நாணை வில் நுதியில் பூட்டினுன் என்பவற் றைக் காணவில்லை. இராமனுடைய கல்வி பற்றிய இவ் வீரத்தைக் கம்பர்,

" நடுத்திமை யாமல் இருந்தவர், நாளில்
மடுத்ததும், நாணுநி வைத்ததும் நோக்கார் ;
கடுப்பினில் யாரும் அறிந்திலர், கையால்
எடுத்தது கண்டனர் ; இற்றது கேட்டார். "

(பால - கார்முகப் - 34)

எனக் காட்டினர்.

தறுகண்மை பற்றிய வீரம்

வேள்வியைக் காக்கும் பொருட்டு இராமலக்குமணரை அழைத்துச் சென்ற விசுவாமித்திரன் இடைப்பட்ட ஒரு பாலை நிலத்தை அடைந்தான். முன் ஒரு நாடாயிருந்து, பிறகு கொடிய பாலையாக அது மாறியதென்று முனிவன் கூறக் கேட்ட இராமன் அம்முனிவனை நோக்கி, " தவப்பெருந் தகையீர், 'பழிபடர் மன்னவன் படைத்த நாட்டினைப்போல' இந்நாடு அழிந்து திரிந்ததற்கு யாது காரணம்?" என்று வினவினன். அதற்கு அம் முனிவன், "ஆடவர் பெண்மையை அவாவும் அழகிய தோள்களையுடைய இராமா, உலோபகுணம் ஒன்றே சிறந்த குணங்கள் பலவற்றையும் அழிப்பது போன்று, தாடகை என்னும் ஓர் அரக்கி இச் செழிப்பினை உடைய தாயிருந்த மருத வைப்பினைப் பிறர் பழிக்கத்தக்க பாலையாக அழித்து மாற்றினள்" என்று கூறினன். "அத்தகைய அரக்கி உறையுமிடம் யாங்குளது? " என்று காகுத்தன் கேட்க, அதற்கு முனிவன், " எதிரில் தோன்றும் மலையில்தான் அவ் வரக்கி உறைகின்றாள் " என்று கூறிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு கறுத்த மலை வருதலைப் போன்றும், விகார வடிவத்தோடு பழியே ஒரு தோற்றங் கொண்டு வருதலைப்போன்றும், நிலமும் மலையும் பிளவுபட இடித்த குரலோடும் அத்தாடகையாகிய அரக்கி அம் மூவரையும் எதிர் நோக்கி வந்தாள். வந்தவள் அவர்களைக் கொல்லவும் முயன்றாள். அச் சமயத்திலும், இராமன் அவ்வரக்கியைப் பெண்ணென மனத்திடைக்கொண்டு அவளுக்கு யாதோர் இடையூறும் புரிய வெட்கிச் சிறிது தயங்கினன். பின்னர், முனிவன் அவளுடைய கொடுந்தொழிலையும் அவளைக் கொல்லுதற்குரிய நியாயங்களையும் விரைவாகவும் நாக்குழறவும் கூறிக்கொண்டிருந்தான். அதுகாலை அக்கொடியாள் காலன் பாலிருந்து பறித்த ஒரு கொடிய சூலத்தைத் திரித்து அவர்கள்

மீது ஏவினுள். அவள் செயலை நோக்கி இராமன் உடனே தன் வில்லை வளைத்து அம்பினைப் பெய்து விரைந்து வந்து கொண்டிருந்த சூலத்தைத் துண்டமாக்கித் தன் வீரத்தைக் காட்டினுன். இதனைக் கம்பர்,

" மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததும் கண்டிலர்
காலனைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூலம் அற்றன துண்டங்கள் கண்டனர் "

(பால - தாடகைவதை - 70)

என்று காட்டினர்.

பின்னரும், அக் கொடியவள் மலைக்கற்களை வாரி அவர்கள் மீது மாரிபோல் பெய்தாள். அவையனைத்தையும் இராமன் தன் வில் ஆற்றலால் தடுத்து அவளையும் கொன்று மலைபோல் வீழ்த்தினுன். இங்கே, அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமல் காட்டுவதாகிய தறுகண்மையால் வந்த பெருமிதத்தை இராமன்பால் காண்கிறோம். நிற்க.

'பெண்ணைக் கொலைபுரிதல் தகுதி உடைய செயலா? அஃதொரு வீரமாகுமா?' என்கிற ஐயப்பாடுகள் சிலருக்குத் தோன்றலாம். இக்கருத்தையும் கம்பர் உணர்ந்துதான் போலும், பின்னர் ஓரிடத்தில் இராமனைப் பகைவனுகக் கருதியிருந்த கூனி வாயிலாக,

" ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் "

(அயோத் - மந்தரை சூழ்ச்சி - 50)

எனக் காட்டினுர்.

காய்தல் உவத்தல் அகற்றி உத்தம நிலையில்நின்று ஆராயின் இக்கொடியாளாகிய பெண்கொலை குற்றமுடைத்தாகாதென்பது தெரியவரும். இக்கருத்தைக் கம்பர் ஆங்காங்குக் காட்டுகிற நிலையினின்று ஆழ்ந்துநோக்கின் உண்மை வெளிப்படும். அவற்றை இனி நோக்குவோம் :

" பெண்ணென வுற்ற பெரும்பழிக்கு நாணும் "

(அயோத் - கைகேசி சூழ்வினை - 15)

என்று கைகேசியைக் கொல்லத் துணிந்த தயரதன் வாயிலாகவும்,

" பெண்கொலே செய்கை பெரும்பழி யன்ருே "

(யுத்த - மாயா சீதை - 35)

என்று மாயா சீதையைக் கொல்லத் துணிந்த இந்திரசித் தனை நோக்கிக் கூறிய அனுமன் வாயிலாகவும்,

"மங்கையர் குலத்து ளாளேத் தவத்தியை முனிந்து வாளால்
சங்கையொன் றின்றிக் கொன்ருன் குலத்துக்கே தக்கான் என்று
கங்கையம் சென்னி யானும் கண்ணனும் கமலத் தோனும்
செங்கையும் கொட்டி யுன்னேச் சிரிப்பரால் சிறியன் என்ரு "

(யுத்த - இராவணன் சோகப் - 58)

என்று மேகநாதன் இறந்ததைக் கண்ட இராவணன், " என் மகன் மாய்தற்குக் காரணம் சீதையேயாவாள். அவளைக் கொன்று துண்டிப்பேன் " எனக் கூறிக் கற்பரசியைக் கொல்ல வாளைக் கையில் ஏந்தி அசோகவனம் நோக்கிச் சென்றவனே மறித்து அறிவுரை கூறிய மகோதரன் வாயிலாகவும் கம்பர் கூறுதலால், பெண் கொலே தகாதென்பதை அறிகிருேம்.

இங்கே காட்டப்பட்ட பெண்மணிகளுள், கைகேசி, தயரதன் தனக்குத் தந்த வரத்தைக் கேட்டாளே யொழிய அவள் அவனுக்குச் செய்த தவறு யாதொன்றும் இல்லை. அரக்கன் வஞ்சித்துக் கவர்ந்து வந்த சீதைக்கு அவன் பேரிடுக்கணைப் புரிந்து வந்தானே தவிர, அவள் அவனுக்குச் செய்த தீமை யாதொன்றும் இல்லை. அப்பெண்மணிகள்மீது சிறிதும் குற்றம் காண இடமில்லை. அத்தகையோரைக் கொலேபுரிதல் கழுவாயற்ற பெரும் பழியேயாகும். தாடகையாகிய அரக்கியோ தோற்றத்தால்மட்டும் பெண் ; செயலாலோ கூற்று ; பழிக்கு இருப்பிடம் ; கொடுங்கோல் வேந்தனைப் போன்று பல நாடுகளை அழித்தாள் ; முனிவர் தவத்தைச் சிதைத்தாள் ; பல உயிர்களை வாயில் பெய்து சுவைத்து அவற்றின் குருதியைக் குடித்தாள் ; இறுதியில். விசுவாமித்திரனையும் அவனைத் தொடர்ந்துவந்த இரண்டு பாலர்களையும் கொல்லத் துணிந்தாள். இந்நிலையில், இராமன் அவளைக் கொல்லாமல் வாளா விடுத்திருப்பின் அவர்தம் உயிருக்கே அவள் உலே வைத்திருப்பாள். பின்னரும், பல உயிர்களுக்குச் சொல்லொணுத் துயர் நேர்ந்திருக்கும். ' தாங்கொணு வரியை வாங்கி வதைக்கும் கொடிய மன்னவனையும் அவனுடைய சந்ததியையும், இறுதியில் இயற்கையாகிய

அறக் கடவுள் ஒறுத்தழிப்பது போன்று' இராமன் அக்கொடியாளாகிய தாடகையைக் கொன்றது நியாயமேயாகும்.

இசைமைபற்றிய வீரம்

நாட்டை விடுத்துக் காட்டை அடைந்த இராமனை அழைத்து வர வசிட்டனோடும் பிற மாந்தரோடும் அடவியுற்றான் பரதன்; ஆங்குத் தன் அண்ணனைக் கண்டான்; அழுதான், விழுந்தான், புரண்டான்; நாட்டுக்குத் திரும்பி வருமாறு அவனை மிகவும் பணிவுடன் வேண்டினான். "தந்தை தாயர் கட்டளைப்படி, பதினான்காண்டு கழிந்தாலல்லது அயோத்திக்கு வாரேன்" என்று பல நியாயங்களைக் காட்டி மறுத்துவிட்டான் இராகவன். அப்பொழுதும் பரதன் இராமனை விடவில்லை; "அண்ணா, தாங்கள் நம் நாட்டுக்கு வந்தாலல்லது நான் அங்கே செல்லேன்; இங்கே, தங்களுடன் இருந்துவிடுவேன்" என்றான் பரதன். அவன் பிடிவாதத்தைக் கண்ட இராமன், "தம்பி பரதா, நம் தந்தை தாயரின் கட்டளையை நிறைவேற்ற நான் சிரமேல் தாங்கி வந்தது போன்று, நீயும் எனக்கு உண்மையான சோதரன் ஆகில், என் கட்டளையை மீறாது என் விருப்பத்தின்படி பதினான்காண்டுவரை எனக்குப் பதிலாக அரச பாரம் தாங்கி நில்" என்றான். அதற்கு யாதொரு விடையும் இறுக்க முடியாமல் பரதன் ஏங்கிக் கற்சிலைபோலத் தம்பித்து நின்றுவிட்டான்.

இவர்தம் வாக்கு வாதங்களை எதிரில் நின்று கவனித்துக் கொண்டிருந்த வசிட்ட முனிவன், பரதனை நீக்கி இராமனை நோக்கி, "இராமா, நீ என்பால் பற்பல சிறந்த கலைகளைக் கற்றாய்; இருமுது குரவரினும் ஞானக்கலை போதித்த குரவனே சிறப்புடையான் என்பதனைச் சாத்திரங்களின் வாயிலாக அறிந்துள்ளாய்; எனவே, நீ உன் தந்தை தாயர் கட்டளையைத் தட்டாமல் ஏற்றதுபோல், என் கட்டளையையும் தட்டாமல் ஏற்று நாட்டுக்கு வந்து உனக்குரிய அரசை ஆளுதல் வேண்டும்; நீ ஒழுக்கம் நிறைந்த சீரிய மாணவன் என்பதற்கு ஒரு மேற்கோளாக உடனே புறப்பட்டு வருக; எக்காரணங்கொண்டும் என் பணியை மறாதே" என்று கூறினான். இராமன் மிகவும் புத்தி நுட்பம் உடையானாகையால் புன்சிரிப்புடன் சிறிது நேரம் வாளாவிருந்து வசிட்டனைப் பார்த்து, "சுவாமி, ஞானாசிரியர் இருமுது குரவரினும் உயர்ந்தவரே. அவரே உடல் பொருள் ஆவியாவர்;

நிற்க, உலகத்தில், சான்றவராயினும், குருமாராயினும் தந்தை தாயராயினும் தனயன்மாராயினும் இவர்களுள் ஒருவர் முதலில் ஒரு கட்டளை யிட்டால், அக்கட்டளையைச் செய்வேன் என்ற ஒருவன் அதனை நீக்கிப் பின்னர் ஒருவர் பணித்த பணியைப் புரிதல் முறையாகுமா? என் தாதையார் இட்ட கட்டளைக்குப் பின்னரன்றோ தாங்கள் கட்டளை இடுகிறீர்கள்? இவ்வாணைகளுள் எவ்வாணையை முதலில் நிறைவேற்றல் தகுதியுடைத்து? இதற்குத் தாங்களே பதிலிறுத்தல் சால்புடைத்தாகும்" என்று இராமன் வசிட்டனை நோக்கிக் கூறியதாகக் கம்பர்,

" சான்றவ ராக,தன் குரவ ராகதாய்
போன்றவ ராக,மெய்ப் புதல்வ ராக,தான்
தேன்தரு மலருளான் சிறுவ, செய்வெனென்
றேன்றபின் னவ்வுரை மறுக்கும் ஈட்டதோ"

(அயோத் - கிளைகண்டு நீங்கும் - 126)

என்று காட்டினர்.

வசிட்டன் சிறந்த குருவாயிருந்தும் 'கல்லாத சிறு பிள்ளைகள் பேசும் முறையில் ஒழுகினுன்' என்பதைக் குறிப்பாகக் காட்டவே, 'தேன்தரு மலருளான் சிறுவ' என்ற விளியில் இராமன் குறிப்பித்ததாகக் கவியரசர் அமைத்துள்ள நயமும் நோக்கத் தக்கது. எனவே, இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வரும் செயலை எக்காரணம் கொண்டும் புரியாமல் புகழுடைய செயலைப் புரிந்து, இசைபற்றி வந்த பெருமிதத்தினை இராமன் நிலைநாட்டியதை ஈங்கு அறியக் காட்டினுர் கம்பர்.

கொடைபற்றிய வீரம்

இராமனிடம் அடைக்கலம்புக வந்தான் வீடணன். காகுத்தனுடைய கரிய நிறமும், கம்பீரத் தோற்றமும், இனிய முகமும், அருள் மழை பொழியும் கண்களின் பொலிவும் கண்ட வீடணன், 'ஆர் அருள் சுரக்கும் நீதி அறநிறம் கரிதோ' என்று மனத்துட்கொண்டு வியந்தான்; பிறவி நோய்க்கு மருந்தனைய வள்ளலின் திறத்தை உன்னி உன்னிப் பேருவகைக் கடலில் ஆழ்ந்தான்; அவன் இரு பாதமலர்களைத் தன் தலையில் சூடினுன். அவ்வாறு வணங்கிய வீடணனை நோக்கிய இராமன், 'வீடணனுடைய பிறவி இன்றோடே அழிந்தொழிந்தது' என்று தான்

கருதிய மனக்கருத்தைத் தன் முகத்தில் காட்டுவது போன்று இன் முகத்துடன் அவனைத் தழுவி, "வீடணா, எழுந்திருந்து ஈங்கே அமருக" என்று ஓர் ஆசனங்காட்டி அமரச் செய்தான்.

பின்னர், வீடணனுடைய சீரிய குணமும், உள்ளத்தூய் மையுங்கண்ட இராமன், 'அருள்சுரந்துவகை தூண்ட' "வீடணா, இப்பதினான்கு உலகம் உள்ளளவும், என் பெயர் உள்ளளவும் இலங்கையரசை உனக்குத் தந்தேன், நீ யாதொன்றுக்கும் கவலை யுறல் வேண்டா" என்று கூறி இராமன் தன் கொடைபற்றி வந்த வீரத்தை நிலை நாட்டியதை,

"ஆழியான் அவனை நோக்கி
அருள்சுரந் துவகை தூண்ட
ஏழினோ டேழாய் நின்ற
உலகுமென் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று காறும்
வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன் என்றான்"

(யுத்த-வீடணன் அடைக்கலம்-142)

என்று கல்வியிற் பெரியராய கம்பர் காட்டினார்.

பிறருக்குரிய இலங்கையை வீடணனுக்குக் கொடையாக அளித்தல் இராமனுக்குப் பொருத்தமாகுமோ எனின், பொருத் தமே யாகும். எங்ஙனமெனின், இருளைப் பகல் நீக்குதல் போன்று மறத்தை அறம் வெல்லுவது ஒருதலை. மறத்தொழில் புரிந்த இராவணனை அறத்தொழில் பூண்டு நின்ற இராமன் வெல்லுவது உறுதி. அவ்வாறு வெல்லப் பட்டவனுடைய நாடு வென்றோனுக்கு உரியதாம். அங்ஙனம் வந்துற்ற நாட்டை, உரிமையும் ஆளுதற்கேற்ற பண்பும் உடையானுக்கே தருதல் மிகவும் பொருத்தமுடையதாகவே இருக்கின்றது.

எனவே இராமன் தன் நாட்டை விட்டு, தன் அருமந்த மனைவியைப் பிரிந்து இருக்கின்ற இத்தகைய பேரிடுக்கண் நிலை யிலும், தன்னைச் சரணென அடைந்த வீடணனுக்கு அடைக் கலமும், நாட்டுச் செல்வமும், இறுதியில் மீளா வீட்டுச் செல்வ மும் தந்து ஆட்கொண்டதில் கொடைத்திறத்தின் பெருமிதத் தைக் காண்கிறோம்.

இதுகாறும் தொல்காப்பியர் கூறிய, கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய நான்கன் காரணமாகத் தோன்றிய வீரச் செயல்களை இராமாயணத்துள் கண்டோம். 'சொல்லப் பட்ட பெருமிதம்' (தொல்-மெய்ப்பாட்டியல்-9) என்ற குறிப் புக்கொண்டு, பேராசிரியர், 'காமம் முதலிய பிறவும் கொள்க' என்று பகர்ந்ததற்கேற்ப, காமம், நட்பு, அன்பு, ஆற்றல், மானம், செல்வம், கற்பு, பக்தி முதலிய காரணங்களால் தோன்றும் வீரங்களையும் ஆங்காங்கே கம்பர் வனப்புறப் புனைந்திருத்தலை இராமாயணத்துள் காணலாம்.

இராமன்

இராமனுடைய கைவண்ணம், அவன் விசுவாமித்திர முனி வனுக்குத் துணையாகச் சென்று தாடகையோடு புரிந்த போரில் நன்கு விளங்குகிறது. தன்னொடு பொரவந்த தாடகையோடு நிகழ்த்திய போரே இராமனுடைய கன்னிப்போர். என்பும் உலர்ந்த முனிவர்களைக் கொல்லுதல் பயனற்றதெனக் கொல் லாது விடுத்து, அவர்கள் ஆற்றிய வேள்வி முதலியவைகளை எல்லாம் சின்னபின்னப்படுத்தி வந்த தாடகை, கொழுகொழு வென நிற்கும் இளஞ்சிறுர் இருவரைக் கண்ணுற்றதும் நாவில் நீருற ஓடி வருகின்ருள். விசுவாமித்திர முனிவன் யாகசாலையில் அமர்ந்துள்ளான். வந்தவள் வழக்கம்போல வேள்வித் தீயைச் சிதைக்க முற்படுகின்ருள். அவளுடைய அடாத செயலைக் கண் ணுற்ற இராமன் அவளைத் தண்டிக்க வில்லை வளைக்கின்ருன். அதுபோழ்து இராமனுடைய இயற்கையறிவாம் மதிநுட்பமும், செயற்கை யறிவாம் நூலுணர்வும் எழுந்து, 'தாடகை ஒரு பெண்; அவளைக் கொல்லாதே' என்று தடை செய்கின்றன. இராமனுடைய கரத்திலிருந்து வில் நழுவுகின்றது மதிநுட்பம், அறநூலுணர்வு இவற்ருெடு உலகியல் உணர்வும் அனுபவ வாயிலாக மிகவுடைய விசுவாமித்திர முனிவன் இராமனைப் பார்த்து, "தாடகை மீது சரம் விடுத்து அவளை வீழ்த்து" என்று ஆணையிடுகின்ருன். இராமன் தருமசங்கடத்தில் அகப்பட்டுத் தவிக்கின்ருன். சரம் ஏவிஞல் பெண் கொலை; ஏவாவிடில் குரு வின் ஆணையை மீறுதல். எதனை விடுவது? எதனைக் கொள்வது?

இராமன் எதன்பொருட்டு விசுவாமித்திரனேடு வந்தான்? அவன் கடமை யாது? கடமையில் பழி பாவங்களைப் பார்த்தல்

ஒல்லுவதோ? விசுவாமித்திரனுடைய வேள்வியைக் காப்பது இராமனுடைய கடமை. தாடகையைக் கொன்றா லொழிய அக் கடமை நிறைவேறாது. அவளைக் கொன்றாலோ பழியும் பாவமும் ஒருங்கே வந்து சேரும். கடமை செய்வதிலும் பழி பாவம் வாராது காப்பது அறநூல் வழிநிற்பவர் கொள்ளவேண்டுவது. தாடகையைக் கொன்றால் வருவது பழியும் பாவமும் என்பது எங்ஙனம் பொருந்தும்? தாடகை ஒரு பெண்ணாக இருந்தால் தானே? பெண்ணுக்கு இலக்கணமாவது, அமைதித் தன்மையுடைமை. தாடகையிடம் பெண்ணிலக்கணம் சிறிதேனும் உண்டா? தாடகை பெண்ணுடல் போர்த்த ஒருயிர். அவ்வுயிர் எத்தனையோ உயிர்களைச் சிறிது வீரத்தாலும் பெரிதும் வஞ்சகத்தாலும் மடித்துத் தன் வயிற்றகத்து அடக்கி வந்தது. அவ்வுயிரை இராமன் இதுபோழ்து மடிப்பது பெண் கொலையாகாது; வீரனுக்குத் தகுதியுடைய செயலே ஆகும்.

இராமன் நெஞ்சில் இவ்வுண்மை விளக்கமாக, ஒரு நொடிப் பொழுதே பிடித்தது. இராமன் வில்லை எடுத்தான்; வளைத்துச் சரம் தொடுத்தான். அவன் வில்லை வளைத்ததும் சரத்தைத் தொடுத்ததும் எவரும் கண்டிலர். பின்னைக் கண்டதுதான் என்னை? தாடகையின் இருகூறான உடல் துண்டங்கள்.

இராமனுடைய சரத்தின் பண்பினை விளக்கவல்லார் எவரே? கம்பர் ஒருவரே அஃது ஆற்றவல்லார். 'சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்' இராமனுடைய கோதண்டத்தில் பொருந்திய சரம் என்று கம்பர் சித்திரமாகச் சூத்திரம் செய்து அச்சரத்தின் பண்பனைத்தும் நன்கு விளக்கிவிட்டார். சரத்திற்குக் கூறியுள்ள உவமையின் நயம் மிகமிகப் பாராட்டத் தக்கதாக அமைந்துள்ளது. சரம் சொல்லை ஒப்பது. யாருடைய சொல்லை? சந்தர்ப்பம் போற்றி விடையிறுத்தல் வேண்டும். தவமுடைய முனிவர் சொல்லைச் சரம் ஒப்பது. பிறர்பால் தவறு கண்டவிடத்தும் தவமுடையார்க்கு வெகுளி தோன்றுவதில்லை. ஒரோவிடத்து வெகுளி தோன்றினும் அஃது ஒரு நொடிப்போதே நிலைபெறும். அவ்வெகுளியும் சொல்வடிவமாகப் பரிணமித்து, வெகுளப் பெற்றோரைச் சின்னபின்னப் படுத்திவிடும். நொடிப்பொழுதளவில் வெகு வேகமாக எழுந்து, கடுமையான பயனைத் தந்து நீங்குவதாகிய வெகுளியொடு கலந்த சொல்லினின்று வெகுளப்பெற்றோர் தப்ப முடியாது. பிறர் யாரும் துணை

நின்று அதனைத் தடுக்கவும் முடியாது. கடுமையும் வேகமும் உள்ள சொல்லையுடைய முனிவன், சிறப்பாக விசுவாமித்திர முனிவன், ஏன் அச்சொல்லை ஏவித் தாடகையின் உயிரைப் பருகவில்லை ? விடை யிறுக்கவேண்டுங்கொல்? விசுவாமித்திரன் பலகால் தவஞ்செய்தவன் ; சுடுசொல் கூறினவன். அதனால் தவப் பயனை இழந்தவன் ; ஏங்கி நின்றவன். எனவே இம்முறையும் அவ்வாறு தவப்பயனை இழக்க அவன் விரும்பவில்லை. அதனால் தான் இராமன் துணையை நாடிநின்றான். இஃதன்றி அவன் தன் சொல்லால் தாடகையைக் கொல்ல முடியாது போனானில்லை.

'சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்' என்பதால் கம்பர் முனிவனாற்றலையும் இராமனாற்றலையும் நன்கு புலப்படும் படி சித்திரித்து விட்டார். இலக்கணப் புலவர் வியக்கும்படி 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என்ற சூத்திரவிதிக்கு இணங்க, முனிவர் சொல்லை உவமையாக அமைத்தல் வாயிலாக அவர்தம் பேராற்றலுடைமையை அறியுமாறு செய்தார். எண்ணி எண்ணி உணரும் தருக்க நூலார் எண்ணி எண்ணி உவகை பூக்கும்படி, அச்சொல் அவ்வளவு உயர்ந்ததெனி னும், அஃது ஏவப்பட்டதும் பயன் விளைவித்தலோடு முடி வெய்த, சரமோ ஏவப்பட்டதும் பயன் விளைவித்தலோடு ஒழி யாது மீண்டும் இராமன் கையில் வந்து பொருந்தி, மீண்டும் மீண்டும் பயனை விளைவிக்கும் ஆற்றலுடைமையை அறியுமாறு செய்தார். அச்சொல்லினும் சரம் சிறந்தது என்பதைச் சிறிதே அறிவுடையாரும் அறியுமாறு, சரத்திற்குச் சிறப்பை உணர்த்த, 'கடிய வேகச் சுடுசரம்' என அடைமொழிகள் கொடுத்தார். இவ் வாறு கம்பர் பாடியுள்ளது அறிவுடையார்க்கெல்லாம் விருந்தா வது. தன்னலமுடைய முனிவன் தவமிழக்க அஞ்சித் துணை வேண்டி நிற்கத் தன்னலம் சிறிதுமற்ற இராமன் தாடகையைக் கொன்றது, "துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்" என்ற திருக்குறளுக்குச் சிறந்த இலக்கிய மாவதாம்.

தாடகை பெண்ணுடல் உடையவளாகவும் அவள் உண்மையில் பெண் தன்மையுடைய பெண்ணல்லள் என இராமன் உணர்ந்தது, "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப் பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்ற மெய்ப்பொருள் உணர்வினாலாம். எனவே, இராமன் இயற்கை அறிவு, நூலறிவு,

உலகியலறிவு, மெய்ப்பொருளுணர்வு, தன்னலமின்மை, பிறர் நலம் பேணுதல் ஆகிய இவ்வெல்லாக் குணங்களாலும் சான்ருேய்த் தவம் செய்யும் முனிவரினும் உயர்ந்து, தெய்வ நலம் கமழப் பெற்றவன் என்பது, உன்னி உணர்வார்க்கு நன்கு விளங்கும். இப்பெற்றிகளை அறியாதாரே பெண்கொலைபுரிந்தவன் இராமன் எனக் கூறுவர். இதனை முன்னரே ஆய்ந்துணர்ந்த கம்பர், கூனி வாயிலாக, " ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத், தாடகை எனும்பெயர்த் தைய லாள்படக், கோடிய வரிசிலை இராமன் " என்ற இழிப்புரையைப் பதிவு செய்து வைத்துள்ளார். இதன் உண்மை அறியாதார் இவ்வுரையையே சான்ருகக் கொண்டு, " கேவலம் கூனியும் பரிகசிக்கும்படி பெண்கொலை புரிந்தவன் இராமன் " எனப் பிதற்றித் திரிவர். என்னே அவர்தம் பேதைமை இருந்தவாறு ! " மக்களே போல்வர் கயவர் அவரன்ன, ஒப்பாரியாங் கண்டதில் " என்ற திருவள்ளுவர், மக்களுடம்பு பெற்றிருத்தல் கொண்டு கயவரை மக்கள் என்று கொள்ளுதல் ஆகாது என்று உணர்த்தி யிருப்பதைத் துணையாகப் பெற்று, பெண்ணுடம்பு பெற்றிருத்தல் கொண்டு தாடகையைப் பெண் ணென்று கொள்ளுத லாகாது என்பதே சால்புடையார்களுக் கெல்லாம் தகுதியாவது. ஆயினும், தாடகையைக் கொன்றது எங்ஙனம் வீரமாகும் எனின், பல்லாயிரம் மக்களைக் கொன்று வயிற்றகத் தடக்கிய பெண்ணுடல் போர்த்த ஒருயிரைத் தன்னந் தனியனாய் நின்று வென்ற வீரம் வீரமோ என்று வினவு வதும் விந்தையே! இனிக் கரன் முதலிய பல வீரர் ஒருங்கே குழுமி எதிர்த்தபோது தன்னந் தனியனாய் நின்று எதிர்த்து வென்றமை, இராமன் சிறந்த வீரன் என்பதை நன்கு வலி யுறுத்தும்.

தாடகையைக் கொன்ற நிகழ்ச்சி, பழியை உண்டாக்குவது போன்று இராமனுக்குப் புகழையே உண்டாக்குவதாக அறி வுடையார்க் கெல்லாம் தோற்றுவிப்பதை ஒப்பப் பல நிகழ்ச்சி கள் இராமாயணத்தில் காணலாம். அவை யெல்லாம் ஆராய்ந்து போற்றுதற்குரியன. கிஷ்கிந்தா காண்டத்தில் இராமன் புக ழிற்கு இழுக்கு நேரும் ஒரு சம்பவம் உள்ளது. இராமன் மறைந்து நின்று வாலிமீது அம்பு வீசி அவனைக் கொல்கின்ருன். இஃது இராமனது குலத்திற்கே இழிவு என்று வாலி இகழ் கின்ருன்.

" அரக்கரோ ரழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ "

என்று அவன் இராமனை வினவுகின்றான். அவன் வினா ஆராய்தற்குரியது. வாலி பெற்ற வரம், இராமன் அவன் மீது மறைந்து நின்று அம்பெய்யக் காரணமாகின்றது. எதிர்த்து நிற்கும் எதிரியின் பாதிபலம் தனக்கு வரும் பெருவரம் பெற்றிருந்தான் வாலி. மனிதர்க்குரிய போர் நீதிகள் குரங்குகளுக்கு இல்லை என்பது உண்மையே. இலக்குமணன் வாலிக்குச் சரியான விடை இறுத்துள்ளான். வாலி தன் தம்பியின் மனைவியை அபகரித்தது அநியாயம். அது குரங்குகளுக்கு உரிய நியதி அன்று என்றாலும், வாலியை எவ்வாறாயினும் கொல்லாவிட்டால் இராமன் சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்கு நிறைவேறாது. வாலி வாக்குவாதத்தில் இராமன் செயல் கம்பருக்கே நியாயமன்று எனப் புலப்படுவது போன்று தோன்றினும், ஊன்றி நோக்கின் அவன் செயல் நியாயமானதாகவே முடியும்.

யுத்த காண்டத்தில்தான் இராமாயண வீரர்களின் வீர தீரச் செயல்களை மிகுதியாகக் காண்கின்றோம். இராமனுடைய பெருந்தகைமை வீடணன் சரணாகதியால் நன்கு அறியப்படுகின்றது. சரணம் அடைந்தவன் தன் பெரும்பகைவனுடைய தம்பி என்றும் பாராமல் வீடணனுக்கு அடைக்கலம் அளித்தது, இராமனுடைய அருங்குணங்களுள் சிறந்ததாகும். வீரமில்லாத ஒருவன் இத்தகைய சந்தர்ப்பத்தில் தன் பகைவன் தம்பிக்கு அடைக்கலம் அளித்தல் ஒல்லுமோ? எனவே, இதனால் இராமனுடைய வீரமுடைமையே தெளிவாகின்றது.

முதல் நாள் போரில் இராமனும் இராவணனும் எதிர்த்து நிற்கின்றார்கள், இருவரும் சமமாகவே போர்க் கருவிகள் கொண்டு போர்புரிகின்றார்கள். இராவணனுடைய தேரொன்றைத் தவிரச் சேனைகள் பிற அனைத்தையும் இராமபாணம் தொலைத்துவிட்டது. இராவணன் தன்னந்தனியனாய்ச் சினத்தீக் கொழுந்துவிட்டு எரிய எதிர் நின்று போர்புரிகின்றான். நொடிப் போதில் அவனை இராமன் நிராயுதபாணி ஆக்குகின்றான், இராவணன் நிலைமை மிகவும் பரிதபித்தற்கு உரியதாகின்றது. வலியற்ற ஒரு சிறு அம்பும் இராவணனுடைய உயிரை எளிதில் போக்கிவிடக்கூடும். ஆனால் பெருவீரனாகிய இராமன் செய்தது என்ன? இராவணனை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றான் :

"ஆளை யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன், நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."

இராமன் இராவணனைக் கண்டு இரக்கங்கொண்டு, தன் வீரச் சிறப்புத் தோன்ற, "நாற்படையுங் கொண்டு நாளைக்கு யுத்தத்திற்கு வா" என விடுக்கின்றான். பரிமேலழகர்,

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

என்ற குறளுக்கு உரைகண் டருளும்போது 'ஊராண்மையாவது, உபகாரியாவது' என்று கூறி, "இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுவதும் படத் தனியனாய் அகப்பட்டானது தனிமையை நோக்கி, அயோத்தியர் இறை மேற்செல்லாது, 'இன்று போய் நாளை நின் தானையொடு வா' என விட்டாற் போல்வது அது" என்று கூறுகின்றார். இது புறப்பொருளில் தழிஞ்சி என்னும் துறையின்பாற் படும். தழிஞ்சியாவது தழுவு வது; பகைவனது தழுவுதல்; அவனுக்கு அருளுதல். இஃது இராமபிரானுடைய மறக்கருணையின் இடையே நிமிர்ந்தெழுந்த அறக்கருணைக்குத் தக்க சான்றாகும்.

இராமனொடு போர் புரியுங்கால் கும்பகருணனாகிய வீரன் அவனுடைய வீரத்தைக் கண்டு வியப்படைகின்றான். "ஐயன் விற்றொழிற்கு ஆயிரம் இராவணர் அமைவிலர்" என்று இயம்பு கின்றான். இஃது ஒரு வீரன் மற்றொரு வீரனுக்கு அளிக்கும் நற்சாட்சிப் பத்திரம்.

மூலபல வதைப் படலத்தில் இராமனது வீரம் இன்னும் சிறப்பாகக் காணப்படுகின்றது. மூலபலச் சேனையைக் கண்ட வானரங்கள் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள மூலைக்கு ஒன்றாய் ஓட்டம் பிடிக்கின்றன. அந்த அரக்கர்களோ தரு மத்தைத் தின்று, கருணையைக் குடித்து, ஏப்பமிட்டவர்கள். பிறருக்குத் தீமை செய்வதே அவர் பூணும் ஆபரணம். பாவமே அவர்கள் மணந்துகொள்ளும் மனைவியர். கொடிய இருள் நெஞ்சர் அவ்வரக்கர் என்று கூறுகின்றார் கம்பர். ஜாம்பவா னுடைய கலங்காத உள்ளமே அவ்வரக்கர்களைக் கண்டு கலங்கியது எனின், அவர்களைப்பற்றி வேறு என்ன சொல்ல

வேண்டியிருக்கின்றது? மதுகைடபர்கள் சமுத்திரத்தைக் கலக்கும்போதும் கலங்காத உள்ளம், ஆலகால விடத்தையும் கண்டு அஞ்சாத நெஞ்சு, இரணியனையும் காலகேயர்களையும் பார்த்துப் பீதி அடையாத ஜாம்பவான் இருதயம், மூலபல அரக்கர்களைக் கண்டு பீதி எய்துகின்றது. இராமபிரான், வானரப்படைகளைக் காக்கும்படி இலக்குமணனுக்குக் கூறிவிட்டுத் தானொருவனே மூலபல அரக்கர்களை நோக்கி முன்செல்லுகின்றான். அரக்கர்கள் அவன் தைரியத்தைப் புகழ்ந்து அவன் வீரத்தைப் பாராட்டுகின்றார்கள்; எனினும், அவனை அணுகி அவர்கள் வளைத்துக் கொள்கிறார்கள். இராமன் தன் கோதண்டத்தை நாணேற்றி 'டங்காரம்' செய்கின்றான். இராமபாணம் யுத்தகளத்தில் புகுந்து அரக்கர்களை வதஞ்செய்யத் தொடங்குகிறது. யாளி மேலும் ஆளின்மேலும் யானைமேலும் ஆடல்மாவின் மேலும் சரமழை பெய்கின்றது. அந்தச் சரமழையில் கங்கு கரையில்லாத அரக்கர் சேனை சின்னபின்னமாக்கப்படுகின்றது.

"உலகு செவிடுபட மழைகள் உதிரஉயிர்
அலகில் மலைகுலைய அமரர் தலைஅதிர"

அரக்கர்கள் தொடர்ந்து போர் செய்கின்றார்கள். இராம பாணங்கள், அரக்கர்கள் தப்பி ஓடாதபடி சரமதில்களை அமைத்து அவர்களைத் தடுக்கின்றன. அரக்கர்களுடைய அம்புகள் பாழாக்கப்படுகின்றன. இரணகளம் பிணக்களமாக மாறிவிடுகின்றது. கோதண்டம் வெற்றி எய்துகின்றது. மூலபலம் நிர்மூலமாகின்றது. பாதாளத்திலிருந்து வந்த சேனைகள் இராமனது வீரத்தையும் வில் திறமையையும் கண்டு வியக்கின்றன. ஊழிக்காற்றோடு வந்த மேகப் பொழிவேபோல் இராமன் சரமழை பொழிந்து அரக்கர்களையெல்லாம் கொன்று குவிக்கின்றான். அவனுடைய போர்க்கோலம் சங்கார மூர்த்தியாகிய சிவபெருமானுடைய கோலத்தை ஒத்து விளங்குகின்றது. இராமன் சுற்றிச் சுற்றி வேகமாகச் சென்று பலரோடும் போர் புரிகின்றான். வேகத்தில், அவனைக் காண்பவர் யாவரும், "இராமர் எண்ணிறந்தவர் கடற்கரை மணலிலும் மிகைப் படு தொகையினர்" என்று வியப்புறுகின்றனர்.

இராமன் தன்னையொத்த வீரனாகிய இராவணனோடு போர்புரிகிறான். இறுதி நாள் யுத்தத்தில் இருவரும் சமமாகவே

போர் புரிகின்றனர். இராவணனுடைய அஸ்திரங்களை இராமன் தடுத்து ஒழிக்கின்றான். இராவணனுடைய பாணங்கள் இராமனை மறைக்க முற்படுகின்றன. வான வீதியில் நின்று போர்க் காட்சியை நோக்கும் தேவர்கள், " இத்தகைய கொடும்போரை இராவணனுடைய திக்கு விஜய காலத்திலும் பார்த்தோ மில்லையே" என்று அதிசயிக்கின்றார்கள். ஆனால் நொடிப்போதில் இராமனை மறைக்கும் அவ்வஸ்திரங்கள் அவனால் சூரியன்முன் பனிபோலாகின்றன. இராவணனே இராமனது வீரத்தை வியந்து,

" சிவனோ அல்லன்; நான்முக னல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்: மெய்வர மெல்லாம் அடுகின்றான் "

என்று கூறுகின்றான். அயர்ச்சி பெரிதும் ஏற்பட்டபோதிலும் இராவணன் தன்பால் மும்மடங்கு வலிமையைத் தன் மனவலிமையால் தோற்றுவித்துக்கொண்டு இராமனை எதிர்க்கின்றான். ஆனால் இராமனுடைய பிரமாஸ்திரம் இராவணன் உயிரைக் கவர்ந்துகொண்டு அப்பால் செல்கின்றது. இராவணனுடைய உடல் சல்லடைக்கண்கள்போலத் தொளைக்கப் பெற்றது. இதனை,

" கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ
ஒருவன் வாளி "

என்று கம்பர் வேறொரு பொருளும் தோன்ற மிக நயம்படக் கூறுவது படித்துப் படித்து இன்புறுதற்குரியது.

இலக்குமணன்

இலக்குமணனும் இராமனைப்போன்றே இணையற்ற வீரன். இராமனுடன் இலக்குமணன் விசுவாமித்திரன் வேள்வியைக் காத்து நிற்கின்றான் என்பதை,

" மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர் "

என்று கம்பர் கூறுகின்றார். இராமனுடைய பெரு வீரத்தின் முன்பு இலக்குமணனுடைய வீரம் சோபிக்க இடமில்லைஎனினும், இராமனை ஒத்த வீரன் இலக்குமணன் என்பதைக் கம்பர்வாக்கால்

நன்கு தெளியலாம். கம்பர், ' தனுவினிருவர் ஆற்றலும்' என்றே குறிப்பிடுகின்ருர்.

இராமனைக் காடு கடத்திஞள் கைகேயி என்பது கேட்ட இலக்குமணன், போர்க்கோலம் பூண்டு எழுந்து, "உலகத்தையே அழித்து விடுவேன் ' என்று குமுறுகின்ருன்.

இராமன்பின் இலக்குமணன் வனத்திற்குச் செல்லுகின்ருன். சித்திர கூடத்தில் பரதனுடைய தானை வருவது கண்டு, அஃது இராமனை எதிர்க்கவே வருகின்றது என்று நினைந்து, " அதனை அழித்து விடுவேன் " என்று சபதம் கூறுகின்ருன்.

முதல் நாள்போரில் இராவணனேடு இலக்குமணன் போர் புரிகின்ருன். அவன் தன் வில்லை வளைத்து நாணெறிந்ததைக் கேட்கும் அரக்கர்கள் சிங்க முழக்கத்தைக் கேட்கும் யானையை ஒத்துத் திகிலடைகின்றனர். இலக்குமணன் பாணங்கள் இராவணன் சேனையைத் தாக்கி அழித்துப் போர்க்களத்தை இரத்த வெள்ளத்தால் நிரப்புகின்றன. அரக்க விரர்கள் இலக்குமணனைக் கூட்டாக எதிர்க்கின்ருர்கள். இலக்குமணனே மிக விரைவாக அம்புகள் எய்து அவர்களைக் கொல்கின்ருன். அவன் அம்பு எடுப்பதையும் தொடுப்பதையும், இமையாத கண்ணுடைய அமரரும் காணமுடியவில்லை ; அவர் காண்பது, அவன் கொன்று குவிக்கும் பிணக்குவியல்களையே என்கிருர் கம்பர்.

நால்வகைப் படைகளையும் படைக்கலங்களையும் இலக்குமணன் சின்னபின்னப் படுத்துகின்ருன். வானரங்கள் ஓடுவதற்கு இராவணனே காரணம் என்று அறிந்த இலக்குமணன், இராவணன் ஏந்திய பத்து விற்களையும் முறித்துத் தள்ளுகின்ருன். இராவணன் இலக்குமணனுடைய வீரத்தைப் பாராட்டி, அவனை வெல்லுதல் கடினம் என்று நினைத்து, இறுதியில் அவன் மீது பிரமன் கொடுத்த வேலை ஏவுகின்ருன். இலக்குமணன் மூர்ச்சிக்கின்ருன்.

இலக்குமணன் கும்பகருணனேடு பொரும் சந்தர்ப்பம்நேர்ந்த போது கும்பகருணன் இலக்குமணனைப் பார்த்து வீர வார்த்தை கூறிப் போருக்கு அழைக்கின்ருன். குற்றமற்ற தன் தங்கையின் மூக்கை அறுத்த கைகளை வெட்டித் தள்ளுவதாக வீர வாதம் பேசுகின்ருன். இலக்குமணனே,

" வில்லி னுல்சொல்லி னல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லி னுல்சொல்லக் கற்றிலம் யாம் "

என்று இயம்புகின்ருன். வெகுவிரைவில் இலக்குமணன் பாணத்திருல் கும்பகருணன், தன் தேரும் வில்லும் இழந்து தவிக்கின்ருன். அதுபோழ்து இலக்குமணனும் அவனை ஒப்பத் தரையில் நின்றே போர் புரிகின்ருன். இதற்குள் இராவணனுடைய சேனைகள் கும்பகருணனுக்குத் துணை புரிய வருகின்றன.

அதிகாயன் பெரிய வீரன் என்று கூறக் கேட்ட இராமன் அவனுக்குப் பதில் கூறும் முகமாக, பல்லாயிரம் இராவணர்களை வெல்லும் திறன் வாய்ந்தவன் இலக்குமணன் என மொழிவது, இலக்குமணனது வீரத்தை அறிவிக்கும் சிறந்த சான்ரும். வானர சேனையைப் பெரும்பான்மையாக அழித்து விடுகின்ருன் அதிகாயன். அப்படிப்பட்ட ஆற்றல் வாய்ந்த, அதிகாயனோடு, இலக்குமணன் அஞ்சாது நின்று பொருது அவனை விண்ணுலகினர்க்கு விருந்தினன் ஆக்குகின்ருன். பல்லாயிரக்கணக்கான அரக்கர்கள் அவ்விருந்தில் கலந்து கொள்கின்றனர்.

வில்லாள ராஞேர்க் கெல்லாம் மேலவனுகிய இந்திரசித்தோடு போர்புரியும்போழ்துதான் இலக்குமணனுடைய வீரம் முழுமையும் புலனுகின்றது. இருவர் வில் நாண்களும் இடியோசைபோல் மோதி ஒலி செய்யத் திசைகள் தீப்பிடித்தன. இருவருடைய ஊர்திகளும் வலசாரி இடசாரியாகச் சுற்றிச் சுற்றி வந்தன. இலங்கையே சுழல்வதுபோலிருந்தது. அவருடைய விற்ருெழில் வேகத்தைப் பார்த்தவர் ஒன்றும் அறியக் கூடாதவராய், "என் செய்தார்? என் செய்தார்?" என்று பிறரை வினவுவர்; "இனைய தன்மை முன் செய்தார் யாவர்? முன்னேது? பின்னேது? இதைப்போலப் போர் செய்தவர் முன்பும் இல்லை பின்பும் இல்லை" என்று கூறி வியந்தனர். இலக்குமணன் இந்திரசித்தின் பாணங்களையெல்லாம் தடுத்து அவனுடைய தேர்ச்சிங்கங்களையும் கொடிகளையும் அறுத்தெறிந்தான். இந்திரசித்தின் மீதும் அவன் அம்பெய்து அவன் உடலிலிருந்து இரத்தம் வடியுமாறு செய்தான்; அவனுடைய கவசத்தையும் வெட்டி வீழ்த்தினுன். இந்திரசித்து அப்பொழுது நாக பாசத்தைப் பிரயோகித்து இலக்குமணனைக் கட்டினுன். பெரிய திருவடியின் வரவால் நாகபாசம் விடுபட்டது. இலக்குமணன் இந்திரசித்தை வதம்செய்துவிடுவதாகச் சபதம் செய்தான். இந்திர

சித்தின் தேர் முறிந்துவிடவே அவன் வான வீதியில் சென்று நின்றுகொண்டு பிரமாஸ்திரம் விடுத்து இலக்குமணனைக் கட்டி விட்டான். அக்கட்டு சஞ்சீவிமலையால் விடுபட்டது. நிகும்பலையில் இந்திரசித்துச் செய்த யாகத்தைச் சென்று அழித்தவன் இலக்கு மணனே. இறுதியில் பெரும்போரிடையே இலக்குமணன் இந்திர சித்தின் கையையும் தலையையும் முறையே வீழ்த்தி அவனுக்கு வீர சுவர்க்கம் தந்தான். சிறந்த வீரனுன இந்திரசித்தின் மரணத் தினுல் இராமன் வெற்றி மிகச் சுலபமாகியது. இந்திரசித்தின் தலையைப் பார்த்த இராமன் தன் தம்பியின் வீரத்தை உளமாரப் போற்றினுன். இலக்குமணனுடைய தன்னலமற்ற சிறந்த வீரச்செய்கை, வீடணன்மேல் இராவணன் எறிந்த வேலினை தன் மார்பில் தாங்கிய செயலாகும்.

இராவணன்

இலங்கை வேந்தனுகிய இராவணன் ஒரு சிறந்த வீரன்; திசை யானைகளை எல்லாம் புறங்கொடுத்து ஓடும்படி வென்ற புகழுடையவன். சிவபெருமானுடைய கயிலையையே பெயர்த் தெடுத்தவன். கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச் சிறையில் கரந்தவன். அதுவே அவனுக்கு வஞ்சமும் நஞ்சமும் ஆயிற்று. இலங்கையின் புகழை வீழச் செய்ததும் அதுவே. இலங்கையில் வந்திருந்த இராமனுடைய படைகளைப் பார்த்த இராவணன்,

> " வனங்க ளும்பல மலைதொறும் திரிதரு மானின்
> இனங்க ளும்பல என்செயும் அரியினை "

என்று கூறுவதால் அவனுடைய அஞ்சாமையும் வீரமும் புலப்படுகின்றன. முதல்நாள் போரிலே இராவணன் தோல்வி யுடன் திரும்புகின்றுன். அனுமனுடைய மல்யுத்தத்தில் அவன் சிறிது அயர்ச்சி காண்கின்றுன். இராமனேடு போர் புரிந்து அவன் முடிவில் நிராயுதபாணியாக நிற்கவும் இராமன், " இன்று போய் நாளை வா" என்கின்றுன். வாரணம் பொருத மார்புடைய இராவணன் வெறுங்கையோடு திரும்புகின்றுன் இலங்கைக்கு. கும்பகருணன் சீதையை விட்டு விடவேண்டுமென்று சொல்வ தற்கு இராவணன்,

" மானுட ரிருவரை வணங்கி மற்றுமக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்கு மேகடன்
யானது முடிக்கிலேன் "

எனப் பகர்கின்முன், "கும்பிட்டு வாழ்வனே கூற்றையும் ஆடல் கொண்டேன்" என்பது இராவணனுடைய வீரவாசகம். "வஞ்ச னேன் எனக்கு நானே" என்று இராவணன் தன்னுடைய காதற் பைத்தியத்தைப் பற்றிப் பிதற்றிக் கொள்கின்முன். அதன் பொருட்டு அவன் பந்தி பந்தியான வீரர்களைப் பலியிடுகின்முன். தானியமாலையின் புத்திமதிகள் அவன் மனத்தில் ஏறவில்லை. "சீதையால் விளைபவை இன்னும் இவை சிலவோ" என்னும் போது அவன் தலையிறங்கி நிற்கின்முன் மறுமொழி சொல்லா மல். பாட்டன் மாலியவான் கூறிய புத்திமதி கேட்டு அவனை நிராகரித்து விடுகின்முன்.

" எறிபடை அரக்கரெல்லாம் இறந்தனர் இலங்கை ஊரும்
சிறுவனும் நீயு மல்லால் யாருளர் ஒருவர் தீர்ந்தார் "

என்ற வார்த்தைகள் செவியில் வீழ்ந்ததும் இராவணன்,

" மைந்தன்என் மற்றை யோர்என் அஞ்சினிர் வாழ்க்கை வேட்டீர்
உய்ந்துநீர் போவீர் நாளை ஊழிவெந் தீயின் ஓங்கச்
சிந்தின மனிச ரோடும் குரங்கினைத் தீர்ப்பன் "

என மொழிகின்முன்.

ஆனுல் இந்திரசித்தோ இதைக் கேட்டு வீராவேசத்துடன் யுத்தத்திற்குச் செல்கின்முன். நிகும்பலை யாகம் வீணுயினதும் இராவணனிடம் அவன் மீண்டு வந்து, " வீடணனது வஞ்சனை யால் யாவும் வீணுயின ; குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக்கொண்டோம்" என்று வருத்தத்தோடு தெரிவிக்கின்முன்; சீதையை விட்டுவிடுவது நலமென்று செப்புகின்முன், தந்தைமீது கொண்ட காதலால். இதைக் கேட்ட இலங்கை வேந்தன் அசட்டுச் சிரிப்புச் சிரித்து,

" மயங்கினை மனிசன் தன்னை அஞ்சலை வருந்தல் ஐய
சயந்தரு குவனு னின்றே மனிசரைத் தனுவொன் ருலே "

என்று மொழிகின்முன். ஈண்டுச் செருக்கோடும் தன் னம்பிக்கையோடும் கூடிய வீரத்தின் உச்சநிலையை இராவணன் பால் நாம் காண்கின்ருேம்.

" முன்னையோர் இறந்தோரெல்லாம் இப்பகை முடிப்பரென்றும்
பின்னையோர் நின்றோரெல்லாம் வென்றவர் பெயர்வரென்றும்
என்னை நீ அவரைவென்று தருதியென் றுணர்ந்தும் அன்றால்
என்னையே நோக்கியான் இந்நெடும்பகை தேடிக்கொண்டேன்."

இறந்தவர்களெல்லாம் வென்றியை அளிப்பவர்களென்று அவன் கருதவில்லை. இன்னும் இருப்பவர்களிடத்தும் அவனுக்குத் தன் பகையை முடிப்பரென்ற நம்பிக்கை ஏற்படவில்லை. பாவம், என் செய்வான்! " என்னையே நோக்கி யான் இந்நெடும்பகை தேடிக் கொண்டேன் " என்று இரங்குகின்றான்.

" மீதெழு மொக்கு ளன்ன யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ இருபது தோளுண் டாக "

" விட்டனன் சீதை தன்னை என்றலும் விண்ணோர் நண்ணிக்
கட்டுவ தல்லால் என்னை யானெனக் கருது வாரோ "

" இருபது தோளும் இருக்கச் சீதையை விடுவதுண்டோ? அப்படி விடுவதற்காகவா அவளைச் சிறை எடுத்தது? அப்படி விட்டாலும் என் புகழுக்கு அஃது இழுக்காமன்றோ? தேவர்கள் என்னை என்னதான் நினைப்பார்கள்? பயந்திருந்த தேவர்கள் என்னைக் கட்டிப் பிடிக்க வாராரோ? என் ஆவியை விட்டாலும் சீதையை விடுவதில்லை?" என்றென்றெல்லாம் இராவணன் இயம்புகின்றான்.

வீரர்களுக்கு வெற்றியைப்பற்றிய கவலை ஏது?

" வென்றிலன் என்ற போதும் வேதம்உள் ளளவும் யானும்
நின்றுளன் அன்றோ மற்றவ் விராமன்பேர் நிற்கு மாகில்."

" இராமன் பெயர் நிலைத்து நின்றால் என் பெயரும் உலகுள்ளளவும் நிலைத்து நிற்கும்படி சரித்திரத்தை எழுத வைப்பேன். தேவர்கள் காணக் கோழையைப்போல் நடவேன். அழியாது வீரப் புகழைச் சம்பாதிப்பேன்?" என்கின்றான் இலங்கை வேந்தன். இந்திரசித்து இறந்ததும் அவன் உடலைக் கண்ட இராவணன்,

" நிலையுமா திரத்து நின்ற யானையும் நெற்றிக் கண்ணன்
மலையுமே எளிய வோநான் பறித்தற்கு? மறுவில் மைந்தன்
தலையும்ஆ ருயிரும் கொண்டார் அவருட லோடும் தங்கள்
புலையனேன் இன்னும் ஆவி சுமக்கின்றேன் போலும் போலும் "

என்று தன் மகன் இறந்ததைத் தான் காணும்போது இராம இலக்குமணர் உயிருடன் இருக்கிறார்களே என்று அவன் வெதும்புகிறான்; அவர்கள் உயிருடன் இருக்கத் தான் உடலைச் சுமப்பது தருமமன்று, வீர தருமத்திற்கு விரோதமானது என்கின்றான்.

> " இருவ ரோடும்
> ஆண்டுள குரங்கும் ஒன்றும் அவர்களத்து ஆரும் இன்...ம்
> மாண்டிலர் இனிமற் றுண்டோ இராவணன் வீர வாழ்க்கை. "

"நன்று நன்று நம் வீர வாழ்க்கை! என் மைந்தன் உயிர் கொண்ட இரு வீரரும், குரங்கும் உயிருடன் இருக்கின்றாரென்றால் என் வீர வாழ்க்கை இருந்தவாறு என்னே!" என்கின்றான் இலங்கை அரசன். தன் மகன் இறப்பான் என்ற சொல் வந்ததும், அவன் சீதைமீது சீறி வாளேந்திக்கொண்டு அவளை வெட்டச் செல்கின்றான். ஆனால் பெண்கொலை செய்வதால் அவன் புகழுக்கு மாசு வரும் என்று எண்ணி,

> " தெள்ளருங் கால கேயர் சிரத்தொடும் திசைக்கண் யானை
> வெள்ளிய மருப்புச் சிந்த வீசிய விசயத் தோள்வாள்
> வள்ளிய மருங்குற் செவ்வாய் மாதர்மேல் வைத்த போது
> கொள்ளுமோ ஆவி,தானே நாணத்தால் குறைவ தல்லால் "

என்று சதுரப்பாடு தோன்ற மகோதரன் கூறுவது பாராட்டற்குரியது. "காலகேயர்கள் சிரங்களை ஒரே வீச்சில் வீழ்த்திய வாள், திசையானைகள் மருப்பைச் சிந்திய வாள், ஒரு பெண்ணின் உயிரை வாங்க நினைக்குமா? அதுவும் நாணத்தால் கூசிக் குறுகிப்போகும்" என மகோதரன் மொழிகின்றான். புலத்தியன் மரபே அதனால் இழுக்கடையும்; ஒரு பெண்ணினை இராவணன் கொன்றான் என்றால் அக்குலத்திற்கு வரும் பழியை நோக்கி மும்மூர்த்திகளும் கைகொட்டி நகைப்பார்களே என்று அவன் கருதுகின்றான்.

உடனே இராவணன் தன் எண்ணத்தை விடுத்து, மாசு வரும் செய்கையைச் செய்வது தன் வீரத்திற்கு ஏற்றதன்று என்று மீளுகின்றான். பின்னர் மூலபலத்தை ஏவித் தானும் அதனுடன் நின்று போர் செய்கின்றான். மூலபலம் நிர்மூலமாயிற்று.

இறுதிநாட்போர் ஆரம்பமாகின்றனது. அன்று எதிரியையாவது ஒழிக்கவேண்டும், தானாவது அழியவேண்டுமென்று அவன் சபதம்செய்து கொள்ளுகின்றான். அவனுடைய வில்லின்

நாதேனைசையைக் கேட்டதுமே தெய்வப் பெண்களும், அப்சர நங்கைகளும் தங்கள் தாலிச் சரட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள். அங்கதன் சுக்கிரீவன் உட்பட வானரர்கள் யாவரும் இராவணன் போர்க் கோலத்தைக் கண்டு பயந்து விட்டனர். அனுமானும் சிறிது பயந்தான்.

" பெருமை சால்கொடும் பாவமும் பேர்கலாத்
தருமமும்எனச் சென்றெதிர் தாக்கினர் "

எனக் கம்பர் இராவணனும் இராமனும் போர் செய்ய முற்பட்டுப் பொருததைக் குறிக்கின்றார்.

" மானுடன் தோள்வலி
ஒடுக்கித் தேரை உதிர்த்துஒரு வில்லொடும்
பிடித்துக் கொள்வன் சிறை "

எனக் கூறுகின்றனன் இராவணன். தன்னுடைய வெற்றி வில் கொண்டு இராமனை வதம் செய்வதில் என்ன பயன்? அவன் தேரை ஒடித்து அவனைச் சிறைப்பிடித்துக் கொள்வதே தக்கது என்பது அவன் எண்ணம். எனவே, பாணங்களை மாறிமாறிப் பொழிந்து உக்கிரமான கோபத்தோடு அவன் போர் புரிய, இராமன் அமைதியாகவே நின்று பொரலானான். இராவண னுடைய கோபத்தை அஃது அதிகப்படுத்துகின்றது. இராம னுடைய தேர்க்கொடியை அறுத்துத் தள்ளிச் சாரதி மாதலியின் மார்பிலும் அம்பினை நாட்டுகின்றான். இராமன் தோற்றுவிட்ட தாகவே தேவர்கள் எண்ணுகிறார்கள். இராவணனுடைய போரைக் கண்டு வியப்புற்ற தேவர்களும் முனிவர்களும் கீழ் வருமாறு கூறுகின்றார்:

" என்ன கைக்கடுப் போஎன்பர் சிலர்சில ரிவையும்
அன்ன மாயமே அம்பல என்பரவ் வம்பிற்கு
இன்னம் உண்டுகொல் இடம்என்பர் சிலர்சில ரிகற்போர்
முன்ன மிந்நிலை முயன்றில வும்என்பர் முனிவர்."

மாயமா அல்லது அவைகள் அம்புகள்தாமா என்று முனி வர்கள் அதிசயிக்கின்றார்கள். திக்கு விஜய காலத்தில் போர் செய்ததைவிட வேகமாகப் போர் செய்கின்றான் இராவணன். இறுதியில் மாயாத்திரத்தை அவன் பிரயோகிக்கின்றான். ஆனால் அஃது ஒரு பயனையும் அளிக்கவில்லை. இராவணனே இதற்குக் காரணம் அறியாதவனாய், 'மெய் வரமெல்லாம் அடுகின்றான். இவன் யாரோ?' என்று எண்ணுகின்றான். உடனே அவன்,

" யாரே னுந்தா ருகுக யான்என் தனிஆண்மை
பேரேன் இன்றே வென்றி முடிப்பன் புகழ்பெற்றேன் "

என்று தனி ஆண்மையொடு போரை நடத்துகின்றான். கோபத்தோடு மும்முரமாகப் பொரும் இராவணனுக்கு அயர்வு தோன்றுகின்றது. அவன் தன் தேரின்மீது மூர்ச்சித்து விழுகின்றான். அவனுடைய சாரதி தேரைத் திருப்பிக்கொண்டு போகின்றான். இராமன் அம்பு எய்வதை நிறுத்திவிடுகின்றான். சிறிது நேரங் கழித்து இராவணன் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் இராமனையும் தேரையும் காணாதுகித் தான் எதிரியின் பின்புறம் இருப்பதை அறிந்து அவமானம் அடைந்து,

"தேர்தி ரித்தனை தேவரும் காணவே
வீர விற்கை இராமற்கு வெண்ணகை
பேர வுய்த்தனை யேபிழைத்தாய்."

"என் செய்தனை" என்று நாணத்தொடு வினவுகின்றான். கடமையைத் தான் சாரதி செய்தான் என்றதும், இராவணன் திரும்பவும் போர்க்களத்திற்குச் சென்று முன்னிலும் மும்மடங்கு வலிமையுடன் போர் புரிகின்றான்.

" கூற்றின் வெங்கணை கோடியின் கோடிகள்
தூற்றி னன்வலி'மும்மடி தோற்றினன்
வேற்றொர் வாளரக் கன்என வெம்மையால்
ஆற்றினன் செரு."

வேறு ஓர் இராவணன் என்று கண்டோர் ஐயுறும்படி அவன் தெளிவுற்று முன்னிலும் மும்மடங்கு வலிமையுடன் போர் புரிகின்றான். ஆனால் இராமனது பிரமாஸ்திரம் அவன் மார்பில் பாய்ந்து அவன் உயிரைக் குடித்து விடுகின்றது.

" திக்கோடு முலகனைத்தும் செருக்கடந்த புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று இராகவன்றன் புனிதவாளி"

இறந்து விழுந்த இராவணனுடைய நிலை வியத்தற்குரியது.

" வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க
மனமடங்க வினையும் வீயத்
தெம்மடங்கப் பொருநடக்கைச் செயலடங்க
மயலடங்க ஆற்றல் தேயத்

நம்மடங்கு முனிவரையும் தலையடங்க
நிலையடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தனஅம் முறைதுறந்நான்
உயிர்துறந்த முகங்கள் அம்மா!''

பழைய வீரச்செயல்களைச் செய்த காலத்தில் இருந்ததைவிட அவன் கீழே விழுந்ததும் அவனுடைய முகங்கள் மும்மடங்கு வீராவேசப் பொலிவுடையனவாய் விளங்கின என்று கம்பர் கூறுகின்றார். தேவர்களும் அம்முகத்தை நோக்கி அச்சமும் வியப்பும் கொள்ளுகின்றார்கள். 'போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங் கொடாப் போர்வீரன் பொருது வீழ்ந்த சீரினை' மனமுவந்து இராமன் பார்த்து நிற்கின்றான். இராவணனுடைய முதுகில் ஒரு தழும்பு காணப்படுகிறது. அது கண்டதும் இராமனுடைய உவகையும் ஆச்சரியமும் நீங்குகின்றன. இராமன் நாணுகின்றான். விடணன் அதற்குக் காரணம் கூறுகின்றான்.

திக்கு விஜய காலத்தில் இராவணன் பகைவர்களைத் தேடித் திரிவதுண்டு. சிலகால் பகைவர்கள் கிடைப்பதில்லை. திக்கின் கோடிகள் வரையில் இலங்கேசன் செல்வான். அங்குள்ள திக்கஜங்களோடு முட்டிப் போர் செய்வான். அவற்றின் தந்தங்கள் அவன் மார்பில் பாய்ந்து முதுகின் வழியாக வெளிப்பட்டு முறியும். எனவே, முதுகில் தழும்பு ஏற்பட்டது அத் திக்கஜங்களால். முதுகில் தழும்பு ஏற்பட்டும் இராவணனுக்கே வெற்றி.

இங்ஙனம் கூறிய வீடணன், "இனி இராவணன் கொல்லப் பட்டான் என்றால் அதற்கும் காரணம் உண்டு. அக்காரணம் அவன்பால் ஏற்பட்ட காமப்பித்து. அப்பித்தின்றேல் இராமனுக்குப் பெரு வெற்றி ஏற்பட்டிராது. இராவணனை வெல்லச் சாத்தியமாக இருந்தது அக் காமப் பித்தாகிய காரணமே" என்று கூறி முடிக்கிறான்.

'தாயினும் தொழுந்தக் காள்மேல் தாங்கிய காதற் றின்மை
நோயும்நின் முனிவும் அல்லால் வெல்வரோ நுவலற் பாலார்'

என்பது வீடணன் வாக்கு.

தேவர்கள் இராவணன் இறந்த செய்தியைக் கேள்வியுற்றனர். ஆனால் அச் செய்தியை உண்மையெனக் கொள்ள அவர்கள் துணிந்திலர். அவன் இறந்தான் என்ற செய்தி பொய்யோ என்று அவர் எண்ணினர்.

"என்றுயாம் இடுக்கண் தீர்வது என்கிருர் இவன்இன்று உன்ஞல்
பொன்றினன் என்ற போதும் புலப்படார் பொய்கொல் என்பார்."

இராவணனுடைய வீரத்தை:

" போருள தனையும் வென்று புகழுள தனையு முள்ளாய் "

"போருள்ள வரையில் வெற்றி உண்டு; புகழ் உலகத்தில் இருப்பதுவரை உன் பெயர் உலகத்தில் நிலைக்கும்" என்று மகோதரன் கூறியதுபோல், இராவணனுடைய பெயரும் இராமன் பெயரோடு நிலைத்து நிற்கலாயிற்று. இராமாயணம் இராவணாயனம் என்ற பெயரொடும் வழங்கும்படி அவன் வீரச் சிறப்பு நிலைத்துவிட்டது.

கும்பகருணன்

இராவணனுக்கு நேரிளைஞன் கும்பகருணன். இவன் சிறந்த வீரன்; எனினும் வாய்குழறி வரம் வேண்டிச் சதா நித்திரையையே அடைந்தான். இலங்கையில் சீதையைத் தேடித் திரியும் அனுமன் இவனை முதல்முதலில் பார்த்ததும் இவன் இராவணன்தானே என்று சந்தேகிக்கின்ருன். பெருந்துயிலுக்கு உதாரணமாகக் கூறப்படும் கும்பகருணன் உண்மையில் ஒரு பெருவீரன்; தமையன்பால் பயபக்தி மிகுந்தவன். முதல்நாள் போரில் தோற்ற இராவணன் கும்பகருணனைப் போர்க்களத்திற்கு அனுப்புகின்ருன். அதற்கு முன், உறங்குகின்ற கும்பகருணனை எழுப்பும் வகை வியப்பிற்கு உரியது. யானைகளைக் கொண்டு மிதிப்பித்தும் அவன் எழவில்லை. உலக்கைகளால் கன்னப்புடைகளில் நன்கு புடைக்கப்பட்டவுடன் அவன் எழுந்திருக்கின்ருன். அவன் பெற்ற உறக்க வரம் அத்தகையது. பசி தாகம் தீர, ஆறு வண்டி சோறும் பல நூறு குடம் கள்ளும் அவன் உட்கொள்ளுகின்ருன்; பின்னர் இராவணனிடம் போர்க் கோலத்தோடு செல்லுகின்ருன். அவன், தான் உறங்குதற்குச் செல்லுமுன்பே தன் தமையன் சீதையைச் சிறையில் வைத்த சேதியை அறிவான். எனவே அவன் தன் தமையனைப் பார்த்தவுடன்,

" வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றுங் காலமோ "

என்று கூறி, "சீதையை விடாத காரணத்திஞல் போர் விளைந்ததோ?" என்று வினவுகின்ருன். பிறகு அவன் தன் தமைய

னிடத்தில் இரண்டு சூழ்ச்சிகளைக் கூறுகின்றான். அவற்றுள், ஒன்று சீதையைச் சிறைவிடுத்து இராமனோடு நட்புக்கொள்வது; மற்றொன்று, படைவலி முழுவதையும் பகைவர்மீது ஒரு சேரச் செலுத்தி எதிர்ப்பது. "இவ்விரண்டு சூழ்ச்சிகளுள் யாதேனும் ஒன்று கொள்ளற்பாலது" என்று கூற, முதற் சூழ்ச்சியின் திறத்தில் மிகக் கொதிப்படைந்த இராவணன்,

"மானுட ரிருவரை வணங்கி மற்றுமக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட் டுய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்கு மேகடன்
யானது முடிக்கிலேன் எழுதி போதியால்"

என்றான்.

இராவணன் கும்பகருணனைப் பார்த்துக் கடுமொழி கூறிப்பின் தானே போர் புரியச் செல்கின்றான். குரங்கையும் முனிவரையும் கும்பிட்டு வாழ்தல் கும்பகருணனுக்கும் வீடணனுக்கும் தகும், தனக்கு அது செய்ய முடியாது, என்று கூறி இராவணன் போருக்கு எழக்கண்டான் கும்பகருணன்; சகோதர வாஞ்சை மேலிட்டவனாய்த் தான் சொன்னதை இராவணன் தப்பிதமாக நினைந்தது கண்டு, அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போர்க்களத்திற்குச் சென்று இராமனைச் சந்திக்கின்றான். இவனைக் கண்ட இராமன் இவனைப்போல் வீரனொருவனை அது வரையில் கண்டதே இல்லை என்கின்றான். தன்னைப்போல் கும்ப கருணனையும் இராமனிடம் சேர்த்து அவனை உய்விக்க வீடணன் விருப்பங்கொண்டு அவனிடம் சென்று,

"எனக்கவன் தந்த செல்வத் திலங்கையும் அரசும் எல்லாம்
நினக்குநான் தருவென் தந்துன் ஏவலின் எளிதில் நிற்பென்"

என்கின்றான். ஆனால் கும்பகருணனோ கேவலம் ராஜ்ய பதவி கருதி அண்ணனுக்குத் துரோகம் செய்ய மறுத்து விடுகின்றான்

"நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது அங்குப்
போகேன்"

என்று வீடணனிடம் கும்பகருணன் கண்டிப்பாய்க் கூறி விடுகின்றான். கும்பகருணனுடைய லட்சியம் சாலச் சிறந்தது. மேலும் அவன் வீடணனிடம் சீற்றங் கொண்டு,

" செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ டைய
கும்பிட்டு வாழ்கிலேன்யான் கூற்றையும் ஆடல்கண்டேன் "

என்று கூறி மூத்தவனுடைய பகைவனை ஆதரித்து வாழ்வது தனக்கு நன்மை பயப்பதன்று, அது தன்னுடைய பெருமைக்கும் வீரத்திற்கும் இழுக்குத் தருவதாம், என்றும் கூறுகின்றான்.

" உம்பரும் பிறரும் போற்ற ஒருவன்மூ வுலகை ஆண்டு
தம்பியர் இன்றி மாண்டு கிடப்பனோ தமியன் மண்மேல். "

"மூன்று உலகங்கட்கும் அரசர்க்கரசனாக வாழ்ந்த ஒருவன் தம்பியரும் அருகே இல்லாமல் போர்க்களத்தில் தனியனாய் மாண்டானென்றால் அது நகைப்பிற்கு இடமாகாதா?" என்கின்றான் கும்பகருணன்; இலங்கை ஆட்சியைப் பெற்றுத் தன் தமையன் உயிரைக் கொண்ட பகைவர்களை வாழ்த்தி நிற்பது, தனக்குச் சரியன்று என்கின்றான்; போர் செய்து வீரனாகப் புலையுறு மரணம் எய்தல் தனக்குப் புகழே பயப்பதாம் என்றும் கூறுகின்றான்.

பின்னர்த் தம்பியிடம் விடை பெற்றுக்கொண்டு போர்க்களம் செல்லுகின்றான். போர்க்களத்தில் அனுமன் தன்மீது வீசியெறிந்த மலையைத் தன் தோள்மீது தாங்கிச் சுக்கல் சுக்கலாக அவன் செய்து விடுகின்றான்; வானரப் படையை அதம் செய்கின்றான். பின்னர் இலக்குமணனும் கும்பகருணனும் ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கின்றனர், அரக்கர் குலப்பாவை சூர்ப்பநகையை மூக்கரிந்த கைகளை வெட்டி வீழ்த்துவதாகச் சபத மொழி கூறிக்கொண்டு கும்பகருணன் இலக்குமணனோடு போர் தொடங்குகின்றான். இலக்குவனோ, "அரக்கரோடு நாங்கள் வில்லால் பேசுவமே ஒழியச் சொல்லால் பேசோம்" என்று பாணங்களை அவன் மீது விடுகின்றான். பாணங்கள் அவனை நன்றாகத் தாக்குகின்றன. எனினும் கும்பகருணன் வானரப் படைகளை அதஞ் செய்துவிட்டுச் சுக்கிரீவனைக் கையோடு எடுத்துக்கொண்டு இலங்கை நோக்கிச் செல்லத் தலைப்படுகின்றான். இதை இராமன் அறிந்து அவன் போகும் வழியைச் சரங்களால் அடைத்துவிடுகின்றான். அப்பொழுதுதான் இராமனைப் பார்க்கின்றான் கும்பகருணன், இதற்குள் கும்பகருணன் மூக்கைச் சுக்கிரீவன் அறுத்துக்கொண்டு இராமனிடம் ஓடி வருகின்றான்.

இராம பாணங்கள் கும்பகருணனைத் தாக்குகின்றன. அவற்றை யெல்லாம் தடுக்கின்றான் கும்பகருணன். எனினும் அவன் சேனை முழுதும் சேதம் அடைகின்றன. நிராயுத பாணியாய் நிற்கின்றான் கும்பகருணன். அப்பொழுது இராமன் அவனைப் பார்த்து,

" ஏதி யோடுஎதிர் பெருந்துணை இழந்தனை எதிரொரு தனிநின்றாய்
நீதி யோனுடன் பிறந்தனை யாதலின் நின்னுயிர் நினக்கு ஈவன் "

என்று கூறுகின்றான்; நீதிவானாகிய வீடணன் அவனுக்குத் தமையன் என்றதனால் அவனுக்கு உயிர்ப் பிச்சை தருவதாகக் கூறுகின்றான். மானமற்ற வாழ்க்கையை விரும்பாத கும்ப கருணன்,

" ... ...பெருஞ்செவி மூக்கோடும், [ரம்மா "
அறுப்புண்ட எங்கைபோல் என்முகங் காட்டி நின்று ஆற்றலன் உயி

என்று வருந்துகின்றான். தமையனுடைய தவறுதலால் தக்கோர் முன் தான் வாயிழந்திருப்பதாகவும், மானத்தோடும் வீரத்தோ டும் வாழ்வான் என்பதாகவும் அவன் கூறுகின்றான். இதற்குள் அவன் தன் கைகளையும் கால்களையும் இழக்கின்றான். அப் பொழுது, " இராமனுடைய விற்றொழிலுக்கு ஆயிரம் இராவணர் நிகர் அலரே ; நானோ கையும் காலும் இழந்தனன். எப்படி அண் ணனுக்குத் துணை புரிவேன் !" என அவன் ஏங்குகின்றான். அவ னுடைய பெரு வீரத்தைக் கண்டு இராமனே வியப்படைகின் றான். அப்பொழுது கும்பகருணன் இராமனை ஒரு வரம் வேண்டு மென்கிறான். தன்னுயிருக்காக அவன் மன்றாட வில்லை. தன் தம்பியாகிய வீடணனுக்கே பரிவு கொள்ளு கின்றான்.

" நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என்தம்பி
ஆதியாய் உனைஅடைந்தான் அரசன்உருக் கொண்டமைந்த
வேதியா இன்னும்உனக்கு அடைக்கலம்யான் வேண்டினேன் "

கோபங் கொண்ட இராவணனிடமிருந்து வீடணனைக் காக்க வேண்டுமென்று இராமனிடம் வேண்டிக் கொண்டு பிறகு தனக் கெனக் கும்பகருணன் ஒரு வரம் கேட்கின்றான்.

" மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்கணையால் என்கழுத்தை

நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய் இதுநின்னை வேண்டுகின்ற பொருள்என்றான்.''

தன்னுடைய தலையைக் கீழே வீழ்த்தினால் அதைக் கடலுள் வீழ்த்தும்படி அவன் வேண்டுகின்றான். மூக்கிலா முகமென்று தேவர்கள் அதனைத் தைரியமாகப் பார்ப்பார்களென்று இவ்வாறு இராமனைத் தன் மானத்தைக் காப்பாற்றும்படி வரம் கேட்கலானான். அவன் வேண்டுகோளின்படி அவன் வதம் செய்யப் பெறுகின்றான். அவனுடைய சகோதர வாஞ்சை, வீரம் முதலியன நம்முடைய அநுதாபத்தை அவன் பால் செலுத்துகின்றன.

இந்திரசித்து

வில்லாள ரானோர்க் கெல்லாம் மேலவனாகிய இந்திரசித்தன் மண்டோதரியின் மைந்தன். அவனுடைய மற்றொரு பெயர் மேகநாதன் எனபது. இந்திரனைக் கட்டிக் கொணர்ந்து, தன் தந்தை முன் விட்டநாள் முதல் அவன் இந்திரசித்து என்று அழைக்கப் பெற்றான். இராவண சாம்ராஜ்யத்திற்கு அடிகோலியவருள் இந்திரசித்தும் ஒருவன். இலங்கையில் இராவணனது மாளிகையில் சீதையைத் தேடும் அனுமான் இந்திரசித்து உறங்குவதைக் காணுங்கால் அவன் முருகக் கடவுளோ என்று ஐயுறுகின்றான். இத்தகையவனைக் கொண்டு இராவணன் மூவுலகையும் வென்றானென்றால் அதில் ஐயம் ஏற்படுவதற்கு வழியில்லை.

'' இளைய வீரனும் ஏந்தலும் இருவரும் பலநாளும்
உளைய உள்ளபோர் இவனொடும் உளதென உணர்ந்தான்.''

இராம இலக்குமணர்கள் இவனோடு பல நாட்கள் கொடிய போர் நடத்த வேண்டுமென்று யூகிக்கின்றனன். ஆட்களைப் பார்த்தவுடன் அவர்கள் தன்மையை அறியும் அனுமான், வீரனாகிய இந்திரசித்துச்கு அளிக்கும் நற்சாட்சிப் பத்திரம் இது. தன்னுடைய தம்பியாகிய அட்சய குமாரன் அனுமானால் வதை செய்யப் பட்டான் என்பதை அறிந்த இந்திரசித்து, கண்ணீரைத் தாரை தாரையாக வடிக்கின்றான்; தன் சிலையை வெறுப்புடன் நோக்குகின்றான்.

'' கொம்பியல் மாய வாழ்க்கைக் குரங்கினால் குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றோ தேய்ந்தது ''

"கேவலம் ஒரு குரங்கு என் தம்பியைக் கொன்றது என்றால் இறந்தது என் தம்பியா? என் தந்தையின் புகழா?" என்று கேட்கின்ற இந்திரசித்து, அட்சயகுமாரனும் தன் தம்பி மாண்டதால் இராவண ஏகாதிபத்தியத்தின் புகழும் அரக்கர் புகழும் வீழ்ச்சி அடைந்தன என்று கருதுகின்றான். உடனே அவன் தந்தையை நோக்கிச் செல்லுகின்றான். குரங்கின் ஆற்றலை அறிந்தும் அரக்கரை வரிசை வரிசையாக அனுப்பிப் பலி கொடுத்தான் தன் தந்தை என்று கூறிவிட்டு இந்திரசித்துத் தன் தந்தையை நோக்கித் தான் குரங்கினைக் கையொடு பிடித்து வந்து கொடுப்பதாய் வாக்குறுதி செய்து கொடுக்கின்றான். இந்திரசித்துக்கு முன் வீரர் பலர் இருந்தனர். அவர்களெல்லாம் அழிவுற்றபின் வீரன் இவனொருவனே. வீரத்தின் ஒருமைக்குக் காரணவான் இந்திரசித்தே. வழிநெடுக அனுமன் செய்த வதங்களைப் பார்த்து இந்திரசித்து அவனுடைய வீரத்தைப் புகழ்கின்றான். பாம்பின்கால் பாம்பறியும் என்பதுபோல வீரனாகிய அனுமனை இந்திரசித்து அறிந்து புகழ்கின்றான். உள்ளுக்குள்ளே தனக்குச் சரியான பகைவன் கிடைக்கின்றான் என்றெண்ணி இந்திரசித்துக் களிப்படைகின்றான். அவனுடைய புயங்கள் நெடுநாளாகப் போருக்காகத் தினவெடுத்துக் கொண்டிருந்தன. அனுமனைக் கண்டதும் அவன் களிப்புறுகின்றான். ஆனால் அப்போதே, படைகளை யெல்லாம் ஒரே குரங்கு வென்று கொன்றதென்றால் இராமன் வந்தால் அவனை எப்படி வெல்வதென்றும் அவன் திகைப்புறுகின்றான். போகும் வழி எல்லாம் அரக்கர் மடிந்து கிடப்பதைப் பார்த்த அவன் மனம் வெடிக்கின்றது.

> "கானிடை அத்தைக் குற்ற குற்றமும் கரனார் பாடும்
> யானுடை எம்பி வீந்த இடுக்கணும் பிறவு மெல்லாம்
> மானிடர் இருவரானும் வானரம் ஒன்றி னானும்
> ஆனிடத் துளஎன் வீரம் அழகிற்றே அம்ம என்றான்."

இரண்டு மனிதர்களும் ஒரு குரங்கும் இத்தனை அழிவுக்கும் காரணம் என்று எண்ணும் இந்திரசித்து, தக்கந்த சமயத்தில் அவர்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் பழிக்குப் பழியாவது வாங்கவேண்டு மென்று முடிவு கட்டுகின்றான். 'வாரும் வாரும் என்றழைக்கும் அனுமன் மேல் வந்தான் இந்திரசித்தும்' என்கின்றார் கம்பர். அனுமானைப் பிரமாஸ்திரத்

தால் பிணைத்து, இராவணன் முன்கொணர்ந்து நிறுத்தி, 'அரியுருவான ஆண்தகை' என்று இந்திரசித்து அவனை அறிமுகப் படுத்துகின்றான். இந்திரசித்து உண்மையான வீரனாய் இருந்தபடியால் பெருவீரனாய அனுமனை உண்மைப் புகழோடும் அறிமுகப்படுத்துகின்றான்.

கும்பகருணன், அதிகாயன் முதலியவர்கள் இறந்த பின்பு இராவணன் இந்திரசித்தை அழைக்கின்றான், முகவாட்டத் தோடு இருக்கும் தந்தையைக காணும் மைந்தன், சோகக்குறியும் தந்தை முகத்தில் இருப்பதைப் பார்க்கின்றான். விவரங்களை அறிந்ததும்,

" கொன்றாரவரோ ; கொலைசூழ்கென நீகொடுத்தாய் "

என்று கடுமையாகக் கூறுகின்றான் ; பகைவருடைய வலியை அறிந்து உடன் பிறந்து கொல்லும் சத்துருவான வீடணன் அவர்கள்பால் இருப்பதை அறிந்து அனுபவ மில்லாத வர்களைப் போருக்கனுப்புவது தவறு என்று கூறுகின்றான். " தம்பியைக் கொன்றவனைக்கொன்று நான் நகரம் மீள்வேன் " என்று சபதம் செய்துகொண்டு போர்க்களத்துக்கு வருகின்றான் இந்திரசித்து.

" அனுமனைப் பிணித்துளனை போதுஅவன்
தனுமறை வித்தகம் சாற்றற் பாலதோ "

என அவன வீரததைப பாராட்டி வீடணன் எச்சரிக்கை செய்கின்றான். அனுமனை நோக்கி இந்திரசித்து, "நான் வில் லெடுத்து வராததனா லல்லவா நீங்கள் இன்னும் உயிர் பிழைத் திருக்கின்றீர்கள்? உங்களுடைய தலைவனான அந்த இலக்கு மணன் எங்கே ? " என்று வீரவார்த்தை கூறுகின்றான்.

" எங்கு நின்றனன் இலக்குவப் பெயரவ்வேழை எம்பிஅதி காயனும்
சிங்கம் வந்தவனை வென்று தன்னுயிர் எனக்கு
வைத்ததொர் சிறப்பினான் "

"எனக்காக வன்றோ அவ்வுயிரை அந்த இலக்குமணன் வைத் திருக்கின்றான் ? கூப்பிடுங்கள் அவனை " என்று பாணங்கள் தொடுத்துக்கொண்டு அவன் வருகின்றான். அதனுடைய வில்லம்பு அங்கதன் அனுமான் முதலியவர்களைக் கலக்குகின்றன. வானரர் கள் பயந்து இலக்குமணனிடம் முறையிடுகின்றார்கள். இலக்கு

மணன் இந்திரசித்தை நோக்கி வருகின்றான். இருவருக்கும் கடும்போர் நிகழ்கின்றது.

" என்செய்நார் என்செய்நார் என்று இயம்புவார் இனைய தன்மை
முன்செய்நார் யாவ ரென்பார் முன்னேது பின்னேது என்பார்."

யார் முன்னே பாணத்தைத் தொடுத்தவர்கள் என்று தெரியாத அவ்வளவு வேகமாக இரண்டு போர் வீரர்களும் சுழன்று சுழன்று போர்புரிகின்றனர். முடிவில் இந்திரசித்து இலக்குமணனை நாகபாசத்தால் பிணித்துவிடுகின்றான்.

" சொற்றது முடித்தேன் நாளை என்னுடற் சோர்வை நீக்கி
மற்றது முடிப்பன் என்று எண்ணினான். "

இந்திரசித்திற்கு உடற்சோர்வு தோன்றுகிறது யுத்தத்தில். அதை மறுநாள் நீக்கிக்கொள்ளலாம் என்று அவன் கூறுகின்றான். பிறகு அவன் தன் தந்தையின் அரண்மனைக்குச் செல்கின்றான். பெரிய திருவடியினால் நாகபாசம் விடுபட பகைவர் மீண்டும் உயிர்பெற்றார் என்று கேட்டு இந்திரசித்து மறுமுறை போர் செய்ய வருகின்றான், இராம இலக்குமணருடைய பாணங்கள் போர்க்களத்தில் செய்யும் அதத்தினை இமை கொட்டாது பார்த்து நின்ற அவன்,'எங்கும் இம்மனிதர் என்பார் இருவரே கொல்?' என்று உன்னுகின்றான்; அரக்கர் சேனை சும்மா இருப்பதைப் பார்த்து அவர்களைத் தூண்டுகின்றான். இலக்குமணனைப் பார்த்து, " கும்பகருணன் என்ற ஒருவன், நீர் அம்பிடைக் குறைத்த தம்பியல்ல; நான் இராவணன் மகன் ஒரு தமியேன் " என்று கூறி " உங்களைக் கொன்று அந்த இரத்தத்தைக் கொண்டு என் தம்பியருக்கும் சிறிய தந்தைக்கும் தர்ப்பணம் செய்யப் போகின்றேன்" என்கிறான் மேகநாதன். இலக்குமணன் சொல்லுக்குச் சொல் சிங்காரமாக,

" அரக்கன் என்பதோர் பேர்படைத் தோர்க்கெலாம் அடுத்த
புரக்கும் நன்கடன் செயவுளன் விடணன் "

" அரக்கர் அனைவருக்கும் இறுதி நியமங்கள் செய்ய வீடணன் உளான்" என்று கூறுகின்றான். சொற்போருக்குப் பின் விற்போர் நிகழ்கின்றது கடுமையாக. பிரமாஸ்திரத்தை உபயோகித்து இலக்குமணனை இந்திரசித்து வீழ்த்துகின்றான். உணர்வு ஒடுங்கி இலக்குமணனும் அனுமனும் ஏனை வானரர்

களும் வீழ்ந்துவிடுகின்றனர். இந்திரசித்து வெற்றியோடு நக ருக்கு வருகின்முன்.

மறுமுறையும் மந்திர மலையின் சக்தியால் இலக்குமண னும் வானரரும் உயிர் பெறுகின்றனர். இந்திரசித்து மாயா சீதையை அனுமன் முன் வெட்டி வீழ்த்தி நிகும்பலை யாகத் துக்குச் செல்லுகின்முன். வீடணன் மூலமாய் இதை அறிந்து இலக்குமணனும் வானர வீரர்களும் நிகும்பலை யாககுண்டத் தைப் பாழாக்குகின்றனர். இந்திரசித்தோ கோபத்தோடு நோக்கு கின்முன். அனுமனே, "மாயம் வஞ்சனை பரப்பச் செய்யும் மாயப்போர் ஆற்றலெல்லாம் இன்ருேடும் மாளும் அன்றே" என்று சொல்லலும், இந்திரசித்தின் கோபம் அதிகப்படுகின்றது. அவன்,

" யானுடை வில்லும் என்பொற் றோள்களும் இருக்க இன்னம்
ஊனுடை உயிர்கள் யாவும் உய்யுமோ ஒளிப்பி லாமல் ?
கூனுடைக் குரங்கி னேடும் மனிசரைக் கொன்று சென்றவ்
வானினும் தொடர்ந்து கொல்வன் மருந்தினும் உய்ய மாட்டீர்."

என்று சபதம் கூறுகின்முன்.

யாகம் போனாலும் தன்னுடைய வில்லும் தோளும் உள்ள வரையில் இராமனும் அவனுடைய வானர சேனைகளும் உய் யார் என்று அவன் இயம்புகின்முன். "ஒளிந்துகொள்ள இட மில்லாமல் அந்த மனிதர்களைக் குரங்கினேடு எமபுரம் வரையில் சென்று கொல்லுவேன். இந்தமுறை மருந்தினுல் கூடப் பிழைக்கமுடியாமற் செய்வேன். என்னுடைய கைகள் புதிய பாணங்களால் உங்கள் தலைகளைக் கொய்து நிற்கும். மற்றெல் லாம் உம்மைப்போல வாயினுல் பேசமாட்டேன்." என்று அவன் தன் வில்லை யெடுத்து நாணேற்றி அதனை டங்காரம் செய் கின்முன். இந்த ஓசையைக் கேட்டதுமே வானரங்கள் பயந் தோடுகின்றன. சில செயல் அற்றன. இந்திரசித்தின் அம்பு கள் திரிபுர மெரித்த சிவபெருமானுடைய சிரிப்பைப் போலப் புறப்பட்டுச் சென்று வானரங்களைத் துவம்சம் செய்கின்றன. அவன் சரமாரிக்கு முன்பு இலக்குமணனும் துடிதுடித்து நிற்கின்முன். இந்திரசித்துக்குச் சோர்வு ஏற் படுகின்றது. அவன் தன்னிடம் இருந்த நாராயணுஸ்திரத்தை ஏவுகின்முன். அது பயனற்றுப் போகின்றது. பின்னர் அவன் இராவணனிடத்திற்குச் சென்று, "குலஞ்செய் பாவத்தால்

கொடும்பகை தேடிக்கொண்டோம். நாராயணாஸ்திரமே அவர்களை வலம் செய்துவிட்டுப் போயிற்றென்றால், சீதையை விடுதல் அல்லாது செய்யத் தக்கது வேறொன்றும் இல்லை. இது பயந்துரைத்தேன் என்று கருதவேண்டா. உன்மேலுள்ள காதலால் உரைத்தேன்" என்கின்றான். இது கேட்ட இராவணன்,

" மயங்கினை மனிசன் தன்னை அஞ்சலை வருந்தல் ஐய
சயங்கொண்டு தருவன் இன்றே மனிசரைத் தனுவொன் றாலே "

என்று பேச, இந்திரசித்துக்கு உள்ளத்துள் பொறுத்தற்கரிய நோயுண்டாகியது. உடனே அங்கிருந்தோரை நோக்கி, "மன்னனைக் காமின்" என்று கூறிவிட்டு, அன்போடு தந்தையை நோக்கி அன்பினால் கண்ணீர் அருவிபோல் சொரிய அவனிடம் விடைபெற்றுக்கொண்டு போர்க்களம் வருகின்றான். அவன் தன் உயிருக்கு அஞ்சினான் அல்லன். தான் போரில் இறக்க நேர்ந்தால் மன்னனுக்கு யாது நேருமோ என்ற கவலை மேலிட்டால், "மன்னனைக் காமின்; யாதும் கலங்கலீர்; இன்றே சென்று மனிசரைக் காய்வல்" என்று விரைந்து செல்கின்றான்.

புதிய தேரில் ஏறிவரும் அவன் வில் நாண் ஓசையைக் கேட்கும் வானரங்கட்கு அறிவு குன்றிப்போகின்றது. அவனுடைய மனோதைரியத்தை மெச்சிய தேவர்களும், " வீரரென்பார்கட்கெல்லாம் வீரன்" என்று அவனைப் போற்றுகின்றனர். இலக்குமணன் பாணங்கள தன்மீது பட, அவற்றையே பறித்து அவன் இலக்குமணன்மீது விடுகின்றான். கைதடுமாறாமல், உள்ளம் கலங்காமல், சோர்வின்றி அவன் யுத்தம் புரிவதைப் பார்த்த இலக்குமணன், " இவனொடும் எஞ்சும் ஆண்தொழி லாற்றல்" என்று வியந்து கூறுகின்றனன். உடனே இலக்குமணன் அவனுடைய வில்லைத் தகர்த்து இந்திரசித்தின் கையை அறுத்துவிடுகின்றான்.

கையற்று வீழ்ந்தபோதிலும் அந்தக் கைவிரல்கள் வில்லை விடாது பற்றிக்கொண்டே நிற்கின்றன. இலக்குமணனுடைய அடுத்த பாணம் இந்திரசித்தின் தலையைக் கொய்துவிடுகின்றது. இதனைக் கம்பர்,

" பற்றிய சூலத் தோடும் உடல்நிறை பகழி யோடும்
எற்றிய காலக் காற்றால் மின்னொடும் இடியி னோடும்
சுற்றிய புயல்வீழ்ந் தென்ன விழ்ந்தது சூரன் யாக்கை"

என்கின்றார். இந்த வீரன் வீழ்ச்சியைக் கண்ணுற்ற தேவர்கள் இராவணனுக்கு இலங்கை ஆட்சி இனிச் செல்லாது என்று கூறி மகிழ்கின்றனர்.

அரக்கனுடைய வீரத்தினையும் இராம இலக்குமண அனுமார்களுடைய வீரத்தையும் ஒருங்கே எடுத்துக் கூறுகின்ற கம்பர் அவர்களுள் அரக்கர்களைப் பற்றி,

" நானிலம் அதனின் உண்டு போரென நவிலின் அச்சொல்
தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர் "

என்று கூறி அவ்வரக்கர்களுடைய வீரச் சிறப்பைப் பாராட்டுகின்றார். போரென்ற பெயரைக் கேட்டவுடனேயே அரக்கர்கள் போர்க்களத்திற்குச் சென்று களிப்புடன் பகைவரை எதிர்த்து நிற்பார்கள். 'ஏன் ? எங்கே ?' என்றெல்லாம் கேளாமல் தலைவன் சொன்னதைச் செய்து சாவத் துணிவதே போர் வீரர் கடமை யென்று அவர்கள் நினைப்பார்கள். குரங்கின்மேல் தங்களை ஏவியதை உணர்ந்த அரக்கர்கள்,

" என்றின்றார்க்கு என்? என்? என்றார் எய்தியது அறிந்திலாதார்
முன்நின்றார் முதுகு நீயப் பின்நின்றார் முடுகு கின்றார்."

ஒருவர்பின் ஒருவராய் அரக்கர்கள் செல்லுகின்றனர். இராவணன் ஏவ நஞ்சம் உண்டவராமென அனுமன்மேல் அவர்கள் நடக்கின்றனர் :

" துஞ்சினா ரல்லது யாவரும் வரந்தொடும் தொலைவற்று
அஞ்சினா ரில்லை அரக்கரில் வீரர்மற்றி யாரே."

அனுமன் கொல்லக் கொல்ல ஓர் அரக்கனாதல் பின்னிட்டானில்லை. ஒருவர் பின்னொருவராய் வந்து பொருது அரக்கர் மாண்டனர். ஆனால் தேவர்களைப்பற்றிக் கூறுகின்றபோது கம்பர், அவர்கள் இழிவுடனும் மானமிழந்த வாழ்க்கையுடனும் இலங்கையில் பணி செய்து வாழ்ந்தார்கள் என்று கூறுவதால், மானமற்ற தேவர்களினும் மானமுடைய அரக்கர்கள் சிறந்தவர்கள் என்பது நன்கு விளங்குகின்றது.

போரை வருணிப்பதில் ஹோமரை ஒப்பவர் கம்பர் என்று கூறுவர் வ. வே. சு. ஐயர் அவர்கள். ஆனால் ஹோமரில் காணப்படுவது அத்தகைய சிறப்புடையது அன்று. ஆண்டு ஒருவன் போருக்கு ஏவும் வரையில் வாளாது இருக்கின்றான். மற்றவர்

தாண்டிய பிறகு அவன் போர் செய்ய முற்படுகின்றான். ஆனால் கம்பரோ, நாற்படைகளைத் தத்தமக்குள் போர் செய்ய விடுத்து அவற்றின் போரைப் பலபடக் கூறி, அவை யுத்தகளத்தில் புரிந்த பராக்கிரமச் செயல்களை விளக்கி உரைக்கின்றார். இம்முறையில் வான்மீகியையும்விடக் கம்பர் போரைக் காவியத்துள் அழகாகக் கூறியிருப்பது இன்னும் பாராட்டற்குரியது. எடுத்துக்காட்டாக இராவணன் அனுமனைக் குத்தியபோது அவன் தளர்ச்சியுறாதது கண்டு,

> " வலியென்பதும் உளதேஅது நின்பாலது மறவோய்
> சலியென்றுளஎதிர் மலரோன்உரை தந்தால்இறை சலியேன்
> மெலிவென்பதும் உணர்ந்தேன்எனை வென்றாய்இனி விறலோய் "

என்று கூறுவதால், அவர் புகைப்படக் காட்சியில் காணப்படுவதுபோல, போரை நமக்குப் புலப்படுத்துவது நன்கு தெரிகின்றது.

இங்ஙனம் வீரம் செறிந்த நுட்பக் கருத்துக்களையுடைய அவர் காவியத்தைக் கலைக்கண் கொண்டு உற்று நோக்கி அதனுள் உள்ள இன்பத்தை நாம் என்றும் நுகருவோமாக.

மணிமேகலையும் அவள் சமயமும்

மணிமேகலை என்பாள், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகிய மணிமேகலைக் காப்பியத்தின் தனிப்பெருந் தலைவி யாவள். சீத்தலைச்சாத்தனுர் என்னும் புலவர் பெருமானுர் அக் காப்பியத்தின் ஆசிரியர். சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ வடிகள் முன்பு சாத்தனுர் தாம் இயற்றிய காப்பியத்தை அரங் கேற்றினர். இஃது,

" இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திற மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென் "

என்ற மணிமேகலைப் பதிக இறுதி அடிகளால் தெளிவாகும். இவ்வடிகளால் இக்காப்பியம் ஆதியில் 'மணிமேகலை துறவு' என்றே வழங்கி இருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கூறு கின்றனர். சேற்றில் தாமரைப்பூத் தோன்றுவதுபோல் பொது மகளிர் குலத்தில் மணிமேகலை தோன்றித் துறவு பெற்று உயர்ந்த சிறப்பினைக் கூறும் இக்காப்பியம் ' மணிமேகலை துறவு ' என்றே வழங்குதற்கு உரியது. ' குயலா குயலம் ' என்னும் நீலகேசிச் செய்யுளுரையில், ' தீவினை யென்பது............மணிமேகலை துற வாதலின் ; இதனுல் சம்ஸ்காரம் அறிந்துகொள்க ' என்று சமய திவாகர முனிவர் கூறுவதும் இக்கருத்தை வலியுறுத்தும்.

மணிமேகலைக் காப்பியம் முழுவதும் ஆசிரியப்பாவினுல் ஆகியது. தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்படும் எண்வகை வனப்பினுள் இக்காப்பியம் இயைபு என்னும் வனப்பின்பாற் படும். இதன்கண் அமைந்துள்ள முப்பது காதைகளும் அமிழ் தினும் இனிய நம் தமிழன்னையின் இடையணியாகிய மேகலையைப் புனைந்து அழகுபடுத்தும் முப்பது மணிக்கோவைகளாம். காதை எனினும், கதைபொதி பாட்டு எனினும் ஒக்கும். பதிகத்தைக் கதைபொதி பாட்டு எனக் கூறுவர் ; காதையைப் பாட்டென்றே வழங்குவர்.

" கொந்தார் குழல்மணி மேகலை நூனுட்பங் கொள்வதெங் ஙன் " என்று வெங்கைக் கோவைச் செய்யுட்பகுதியில் துறைமங் கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் பாராட்டப்பட்டுள்ள இந் நூலுக்கு, நுண்ணிய பழைய உரையொன்றும் இதுகாறும் கிடைத்திலது. நூல் மிக எளிய நடையில் அமைந்துளது. எனி னும், இதன்கண் வலியுறுத்தப்பெறும் பௌத்த சமய சித்தாந் தத்தைத் தெளிவுபெற அறிதற்குப் பல்வகைச் சமயங்களின் சித் தாந்தங்களையும் அறிந்துள்ள ஆசிரியர் ஒருவர் துணை இன்றி யமையாதது.

மணிமேகலை என்னும் பெயரே பௌத்த சமயத்தார் வழி படும் ஒரு தெய்வத்தினுடையது. கடல் நடுவில் கப்பலில் செல் வார்க்கு ஏற்படும் துன்பங்களைப் போக்கிக் காப்பது இத்தெய் வத்தின் அருள் தொழிலாகும். சிலப்பதிகாரக் காப்பியத் தலைவ னாகிய கோவலன் தன்னுடைய பாட்டன் கோவலனுக்கு ஏற் பட்ட கடல் விபத்தைப் போக்கிக் காப்பாற்றியதை நினைவில் வைத்துக்கொண்டிருந்து, மாதவி வழியாகப் பிறந்த தன் மக ளுக்கு மணிமேகலை என்று பெயரிட்டு, அவ்வாயிலாக அத்தெய் வத்திற்குத் தன் நன்றியறிவைக் காட்டினான். எனவே, மணி மேகலைக் காப்பியம், மணிமேகலை என்னும் பௌத்த சமயத் தெய்வம் ஒன்றனுடைய பெயர் புனைந்து, துறவு பெற்றுயர்ந்த மணிமேகலை என்னும் நங்கையின் வரலாற்றினைக் கூறும் காப் பியமாகும்.

புத்த பெருமானுடைய ஜாதகக் கதைகளில் மணிமேகலா தெய்வத்தின் வரலாறு கூறப்பட்டுள்ளது. அத்தெய்வத்தின் பெயரால் இலங்கையில் மணிமேகலை என்றே ஓர் ஊரும், மணிமேகலை என்று ஓர் அணைக்கட்டும் இருந்தனவாக அறிகி இன்றோம். காஞ்சிபுரத்தில் மணிமேகலை அம்மன் கோயில் என்று ஒரு கோயில் உள்ளது. மணிமேகலை கச்சியில் நிர்வாண பதவியாகிய வீடுற்றதாகத் தெரிகிறது.

மணிமேகலைக் காப்பியத்தில் வடசொற்கள் சில விரவியுள் ளன. அதுபற்றிச் சிலர் இதனைப் பிற்காலத்திய நூலென்பர். கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் காலத்தில் சிலப்பதிகா ரம் இயற்றப்பட்டது என்றும், அவ்வேந்தன் காலம் கி. பி. இரண் டாம் நூற்றாண்டு என்றும் காலஞ்சென்ற ஸ்ரீசாமிக்கண்ணுப் பிள்ளை அவர்கள் கூறிச் சென்றனர். சிலப்பதிகாரம் அரங்கேற்

றப்பெற்ற காலத்தில் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனுர் உடனிருந்து கேட்டனர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகின்றது. எனவே, மணிமேகலை ஆசிரியரான சாத்தனுரும், சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளும் சமகாலத்தவர் என்பது தேற்றம். ஆதலின், மணிமேகலைக் காப்பியம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டினது ஆதல் வேண்டும். மேலும், மணிமேகலையில் ஈனயான பௌத்த சமயமே கூறப்பெற்றுள்ளது. மகாயானத்தைப் பற்றிய குறிப்பொன்றும் அதில் இல்லை. மகாயான பௌத்தம் மூன்ரும் நூற்ருண்டில் தோன்றியது. இதற்கு முன்பே மணிமேகலை இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். மணிமேகலையில் சோழர்களைப் பற்றிய குறிப்பு இருக்கிறதேயன்றிப் பல்லவர்களைப்பற்றிய குறிப்பு ஒன்றேனும் இல்லை. ஆதலின், பல்லவர்கள் தமிழ்நாட்டைக் கைப்பற்றி ஆளத்தொடங்கிய நான்காம் நூற்ருண்டிற்கு முன்பே மணிமேகலை இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும்.

மணிமேகலை ஆசிரியரான மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் கடைச்சங்கப் புலவராவர். அவர் பெயரால், அவர் மதுரை மாநகரத்தவர் என்பதும், வணிக மரபினர் என்பதும், அவர் செய்துவந்த தொழில் நவதானிய வியாபாரம் ஆகிய கூலவாணிகம் என்பதும், அவர் ஊர் சீத்தலை என்பதும், அவர் இயற்பெயர் சாத்தனுர் என்பதும் அறியலாகும். சீத்தலை என்பதைச் சாத்தனுர் ஊர் அறியாதார், அவர் தமிழ் நூல்களில் காணும் பிழைகளைக் கண்ணுறுங்கால் மனம் வருந்தித் தம் தலையில் எழுத்தாணியால் குத்திக்கொள்வர் என்றும், அதன் பயனுய் அவர் தலையில் புண் ஏற்பட்டுச் சீப்பற்றியதென்றும், அது காரணமாக அவர் சீத்தலைச் சாத்தனுர் என்று அழைக்கப்பெற்ருர் என்றும், வள்ளுவர் முப்பால் அவர் தலைக் குத்திற்குத் தீர்வு ஆயிற்று என்றும் கூறுவர். அக்கூற்றிற்குச் சான்ருக மருத்துவன் தாமோதரனுர் கூறியதாகத் திருவள்ளுவ மாலையில் வரும், 'வள்ளுவர் முப்பாலால் தலைக் குத்துத் தீர்வு சாத்தற்கு' என்ற அடியைக் காட்டுவர். ஆரார்ய்ச்சியாளர் இவ்வடியைப் பிற்காலத்தார் பாடி மருத்துவன் தாமோதரனுர் தலையில் ஏற்றிவிட்டனர் என்று கூறுவர். சீத்தலை என்பது ஓர் ஊரென அறியாதார் தமது கற்பனையால் புனைந்துவிட்ட கதையாதலின் சான்ருகக் கொள்ளத்தக்கது அன்று என்பர். சாத்தனுரைத் தண்டமிழ்ச் சாத்தன் என்றும்

நன்றூற் புலவர் என்றும் நூல்கள் கூறுகின்றன. சாத்தனூர் திருவள்ளுவரை, ' பொய்யில் புலவன் ' என்று கூறுவதால் இச் சாத்தனூர் பிறரிடம் புலமை கண்டவிடத்துச் சிறிதும் அழுக்கா ரற்றுப் போற்றும் பெருந்தகைமை உடையவர் என்பது வெள் ளிடைமலே.

சோழ வளநாட்டில் உள்ள புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்தில் பெருங்குடி வாணிகர் மரபில் தோன்றிய கோவல னுக்கு, மாதவி என்னும் பொதுமகளிர்பால் பிறந்த நங்கை மணிமேகலே. மணிமேகலே இளையளாயிருந்த போதே கோவலன், கள்வன் எனப் பழிபூண்டு மதுரையில் வெட்டுண்டு இறந்தான். அது கேட்ட மாதவி தன் பரத்தைமைத் தொழிலே விடுத்து, அறவண அடிகளேச் சரணடைந்து, வாய்மை நான்கும், சீலம் ஐந்தும் உபதேசிக்கப்பெற்று, பௌத்த சங்கம் புகுந்தாள். அவளுடனேயே மணிமேகலேயும் துறவுள்ளத்தோடு வதிந்து வந்தாள்.

ஒருநாள் மாதவியும் மணிமேகலேயும் சுதமதியென்னும் தோழியும் புத்த பெருமானுக்குப் பூத்தொடுத்துக்கொண்டிருந்த னர். அப்போது மாதவியின் தாய் சித்திராபதி என்பாள், தன் தோழி வயந்தமாலேயை ஏவி மாதவியையும் மணிமேகலேயும் இந்திரவிழாவின்போது நடனமாடுதற்கு அழைத்து வரும்படிகூறி ஞள். வயந்தமாலேயின் உரைகேட்ட மாதவி தான் பரத்தையர் தொழிலே விடுத்தாளெனவும், மணிமேகலே கற்பரசியான கண் ணகியின் மகளேயன்றித் தன் மகள் அல்லள் எனவும், அம் மணிமேகலே அருந் தவநெறிச் செல்வதை விடுத்துத் திருந்தாத் தீத்தொழிற் படாள் எனவும் கூறி அவளே அனுப்பிவிட்ட னள். கண்ணகியைப்பற்றியும் கோவலனேப்பற்றியும் மணி மேகலே நெடிது நினேந்து வருந்திக் கண்ணீர் உகுத்தனள். அவள் வருத்தத்தை நீக்கும் மருந்தொன்றும் மாதவி அறியாளாயினள். இறுதியில் சுதமதியுடன் மணிமேகலேயை மலர்வனம் சென்று பூக்கொய்து வருமாறு மாதவி ஏவினள்.

உதயகுமரன் என்னும் சோழ இளவரசன் மணிமேகலேயின் அழகில் ஈடுபட்டு, அவளேத் தன் வசப்படுத்த விரும்பி மலர்வனத் திற்குச் சென்றுன். அது கண்ட மணிமேகலே ஆண்டிருந்த பளிக்கறைக்குள் புகுந்து தன்னேக் காத்துக்கொண்டு, உதய குமரன் செயலற்று வீடு திரும்பியபின்பு வெளியே வந்தாள்.

அவளுடைய குலதேவதையாகிய மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவத் தீவிற்குக் கொண்டு சென்றது. அத்தீவிலுள்ள புத்த பீடிகைக் காட்சியால் மணிமேகலை தன்னுடைய பழம் பிறப்பில் நிகழ்ந்தவற்றை அறிந்து கொண்டாள். அதன் பிறகு அத்தெய்வம் மூன்று மந்திரங்களை உபதேசித்து முற்பிறப்பில் அவளுக்குக் கணவனுயிருந்த இராகுலன் என்பவனே உதய குமரனுகப் பிறந்துள்ளான் என்று கூறியது. பின்னர் அப் புத்தபீடிகையின் காவல் தெய்வமாகிய தீவதிலகையின் உதவி யால் கோமுகி என்னும் பொய்கையை அடைந்து அதிலிருந்த அட்சயபாத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மணிமேகலை காவிரிப் பூம்பட்டினத்தை அடைந்தாள்.

ஆண்டு அறவணவடிகள், ஆபுத்திரன் வரலாற்றையும், அவனுக்குச் சிந்தாதேவி அமுதசுரபியை அளித்ததையும், உறுபசி போக்க உணவளித்தலே எல்லா அறங்களிலும் மேலான அறம் என்பதையும் மணிமேகலைக்கு உணர்த்த, அவள் அவர் கூறிய வாறே உணவளிக்கும் அறமியற்ற முற்பட்டாள். அமுதசுரபியை அவள் தன் கையில் ஏந்திக்கொண்டு சென்று, சிறந்த பத்தினி யாகிய ஆதிரை யென்பாளிடத்தில் முதல்முதல் பிச்சையேற்று, அதிலிருந்து ஒரு பிடி அமுதெடுத்துக் கொடுத்து, காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கையின் தீராப்பசியைப் போக்கினுள். அமுதசுரபியில் எடுக்க எடுக்க அமுது வளர்வதாயிற்று. மணி மேகலை உலக அறவி என்னும் அம்பலத்தின்கண் இருந்து கொண்டு அங்கே வந்த எல்லா உயிர்களின் பசியையும் போக்கு வதையே நியமமாகப் பூண்டு ஒழுகிவந்தாள்.

மணிமேகலை மீண்டும் புகாரின்கண் வந்துள்ளாள் என் பதை உணர்ந்த உதயகுமரன் அவளை அடைய முயன்றுன். மணிமேகலை காயசண்டிகை உருவம் ஏற்று அறம் செய்துகொண் டிருந்தாள். உதயகுமரன் மீட்டும் அவளைத் தொடர, காயசண் டிகையின் கணவன் அவனை இருகூருக வெட்டி வீழ்த்தினுன். மணிமேகலை முற்பிறப்பின் வாசனைத் தொடர்பால் உதயகுமரனை நினைந்து கலங்கினுள். கந்திற்பாவைத் தெய்வம் தேற்ற அவள் சற்றுத் தெளிவு பெற்றுள். உதயகுமரனுடைய செய்தியை அறிந்த அவன் தந்தை, மணிமேகலையைச் சிறைப்படுத்தினுன். இராசமா தேவியின் முயற்சியால் அவள் அச்சிறையினின்றும் நீங்கி நாகபுரத்தை அடைந்தாள்.

அதன் தலைவன் புண்ணிய ராசன். மணிமேகலை அவ்விராசனோடு மணிபல்லவம் சார்ந்து, புத்த பீடிகையை அவனுக்குக் காட்டி, அதனால் அவன் பழம்பிறப்பை அவனுக்கு அறிவித்தாள். தீவதிலகை, காவிரிப்பூம்பட்டினம் கடலுள் ஆழ்ந்த செய்தியை அவளுக்குக் கூற, அவள் வஞ்சி நகருக்குச் சென்று அதன் புறத்தேயுள்ள கண்ணகி கோவிலை அடைந்தாள். பத்தினித் தெய்வம், மணிமேகலையினுடைய எதிர்காலச் செய்திகளையெல்லாம் கூறிப் பின் அந்நகரிலுள்ள சமய வாதிகள் பலரையும் அடைந்து அவர்களின் சமயசித்தாந்தங்களைக் கேட்டுப் பின் அவற்றுளொன்றும் அவளுக்கு உண்மையென்று தோன்றாது கழிய, பின் பௌத்த சமயத்தைப் பற்றி ஒழுகுவாள் என்று கூறிற்று.

மணிமேகலை வஞ்சி நகர்க்குள் புகுந்து சமயக் கணக்கர் எல்லாருடைய கொள்கைகளையும் அறிய விரும்பி வேற்றுரு எய்துவிக்கும் மந்திரத்தைச் செபித்து ஒரு முனிவனது வேடங் கொண்டு ஒவ்வொரு சமயவாதியையும் வினவத் தொடங்கினாள். முதல்முதல் வேதம் கூறும் நெறியைப் பின்பற்றி ஒழுகும் அளவை வாதியை எய்தி அவன் கொள்கையைக் கூறுமாறு மணிமேகலை கேட்டாள். அவன் தன் கொள்கையை விரிவாக உரைக்கத் தொடங்கினான்.

அளவை ஆசிரியர்கள் மூவர். அவருள் வேதவியாசர் பத்து அளவைகளையும், கிருதகோடி எட்டு அளவைகளையும், சைமினி ஆறு அளவைகளையும் முறையே கொண்டு அவற்றை வகுத்து விளக்கி இருக்கின்றனர். காண்டல், கருதல், ஒப்பு, உரை, பொருட்பேறு, இயல்பு, உலகுரை, இன்மை, மீட்சி, உண்மை என்பன பத்து அளவைகளாம். இந்தப் பத்து அளவைகளின் உதவியாலும் பொருள்களை ஆராய்ந்து மெய்யுணர்வு பெற்று வீடு உறுதல் மக்களாகப் பிறந்தவர் தம் பிறப்பின் பயனை அடைதற்குரிய முறைமையாம்.

இவற்றுள் காட்சி அளவை ஐவகைப்படும். அவை கண்ணால் பொருள்களின் நிறத்தை அறிவதாகிய கண் காட்சி அளவையும், செவியால் ஒலியைக் கேட்டு அறிவதாகிய செவிக் காட்சி அளவையும், மூக்கால் நறுநாற்றம் தீ நாற்றம் அறிவதாகிய மூக்குக் காட்சி அளவையும், நாவால் சுவையை அறிவதாகிய நாக்காட்சி அளவையும், மெய்யால் ஊற்றினை அறிவ

தாகிய மெய்க்காட்சி அளவையும் ஆம். இந்த ஐந்து அளவைகளும் வண்ணத்தைக் கண்டும், ஒலியைக் கேட்டும், நாற்றத்தை உயிர்த்தும், சுவையைச் சுவைத்தும், ஊற்றினை உற்றும், பொருள்களுள் துக்கத்தைத் தருவன இவை, சுகத்தைத் தருவன இவை என்று மயக்கமின்றி அறியும்; அங்ஙனம் அறிந்து ஆன்மாவும், பொறிகளும், மனமும் தம் இயல்பில் சிதைவிலவாகவும், சூரியன் சந்திரன் நெருப்பு இவற்றின் ஒளியோடு பொருளும் இடமும் குறைவு இலவாகவும் கொண்டு, பொது உணர்வும் திரிபுணர்வும் ஐயவுணர்வும் தோன்றாது தெளிவு பெறுதற்குக் கிட்டுதற்குரிய இடம், பெயர், சாதி, குணம், தொழில் இவற்றின்கண் நிலைபெற்று, விகற்பித்து அறிதலைச் செய்யும் அளவைகளாம். இவ்வாறே கருதல் முதலிய அளவைகளையும் அவற்றின் இலக்கணம் தோன்ற நன்கு தெரிந்து அவற்றிடையே நிகழும் அளவைப் போலிகளைக் களைந்தால் பொருளின் உண்மை தெளிவாகும்.

இத்தன்மைய அளவைகளைக் கொண்டு உலோகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாம்சகம் என ஆறு சமயங்கள் உலகில் உலவுவன. உலோகாயத சமயத்தின் ஆசிரியர் பிருகஸ்பதி ஆவர். பௌத்த சமத்தின் ஆசிரியர் சினன் என்னும் புத்த பெருமானாராவர். சாங்கிய சமயத்தின் ஆசிரியர் கபிலர். நையாயிக சமயத்தின் ஆசிரியர் அக்கபாதர். வைசேடிக சமயத்தின் ஆசிரியர் கணாதர். மீமாம்சக சமயத்தின் ஆசிரியர் சைமினியாவர்.

பத்து அளவைகளுள் இப்போது வழங்குவன ஆறு அளவைகளேயாம். அவற்றுள், பிருகஸ்பதி காண்டல் அளவையையும், புத்தர் காண்டலோடு கருதலளவையையும், கபிலர் காண்டல் கருதலோடு உரை அளவையையும், கௌதமர் காண்டல் கருதல் உரையோடு ஒப்பு அளவையையும், கணாதர் காண்டல் கருதல் உரை ஒப்போடு பொருட்பே றளவையையும், சைமினி காண்டல் கருதல் உரை ஒப்புப் பொருட்பேற்றோடு இன்மை அளவையையும் அளவைகளாகக் கொண்டனர். இங்ஙனம் கூறிய அளவை வாதியின் உரையால் மணிமேகலை தெளிவு சிறிதும் காணாளாய்ச் சைவ வாதியை அடைந்தாள்.

சைவ வாதி, ஞாயிறு திங்கள் என்ற இரண்டு ஒளிப் பொருள்களோடு இயமானனும், மண், நீர், தீ, காற்று, வெளி

என்ற ஐந்து பூதங்களும் ஆகக் கூறப்படும் எட்டுப் பகுதியும் உயிரும் உடலுமாய்ப் புணர்ந்து நிற்பவனும், கலைகளே உருவாக உடையவனும், படைத்து விளையாடும் பண்புடையவனும், அங்ஙனம் படைத்த பின் உண்டான துன்பத்தை உலகுயிர்கள் ஆற்ருதனவாக அவற்றின் உடல்களை அழித்து அவற்றின் துன்பத்தை ஒழிக்கும் தோற்றப் பொலி வுடையவனும், தனக்கு வேருகத் தன்னைவிட உயர்ந்த பொருள் வேறு ஒன்று இல்லாதவனும் ஆகிய அத்தன்மையவன் தன் தலைவனுகிய கடவுளாவன் என்று கூறினன்.

பிரமவாதி பெரிய அண்டங்கள் யாவும் ஒரு தேவன் இட்ட முட்டை என்றனன்.

வைஷ்ணவவாதி நாராயணனே உலகிற்குப் பாதுகாப்பு ஆவன், ஆதலால், அவனே முதற்கடவுள் என்று வாதித்தனன்.

வைதிக வாதி, ' கற்பம் என்னும் அங்கமே கைகளாகவும், சந்தஸ் என்னும் அங்கமே கால்களாகவும், தர்க்கம் என்னும் அங்கமே கண்களாகவும், நிருத்தம் என்னும் அங்கமே காதுகளாகவும், சிக்கை என்னும் அங்கமே மூக்காகவும், வியாகரணம் என்னும் அங்கமே முகமாகவும் பெற்றுச் சார்பு ஒன்றனுலும் தோன்ருத ஆரணம் என்னும் வேதத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லை ; அது கூறும் நெறியே உண்மை நெறியாம் ' என்றனன்.

ஆசீவக வாதி அனந்த ஞானியாகிய மற்கலி தேவனே இறைவன் என்றனன். அவ் விறைவனுல் இயற்றப்பட்ட 'நவகதிர்' என்னும் நூலிற் கூறப்பட்ட பொருள்கள் ஐந்து. அவை உயிரென்னும் அணுவும் நிலம், நீர், தீ, காற்று என்னும் நால்வகை அணுக்களுமாம்.

இவற்றுள் உயிரணு, காற்றினைப் பரிசத்தால் உற்றும், நிலம், நீர், தீயைக் கண்ணுலேயே கண்டும் உணர்ந்திடும்படி ஊழ் தன்னைப் பெய்யும் வகையில் ஏனைய அணுக்களாலாகும் உடம்பில் கூடுவதும், பிரிவதும் செய்யும். நிலம் நீர், தீ, காற்று என்னும் ஏனைய அணுக்கள் தம்முள் கூடுங்கால் மலையும், மரமும், உடம்பும் முதலாகத் திரண்டு நிற்கவும் நிற்கும்; அந்த நிலையிலிருந்து பிரிந்து நிற்குங்கால் வேறு வேருகிப் பிரிந்து விரிந்து நிற்கவும் நிற்கும். அவ்வாறு அவை கூடியும் பிரிந்தும் நிற்கும் நிலையை அறியவல்ல உணர்வுடையது உயிர் என்று சிறப்பித்துக் கூறப்படும். அந் நால்வகை அணுக்

களுள் வன்மையை உடையதாகி நிற்பது நில அணுவின் இயல்பாம். வானத்தில் உலவும் மேகத்திலிருந்து பூமியின்கண் தாழ்ந்து வந்து குளிர்ச்சியோடு சுவை உடையதாய் ஆழ்ந்த நிலம் எதிர்ப்படுங்கால் விரைந்து சென்று இழிதலையுடையது நீரணுவின் இயல்பாம்; சுடுதலும, கொழுந்து விட்டெழுந்து எரிதலும் ஆகிய இயல்பை யுடையது தீயணுவின் இயல்பாம். குறுக்காக வீசித் தன்முன் எதிர்ப்பட்ட பொருள்களைத் தன் சலனத்தால் அசைத்தல் காற்றணுவின் இயல்பாம்.

இவ் வணுக்கள் வேற்றியல்பு எய்தும் என்று சொல்லப் படினும் ஆதி என்பது இல்லாத பரமாணுக்கள்; வேறு பிறவற்றுல் தீமை அடைந்து சிறிதும் சிதைவு அடையமாட்டா; புதியனவாகத் தோன்றி ஒன்றில் ஒன்று புகா. நீர்ப் பரமாணு நிலப்பரமாணுவாய்த் திரியாது; ஒரு பரமாணு இரண்டாகப் பிளப்பதும் செய்யாது; அவல்போல் மெலிந்து விரிவதும் செய்யாது. ஆனுல் ஓரிடத்திலிருந்து வேருேரிடத்திற்குச் செல்லும்; மேலிருந்து கீழிறங்கும்; கீழிருந்து மேலேறும்; பல அணுக்களும் ஒருங்கு திரண்டு பெரிய மலையாகவும் பிறவாகவும் ஆகும். அங்ஙனம் திரண்டு நின்றவண்ணமே அவை பிரிந்து தம் முன்னைய நிலையினவாகும். அவை பிறிதொன்றனுலும் அராவுதல் முடியாமல் நிலைபெற்ற வைரமாகி இறுகி வன்மையுடையனவும் ஆகும்; இறுகுதல் சிறிது குறைந்து மூங்கிலாகத் திரண்டு துளை படுகின்ற பொருளாகப் பூமியி லிருந்து முளைத்தலும் செய்யும்.

தேயா மதிபோல் என்றும் ஒரு தன்மையவாக நிலைபெறும் இவ் வணுக்கள் நிலம் முதலிய பெரும் பூதங்களாக ஆகுங்கால் ஒரு முறைமையைப் பின்பற்றி நிற்பனவாம். நிலப் பூதத்துள் நிலப் பரமாணுக்கள் பெரும்பகுதியாகவும் ஏனைய அணுக்கள் எஞ்சிய பகுதியாகவும் நிற்கும். இவ்வாறே எந்தப் பூதம் ஒரு திரட்சியின்கண் ஏனைய பூதங்களைவிட மிகுந்து நிற்கின்றதோ அந்தப் பூதத்தால் அத்திரட்சி நீரெனவோ, தீயெனவோ, காற்றெனவோ பெயர் பெறும். பரமாணு ஒன்றனைத் தனித்துக் கேவல ஞானிகள் உணர்வர். ஏனையோர் உணரார். ஏனையோர் அஞ்ஞானத்தால் மறைபட்ட அறிவினை உடையராதலால் நுண்ணிய வடிவினதாகிய பரமாணுவை அறிய முடிவதில்லை.

எனவே, தடிப்புற்ற அஞ்ஞானத்தோடு கூடிய கரும் பிறப்பென்னும் நரக ஜன்மமும், அத்தடிப்பில் சிறிது குறைந்த அஞ்

ஞானத்தோடு கூடிய கருநீலப் பிறப்பாகிய ஜன்மமும், அதனினும் சிறிது குறைந்த அஞ்ஞானத்தோடு கூடிய பசும் பிறப்பாகிய ஜன்மமும், அதனினும் சிறிது குறைந்த அஞ்ஞானத்தோடு கூடிய செம்பிறப்பாகிய ஜன்மமும், அதனினும் சிறிது குறைந்த அஞ்ஞானத்தோடு கூடிய பொன் பிறப்பாகிய ஜன்மமும், அஞ்ஞானம் சிறிதுமே இல்லாத வெண் பிறப்பாகிய ஜன்மமும் என்ற இவ் வரிசையில் ஆறு வகையான பிறப்புக்களிலும் பொருந்தி மேன்மை சிறிது சிறிதாக வளர்தற்குரிய வரிசையான உயர் பிறப்புக்களில் ஊழ் பொருந்திப் பிறக்கும் பேறுடையோர் சிறந்த வெண் பிறப்பாகிய ஜன்மத்தில் பொருந்தி வீடு பெறுவர். அவ் வெண்பிறப்பினை அடையும் ஊழுடையயார் ஏனைய பிறப்புக்களைப் பெற்று அழிதலை விரும்பார்.

இது செம்போக்கின் இயல்பாம். இதிலிருந்து தப்புவோர் மாறி மாறிப் பிறந்து பிறந்து சுழலுவர். வேண்டுவதொன்றனைப் பெறுதலும், அடைந்து நின்ற ஒன்றனை இழந்து விடுதலும், துன்பம் அடைதலும், ஒரு பிறப்பு மாறி மற்றொரு பிறப்புச் சென்று அடைதலும், துக்கமும் சுகமும் அடைதலும், பிறத்தலும், சாதலும் எனச் சொல்லப்பட்ட இவை யெல்லாம் தாம் வயிற்றில் கருவாகப் பொருந்திய காலத்திலேயே கலந்து நிற்பனவாம். முன் பிறப்புக்களில் செய்த கருமம் காரணமாக ஏற்பட்ட புண்ணிய பாவமாகிய ஊழே பின் பிறப்புக்களிலும் அப் புண்ணிய பாவங் காரணமாக இன்ப துன்பங்களை அடைவிப்பதாம். இது மற்கலி கூறிய ஆசீவக சமயத்தின் விரிவாம். இம் மதத்தின் உண்மை அறியாதார் இதனைச் சமண சமயம் என்றே அதன்பாற் பட்டது என்றே பிறழ்ந்து கூறுவர்.

ஜைனர் அல்லது சமணர் நிர்க்கிரந்த வாதியர் எனக் கூறப்பெறுவர். அவர் தம் இறைவன் சிதேந்திரர் எனப்பெறும் நூறு இந்திரர்களால் வணங்கப் பெறும் அருகன் ஆவன். அவ்வருகன் இயற்றிய ஆகமங்கள் மூன்று. அவை அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதி ஆகமம் என்பன. அவற்றில் கூறப் பெற்றுள்ள பொருள்கள் தன்மாத்திகாயமும், அதன்மாத்திகாயமும், காலமும், ஆகாயமும், ஜீவனும், பரமாணுக்களும், நல் வினையும், தீவினையும், அவ்விரு வினைகளால் அச் சீவன் தேடிக்கொள்ளும் பந்தமும், வீடும் என்ற இப் பத்து வகைப் பட்டன. அப் பொருள்களுள் ஒவ்வொன்றும் தன் தன் இலக்கணத்தை உடை

யதாயும், இடையே வந்து தோன்றித் தன்னால் சாரப்படும் பொருளொன்றின் தன்மையை உடையதாயும், ஒரே கணத்தில் அநித்தியத் தன்மையும் நித்தியத் தன்மையும் உடையதாயும், தோற்றம் நிலை கேடு என்னும் இம் மூன்று தொழில்களையும் இயற்றுதலை உடையதாயும் இருக்கும்.

அவற்றுள் தன்மாத்திகாயந்தான் எவ்விடத்தும் உளதாகிப் பொருத்தமுற எக்காலத்தும் பொருள்களை நடத்தும் இயல்பினதாம். அதன்மாத்திகாயம் என்பது தன்மாத்திகாயம் போல் எவ்விடத்தும் உளதாகி எக் காலத்தும் எவ்விதப் பொருள்களையும் நிற்கச் செய்யும் இயல்பினதாம். காலம் என்பது கணிகம் என்னும் குறு நிகழ்ச்சியையும் கற்பம் என்னும் நெடு நிகழ்ச்சியையும் ஆக்குவதாம். ஆகாயம் எல்லாப் பொருட்கும் அவை தோன்றி நிலை பெறுதற்குரிய இடத்தைக் கொடுக்கும் இயல்புடையது. சீவன் உடம்போடு ஒன்றுபட்டுக் கூடி ஐம்புலன்களையும் நுகரும் இயல்பினையுடையது. பரமாணு புற்கலம் என்னும் வடிவுடைப் பொருளாம். அஃது உடம்பும் புறவுரு என்னும் ஏனைய வடிவங்களும் ஆம். நல் வினை இன்பத்தை விளைவிப்பது. தீவினை துன்பத்தை விளைவிப்பது. நல் வினை தீவினை வருவழி இரண்டையும் போக்கி முற்பிறப்பிற் செய்த நீக்கற்கரிய வினையின் பயனை அனுபவித்து ஒழித்து விடுதலாகிய அது வீடென்னும் பொருளாகும். இங்ஙனம் வீடு பெறுதலை உணர்த்தும் ஜைன சமய நெறியே உண்மை நெறி என்று நிர்க்கிரந்த வாதி யென்னும் நிகண்ட வாதி கூறினன்.

சாங்கிய வாதி இருபத்தைந்து தத்துவங்களைக் கொண்டு வாதிப்பவன். அந்தத் தத்துவங்களுள் முதல் தத்துவமாகிய மூலப் பகுதி, தன்னை இத் தன்மையது என்று அறிதற்கு இயலாததாய், தான் மூன்று குண சமான அவஸ்தை யுடையதாய், மனம் வெளிப்பட்டு விவகாரம் செய்யும் இடன் இலதாய், சுதந்தரமானதாய், புருஷ தத்துவத்தின் போக மோட்சங்களின் பொருட்டுப் பிரவர்த்திப்பதாய், மூலம் புரியட்டகம் ஸ்தூலம் எனப் பேதிக்க வல்லதாய், இன்னோரன்ன மாட்சிமைகள் அமைந்து, அவ்வாறு பிரவர்த்திப்பதற்கும் பேதிப்பதற்கும் முன் பிரதானம் என்னும் பொது வியல்பினதாய், மகத், அகங்காரம், தன்மாத்திரை, ஸ்தூலபூதம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம்,

மனம், உலகம் ஆகிய எல்லாப் பொருள்களும் தோன்றுவதற்கு இடமாவதாம்.

அந்தப் பிரகிருதி, மூன்று வகையாகப் பேதித்து நிற்குமிடத்து, அவற்றுள் முதலாவதாகிய மூலம் என்னும் சித்தத்தினிடமாக மான் என்னும் மகத் அல்லது புத்தி தத்துவம் வெளிப்படும். அப்புத்தி யிடமாக அகங்காரம் வெளிப்படும். அவ் வகங்காரத்திலிருந்து ஒலி யென்னும் தன்மாத்திரை வெளிப்படும். அதன்கண் ஊறென்னும் தன்மாத்திரை வெளிப்படும். அதன்கண்ணே ஒளி யென்னும் தன்மாத்திரை வெளிப்படும். அதன்கண் சுவையும் அச்சுவையின்கண் நாற்றமும் வெளிப்படும். அத் தன்மாத்திரைகள் ஒன்று கூடும் கூட்டத்தின்கண் மனம் வெளிப்படும். தன்மாத்திரைகளுள் ஒலி யிடமாகச் செவி என்னும் பொறியும் வான் என்னும் ஸ்தூல பூதமும், ஊற்றிடமாகத் தன் மெய் என்னும் பொறியும் வாயு என்னும் ஸ்தூல பூதமும், ஒளியிடமாகக் கட் பொறியும் அக்கினியாகிய ஸ்தூல பூதமும், சுவையிடமாக வாய்ப் பொறியும் நீரென்னும் ஸ்தூல பூதமும், நாற்றத்திடமாக மூக்குப் பொறியும் நில மென்னும் ஸ்தூல பூதமும் தோன்றி அமையும். இத் தன்மாத்திரைகளினது சமஷ்டி விகாரமாக வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம் எனக் கன்மேந்திரியங்கள் ஐந்தும் வெளிப்படும்.

மேற்சொன்ன பூதங்களின் விகாரப்பாட்டால் மலை, மரம், பிறவெல்லாம் வெளிப்பட்டு அவற்றின் தொகுதி உலகாய் நிகழ்ந்து. அவ்வுலகு தான் தோன்றிய முறையே பின் லயமாகுங்கால் பின் பின் உள்ளன முன் முன் உள்ள தத்தம் காரணங்களிடத்தே சென்று லயமாகி, முடிவின்றியே பிரளயமாக அழியுமளவும் ஒரு படித்தாகி எவ்விடத்தும் எக் காலத்தும் பரவி நித்தியமாய் நிகழ்வனவாம். பிரகிருதி போன்றன்றி இன்ன இலக்கண முடைய தென்று அறிதற்கு எளிமை யுடையதாய், நிர்க்குண வடிவினதாய், பொறிகளைக் கொண்டு புலன்களை உணர்ச்சி செய்விக்கும் பொதுத் தன்மையுடையது மன்றி எந்தப் பொருளும் தோன்றுதற்கிடமாவதன்றி அந்தப் பொருள்கள் எல்லாவற்றையும் அறிந்திடற்குரிய உணர்வு வடிவமாய், ஒரு தன்மையதாய், எவ்விடத்தும் வியாபகமாய், நித்தியமாய்

நின்று உணர்வு வடிவமாய் நிகழ்வது புருஷ தத்துவத்தின் இலக்கணமாம்.

எனவே, இருபத்தைந்து தத்துவங்களையும் கூறுபடுத்து உணர்ந்து அவற்றுள் புருஷ தத்துவம் தான் எனவும், அது காரண காரியம் கழன்று நின்றது எனவும் அறிந்து ஏனைய தத்துவங்களினின்று பிரிந்து நிற்கும் நிலையே பந்தமில்லாத வீடு பேறும். இதுவே உண்மை நெறியாம் என்று சாங்கிய வாதி கூறினன்.

வைசேடிக வாதி பதார்த்தங்கள் பொருள், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம் என்று ஆறு வகைப்படுவனவாம் என்றனன். அப் பதார்த்தங்களுள், பொருளெனப்படுவது குணமும் தொழிலும் உடையதாய் எல்லா விதமான பொருள்களின் தொகுதியின்கண்ணும் ஊடுருவி, அப் பொருள்களை அறிதற்கேதுவான பொருட்டன்மையைச் சிறப்பாக உடையதாம். அப் பொருள் மண், நீர், தீ, வளி, ஆகாயம், திசை, காலம், ஆன்மா, மனம் என ஒன்பது வகைப்படும். இவற்றுள் நிலமானது ஒலி, ஊறு, நிறம், சுவை, நாற்றம் என்னும் ஐந்து குணங்களையும் உடையது. ஏனைய நான்கும் அவை முதலாக ஒவ்வொரு குணம் குறைந்து நிற்பன. ஓசை, ஊறு, நிறம், சுவை, பெருமை, சிறுமை, வன்மை, மென்மை, சீர்மை, நொய்மை, நீர்மை, பக்கம் முதலியன பொருள்களின் குணங்களாம். பொருளும் குணமும் தொழிலைச் செய்தற்கு உரிமை யுடையன. பரசாமானியம் சத்துவம் என்னும் உண்மை தரும். மண் முதலிய நான்கு பூதங்களின் பரமாணுக்கள் தம்முள் வேறுபட்டு நிற்பதை விசேடமென்னும் பதார்தம் உணர்த்தும். குணத்திற்கும் குணிக்கும் உள்ள ஒற்றுமைச் சம்பந்தம் கூட்டம் என்னும் பதார்த்தமாம். இங்ஙனம் தத்துவ விசாரணை செய்வதே உண்மை நெறியாம் என்று வைசேடிக வாதி வாதித்தனன்.

பூதவாதி ஆத்திப் பூவும் வெல்லக் கட்டியும் பிறவும் கூட்ட அதனிடம் ஒருவித மத சக்தி தோன்றுவது போல, மண் முதலிய ஐந்தன் கூட்டத்தின்கட் அறிவு உதிக்கும்; அப் பூதங்களின் அழிவு காலத்தில் அவ்வறிவும் கெடும் என்றனன்.

"உலோகாயதன் காட்சியே அளவையாவது என்றும், நிலம், நீர், வளி, தீ எனப் பூதம் நான்கே என்றும், அவற்றின் புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாகிய உடம்

பின்கண்ணே அறிவு மதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட்டழியும் என்றும், இறந்த உயிர் பின் பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனாற் செய்யப் படுவன என்றும் கூறுவன்" என்று பரிமேலழகர் கூறியவாற்றான் பூத வாதியின் கொள்கை நன்கு விளங்கும்.

இவ்வெல்லா மார்க்கங்களையும் தனித் தனியே வினவி உணர்ந்த மணிமேகலை அந் நகரில் தவம் புரிந்து கொண்டிருந்த மாசாத்துவானைக் கண்டு அவன் உரைத்த செய்திகள் எல்லாம் கேட்டுணர்ந்தாள். பின் அவள் அவன் கூறியவாறு காஞ்சி நகரம் சென்று அங்கே பசிப் பிணியால் வாடிய எல்லா உயிர்களுக்கும் உணவளித்தாள். அது போழ்து அறவணவடிகள் தோன்றி அவளுக்குப் பௌத்த சமய நெறிகளைக் கூறினர். அவை அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவர் கூறிய நெறிகளை மேற்கொண்டு அந் நகரிலேயே முத்தி பெறும் பொருட்டு அவள் தவஞ் செய்து கொண்டிருந்தாள்.

பௌத்த சமயத்தில் காண்டல், கருதல் என்னும் இரண்டு அளவைகளே அளவைகளாகக் கொள்ளப் படுவன, அவற்றின் இலக்கணங்களைப் போற்றி அறிதல் வேண்டும். தானம் செய்தலை மேற்கொண்டு, சீலத்தில் முதன்மையாக நின்று புத்தம் சரணம் கச்சாமி, தன்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி என்பவற்றை மூன்று முறை சொல்லிக்கொண்டு, அறவணவடிகளைச் சரணாகதி அடைந்து பௌத்த தருமத்தை உபதேசம் பெறவேண்டும்.மணிமேகலை அறவணவடிகளைச் சரணடையவே, மாரனை வென்று வீரனாகிக் காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்று குற்றங்களினின்றும் நீங்கி ஒளிபெற்ற அநந்த ஞானியாகிய புத்தபெருமான் சமயத்தைப் பற்றி யொழுகும் அவ்வடிகள் பௌத்தசமய உண்மைகளை யெல்லாம் மணிமேகலைக்கு உணர்த்தினர்.

பௌத்த சமயம் புத்த பெருமானால் நிலைநிறுத்தப் பெற்ற சமயம். உயிர்கள் நிர்வாணத்தை அடைதற்குரிய ஞானத்தை அறியாது அஞ்ஞானத்தில் மூழ்கி யிருந்த காலத்தில் துடித லோகத்திலுள்ள தேவர்கள் ஆண்டிருந்த பிரபா பாலரென்னும் போதி சத்துவரிடம் போய் உயிர்களின் அஞ்ஞானத்தைப் போக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனர். அவர்களிடம் இரக்கங் கொண்டு அப் போதிசத்துவர் துடிதலோகத்தினின்று

நீங்கிப் பூமியில் கோசல தேசத்தில் கபில வாஸ்துவில் சாக்கிய சக்கரவர்த்தியாகிய சுத்தோதனுடைய கோப்பெண்டான மாயா தேவியின் வயிற்றில் தங்கிப் பின் கௌதமர் என்ற பெயரோடு பிறந்தனர். தோன்றியவர் தர்மத்தை நிலைநாட்டுவதற் குரிய உண்மையறிவை அடைவதற்குத் துறவு பூண்டு பலவிடத்தும் சென்று பலவாறு முயன்று முடிவில் இக்காலத்துப் புத்தகயை என்னும் இடம் வந்தார்; நைரஞ்சரா அல்லது பல்குனி என்றுகூறப் படும் ஆற்றங் கரையில் ஐந்து கிளைகளையுடையதாய் விளங்கிய போதி என்னும் அரசமரத்தடியில் பொருந்தி, சில சமாதியி லிருந்து பழம் பிறப்புக்களை அறிந்து தசபாரமிதையும் நிறையப் பெற்று ஆராய்ந்தபொழுது, சத்திய சதுஷ்டய ஞானமுழுதும் அவருக்குத் தோன்றியது. ஆனதுபற்றி அம்மரம் மஹா போதி விருக்ஷ மென்று பௌத்தர்களால் மிகப் பாராட்டுவதாயிற்று; நெடுந்தூரத் திருந்தும் திக்கு நோக்கித் தொழப்படுவதாயிற்று.

கௌதம புத்தர் போதி மரத்தின் கீழ் இருந்து சமாதி பழகுங்கால் தரும விரோதியான மாரன் ஏனையோரை எளிதில் வென்று வந்தது போன்று அவரையும் வென்று தீக்குணத் தீச்செயல்களுக்கு ஆளாக்க முயன்றான். மாரனுக்கு அறுவகைத் தேவலோகங்களிலும் அதிகாரம் உண்டு. அவனும் ஒருதேவனே. அவன் தன் மகளிர் மூவரோடும் புத்தரிடம் வந்து பலவகை யான காமலீலைகளைக் காண்பித்தும் முடிவில் அவரை ஒன்றும் செய்ய ஆற்றனாய்த் தோற்றோடி மறைந்தான். வெல்லுதற்கரிய மாரனை வென்றபடியால் கௌதமர் மாரனை வென்ற வீரரானார். குற்றங்களென்று எண்ணப்பட்ட காமம் வெகுளி மயக்கம் என்ற முக் குற்றங்களின் பெயரும் கெட்டொழியுமாறு அவற்றை நீறுபட அறுத்தொழித்தவர் புத்தர். இத்தகைய சிறப் பால் இவர் நிர்வாணம் அடைதற்குரிய ஞானத்தை எய்தினர். 'அருளும் அன்பும் ஆருயிரோம்பும் ஒரு பெரும் பூட்கையும் ஒழியா நோன்பிற் பகவன்' என்றும், 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்றும், 'காமற் கடந்த வாமன்' என்றும், 'ஆதிமுதல்வன் அறவாழியாள்வோன்' என்றும், 'பிறவிப்பிணி மருத்துவன்' என்றும், 'தெளிந்த நாதன்' என்றும், 'தன் னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பும் மன்னுயிர் முதல்வன்' என்றும், 'குற்றம் மூன்றும் முற்றவறுக்கும் வாமன்' என்றும், 'பிற பிற சிறந்த குணங்களெல்லாம் உடையவன்' என்றும்

மணிமேகலைக் காப்பியத்தில் புத்தர் பாராட்டப் பெறுதலால், அவர், உலகத்தார் தம்மைப்போல் தவமியற்றி நிர்வாணம் அடைதற்குரிமை யுடையவர் என்பதை ஒழுகிக் காட்டினவர் ஆவர் என்று தெரியவருகிறது. எனவே, புத்தர் காட்டிய நெறி மக்களால் மேற்கொள்ளுதற்குரிய சிறந்த நெறியாம். அவர் உபதேசித்துச் சென்றுள்ள சத்திய வசனங்கள் இன்பத்தை விளைவித்தற்குரிய ஏமக் கட்டுரைகளாம்.

இக் கௌதம புத்தர் போன்று இவருக்கு முற்பட்ட காலங்களில் எண்ணி அறுதியிடுதற்கரியரான அளவில்லாத புத்தர்கள் தருமம் குன்றி அதருமம் ஓங்கி நின்றபோதெல்லாம் அவதரித்து, அதருமத்தை வேரோடு களைந்து அழித்துத் தருமத்தை நிலை நாட்டச் சென்றனர். அவர்கள் நம்முடைய கௌதம புத்தர் போன்றே சத்திய வசனங்களாய் இன்பந் தரும் உபதேச மொழிகளை உலகினருக்கு அறிவுறுத்திச் சென்றனர். எனவே, கௌதம புத்தரால் தோற்றுவிக்கப் பட்டதொரு புதுச் சமயம் அன்றி அநாதியாய் எண்ணில் புத்தர்களால் கையாளப்பெற்று, கௌதம புத்தரால் உலகம் முழுதும் பரப்பப் பெற்ற மிகமிகப் பழைய சமயமே புத்த சமயமாம். கௌதம புத்தருக்கு முன்னும் அநேக புத்தர்கள் இருந்தனர் என்பது,

> " இறந்த காலத் தெண்ணில்புத் தர்களும்
> சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது "

என்ற மணிமேகலை அடிகளால் நன்கு விளங்கும்.

புத்தர் செய்த உபதேசத்தை இனி அறியப்புகுவோம். பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் என்னும் பன்னிரண்டு நிதானங்களையும் நன்கு அறியவல்லவர் வீடு எய்துவர். நிதானமாவது ஆதிகாரணம் என்னும் பொருளுடையது. பன்னிரண்டு நிதானங்களையும் துவாதச நிதானங்கள் என்றும், துவாதசாங்க பிரதித்திய சமுத்யாத மெனவும் பௌத்தர் வழங்குவர். இப்பன்னிரண்டினையும் வடமொழியில் முறையே அவித்தை, சம்ஸ்காரம், விஞ்ஞானம், நாமரூபம், ஷடாயதனம், பரிஸம், வேதனை, திருஷ்ணை, உபாதானம், பவம், ஜன்மம், கர்ம பலம் என்பர். இப்பன்னிரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று விடாமலும் முடிவு மின்றித் தொடர்ச்சியாயும் வரும்; இங்ஙனம் வருவதை மண்டிலவகை என்பர். மண்டிலம் எனினும் இறுதி முத

லோடு சேர்ந்து தொடர்பு பெற்று நிற்பது எனினும் பொருந்தும். இப்பன்னிரண்டும் தொடர்ந்து இயங்குங்கால் தமக்குள் முன்முன் உள்ளவற்றினின்றும் பின்பின் உள்ளவை தோன்றி இயங்குவனவும், பேதைமையிலிருந்து செய்கையும், செய்கையிலிருந்து உணர்வும், உணர்விலிருந்து அருவுருவும் இவ்வாறே பிறவும் தோன்றி இயங்கும். எனவே இவற்றில் முன்னுள்ளவைகளை நீக்கிவிடின் பின்னுள்ளவை தாமே நீங்கி ஒழிவனவாம். இங்ஙனம் இவற்றை நீக்கலாமே ஒழிய வேறெவ்வகையானும் இவற்றை நீக்குதல் ஒல்லாது.

பன்னிரண்டு நிதானங்களும் நான்கு வகைக் கண்டங்களை (எல்லைகளை)யும், மூன்று வகைச் சந்திகளை (புணர்ச்சிகளை)யும் உடையனவாம். இப்பன்னிரண்டனையும் அடைவதனால் மக்களுக்கு மூன்று வகைப் பிறப்புக்கள் உண்டாம். அதற்கு ஏற்பக் காலம் மூன்று கூறுளதாக வழக்குப் பெறும். பிறப்பும் காலமும் பொருந்த உயிர்களுக்குக் காமம் வெகுளி மயக்கம் என்னும் முக் குற்றங்களும் விளையும். பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடென்னும் பயன்களும் ஏற்படும். இவை ஏற்படுங்கால் வாழ்க்கை நிலையற்றதாய் யாதொரு நற்பயனுமின்றித் துக்க மயமானது என்ற நோக்கம் சாமானியமான பகுத்தறிவுடைய மக்களுயிர்க்கும் உண்டாகும். உண்டாகவே அவ்வுயிர் நிர்வாணம் என்னும் மோட்சத்தை அடைதற்குரிய வழி யாதென அறிய விரும்புவது இயற்கை.

பௌத்த தருமம், கெடாது நிலைபெற்ற வீட்டிற்கு உறுதியாகி, நால்வகைச் சத்தியங்களும் சார்பிடனுகி, பஞ்சஸ்கந்தங்களினுல் அமைந்ததாகி, ஆறு வகை வழக்குக்களை முகமாக உடையதாகி, நான்கு வகை வினுவிடைகளை உடையதாகித் திகழும் தத்துவ ஆராய்ச்சியால் விளக்கமாகும். அவ்வாராய்ச்சியில் போந்த தரும நெறியே நிர்வாணமடைதற்குரிய நெறியாம்.

மேற்சொல்லிய துவாதசாங்க பிரிதித்திய சமுத்பாதம் மன்னும் பன்னிரு நிதான சக்கரம் ஆரம்பமும் முடிவு மில்லாதது; முன் முன் உறுப்பினை அழித்தலால் பின் பின் உறுப்பு அழிதலாகிய சந்தான வழியினுலன்றி முற்றும் அழிவெய்தாதது; தன்னைத் தோற்றுவித்த கருத்தா ஒருவரையும் இல்லாதது; ஒருவரால் பண்படாது அநாதியாய் உள்ளது; யானுகக் கொள்வதும் இல்லாதது; எனதாகக் கொள்வதும் ஆகாதது; கடந்த

தெனவும் ஆகாதது ; வந்ததெனவும் எண்ணமுடியாதது ; ஒருவரால் முடிவு செய்யப்படுவதும் அற்றது ; தனக்குத் தானே முடிவதும் இல்லாதது ; பற்றும் பவமும் என்னும் கர்மங்களும், சுக துக்க மென்னும் பயன்களும், பிறப்பும் வீடும் ஆகிய இவை யெல்லாம் தானே ஆகியது.

எனவே பன்னிரண்டு நிதானங்களும் இப்படிப் பட்டவை களென்று அறிந்தால் மக்களாய்ப் பிறந்தவர்கள் நிர்வாணத்தை அடைதற்குரிய ஞானத்தை அறிவார்கள். அவற்றை அறியாது தம் வாழ்நாளைக் கழிப்பாராயின், இறுதியில் மக்கள் ஆழ்ந்த துக்கத்தை அடைதற்குரிய நெறியான அஞ்ஞானத்தையே அறிந்து பற்றினவர் ஆவர். புத்தர் பன்னிரண்டு நிதானங் களையும் கண்டு பிடித்த பிறகுதான் இவற்றிலிருந்து நான்கு சத் தியங்களும் அவர் உள்ளத்தில் உதித்தன என்பது பௌத்தர் கள் துணிவு.

1. பன்னிரண்டு நிதானங்களுள் பேதைமை எனப்படுவது அறியாமையாம். அதனால் உயிர்கட்குப் பன்னிரண்டு நிதானங் களையும் உணரமாட்டாத மயக்கம் ஏற்படும் ; எதிரே தோன் றும் இயற்கைப் பொருள்கள் காரண மொன்றிலே தோன்று என்றறியமாட்டாத மறதி ஏற்படும் ; முயற்குக் கொம்புண் டென்று ஒருவர் கூறினால் அதனை விபரீத உணர்வால் அங் ஙனமே ஒப்புக்கொள்ளும் பான்மை உண்டாகும்.

பேதைமை முதலியனவற்றை அறிந்து நீக்குதற்குரிய உயிர்கள் மூன்று வகை உலகங்களுள் சேதனப் பிரபஞ்சம் எனப்படும் மானிட உலகில் மக்களுடம்பு எய்தி நின்ற உயிர் களே யாகும். மானிட உலகில் காணப்படும் அளவில்லாத பல உயிர்களும் மக்கள் தேவர் பிரமர் நரகர் விலங்கு பேய் என்று ஆறுவகைப்படும். (மானிட உலகந் தவிர மற்றிரண்டு உலகமும், மக்களும் விலங்கும் தவிர மற்றைய வுயிர்களும் பௌத்தர் களுக்கு உடன்பாடல்லவாயினும், மணிமேகலை அவற்றைக் கூறிச் செல்லுவது ஆராய்தற்குரியது. புத்தர் அநேக கதிகளிற் பிறந்தாரெனக் கூறுவதெல்லாம், அவர் தம்மையாவது கேட் போரையாவது கதாநாயகராக அமைத்து இப்பிறவியில் அல்லது முன்னைய பிறவிகளில் நடந்ததாகச் சொல்லி மக்களை அருளறத்தில் ஈடுபடுத்தற்கே யன்றி வேறன்று. அவ்வாறே

தேவர் பேய் முதலிய கதிகளைப் பௌத்தர்கள் பாரமார்த்திக மாக உடன்படார்).

மக்களுயிர்கள் நல்வினை தீவினை என்ற இருவகைச் செய்கைகளால் அவற்றிற்குத் தகுந்த கருவிற் சார்தலும், அங்ஙனம் கருவிற் சாருங் காலத்தில் அவ்வினைகளின் பயன்கள் உண்டாதலும், அவை உண்டாங் காலத்தில் அவ்வுயிர்கட்கு முறையே மனத்தில் பெரிய இன்பமும் பெருங்கவலையும் நிகழ்தலும் இயல்பாம்.

2. இருவகை வினைகளுள் தீவினை உடம்பிற்றோன்றுவதும், சொல்லிற்றோன்றுவதும், உள்ளத்தில் தோன்றுவதும் என மூவகைப்படும். இவற்றுள் உடம்பில் தோன்றுவன மூன்றாம்; அவை பிற வுயிரைக் கொலைசெய்தலும், பிறர் பொருளைத் திருடுதலும், காமத்தீயை விரும்புதலும் ஆம். சொல்லிற்றோன்றுவன நான்காம்; அவை பொய்ச்சொல்லும், கோட்சொல்லும், வன்சொல்லும், பயனில் சொல்லுமாம். உளத்தில் தோன்றுவன மூன்றாம்; அவை வெஃகல் (பிறர் பொருளைக் கவர விரும்பும் பேராசை), வெகுளல் (பெருங்கோபம்), பொல்லாக்காட்சி (மயக்க உணர்வு) என்பனவாம். உடற்றொழில் மூன்றினும் சொல்வகை நான்கினும் உளத்தொழில் மூன்றினும் உண்டாகும் தீய பயனை அறியும் அறிவுடையோர் அத்திவினையியற்றும் நெறியில் செல்ல மாட்டார்; செல்லுவாராயின் விலங்கும் பேயும் நரகருமாகிக் கலக்கமுடைய உள்ளத் துன்பத்தில் ஆழ்வர். உடலால் நிகழும் வினையைக் காயத்தால் ஏற்படுவன வென்றும், சொல்லால் நிகழும் வினையை வாக்கால் ஏற்படுவன வென்றும், உளத்தால் நிகழும் வினையை மனத்தால் ஏற்படுவன வென்றும், உடல் வாக்கு மனம் மூன்றனையும் திரிகரணம் என்றும் நுண்ணூல் உணர்ந்தோர் வழங்குவர்.

நல்வினையாவது மேற்சொன்ன பத்துத் தீவினைகளின் தொகுதியிலிருந்து நீங்கி, சீலங்களை உயிரினும் சிறந்ததாக ஓம்பித், தரும வழியில் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடு கொடுக்குந் தானத்தைத் தலை சிறந்ததாகக் கொள்ளுவதாம். இங்ஙனங் கொண்டொழுகுவோர் தேவர்களாகவும், பிரமாக்களாகவும், மனிதர்களாகவும் பிறந்து யாவரும் விரும்புதலையுடைய மகிழ்ச்சி அடைதலாகிய நல்வினையால் எய்தும் பயனை அடைவர்.

3. உணர்வு என்னும் விஞ்ஞானம் எனப்படுவது உறங்குவோர் உணர்வு யாதொரு விஷய விருத்தியும் (எண்ணமும்) இல்லாதது போன்று பீஜமாத்திரையாய் நின்று, எப் புலன்களையும் அனுபவியாது சாக்ஷி மாத்திரையாய் நிற்பதாம். இங்கு உணர்வு என்றது பீஜ விஞ்ஞானத்தையாம்.

4. அருவுரு வென்பது நாம ரூப மென்று சொல்லப்படுவதாம். அது மேற்கூறிய உணர்வு சார்ந்த உயிரும் உடம்பும் கூடியதொரு பிண்டமாம். அருவுரு வென்பது உயிருமுடம்பு மென்றமையால் உடம்பை விட்டு உயிர் தனித்திராது என்பது தேற்றம்.

5. வாயில் எனப்படுவது வழியென்றும், துவாரம் என்றும், ஆயதனம் என்றும், இடமென்றும், பொறியென்றும் வழங்கப் பெறும். வாயில் அறுவகைப்படும். அவை மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்பனவாம். இவ்வாயில்கள் எனப்படும் பொறிகள் விஷயங்களிடம் சென்று அவற்றை அறிவனவாம். ஆனால் அவை தாமே விஷயங்களை அறியும் தகுதியுடையன அல்ல; பிரவிருத்தி விஞ்ஞானம் எனப்படும் உள்ளத்தோடு சென்றே அறியும் தகுதியுடையன. எனவே வாயிலாவன உள்ளம் எனப்படும் பிரவிருத்தி விஞ்ஞானம் தம்மை விஷயங்களில் உறுவித்தற்குரிய இடங்களாய், அவ் வுள்ளத்தோடு எழுந்து விஷயங்களில் செல்லும் பொறிகளாம்.

6. உள்ளமெனப்படும் பிரவிருத்தி விஞ்ஞானமும் வாயில் எனப்படும் அறுபொறிகளும் தமக்கு வேறான விஷயங்களைச் சென்று மேவுதல் ஊறு எனப்படும். ஊறு எனினும் பரிசம் எனினும் ஒக்கும். சிறப்புப்பற்றி மெய்ப்பொறி அதற்குரிய விஷயத்தைப் பற்றுவதே ஊறென்பர்.

7. நுகர்வு, வேதனை யெனவும் வழங்கும். நுகர்வாவது உணர்வென்னும் விஞ்ஞானம் விஷயங்களை அனுபவித்தலாம்.

8. வேட்கை யென்பது அனுபவித்த விஷயங்களை மேலும் மேலும் அனுபவிக்க விரும்பி அவ்விஷயங்களின் அனுபவம் நிரம்பாமையாம். இதனையே திருஷ்ணை யென்பர்.

9. பற்றெனப்படுவது விஷயங்களின் மீது அழுந்திய அறிவாம்.

10. பவமெனப்படுவது கருமக்கூட்டங்கள் பக்குவப்பட்டு மறுபிறப்பிற்குத் தகுதியுள்ளவைகளாய் அவை தாமே சார்தல்.

11. பிறப்பு என்று சொல்லப்படுவது முற்சொன்ன அந்தக் கருமங்களின் இயல்போடு அழுத்தமாகப் பற்றிய உள்ளம் (விஞ்ஞானம்), சார்பியக்கத்தோடு கூடிய யோனி (கதி) வகைகளில் காரணத்திற்கேற்ற காரியமாகிய உருவங்களில் தோன்றலாம்.

12. வினைப்பயன் பிணி மூப்புச் சாக்காடு (இறப்பு) எனப் பலவகைப்படும். பிணி எனப்படுவது உடல் சார்புகளால் வேறுபட்டுத் தன் இயற்கையினின்று மாறித் துன்பத்தை அனுபவித்தலாம்.

மூப்பெனப்படுவது முதுமையாம். அது, தேகம் மரணம் வரையில் வருந்தி ஒருவழி நிலைக்காமையால் தானே தளர்ந்திடுதலாம்.

சாக்காடென்பது மரணமாம். அஃது அருவுருத் தன்மையினையுடைய உடம்பு, அஸ்தமிக்கும் சூரியனைப்போன்று மறைந்து போதலாம்.

இப் பன்னிரண்டு நிதானங்களும் மனிதனுடைய தோற்ற முடிவுகளை உணர்த்துவனவாம்.

பேதைமை சார்பாகச் செய்கை உண்டாகும். அச்செய்கை சார்பாக உணர்ச்சி யென்னும் பீஜ விஞ்ஞானம் உண்டாகும். அப் பீஜவிஞ்ஞானம் சார்பாக அருவுருவென்னும் உயிரும் உடம்பும் உண்டாகும். அவ்வருவுருச் சார்பாக அறுபொறிகள் ஏற்படும். அவை சார்பாக ஊறு உண்டாகும். ஊற்றைச் சார்ந்து நுகர்ச்சி உண்டாகும். நுகர்ச்சி காரணமாக வேட்கை உண்டாகும். வேட்கை காரணமாகப் பற்று உண்டாகும். பற்றில் கருமத் தொகுதிகள் தோன்றும். பற்றுக் காரணமாகப் பவமும். அப் பவம் காரணமாகப் பிறப்பும் (கதி வகையும்), அப்பிறப்புக் காரணமாக வினைப்பயன்கள் எனப்படும் மூப்புப் பிணி சாக்காடும் அழுகையும் அரற்றுதலும் கவலையும் என்ற துக்கமும் தவருது வந்தடையும்.

இப்பன்னிரண்டு நிதானங்களும் எப்படித் தோற்றினவோ அப்படியே மீளுவனவாம். பேதைமை மீளச் செய்கை மீளும். செய்கை மீள உணர்ச்சி மீளும். இவ்வாறே முன்முன்னுள்ளது முறையே நீங்கப் பின்பின்னுள்ளதும் முறையே நீங்கும்.

இனிப் பன்னிரண்டு நிதானங்களை நான்கு கண்டங்களாக வகுத்திருப்பதையும் உணர்தல் வேண்டும்.

பின்வரும் மற்றவைகளுக்குப் பேதைமையும் செய்கையும் முக்கிய காரணங்களாதலால் அக்காரணம்பற்றி இவற்றை ஆதிக் கண்டம் (முதற்பிரிவு) என்பர்.

உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி என்னும் இவ் வைந்தும் பேதைமை, செய்கை இவற்றால் வந்தனவாதலின் அவற்றை இரண்டாம் கண்டம் என்பர்.

வேட்கையும், பற்றும், பவமும் மூன்றும் கண்டம் என்பர். இவை பழக்கத்தால் மீண்டும் வேட்கையும் பற்றும் பவமும் உண்டாக்கும் துக்க காரணமாயிருப்பதால் ஒரு பிரிவாயின.

பிறப்பும், பிணி மூப்புச் சாக்காடென்னும் வினைப்பயனும் நான்காம் கண்டமாம். இவை பிறப்பில் உழக்கும் பயனாய் அனு பவத்தாலாதலால் நான்காம் கண்டமாயின.

பன்னிரண்டு நிதானங்களும் மூன்று சந்திகளாய்ப் புணர்தல் உறுவனவாம்.

பிறப்பதற்கு முதலாயுள்ள செய்கையும் உணர்வும் சேர்தல் முதற் சந்தியாம்.

அனுபவத்தின் தொடர்ச்சியோடு ஆசையின் சேர்க்கையை இரண்டாஞ் சந்தி யென்பர்.

கன்மக் கூட்டத்தோடு இனிவரும் பிறவிக்கிடையில் நினைத்து அதன் வழியே செல்லுவது மூன்றுஞ் சந்தியாம்; பவ மும் பிறவியும் சேர்தலே மூன்றும் சந்தியாம்.

பிறப்பு மூவகைப்படும். உணர்வு என்னும் விஞ்ஞானம் பிற ஆகாரமாக (வடிவமாக) ஆவதே பிறப்பு எனப்படும். அப் பிறவிகள் மானிடப் பிறவி, தெய்வப் பிறவி, விலங்கின் பிறவி என்பனவாம். இவற்றுள் மானிடப் பிறவிதான் விடு அடைதற் குரியது. உணர்வு என்னும் விஞ்ஞானம் விருத்தியின்றி உள் ளடங்கி உருவாய்த் தோன்றுவது தெய்வப் பிறப்பாம். விஞ்ஞா னம் வீட்டினை அடைதற்குரிய சிறந்த கருவி. அஃது உள்ளடங்கி விருத்தியின்றி நிற்பது என்றால் தெய்வப் பிறப்பு வீடெய்துதற்கு உரியதல்லாதது என்பது தெளிவாம். வீடென்பது ஒன்றுண்டு: அதனை அடைதல்வேண்டும் என்ற விஞ்ஞானம் விருத்தி மிக்கு உருவாய்த் தோன்றுதல் மானிடப் பிறப்பாம். விஞ்ஞானமும் உருவும் உடன்படத் தோன்றல் விலங்கின் பிறப்பாம். விலங்கிற்கு வீடடையக்கூடிய பாகுபாடு இல்லாததனால் உணர்வும் உருவும் உடன்படத் தோன்றல் ஆவதாம்.

காலம் மூன்று வகைப்படும். அவை இறப்பு நிகழ்வு எதிர்வு என்பனவாம். மனிதனுக்குப் பேதைமையும் செய்கையும் நினைவிற்கு எட்டாதனவாய் அவனுக்கு முந்தியனவாக இருக்கின்றபடியால் இறந்தகாலமென்றென்று கூறல் வேண்டும்.

உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம் என்ற இவை மனிதன் என்று சொல்லும்போது உடன் நிகழ்வாக இருத்தலால் நிகழ்காலம் என்பதொன்று நேர்தல் வேண்டும்.

பிறப்பு, பிணி, மூப்பு, சாவு, அவலம், அரற்று, கவலை, கையாறு இவை மனிதன் தோற்றியபிறகு உண்டாவன ஆதலால் இவை நிகழ்தற்குரிய எதிர்காலம் என்பதொன்று நேர்தல் வேண்டும்.

பன்னிரண்டு நிதானங்களைச் சார்பாகக் கொண்டே மூன்று காலங்கள் பெறப்பட்டன.

இனிப் பன்னிரண்டு நிதானங்களும், குற்றமும் வினையும் பயனும் என மூவகைப்படுவன. அவாவும் பற்றும் பேதைமையும் மனிதனுடைய குற்றமாம்; கர்மக் கூட்டமும் அதற்குத் தொடர்ச்சியாக அணியும் செய்கையும் வினையாகும்; விஞ்ஞானமும், நாமரூபமும், வாயிலும், ஊறும், நுகர்ச்சியும், பிறப்பும், முதுமை பிணி சாவென்பனவும் ஆகிய இவைகள் மேற்சொல்லிய குற்றமும் செய்கையும் வந்து நேரும்போது உண்டாகும் பயன்களாம்.

குற்றமும், வினையும், பயனும், அவற்றொடு துன்பமும் ஆகிய இவற்றை அடைந்த தோற்றமுடைய பொருள்களெல்லாம் நிலைத்திரா என்றும், ஆகையால் எப்பொருளுக்கும் மாறுபடாத நித்தியமான ஆன்மாவென்னும் ஒரு வஸ்து இல்லையென்றும், இவ்விதமாகத் தெரிந்துகொள்ளும் இவ்வியல்புகளே வீட்டின் இயல்புகளாம். பல குணங்களின் கூட்டமே ஒரு பொருளென்று வழங்கப்படும். உண்மையில் ஒரு பொருளிலிருந்து ஒவ்வொரு குணத்தையும் களைந்துவிட்டால் அப்பொருளென்பதே இல்லையாகும். உதாரணமாகத் தீபம் என்பது செம்மைக் குணமும் பிரகாசக் குணமும் வெப்பக் குணமும் சேர்ந்ததே. இம் மூன்றுவகைக் குணங்களையும் பிரித்துவிட்டால் தீபம் என்றே ஒரு பொருள் இல்லாதொழியும். இக்குணங்களின் கூட்டுறவாய்த் தீபம் என்னும் பொருள் வந்தது. இக்குணங்கள் மாறுதலால் மாறுதலையுடைய பொருளிடையே மாறுததொரு பொருள் உண்டென்பது

மயக்கமாகும். இம்மயக்கத்தை ஒழிப்பதே மோகத்தினுடைய இலக்கணமாம்.

பன்னிரு நிதானங்களின் இயல்பை அறிவதுபோன்று நான்கு சத்தியங்களையும் அறிதல்வேண்டும். துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பன நான்குவகைச் சத்தியங்களாம்.

உணர்வும், அருவுருவும், வாயிலும், ஊறும், நுகர்வும், பிறப்பும், பிணியும், மூப்பும், சாவும், அவலமும், அரற்றும், கவலையும், கையாறும் என்ற இவை துக்கங்களாம்.

பேதைமை, செய்கை, அவா, பற்று, கருமவிட்டம் ஆய இவைகள் துக்கோற்பத்தி செய்வனவாம். சகல ஆசைகளிலிருந்தும் நீங்கி அவை முற்றும் ஒழிப்பது துக்க நிவாரணமாம், இதற்குக் காரணம் பற்றின்மையே. இது துக்க நிவாரண மார்க்கமாகும்.

சுருங்கக் கூறுமிடத்துப் பிறத்தல் துன்பமாகும். அத்துன்பத்திற்குக் காரணம் விஷயங்களின்மீது அழுந்திய பற்றேயாம். வீடு இன்பம் ஆம். அவ்வின்பத்திற்குக் காரணம் பற்றின்மையேயாம். இதனால் துன்பம் துன்ப காரணம், இன்பம் இன்ப காரணம் என்பவையாகிய, துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் ஆய நான்கு சத்தியங்களும் விளக்கமாகும்.

கந்தங்கள் ஐந்தனுடைய சேர்க்கையே மனிதன். கந்தம் என்பது ஸ்கந்தம் என்ற வடமொழியின் திரிபாம். ஸ்கந்தம் ஆவது கூட்டம். ஐங்கந்தமாவன: ரூபஸ்கந்தமும், வேதனுஸ்கந்தமும், சஞ்ஞாஸ்கந்தமும், பாவனுஸ்கந்தமும், விஞ்ஞானஸ்கந்தமும் ஆம்.

இவைகளில் ரூபஸ்கந்தம் பூதவுரு உபாதாயவுரு என இரண்டு வகைப்படும். இவற்றுள் பூதவுரு: மண், நீர், தி, கால் என நான்கு வகைப்படும். உபாதாயவுரு: மெய், வாய், கண், மூக்கு என நான்கு வகைப்படும் பொறிகளால் உணரப்படும் விஷயங்கள் என நான்கு வகைப்படும். இவ்வெட்டின் சமுதாயமே தேகமாம். சுருங்கக் கூறின் தேகத்திற்குரிய உணர்ச்சிகளைத் தெரிவிப்பது ரூபஸ்கந்தமாகும்.

வேதனுஸ்கந்தம்: குஸலம், அகுஸலம், குஸலாகுஸலம் என மூவகைப்படும. வேதனையாவது அநுபவம், நுகர்ச்சி. குஸலம் -

நன்மை. அகுஸலம் - தீமை. குஸலாகுஸலம் - நன்மை தீமை. சுருங்கக் கூறின் அவ்வப்போது உண்டாகும் நன்மை தீமைகளின் அனுபவமே வேதனுஸ்கந்தமாம்.

சக்ஞாஸ்கந்தம் என்பது குறிப்புஸ்கந்தமாம். இது மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் அறுபொறிகளுமாம். தொகையும் வகையுமாகிய எண்ணங்கள் குறிப்புஸ்கந்தமாம்.

பாவனுஸ்கந்தம் : மன மொழி மெய்களாலுண்டாகும் நல்வினைகள் பத்தும் தீவினைகள் பத்துமாம். சுருங்கக்கூறின் வினைகள் யாவும் பாவனுஸ்கந்தம் எனப்படும்.

விஞ்ஞானஸ்கந்தம் மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் ஆறு இடங்களை ஒட்டி ஆறு வகைப்படும். இவ்விஞ்ஞானம் பிரவிருத்தி விஞ்ஞானம் ஆம். சுருங்கக் கூறின் அறிவனைத்தும் விஞ்ஞானம் எனப்படும். விஞ்ஞானம் என்பது அறிவு.

பஞ்சஸ்கந்தங்களும் கூடி க்ஷணந்தோறும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இம் மாறுதல்களுள் மாறுதல் அற்ற நித்தியமான வஸ்து என்ப தொன்றும் இல்லை.

வழக்கு அறுவகைப்படும். அவை தொகையும், தொடர்ச்சியும், தன்மை மிகுத்துரையும், இயைந்துரையும் என நான்கிலும் பொருந்தி வழங்குவனவாய், உண்மை வழக்கும், இன்மை வழக்கும், உள்ளது சார்ந்த உண்மை வழக்கும், இல்லது சார்ந்த இன்மை வழக்கும், உள்ளது சார்ந்த இன்மை வழக்கும், இல்லது சார்ந்த உண்மை வழக்கும் எனப்படும். வழக்காவது உலகத்தோர் வழங்கி வருகின்ற முறைமையாம்.

தொகை வழக்கிற்கு உதாரணம் உடம்பு, நீர், நாடு முதலியன. பல தாதுக்களின் கூட்டமே உடம்பாம். பல துளிகளின் கூட்டமே நீராம். பல ஊர்களின் கூட்டமே நாடாம். இங்ஙனமே பஞ்சஸ்கந்தங்களின் கூட்டமே மனிதனாகும் என்பது தொகை வழக்காம். பல தாதுக்களையும் பிரித்து விட்டால் உடம்பென்பது ஒன்றில்லா தொழிவது போலவும், பல துளிகளையும் பிரித்து விட்டால் நீர் என்பதொரு திரட்சி இல்லா தொழிவது போலவும், பல ஊர்களையும் பிரித்துவிட்டால் நாடு என்பது ஒன்றில்லாதொழிவது போலவும், பஞ்ச ஸ்கந்தங்களையும் பிரித்துவிட்டால் மனிதனென்பதொரு பொருள் இல்லாதொழியும். எனவே பஞ்சஸ்கந்தங்களுள்ளபோது மனிதன் உண்டென்பது தொகை

யைச் சார்ந்த உண்மை வழக்காம். பஞ்ச ஸ்கந்தங்களில்லாத போது மனிதனென்பதொரு பொருளில்லை என்பது தொகை யைச் சார்ந்த இன்மை வழக்காம். இங்கே கூறியபடி ஆன்மா வென்பது பல பொருட் கூட்டங்களினால் ஏற்பட்ட கற்பனா நாமமாகும்.

தொடர்ச்சி வழக்கிற்கு உதாரணம் வித்திலிருந்து முளையும், அம் முளையிலிருந்து தாளும் தோன்றுவன என்று சொல்லப் படும். இக் காரண காரிய இயக்கத்தில் நெல்லென்று வழங்குதல் ஆம். இதனால் காரணமின்றிக் காரிய முண்டாகா தென்பது வெளிப்படை. காரண காரியக் கோவைக்கு முடிவு இல்லை. ஆகையால் அது தொடர்ச்சியாம். ஆன்மா வென்பது முன் சொல்லிய துவாதச நிதானங்களாகிய பேதைமையி லிருந்து வினைப்பயன் ஈறாக உண்டாகும் இயக்கத்தில் வந்த கற்பனா நாம மாம். தொடர்ச்சி உள்ளபோது மாறாத சீவனுண் டென்பது. தொடர்ச்சியில் இன்மை வழக்காம்.

இயல்பு மிகுத்துரை வழக்காவது ஒரு பொருளின் முத லிடை கடையொன்றினால் அப்பொருள் முடிவை யுடையதென் றும் உண்டாயிற் றென்றும் விகாரப் பட்டதென்றும் இவ்விதத் தன்மையை எடுத்து விசேடித்து உரைத்தலாம். தோன்றிய பொருள்க ளெல்லாம் நாசமடையு மென்பது இயல்பு மிகுத் துரை வழக்காம். தோன்றிய யாவும் மாறுதலை அடைகின்றன, இவைகளில் மாறுதலின்றி ஒரு பொருள் உண்டென்பது இயல்பு மிகுத்துரையின் இன்மை வழக்கு எனப்படும்.

இயைந்துரை வழக்கென்று சொல்லப் படுவது பல எழுத் துக்கள் கூடுவதனால் சொல்லென்று தோன்றுதலும், பல நாட் கள் சேர்ந்த அளவைத் திங்களென்று வழங்குதலும் ஆம். இத னைத் தொகை வழக்கில் அடக்கிக் கூறுவது முண்டு. எனினும் தொகைக்கும் இயைந்துரைக்கும் வேறுபாடு யாதோவெனின், வரையறைப் படாத தொகுதி தொகையாம் என்றும், வரை யறைப் பட்ட தொகுதி இயைந்துரையாம் என்றும் கூறுவர்.

இனி உள்வழக்காவது நாசமான விடத்தும் உணர்வு உண் டென்பது. இவ் வழக்காவது முயற் கொம்புபோல நாசமான விடத்து உணர்வு இல்லை யென்பது. உள்ளதைச் சார்ந்த உள் வழக்காவது சித்தம் க்ஷணந்தோறும் நாசமாயும் அதைச் சார்ந்த உணர்வு தோன்றி அதிலிருந்து மீண்டும் வேறு உணர்வு

தோன்றும் என்பது. உள்ளது சார்ந்த இல்வழக்காவது பல எண்ணங்களின் கூட்டமே சித்தமாயிருக்கச் சித்தமென்ப தொன்று உண்டாய தென்பது. இல்லது சார்ந்த உள் வழக்காவது யாதொரு காரணமு மின்றிக் காரியம் உண்டாயது என்பது. இல்லது சார்ந்த இல் வழக்காவது முயற்கோடு இல்லாமையால் அது தோன்றுதலும் இல்லை என்பது.

நயங்கள் நான்கு வகைப்படும். அவை ஒற்றுமை நயம், வேற்றுமை நயம், புரிவின்மை நயம், இயல்பு நயம் என்பன.

காரண காரியமாகிய பொருள்களை ஒன்று யுணர்தல் ஒற்றுமை நயமாம். காரண காரியங்களை வேறு வேருக அறிதல் வேற்றுமை நயமாம்,

முற்றும் கெடாது சில பகுதிகள் கெட்டு, அவற்றிலிருந்து உண்டாகும் காரியத்திற்கு அக் காரணத்திலும் வேருக ஓர் அறிவில்லை என்பது புரிவுண்மை நயமாம். நிலத்தில் புதைக்கப்பட்ட மாங்கொட்டை முளை விட்டபின் அழுகிப் போகின்றது. ஆனல் அம் முளையிலிருந்து உண்டாகும் மரத்தின் மாங்காயில் அவ் வித்து, புனர் ஜனனம் (மீண்டும் பிறத்தல்) அடைகின்றது. அவ் வித்திலிருந்து இவ் வித்து உண்டாவதற்கு அதில் அழியாத நித்தியமான வஸ்து ஒன்று மில்லை என்பதே புரிவுண்மை நயம் எனப்படும்.

பௌத்த மதத்தில் ஈசுவரனையும் ஆன்மாவையும் ஒப்புவதில்லை. அதனல் பிறர் பௌத்த தருமத்தைக் கண்டிக்கின்றனர்; வெறுக்கின்றனர். ஆனல் இத் தருமத்தில் எதனையும் விசாரணையின்றி உடன் படுவதில்லை. ஈசுவரன் உளன் என்பதும் அவனல் இவ்வுலகம் படைக்கப் பட்ட தென்பதும் விசாரணையில்லாத நம்பிக்கையேயாம். சிருஷ்டி கர்த்தா ஒருவனுளன் என்றல் அவன் வடிவம் யாது? அவன் குணம் யாது? அவன் செய்கை யாது? அவன் ஏன் செய்வித்தான்? என்ற கேள்விகளெல்லாம் உண்டாகும். உண்மையில் ஈசுவரன் ஒருவன் உண்டாய் அவன் இவ் வுலகத்தை உண்டு பண்ணினன் எனின், அவன் சங்கற்பத்தோடு உண்டு பண்ணினனு? சங்கற்பமின்றி உண்டுபண்ணினனு? சங்கற்பமெல்லாம் ஒன்றனுடைய குறையை நிறைவாக்குதற்கேயாம். எனவே சங்கற்பத்தினல் உண்டு பண்ணினன் எனின் ஈசுவரன் சம்பூரண னல்லன் என்ற குற்றம் உண்டாகும். சங்கற்பமின்றி உண்டு

பண்ணினுன் எனின் ஈசுவரன் பாலுண்ணும் அறிவிலாத குழந்தைகளையும் பைத்தியக்காரர்களையும் ஒத்தவன் ஆவான். ஈசுவரன் கர்த்தாவா யிருந்தால் ஜனங்கள் யாவரும் மரியாதையுடன் ஏன் அவனுக்குக் கீழ்ப்படிவதில்லை? இவ்விதமாய் விசாரணை செய்தலால் ஈசுவர பாவனை பொய்யென்று நிச்சயிக்கப் படுகின்றது. ஈசுவரன் மனிதன் அறிவிற்கு எட்டாத அவ்வளவு உயர்ந்தவனெனின் அவனைப்பற்றி மக்கள் என்றும் ஒன்றும் தெரிந்துகொள்ளவே முடியாது. அப்படியானுல் சிருஷ்டியாகிய கர்த்தவ்ய குணத்தை நாம் ஏன் அவனுக்கு ஏற்றவேண்டும்? ஆகையால் ஆரம்பமும் முடிவுமற்ற இயக்கத்திற்கு அதிகாரியும் எவ்விதச் சார்பும் ஆன்மாக்களும் இல்லை என்பதே சித்தாந்த மாம் என்பது பௌத்தர் கொள்கை.

இனி, இயல்பு நயமாவது நெல் வித்தினுள் நெல் முளை தோன்றுவது இயல்பு என்பது.

இந்த நான்கு நயங்களையும் நாம் அறிவதால் உண்டாகும் பயன் பெரிதாம். காரண காரியக் கூட்டமாகிய பொருள்களை அல்லாமல் வேறொரு பொருள் இல்லை என்பது ஒற்றுமை நயத்திஞல் பெறப்பட்ட பயனும். அப் பொருள்கள் இடையிலே வேறொரு பொருளையும் பற்ற என்பதும், அவற்றில் ஒரு பொருளும் நிலைத்திரா தென்பதும் வேற்றுமை நயத்திஞல் பெறப்பட்ட பயனும். வினை முதலாகிய கர்த்தாவே தான் செய்த வினையின் பயனை அனுபவிப்பதில்லை என்பது புரிவின்மை நயத்தினுல் பெறப்பட்ட பயனும். காரணத்திஞலே காரியமுண்டாகும் என்பது இயல்பு நயத்திஞல் பெறப்பட்ட பயனும்.

ஒரு புருஷன் நிமிஷத்திற்கு நிமிஷம் வேறுபடுகிருன். அப்படியாஞல் செய்கிறவனே செய்கையின் பயனை அனுபவிக்கிருன் என்று பாவிக்க ஒரு காரணமும் இல்லை. எண்ணத்தின் சந்தானத்தால் உண்டாகும் ஏகத்துவமே செய்கையின் கர்த்தாவிற்கும் அதன் பலத்தின் போக்தாவிற்கும் உள்ள சம்பந்தத்தை நிர்ணயிக்கிறது.

நான் ஒரே புருஷன் என்று நினைப்பது தப்பெண்ணத்தின் விளைவு. தெளிவாய்ப் பேசவேண்டுமாஞல் மனிதன் ஒவ்வொரு விநாடியும் இறந்துபடுகின்றுன். 'நாளும் நாம் சாகின்றுமால் நமக்கு நாம் அழாத தென்னே' என்பது குண்டலகேசி.

"ஆனாலும் அறம் (நான்) என்பதை ஏற்படுத்துகின்ற சந்தங்களின் சேர்க்கையைப் போல் அநேகமாய் ஒன்ருகவே இருக்கிறவரையில் அறம் ஒன்ருகவே இருக்கிறதென்று அறத்தைப்பற்றிப் பேசுகின்ரேம். ஆனல் அடுத்த கணத்தில் முந்தியதோடு சில விஷயங்கள் சம்பந்தப்பட்டிருந்த போதிலும் அது வேறு அறந்தான். எண்ணத்தின் நீடிப்பே ஒன்றென்றும் பாவனைக்கு இடந்தருகின்றது. செய்கையைச் செய்கின்றவனுக்கும் அதன் பலனை அனுபவிக்கின்றவனுக்கும் உள்ள சம்பந்தத்தை நிர்ணயப்படுத்துவது எண்ணத்தின் நீடிப்பே யாகும்" (பி, எல், நரசு.)

வினுக்களுக்குரிய விடைகள் நான்கு உள. அவை துணிந்து சொல்லுதலும், கூறிட்டு மொழிதலும், வினுவின் விடுத்தலும், பேசாதிருத்தலுமாம்.

தோன்றிய பொருள் கெடுமோ கெடாதோ என்ற கேள்விக்கு, தோன்றிய பொருள் கெடும் என்பது துணிந்து சொல்லும் விடையாம். செத்தான் பிறப்பானே பிறவானே என்ற கேள்விக்கு, அவன் பற்றுடையவனே, பற்றற்றவனே என்று கூறல், கூறிட்டு மொழிதலாகிய விடையாம். பற்றுடையவன் பிறப்பான் என்றும் பற்றற்றவன் பிறவான் என்றும் கூறிட்டுக் கூறுதலால் இது கூறிட்டு மொழிதலாகிய விடையாம். 'முட்டை முந்தியதோ? கோழி முந்தியதோ? பனைமரம் முந்தியதோ? பனையின் வித்து முந்தியதோ?' என்ற கேள்விக்கு, 'எம் முட்டைக்கு? எப்பனைக்கு?' என்று கேட்பது வினுவின் விடுத்தலாகிய விடையாம். ஒரு முட்டையைக் குறித்தபோது அம் முட்டை தான் தோன்றிய கோழிக்குப் பிந்தியது என்றும், அம் முட்டை தனக்குப் பின் தோன்றும் கோழிக்கு முந்தியதென்றும் இவ்வாறு விடை தொடர்ச்சியாகி முடிவு பெருது ஓடும். ஆகாயப் பூ பழையதோ, புதியதோ என்று கேட்பவனுக்கு ஆகாயப் பூ என்பதொன்று இல்லாமையால் அதற்குப் பதில் அளிக்காதிருப்பதே பொய்யுரையாமை அல்லது பேசாதிருத்தல் என்னும் விடையாம். இக் கருத்துப்படியே பகவான் புத்த பெருமானர், ஆன்மா அல்லது ஈசுவரன் உளரு என்ற கேள்விக்குப் பதில் அளிக்காதிருந்தனர். இதை அறியார், அவர் மௌனமுற்றிருந்தமையால் ஈசுவரனுள னென்னும் கருத்துடையவரென்றும், ஈசுவரனைப்பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியா

தென்றும் பலவாறாகக் கூறி மலைவுபடுவர். புத்தர் கருத்து ஈசுவரனாவது ஆன்மாவாவது நித்தியமாக இல்லை யென்பதே யாகும்.

கட்டென்றும் பந்தம் அடைதலும் நிர்வாணம் என்னும் விடு அடைதலும் அவற்றின் காரணங்களைப் பொறுத்திருக் கின்றனவே யன்றி அவற்றை ஒருவனுக்குக் கொடுப்பதற்கு உரிமையுடையோர் ஒருவரும் இல்லை.

மேலுரைத்த துக்கமாகிய பொருள்கட் கெல்லாம் காமம் வெகுளி மயக்கம் என்பனவே காரணங்களாம். இம் முக்குற்றங் களும் ஒழியின் துக்கம் ஒழியும்.

சர்வமும் அநித்தியம், சர்வமும் துக்கம், சர்வமும் அநான்மா என்னும் அசுபபாவனையால் அவற்றி னின்றும் நீங்கி அவைகளை ஆராய்ந்துபார்த்துப் பற்று (காமம்) அறுத்திடல் வேண்டும்.

" வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளம் தன்பா லுடையது
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய் "

என்று உதய குமரனைப் பார்த்துச் சுதமதி கூறுவனவாக வரும் மணிமேகலைக் காப்பிய அடிகள் பற்றறுத்திடுதற்கு அடிக்கடி நினைவில் வைத்துப் போற்றற் குரியனவாம்.

மைத்திரி, கருணை, முதிதை என்னும் பாவனைகளால் வெகுளியை அறுத்திடல் வேண்டும். மைத்திரி என்பது எல்லார் மீது முள்ள அன்பு. கருணைபாவனை என்பது அயலார்க்குண் டான துக்க துன்பங்களை நோக்கி அவற்றிற்கு ஆற்றுதவனுயத் தான் இரங்குவதோடு எல்லோரும் அத்துக்க துன்பங்களி லிருந்து வேறுபட்டுச் சுகமடையுமாறு எப்போதும் ஒருவன் தன் மனத்தினால் சிந்திப்பதாம். முதிதா பாவனையாவது மற்றவர் களுடைய க்ஷேமத்தையே தான் கருதுவதோடு அவர்களடைந்

துள்ள சந்தோஷத்தைப் பற்றியும் அவர்களுடைய நல்வாழ்க்கையைப் பற்றியும் களிப்படைதலாகும். இப் பாவனையின் முதிர்ச்சி சுயநலத்தைப் போக்கிப் பிறர்க்குத் தொண்டு செய்யும் எண்ணத்தையும் வைராக்கியத்தையும் வளரச் செய்யும்.

தர்ம சிரவணத்தாலும் அதைச் சிந்திப்பதாலும் உபேட்சா பாவனையாலும் தெளிதலாலும் உண்மை அனுபவத்தை அடைந்து மயக்கத்தை அறுத்திடல் வேண்டும். உண்மை அனுபவமே நிர்வாணமாகும். உபேட்சா பாவனையாவது போதி நோக்கத்தையுடைய ஒருவன் அகங்கார மமகாரம், சுயநலம் இவற்றின் நீங்கிப் பற்றில்லாமல் தனக்கு உண்டாவ தெல்லாம் அமைதியாகவும் பொதுவாகவும் பாவிப்பதாம்.

அறவண வடிகள் இவ்வாறு பௌத்த சமய விளக்கத்தை மணிமேகலைக்கு அருள, மணிமேகலை பௌத்த சமய நெறியே செம்மையான நெறியாவதெனக் கொண்டு ஒழுகலாயினள்.

ஏனைய சமயக் கருத்துக்க ளெல்லாம் மணிமேகலையின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள முடியாமற் போகப் புத்த சமயக் கருத்துக்கள் அவளுள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இவ்வளவே பற்றி மணிமேகலை ஏனைய சமயத்தார் கருத்துக்களைக் கண்டனம் செய்து பின் பௌத்த சமய நெறி நின்றாள் என்று கொள்ளுவதற் கில்லை.

பளிக்கறையின் மண்டபத்துள் புத்தருடைய பாத பீடிகையாகிய தாமரைப் பீடிகையின் இயல்பு கூறப்படுங்கால், ஒரு தெய்வத்தினிடம் மனம் வைத்து அப் பீடிகையில் ஒரு பூப்போட்டால் உடனே அப்பூ ஆண்டுத் தோன்றுதல் நீங்கி மனம் வைத்த தெய்வத்தினிடம் ஒன்றுசேரும் என்றும், எண்ணம் ஒன்றுமின்றி அப்பீடிகையில் பூப்போட்டால் அப்பூ ஆண்டே கிடக்கும் என்றும் கூறப்பட்டுள்ளன. இதனுல் ஜைனருடைய சமயம் கண்டனம் செய்யப்பட்டது. ஜைனர் சிந்தனை யின்றியும் செய்வினையுறும் என்பர். பௌத்தர் சிந்தனை காரணமாகத்தான் செய்வினையுறு மென்பர். இங்ஙனமே நூலில் ஜைனர்களைப் பற்றிய குறை ஆண்டாண்டு வந்திருத்தலைக் காணலாம். இவ்வாறே ஏனைய சமயங்களின் கண்டனமோ முறையோ நூலின் இடையிடையே காணலாம்.

இவ்வாற்றால் பௌத்த சமயமே சிறந்த சமயம் என்று நிலைநாட்ட எழுந்த நூல் மணிமேகலைக் காப்பியமாகும். உண்மையில் யாவரும் இன்புற்றொழுகுதற்குச் சிறந்ததும் ஏற்றதுமான சமயம் பௌத்த சமயமாகும். ஆயின் தற்போது அச்சமயத்தை மேற்கொண்டு ஒழுகுவார் தொகை மிக மிக அருகியிருத்தலின் அச்சமயம் சிறந்ததன்றெனக் கைவிடப்பட்டதென அறியார் கொள்வர்; அறிவுடையோர் கொள்ளார், பௌத்த சமயத்தில் வரும் சிறந்த ஒழுக்கங்களெல்லாம் இந்துக்கள் மேற்கொண்டொழுகும் வைதிக சமயத்தில் சேர்த்துக் கொள்ளப் பெற்று விட்டன. எனவே இந்தியர் கொண்டொழுகும் சமயத்தில் கலந்து நிலவும் பொன்றாச் சிறப்புடையதாய்ப் புத்தசமயம் மேன்மை பெற்று விளங்குகின்றது.

ம கா ப லி பு ர ம்

சென்னைக்குத் தெற்கே கடற்கரை ஓரமாக இருபத்தெட்டு மைல் தூரத்தில் மகாபலிபுரம் உள்ளது. சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இந்த ஊருக்குச் சென்று வராத யாத்திரிகர் இல்லை. தொல் பொருட்கலை யாராய்ச்சி யாளர்கள் (archaeologists) இவ்வூரில் இன்றும் தங்கள் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார்கள். இந்த ஊரின் பெரும்பகுதி கடலில் மூழ்கிக் கிடப்பதாக அவ் வூரார் கூறுகிறார்கள். காஞ்சிமா நகரைத் தலை நகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்ட பல்லவ அரசர்களுடைய முக்கியத் துறைமுகப் பட்டினமாய் விளங்கியது இந் நகரம். மகாமல்லன் என்ற பல்லவ அரசனால் புதுப்பிக்கப்பெற்ற இந்த நகரம் மகாமல்லபுரம் என்று பெயர்பெற்றது என்பர் சிலர். இப் பெயரே நாளடைவில் வழக்கில் மருவி மகாபலிபுரம் என்றாயிற்று என்பது அவர்கள் கூற்று. மகாமல்லன் என்பவன் முதல் நரசிம்மவர்மன் ஆவான்; அவன் கி. பி. 640 ஆம் ஆண்டை ஒட்டி வாழ்ந்தவன்; அவன் காலத்திற்கு முன்பே இந்த நகரம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிற்று என்பது நாலாயிர திவ்யப்பிரபந்தத்தால் தெரியவருகிறது. திருமங்கை மன்னன் இந்த ஊரை,

'கலங்க ளியங்கும் மல்லைக் கடல் மல்லை'

என்று கூறுகிறார். முதலாழ்வார்களுள் ஒருவராகிய பூதத்தாழ்வாருடைய பிறப்பிடம் இந்தக் கடன்மல்லை என்று ஆசாரியன்மார்கள் கூறுவர். டாலமி என்ற மேனாட்டு யாத்திரிகன், இந்தியாவின் தென்கரையில் மாலியார்பா (Maliarpha) என்ற துறைமுகம் ஒன்று இருந்தது எனக் கூறுகிறான். அவன் கூறும் விவரங்களினின்றும் அது 'மல்லை' என்ற மகாபலிபுரமாகத்தான் இருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

மகாபலிபுரத்தில் ஆதிவராக சுவாமி குகைக் கோயில் ஒன்று உள்ளது; அங்கே இன்றும் பூசை நடந்து வருகிறது. அந்தக் குகைக் கோயிலிலே சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன் என்பவர்களுடைய சிலைகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு

பிடித்தார்கள். இவர்கள் இருவரும் நரசிம்மவர்மன் காலத்திற்கு முற்பட்டவர்கள்; கி. பி. 5-6-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்கள்; எனவே, இந்த ஆலயமும் நகரமும் இவர்கள் காலத்திலேயே இருந்தன என்பது வெளிப்படை. முதலாவது நரசிம்மவர்மன் காலத்திற்கு முன்பே இந்த ஊர் சிறப்புடன் விளங்கி வந்தது என்பது இதனுல் தெளிவாகும்.

மலைகள் மிகுந்த பிரதேசமானமையின் மகாபலிபுரம் என்று வழங்கியது என்பர் சிலர்; 'மாவலி' என்று ஒரு சாதியார் வாழ்ந்த நாடானமை பற்றி இப்பெயர் வந்தது என்பர் இன்னும் ஒரு சாரார். கிள்ளி என்னும் சோழ அரசனுடைய மாமன் ஒருவன் 'மாவலி' என்ற பெயருடன் இருந்தான் என்று மணிமேகலை கூறுகிறது.

"நீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி யென்னும் திருத்தகு தேவி."

இந்த மாவலியின் வமிசத்தவர் வாழ்ந்த இடமே மகாபலிபுரம் என்பர் அவர்,

"புலங்கொள்நிதிக் குவையொடு புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள்நவ மணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்"

என்ற திருமங்கை மன்னனுர் பாடல், பொற் குவியல்களும் நவமணிக் குவியல்களும் யானைகளும் வந்து துறைமுகத்தில் இறக்குமதியாகின்றன என்று கூறுகிறது. திருமங்கை மன்னர் ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்; சம்பந்தமூர்த்தி நாயனுருடைய காலத்தவர்; தாம் சென்று பாடிய தலங்களிலுள்ள விசேஷச் செய்திகளைத் தம் பாட்டில் குறிப்பது அவர் இயல்பு. அப்படியே மல்லையிலே தாம் கண்ட செய்திகளை அவர் தம் பாசுரங்களில் பாடி வைத்தார். மல்லை என்ற சொல்லுக்கு 'வளம் பொருந்திய' என்று ஆச்சாரியன்மார்கள் வியாக்கியானம் செய்துள்ளார்கள். 'மாமல்லை' என்று பூதத்தாழ்வார் இவ்வூரைக் குறிக்கிருர். பூதத்தாழ்வார் 4-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். மகாமல்லன் காலத்திற்கு வெகுகாலம் முற்பட்டவர்; எனவே 'மல்லை' என்பது இவ் வூரின் பழம் பெயரென அறியக் கிடக்கின்றது.

ஹியான்-தி-சாங்க் என்ற சீன யாத்திரிகர், காஞ்சீபுரம் தென் கடற் கரையிலிருந்து நாற்பது மைல் தூரத்தில் சிங்கள ராஜ்யத்தை நோக்கி இருக்கிறது என்கிறார். அவர் குறிக்கும் தென் கடற்கரை மகாபலிபுரமாக இருக்கவேண்டும். சங்க காலத்திலேயே இது பெரிய தென்கரைத் துறைமுகப் பட்டின மாக விளங்கி யிருத்தல் வேண்டும். பெரும்பாணாற்றுப்படை,

" நீர்ப்பெயற் றெல்லை போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை "

(319—321)

" உரவுநீர் அழுவத் தோடுகலங் கரையும்
துறைபிறக் கொழியப் போகி "

(352—53)

என்று தென் கரையிலே விளங்கிய துறைமுகப் பட்டினம் ஒன்றைக் குறிக்கிறது. தொண்டைமான் இளந்திரையன் என்னும் அரசனைப்பற்றியும் அவனுடைய நாட்டின் பல பகுதிகளைப் பற்றியும் கூறி வரும்பொழுது, கடற்கரைப் பட்டின மொன்றில் பண்டங்களும் புரவிகளும் மரக்கலங்களில் வந்து இறக்குமதி யாவதை ஆசிரியர் குறிப்பிடுகிறார். மரக் கலங்களுக்கு வழி காட்டியாக உள்ள கலங்கரை விளக்கம் (Light House) ஒன்றையும் அவர் குறிப்பிடுகிறார். 'நீர்ப் பெயற்று' என்று அவர் கூறுவது நீர் வளம் பெற்ற கடற்கரையூரைக் குறிப்பது போலும்; இது பற்றியே 'கலங்களியங்கும் மல்லைக் கடன் மல்லை' என்று திருமங்கை மன்னரும் கூறிப் போந்தனர்போலும்! பெரும் பாணாற்றுப்படையில் கூறப்படும் தொண்டை நாட்டுத் துறைமுகப் பட்டினம் மகாபலிபுரமாகத்தான் இருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சிக்காரர்க்கு நுண்ணிதின் விளங்கும்.

மகாபலிபுரத்தில், கடற்கரைக் கோயிலில் இரண்டு சாசனங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை,

'நகர மாமல்லபுரத்து ஜலசயனத்தேவர் தெற்கில் திருநந்த வனத்தே இருக்க'

'இந் நகரத்து ஜலசயனத்து க்ஷத்ரிய சிகாமணி பல்லவே சுரத்துத் தேவரும், ராஜஸிம்ம தேவரும், பள்ளிகொண் டருளிய தேவரும் உடைய பண்டாரத்து'

என்பனவாகும். இதிலிருந்து கடற்கரைக் கோயில் ஆதியில் 'சல சயனம்' என்று வழங்கிவந்தது எனத் தெளியலாகும். நீர்ப்புறமாகக் கண் வளர்ந்தருளியதுபற்றி இப் பெருமானுர் சலசயனத்துப் பள்ளி கொண்டருளிய தேவர் என வழங்கப் பெற்ருர் எனத் தோற்றுகிறது. திவாகரர் கூறும் திருமால் சயனங்கள் பதினைந்துள் 'சல சயனம்' ஒன்ருகும். 'சிறுபுலியூர்' என்னும் சோழநாட்டுத் திருக்கோயில் திருமங்கை மன்னரால் 'சல சயனம்' என்று மங்களாசாஸனம் செய்யப் பெற்றுள்ளது. பாண்டிய சாஸனங்களில் திருப்புத்தூர்க் கோயில் சல சயனம் என்று வழங்கப்பட்டமை காணலாம். மகாபலிபுரத்தில் கடற் கரைக் கோயிலன்றி நகரத்துக்குள்ளே ஓர் கோயிலும் உண்டு. 'தலசயனப் புறமான தையூர்' என்று இந்த நகரக் கோயிலைச் சார்ந்த ஊரை ஒரு சாஸனம் குறிக்கிறது. கோயிலைக் கொண்டு அவ் ஊருக்கு, 'தல சயனப்புறமான தையூர்' என்று பெயர் வழங்கி இருத்தல் வேண்டும்.

இச் சாஸனம் மிகப் பழமையானதாகவே காணப்படுகிறது. எனவே, ஊருக்குள்ளே தரையிடமாக உள்ள கோயில் 'தல சயனம்' என்றும், கடலருகே உள்ள கோயில் 'சல சயனம்' என்றும் வழங்கி வந்திருக்க வேண்டும். திருமங்கை மன்ன ருடைய இரண்டு பதிகங்களுள் ஒன்று தல சயனத்தைப்பற்றியும், மற்ருென்று சல சயனத்தைப்பற்றியுமாக இருத்தல்வேண்டும். பிற்காலத்தில் இரண்டு பதிகங்களும் தல சயனத்தைப்பற்றிய பதிகங்களாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

"பிணங்களிடு காடதனுள் பிஞ்ஞகனேடு
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானுர்க் கிடம்விசும்பில்
கணங்க ளியங்குமல்லைக் கடன்மல்லைத் தலசயனம்"

என்று திருமங்கை மன்னர், திருமால், சிவபிரானேடு சேரக் கோயில் கொண்டிருக்கிருர் என்று கூறுகிருர். 'க்ஷத்ரிய சிகா மணி பல்லவேசுவரத் தேவரும், ராஜசிம்ம தேவரும், பள்ளி கொண்டருளிய தேவரும் உடையபண்டாரத்து' என்ற சாஸனத் தொடர் திருமங்கை மன்னர் கூறுவதை ஆமோதிக்கிறது.

திருமங்கை மன்னர் காலத்தே இந்தச் சிவாலயம் அங்கே இருந்தது. திருமாலோடு சிவபிரான் சேரக் கோயில் கொண்டிருப்பதை வைணவர் 'சேராச் சேர்த்தி' என்பர். சிவாலயத்தைக் கட்டிய ராஜசிம்மன் இரண்டாம் நரசிம்மவர்மன் என்று சரித்திர அறிஞர் கூறுவர். இவனுடைய ஆட்சிக்காலம் கி. பி. 690—710 வரை ஆகும். ஆனால் கடற்கரைக் கோயில் பூதத் தாழ்வார் காலமாகிய நான்காம் நூற்றாண்டிலேயே உள்ளது. இந்தச் சிவாலயத்தை நாயன்மார் ஒருவரும் பாடவில்லை.

சலசயனப் பெருமாள் கோயில், கடல் அலை வந்து மோதும்படி கடற்கரை யருகில் கட்டப்பட்டிருந்தது என்று மகா கவி தண்டியாசிரியர் தமது 'அவந்தி சுந்தரி'யில் கூறுகிறார். அவர் கூறும் வரலாறென்று ஆராய்ச்சிக் குரியது. சலசயனப் பெருமாள் மணிக்கட்டு பின்னமுற்ற தென்றும், அதை ஒரு சிற்பி செப்பனிட்டான் என்றும் அவர் கூறுகிறார். அவன் வேண்டுகோளின்படி தாம் சென்று அப்பெருமானைச் சேவித்ததாகவும், அப்பொழுது கடலலையால் மோதப்பட்ட தாமரை மலரொன்று இறைவன் தாளில் பட்டு ஒரு வித்தியாதரனாக மாறி இறைவனை வணங்கி மேலுலகம் சென்றதைத் தாம் கண்டதாகவும் அவர் கூறுகிறார். தண்டியாசிரியர் கூறியவாறு அலை இன்று சென்று மோதுமானால் அது சிவாலயத்தின் மீது மோதுமே யன்றி விஷ்ணு ஆலயத்தில் சென்று மோதாது. அதற்குக் காரணம் விஷ்ணு ஆலயத்தின் முன்னால் சிவாலயம் கட்டப்பட்டிருத்தலே யாகும். இச் சிவாலயம் ராஜசிம்மன் என்ற பல்லவ அரசனால் கட்டப்பட்டது. இவன் தண்டியாசிரியர் காலத்தவன். எனவே தண்டியாசிரியர் சென்று பார்த்தபோது விஷ்ணு கோயில் கரை ஓரத்தில் அலை மோதும்படி கட்டப்பட்டிருந்ததுபோலும். அவர் 'அவந்தி சுந்தரி' இயற்றிய பிற்காலத்தில் இந்தச் சிவன் கோயில் விஷ்ணு கோயிலுக்கு முன்னால் பிரதிட்டை செய்விக்கப்பட்டிருத்தல்வேண்டும். இவ் வரலாற்றாலும் சலசயனப் பெருமாள் கோயில் ராஜசிம்மன் காலத்திற்கு முற்பட்டது என அறியலாகும். பல்லவர்கள் காலத்துக்கு முன்பே மகாபலிபுரம் ஒரு சிறந்த துறைமுகமாக விளங்கியது. அங்குள்ள திருமால் கோயிலும் மிகப் பழமையானது என்பதும் பெறப்படும்.

பல்லவர்கள் வட நாட்டவர்கள் ; தமிழ் நாட்டை ஆண்டார்கள் ; தமிழர் நாகரிகத்தைப் பின் பற்றினார்கள் ; தமிழர்

மதங்களையே மேற்கொண்டார்கள். இவர்கள் ஆட்சியில் நூதன முறையில் தெய்வங்களுக்குக் கோயில்கள் உண்டாக்கப்பட்டன. கோயில் நாகரிகத்திற்கு அடி கோலியவர்கள் பல்லவமன்னர்களே. வெளிநாட்டுச் சிற்பிகளைக் கொண்டும் உள்நாட்டுச் சிற்பிகளைக் கொண்டும் அதியற்புதமான கோயில்களைக் கட்டினார்கள். அவற்றைக் கல்லால் இழைத்த காவியங்கள் எனலாம்.

மகாபலிபுரத்துச் சிற்பங்கள் மூவகைப்படும். அவை 1. பஞ்ச பாண்டவர் ரதங்கள், 2. குகைக் கோயில்கள், 3. கோவில்கள் எனலாம்.

பஞ்சபாண்டவர் ரதங்கள் ஒரே கல்லில் குடைந்தெடுக்கப் பட்டவை; ரதக் கூட்டத்தில் தெற்குக் கோடியில் இருப்பது தான் தர்மராஜ ரதம். இது நான்கு மாடங்கள் கொண்டு 'பிர மிட்' வடிவமாக அமைந்துள்ளது. உண்மையில், இந்த ரதம் சிவ பெருமானுக்கென்று அமைத்த கோயிலாகும். அது சிவன் கோயில் என்று அத்யந்த காம பல்லவனுடைய கல் வெட்டுகள் கூறு கின்றன. இவன் முதலாவது நரசிம்மவர்மன் என்று சிலரும் இரண்டாவது நரசிம்மவர்மன் என்று வேறு சிலரும் கூறுகிறார் கள். பக்கச்சுவர்களையும் மேற்புறச்சுவர்களையும் பிரமா, விஷ்ணு, ருத்திரன் முதலியவர்கள் உருவச்சிலைகள் அலங்கரிக்கின்றன. உச்சியிலுள்ள மாடத்தில் சிவபெருமானுடைய சோமாஸ்கந்த மூர்த்தம் காணப்படுகிறது; பார்வதியும் சுப்பிரமணியக் கடவு ளும் பக்கலில் உள்ளார்கள்.

தர்மராஜ ரதத்தைப் ஒட்டிப் பீமரதம் இருக்கிறது. அது இரண்டு மாடங்கள் கொண்டது. கூரையின் மத்தியில் ஓர் பிளவு உள்ளது. அது பூமியதிர்ச்சியால் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று அனுமானிக்கிறார்கள்.

அர்ஜுன ரதம் மூன்று மாடங்களுடன் 'பிரமிட்' வடிவம் கொண்டது. பின்புறச் சுவரில் உள்ள நிலையில் யானையும் அதன்மீது ஓர் உருவமும் காணப்படுகின்றன. இந்திரனுடைய சிலை அஃது என்கிறார்கள்.

வடகோடியில் மிகச் சிறிய ரதம் ஒன்றுள்ளது. அது திரௌபதையின் ரதம் என்கிறார்கள். உண்மையில் அது துர்க் கையின் கோயில் ஆகும். கோயிலின் பின்புறச் சுவரில் துர்க் கையின் உருவம் நான்கு கரங்களோடு விளங்குகிறது. இருபக் கங்களிலும் இரண்டிரண்டு பேய்கள் உள்ளன. தேவியின்

பாதத்தருகே இரண்டு ஆண் உருவங்கள் மண்டியிட்டு, உட்கார்ந்த நிலையில் காணப்படுகின்றன. அவற்றில் ஓர் உருவம் வலக்கையில் ஒரு வாளைத் தலை முடிக்குக் கீழே தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. வீரர்கள், சாக்த வழிபாடுடையவர்கள், பழந் தமிழ் நாட்டில் தேவியை வரம் வேண்டி அவளுக்குக் காணிக்கையாகத் தங்கள் தலையைப் பலியிடும் வழக்கம் இருந்து வந்தது. இத்தகைய பழக்கத்தை இச் சிற்பம் குறிக்கும்.

" அடிக்கழுத்தி னுடன்சிரத்தை யரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ "

என்ற கலிங்கத்துப்பரணி பாடல் இதனை வலியுறுத்தும்.

ஐந்தாவது ரதத்தைச் சகாதேவ ரதம் என்கிறார்கள். இந்த ரதங்களுக்கு அருகே பிரம்மாண்டமான யானையின் உருவமும் ஓர் சிங்கத்தின் உருவமும் உள்ளன. அவை ஒரே கல்லில் செதுக்கப்பட்டவை. உருவம் இயற்கை மிருகங்களைப் போன்று அமைந்திருப்பது பாராட்டத் தக்கதாகும்.

வடக்கே சிறிது தூரம் சென்றால், வராக சுவாமி குகைக் கோயில் காண்கிறது. இந்தக் கோயிலில் சுவாமிக்குப் பூசை முதலியவை நடந்து வருகின்றன. இதற்கு முன்னால் புதிதாக முன் மண்டபம் கட்டியிருக்கிறார்கள். சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது. கோயிலுக்குள்ளே வராகசுவாமி மூலவிக்கிரகம் காண்கிறது. இச்சந்நிதி மூல விக்கிரகம் ஏறக்குறையத் திருவிடவெந்தை ஆதி வராகப் பெருமாள் மூல விக்கிரகத்தை ஒத்துள்ளது. பூமிதேவியைத் தம் காலின்மீது இருத்திக் கொண்டு வராகமூர்த்தி காட்சி அளிக்கிறார்.

" ஏனத்தி னுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான் " என்ற திருமங்கை மன்னர் கடன் மல்லைப் பாட்டு இங்கே நினைவிற்கு வருகிறது. சிம்ம விஷ்ணு, முதலாவது மகேந்திரவர்மன், அவர்களுடைய ராணிமார்கள் ஆகியவர்களின் உருவச் சிலைகள் அங்கே காணப்படுகின்றன. அந்தக் குகையின் அடிப் பாகத்தில் நந்திவர்மனது 65-ஆவது ஆண்டில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் உள்ளன.

வராக மண்டபத்திற்கு வடகிழக்கே 400 அடி தூரத்தில் மகிஷ மண்டபம் இருக்கிறது. தென் புறச் சுவரில், திருமால்

ஆதிசேஷன்மீது சயனத் திருக்கோலமாகக் காட்சியளிக்கிறார். சயன மூர்த்திக்கு இரண்டு கரங்களே உள்ளன. நாபியும், அதனில் பிரம்ம தேவனும் காணவில்லை. கருடன், சப்த ரிஷிகள் முதலானோர் காணப்படவில்லை. எனவே இந்தச் சயன மூர்த்தி புராண ஐதிகப்படி இல்லை எனலாம். கரையருகே யுள்ள சயன மூர்த்தியும் இந்தச் சிலையைப் போலவே காண்கிறார். புண்டரீக ரிஷிக்கு இதேவிதமாகக் காட்சி அளித்தார் என்பது ஐதிஹ்யம். வடபுறமுள்ள சுவரில் மகிஷாசுர வதம் காண்கிறது. தேவி யின் முகத்தில் கோபக்குறி தோற்றுகிறது. தேவி, சிங்கத்தின் மீது ஆரோகணித்து எட்டுக் கரங்களுடன் ஆயுத பாணியாகக் காணப்படுகிறாள். அவளைச் சுற்றி ஆயுத பாணியாக வீரர்கள் இருக்கிறார்கள். மகிஷாசுரன் எருமைக்கடா முகத்துடனும், மனித உடலுடனும் காணப்படுகிறான். கோயிலின் பின்புறத்தில் சிவன் பார்வதி ஆகியவர்கள் உருவங்கள் உள்ளன. இந்தக் கோயில் சிவன் கோயில் என்கிறார்கள்.

மகாபலிபுரச் சிற்பங்களில் கிருஷ்ண மண்டபமும், பகீரதன் தவமும் மிகப் பெயர் பெற்றவை. கிருஷ்ண மண்டபம் பெரிய குகைக்கோயில். கோவர்த்தன மலையைத் தூக்கி நந்த கோபனுக்கும் ஆயர்களுக்கும் ஆநிரைகளுக்கும் கிருஷ்ண பகவான் அடைக்கலம் கொடுத்ததை இந்தச் சிற்பம் காட்டும். ஆண், பெண், குழந்தை, ஆடு, மாடு, கன்று முதலிய உருவங்களாகச் சுமார் முப்பது இங்கே காணப்படுகின்றன.

இதை அடுத்தாற்போல் ஒரு பிரம்மாண்டமான கல்லில் பல உருவங்கள் செதுக்கப் பட்டிருத்தலைக் காண்கிறோம். சிவபெருமான் அர்ஜுனன்முன் தோன்றிப் பாசுபதம் அளித்த வரலாற்றைக் குறிப்பது இச் சிற்பம் என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். பாறையின் தென்புறத்தில் நான்கு கரங்களோடு கணங்கள் சூழ வீற்றிருக்கிறார் சிவபெருமான். ஒற்றைக் காலில் நின்று தவம் புரியும் அர்ஜுனன் உருவம் இடப்பக்கத்தில் இருக்கிறது. கீழே ஒரு கோயில்போல் அமைக்கப்பட்ட சிறிய அறையில் திருமாலின் உருவச்சிலை இருக்கிறது. யானை, சிங்கம், முயல், மான் முதலியன கூட்டமாக இருக்கின்றதை நோக்கும்பொழுது, இது ஓர் ஆசிரமமாக இருக்கலாம் எனத் தோற்றுகிறது. மேலே கந்தர்வர்கள் கூட்டம் காண்கிறது. அருவி பாய்வதற்காக மேலே ஒரு

பிளவு இருக்கிறது. அதன் பக்கத்தும் கீழும் நாக கன்னிகைகளின் உருவங்கள் இருக்கின்றன.

பாசுபதக் கதையாயின், மேலேயுள்ள பிளவு எதைக் குறிக்கும் என்ற சங்கை எழுகிறது? மேலும், சிவபெருமான் உருவம் கிராத வேடத்துடன் அங்கில்லை. பார்வதியின் உருவத்தையே அந்தக் கூட்டத்தில் காணவில்லை. எனவே, இந்தச் சிற்பம் எந்தக் கதையைக் குறிக்கும் என்ற கேள்வி பிறக்கிறது. சிலர் பகீரதன் கங்கையைக் கொணர்ந்த வரலாற்றை இது குறிக்கலாம் என்பர். மேலே இருக்கும் பிளவு கங்கையின் விழ்ச்சியைக் குறிப்பதென்பது அவர்கள் அபிப்பிராயம். மழைக் காலங்களில் தண்ணீர் இந்தப் பிளவின் வழியாக நீர்வீழ்ச்சி போல் கீழே விழும். ஒற்றைக் காலில் நின்று தவம் புரிபவன் பகீரதன். முனிவர்களும், மனிதர்களும், ஜீவவர்க்கங்களும் கங்கை உலகிற்கு வரும் காட்சியைக் காண்பவர்கள்போல் சிற்பி செய்திருக்கிறான் என்பது அவர்கள் கூற்று. ஒரு பக்கத்தில் கண்ணன் கல் மழை தடுத்ததைக் காட்டி,மற்றொரு பக்கத்தில் சிவ பெருமான் கங்கையைச் சடையில் தாங்கி உலகத்தைக் காப்பாற்றியதைக் கல்லில் இழைத்து, திருமாலும் சிவனும் உலகினர்க்குச் செய்த பெரு நன்மைகளைக் காட்ட ஏற்பட்டனவே இந்தச் சிற்பங்கள் என்பர்.

வாமன குகை, மகாபலிபுரச் சிற்பங்களிலே மிக அற்புதமானது. திரிவிக்கிரமனுகத் திருமால் உலகளந்த சரிதையை அது சித்திரிக்கிறது. எதிரே பூவராக மூர்த்தி பூமிதேவியைத் தம் காலின்மீது இருத்திக் கொண்டு நிற்பது காண்கிறது. கஜலட்சுமியின் சிலையும் இங்கே இருக்கிறது.

மலைக்கு நடுவே கண்ணன் வெண்ணெய்ப் பந்து இருக்கிறது.இந்தக் கல், மலையின் சரிவில் இருக்கிறது. 25 அடி உயரமும் 68 அடி சுற்றளவும் கொண்டதாயிருந்தும் இது சரிவில் நிலைத்து நிற்பது ஆச்சரியமாயிருக்கிறது.

கடற்கரைக் கோயில் குகைக் கோயில் அல்ல ; கற்களால் கட்டப்பட்ட கோயில். இக்கோயில் பல்லவ சிற்பமே என்று சில நாட்களுக்கு முன் கோயிலுக்கருகே பூமியில் தோண்டி எடுக்கப்பட்ட கல்வெட்டால் அறியக் கிடக்கிறது. பெரிய கோயிலில் 16 பக்கங்கள் கொண்ட லிங்கம் ஒன்று இருக்கிறது. சிறிய கோயிலிலேதான் சலசயன மூர்த்தி சயனத் திருக்கோல

மாக எழுந்தருளியிருக்கிறார். அவர் முகத்தில் சாந்தம் குடி கொண்டிருக்கிறது. இந்தப் பெருமானை,

> " கடன்மல்லைத் தலசயனத்துத் தாமரைக்கண்
> துயில்அமர்ந்த தலைவன் "

என்று திருமங்கை மன்னர் மங்களா சாஸனம் செய்தருளு கிறார். காஞ்சியில் கைலாசநாதர் கோயிலைக் கட்டிய ராஜசிம்மனே இங்கேயுள்ள சிவன் கோயிலைக் கட்டினான் என்பர். இரண்டிற் கும் ஒற்றுமை அதிகம்.

மகாபலிபுரச் சிற்பங்கள் மிகப் பழமையானவை. கல்தச்சர் எழுப்பிய இந்தச் சித்திர ஜாலங்கள் நம்முடைய பண்டை நாக ரிகத்தின் சின்னங்கள் எனலாம். எத்தனையோ படையெடுப் புகள் இவற்றை அழிக்க முடியவில்லை. கால வெள்ளத்தை நீந்தி வந்து இவை நமக்குக் காட்சி அளிக்கின்றன ; நமக்கு மௌனப் பிரசங்கங்கள் செய்கின்றன. தமிழ் நாடே, இவற்றைப் போற்றி உன் பழைய நிலையை அடைவாயாக!

சிந்தாமணியின் சிறப்பு

1. **நூலாசிரியர்** *:—சங்க நூல்களுள் சிலவற்றையும் அவைகளுக்குப் பின்னர் எழுந்த பல இலக்கிய இலக்கண நூல்களையும் இயற்றியவர்கள் சமணர்கள். எனவே, இடைக்காலத்தில் தமிழ் மொழி செழித்துத் தழைத்தமைக்குக் காரணம் கற்றுவல்ல ஆருகதர் என்பது மிகையாகாது. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையில் தோன்றிய காப்பியம் யாவும் பெரும்பாலும் ஆசிரியப் பாக்களாலேயே ஆக்கப்பட்டிருந்தன.*

பத்தாம் நூற்றாண்டின் முதலில், சமண முனிவரும் சிந்தாமணியின் ஆசிரியருமாகிய திருத்தக்கதேவர், அந்தக் காப்பியத்தைச் சுமார் மூவாயிரத்து நூறு விருத்தப் பாவினால் இயற்றினார். ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி முதலிய பாக்களாலாகிய நூல்களினும், பல்வித ஓசை யின்பமும் பொருளமைதியும் அணிநலனும் அமைந்திருப்பது ஆசிரிய விருத்தப் பாவாலாகிய நூலே யாதலின், அப் பாவாலாகிய சிந்தாமணியையே அக்காலத்தும் பிற்காலத்தும் தோன்றிய புலவர் அனைவரும் பெரிதும் விழைந்து போற்றலாயினர்.

சிந்தாமணியுள் காப்பிய இலக்கணத்திற்குரிய அழகு அனைத்தும் திகழ்கின்றன. இந்நூலாசிரியர் சுமார் முப்பது ஆண்டுகளையுடைய இளைஞராகத் தோன்றினும், கல்வி அறிவு ஒழுக்கம் முதலிய நலன்களால் பெரியவராக மிளிர்கின்றார். பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு முதலிய நூல்களில் உள்ள பண்டைக் கருத்துக்களும், கற்போர் வியக்கத் தக்க புதிய கருத்துக்களும், ஆருகத மத நூல்களின் கருத்துக்களும் பொன்னால் செய்யப்பட்ட அணிகலனுள் சிறந்த மணிகளையும் பதித்துள்ளதைப் போன்று, இச்சிந்தாமணியுள் ஆங்காங்குச் சமயத்துக்கு ஏற்றவாறு ஆசிரியர் அணிபெற அமைத்துள்ளதை இந்நூலைப் படிப்போர் இனிதுறக் காண்பர். இந்நூலாசிரியர், தேவர், திருத்தக்கதேவர், திருத்தகு முனிவர், திருத்தகு மகா முனிவர், திருத்தக்க மகாமுனிகள் எனப் பல பெயர்களால் வழங்கப்பெறுவர்.

2. **நூற்பெயர்க் காரணம்** :—இந்நூல் சிந்தாமணி என்றும், சீவக சிந்தாமணி என்றும் கூறப்பெறும். சிந்தையில் உன்னியதை நந்தாமல் தரும் விண்ணுலக மணியனைய தன்மையை உடைமையால் இது சிந்தாமணி எனத் தன்மையால் பெயர் பெற்றதென்பர் ஒரு சாரார். இந்நூலின் கதாநாயகனாகிய சீவகன் நள்ளிருளில் இடுகாட்டுள் பிறந்தபோது, அவன் தாய் விசயமாதேவி அக் குழவியை நோக்கி, 'சிந்தாமணியே கிடத்தியால்' (நாமகள் - 282) என்று அழைத்திருத்தலானும், இந்நூலினிறுதியில், 'சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்' (முத்தி - 546) என்று ஆசிரியர் பகர்ந்திருத்தலானும், நூலுடைத் தலைவனுக்கே 'சிந்தாமணி' என்னும் பெயர் அமைந்திருத்தல் வெள்ளிடைமலையாம். எனவே, 'மணிமேகலை' என்னும் ஒரு பெண்மணியின் சரித்திரத்தைக் கூறுவது 'மணிமேகலை' என்றாயது போன்று, சிந்தாமணி என்பவனுடைய சரித்திரத்தைக் கூறும் இந்நூலுக்கு, 'சிந்தாமணி' என்று பாட்டுடைத் தலைவனால் பெயர் அமைந்தது.

சிந்தாமணியாகிய குழந்தை நன்காட்டில் பிறந்திருந்தபோது விசயமாதேவியின் தோழியாகிய சண்பகமாலையின் வடிவம் தாங்கி ஆங்குச் சென்றிருந்த ஒரு தேவதை, அக் குழவி தும்மினபோது அதனை நோக்கி, 'சீவ' (வாழ்வாயாக - நாமகள்-294) என்று வாழ்த்தினமையால் அப்பெயரையும் சேர்த்து, 'சீவக சிந்தாமணி' என்னும் பெயர் நூலுடைத் தலைவனுக்கு வழங்கப் பெற்றது.

இந்நூலுள், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளும், கற்போரின் மாசற்ற மனத்தில் பசுமரத்தில் அறைந்த ஆணிபோல் இனிதுறப் பொருந்துமாறு அமைந்துள்ளன.

இனி, இந்நூலுள் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதின் விளக்கிக்காட்டும் மன்னவர் ஆட்சி, நல்லொழுக்கம் ஆகியவற்றுள் சில முக்கியமான பகுதிகளை ஆராய்வாம்.

3. **செங்கோலரசு** :—குடிமக்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு யாதொரு துன்பமும் வாராமல் காலநிலைக்கு ஏற்றவாறு அவர்களை இனிதுறக் காப்பவனே சிறந்த மன்னவன் ஆவன். குடிகளின் நிலையை அவ்வப்பொழுது நாடாளும் வேந்தன் தானே நேரில் அறிந்துகொள்ளல் முடியாது. ஆனால், அவன் குடிகளின் நிலைமை அனைத்தையும் மந்திரி முதலிய அரசாங்க ஏவலாளர்

மூலமாகவே அறிய முடியும். அவ்வாறு, நாட்டு மக்களின் உண்மைநிலைகளை ஆராய்கின்ற மந்திரி முதலானோர், உண்மையும், வாய்மையும், மெய்ம்மையும், சமன்செய்து சீர்தூக்கும் கோல் போன்ற சான்ருண்மை முதலிய சீரிய குணங்களனைத்தும் இயற்கையாகவே பெற்றுள்ளவர்களாக இருத்தல்வேண்டும். இத்தகைய மாட்சிகள் வாய்ந்த அமைச்சர் முதலியோரைக் கொண்டுள்ள மன்னவனே, தன் செங்கோலை இனிதுறச் செலுத்த முடியும். இவ்வாறு ஆட்சி புரிபவனே தன் சுற்றத்துடன் என்றும் நின்று யாதோர் இடையூறுமின்றி இன்புடன் வாழ்வான். இத்தகைய மன்னவனைக் குடிமக்களும் தெய்வமெனக் கருதி அவனை வாழ்த்தி அவன் ஆணையைத் தழுவி நிற்பர். இக் கொள்கையை அறிந்த திருத்தக்கதேவர், சீவகன் தன் மகனுகிய சச்சந்தன் என்பானுக்கு அரசியலைக் கூறும் வாயிலாக,

" பால்வளை பரந்து மேயும் படுகடல் வளாக மெல்லாம்
கோல்வளை யாமல் காத்துன் குடைநிழல் துஞ்ச நோக்கி
நால்வினைந் தனைய நுண்சொல் புலவரோ டறத்தை யோம்பின்
மேல்வினை யாத இன்பம் வேந்தமற் றில்லை கண்டாய் "

—சிந்தா - முத்தி - 338

என்று கூறினர்.

இன்னும் ஒரு மன்னவனின் ஆட்சியை யாவரும் புகழுமாறும், அது இடையூறின்றி இயலுமாறும், அவன் தன் குடிமக்களுக்குச் செய்யவேண்டிய பல நன்மைகளுள் மிகவும் இன்றியமையாதது, குடிகளின் நிலை தளராமல் அவர்பால் வரிப் பணத்தை வாங்குதலேயாம். ஒரு யானை, பல காணி நிலங்களில் விளைந்த தானியங்களை முறையே உண்ணுமல், பயிர்களை மிதித்தும் அழித்தும் உண்ணின் சில நாளைக்குத்தான் அத் தானியம் பயன்படும். ஆனல், முறையாக அத் தானியங்களை அரிந்து அளவாக யானைப்பாகன் யானையை உண்பிப்பானுயின், யானைக்கும் அப்பொருள் என்றும் கிடைக்கும் ; அவ்வயலும் அழியாமல் இருக்கும். இதனைப் போன்றே, ஓரரசன் தனக்குப் பல்வகைச் சேனைகள், நவீனமான கருவி முதலிய ஆற்றல்கள் உள்ளன என்று கருதித் தன் குடிமக்களை வருத்திப் பஞ்சத்தீயினுல் வாடச் செய்து அல்லலில் ஆழ்த்தல் கூடாது. மக்களுக்கு இன்றியமையாதனவாகிய உணவு, உடை, உறையுள், மருந்து முதலியவற்றை

யாதொரு குறைவுமின்றி அவர்கள் அடையுமாறு அரசன் கண்ணோட்டம் செலுத்தல் வேண்டும். முறையறிந்து இறை தண்டும் மண்ணுள் இறைவனை விண்ணுள் இறைவனாக உலகமே வணங்கும். அத்தகைய வேந்தனின் ஆட்சி மாட்சியுடன் நிலைத்திருக்கும். இக்கருத்தைச் சிந்தாமணியில் சீவகன் வாயிலாக,

" வாய்ப்படுங் கேடும் இன்றும் வரிசையின் அரிந்து நாளும்
காய்ந்நநெல் கவளந் தீற்றின், களிறுதான் கழனி மேயின்
வாய்ப்படல் இன்றிப் பொன்றும்.வல்லனாய் மன்னன் கொள்ளின்
நீத்தநீர் ஞாலம் எல்லாம் நிதிநின்று சுரக்கும் அன்றே "

—சிந்தா - முத்தி - 309

என்று, 'காய் நெல்லறுத்துக் கவளங் கொளினே' என்ற புறநானூற்றின் 184 - ஆம் செய்யுளின் கருத்தைத் தழுவித் திருத்தக்க மகாமுனிவர், செங்கோல் வேந்தனின் திறத்தைச் சித்திரித்துக் காட்டினர்.

4. கொடுங்கோல் வீழ்ச்சி :—

" மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றால் "

என்று (மணிமேகலை - 22 - 208, 9) சீத்தலைச் சாத்தனாராகிய நாவலர், காவலர் காவலைக் கூறியது போன்று, கொற்றவனாட்சி நற்றிறங் கொண்டிலதெனின், ஆண்மக்களின் நல்லொழுக்கங்களும், பெண்மக்களுக்கு உயிரினும் சிறந்த கற்பு முதலிய பிற அற வொழுக்கங்களும் அறவே மாறி நாடு காடாகச் சீர் குலைந்து நிற்கும். அதுகாரணமாக அந்நாட்டுக் காவலனும் தனக்கு யாதொரு காவலும் இன்றித் தன் சந்ததியுடன் பொன்றி நைந்து அழிவான். 'அரசியல் பிழைத்தோனை அறமே கூற்றாக நின்று ஒறுக்கும்' என்பதும், 'அல்லல்பட்டு ஆற்றாது குடிமக்கள் சிந்திய கண்ணீரே கொடுங்கோல் வேந்தனின் செல்வத்தைத் தேய்க்கும் படை' என்பதும் பண்டைச் சான்றோர்கள் கண்ட நெறியாகலின், கொடுங்கோல் வேந்தனை இயற்கையே வேறு வேறு வடிவமாகத் தோன்றி ஒறுத்து அழித்து அவனை மறைக்கும் என்பது தெற்றெனை விளங்குகிறது. கோல்கோடிய கொற்றவன் வீழ்வதற்கு முன்பு பல தீய நிமித்தங்கள் தோன்றும் என்பது திருத்தகு முனிவர் கருத்து. இக்கருத்தை இனிக் காண்போம்.

கொடுங்கோலரசனுடைய நாட்டில் கோள்கள் தாம் செல்ல வேண்டிய வழிகளை விட்டு விலகிச் செல்லும். அதனால், இரவுக் காலம் குறைந்து பகற்காலம் மிக்குக் கோடை அதிகரிக்கும். தக்க காலத்தில் போதிய மழையின்றிக் குறையும். அது காரணமாக விளைவு குறையும். எங்கும் பசிப்பிணி வாட்டும். வாழ்க்கைக்கு அடிப்படையான கற்பு முதலிய ஒழுக்க நிலைகள் மாறும். பிறகு, மக்கள் மனத்தில் அறக்கடவுள் குடி புகுதலின்றி மறப்பேய்களே தாண்டவமாடும். இவை காரணமாக, பெருந் தீயினுக்கு இரையாகும் கானகம் போல, அல்லலென்னும் தீயினால் மல்லல் வாய்ந்திருந்த நாடு வாடி வதங்கும். அந்நாட்டை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்திருந்த கொடுங்கோல் வேந்தனும் இறுதியில் வெந்து வதங்கித் தன் கிளைஞரோடு மாய்வான். நாட்டு மக்களின் அல்லலுக்குக் காரணமாய் நின்ற வழுவுடைக் காவலன் யாதொரு கழுவாயும் இன்றி அழிவது நிச்சயம். 'இதனை நான் ஆணையிட்டுக் கூறு வேன்' என்று வலியுறுத்திப் பறையறைகின்றார் திருத்தக்க தேவர். இக்கருத்தை,

> " கோள்நிலை திரிந்து, நாழி குறைபடப் பகல்கள் மிஞ்சி,
> நீள்நிலை மாரி யின்றி, விளைவஃகிப் பசியும் நீடிப்
> பூண்முலை மகளிர் பொற்பின் கற்பழிந் தறங்கள் மாறி,
> ஆணையிவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடின் என்றான் "
>
> —சிந்தா - நாமகள் - 226

என்று கூறிய மதிநுட்பம் வாய்ந்த தருமதத்தன் என்னும் அமைச்சன், கொடுங்கோலனாகிய கட்டியங்காரனுக்குக் கூறும் முகத்தால் முனிவர் வருணித்துப் போந்தார்.

5. நல்லொழுக்கம்: மக்களாகப் பிறந்து ஆறறிவு வாய்க்கப் பெற்ற ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாட்களில் வாழ்வாங்கு வாழ்ந்து, நல்வினைகளை ஈட்டி, இறுதியில் என்றும் மாறாத பேரின்பம் வாய்ந்த வீட்டினை உறுதல் வேண்டும் என்பது சான்றோர் கண்ட நெறியாம். தந்தையின் முதுமைப் பருவத்தில் அவனுடைய உத்தம புத்திரன் அவனை இனிதுறப் புரப்பது போன்று, நல்வினையாகிய மைந்தனை ஒவ்வொருவனும் பெறுதல் வேண்டும். நல்வினைகள் வாய்க்கப்பெறல் வேண்டுமாயின் பல

நற்குணங்கள் மாந்தருக்கு என்றும் மாறுமல் இருத்தல் வேண்டும்.

அத்தகைய நற்குணம் பலவற்றுள் இன்றியமையாதன நான்காம். முதலாவது, தன்னுயிர் போலப் பிற உயிர்களனைத்தையும் கருதித் தன்னுல் இயன்றஅளவு ஈகை புரிதல். இரண்டாவது, விழுப்பமுடைய ஒழுக்கநிலை யனைத்தும் வாய்க்கப்பெறுதல். மூன்ருவது, உலகமனைத்திற்கும் காரணமாகிய ஒரு முழுமுதற்கடவுள் யாண்டும் என்றும் உண்டென்று தெளிந்து அக் கடவுள் வழிபாட்டினேடு மனவடக்கம் அமைந்திருத்தல். நான்காவது, தாய் தந்தை ஆசிரியர் ஆகிய பெரியோருக்கு அடங்கி அவர்பால் அன்பினைச் செலுத்தல்.

மேற்கூறிய நான்கு நிலைகளும் ஒருவனுக்கு இருக்குமாயின், அவன் நல்வினையாகிய அருமந்த மைந்தனைப் பெறுதல் ஒருதலை. இக்கருத்தைத் தேவர் ஓரிடத்தில் மிகவும் அழகுபடக் காட்டுகின்ருர். சீவகன் ஒரு நாள் காட்டின் வழியாகச் செல்லும் போது, ஒரு வழிப்போக்கன் அவனைக் கண்டான். அவன் சீவகனை நோக்கி, "ஐயா, உமக்கு எத்தனை மனைவியர், மக்கள்?" என்ருன். "எனக்கு மனைவியர் நால்வர். அந்நால்வரின் வயிற்றில் உதித்த அருமந்த மைந்தன் ஒருவனே. அவன்ருன் என்னை வீட்டின்பம் அடையச் செலுத்துபவன்" என்று பதிலிறுத்தான் சீவகன். அதனைக் கேட்ட வனசரன் உடனே கைகொட்டிக் குலுங்கச் சிரித்து, "ஐயா, நான்கு பெண் மகளிர் வயிற்றில் ஓர் ஆண் மகன் பிறப்பதும் உண்டோ?" என்று ஏளனம் செய்தான். அவனுரையைப் பொறுமையாகக் கேட்டிருந்த சீவகன், புன்னகை புரிந்து, "நண்பா, மனைவியர் நால்வர் என்றல், தானம், சீலம், தவம், அறிவர் வழிபாடு ஆகிய நான்காம்; அருமந்த மைந்தன் என்பது நல்வினையாம்; அந்த நல்வினை யென்னும் மகனே நன்மகனும்; ஊனுடம்பு வாய்ந்த பிற மக்கள் எத்தகையரோ; நான் அறியேன்" என்று வழிப்போக்கன் வியக்குமாறு பதில் இறுத்தான். இக்கருத்தை,

"நற்ருனம், சீலம், நடுங்காத் தவம்,
அறிவர் சிறப்பிந் நான்கும்,
மற்ருங்குச் சொன்ன மனைவியர்;
இந்நால்வர் வயிற்றுள் தோன்றி

உற்ருன் ஒருமகனே மேற்கதிக்குக்
கொண்டுபோம் உரவோன் தன்னைப்,
பெற்ருர் மகப்பெற்ருர், அல்லாதார்
பிறர்மக்கள் பிறரே கண்டீர் ''

—சிந்தா - கேமசரி - 134

என்று தவமுனிவராகிய திருத்தக்க மகாமுனிவர் கற்போருள்ளம் வியக்குமாறு வரைந்தமைத்துக் காட்டினுர்.

ஒருவன் தவம் முதலிய விரதங்களை அநுட்டிக்குங்கால் எக்காலத்தும் எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு சிறிதும் வழுவுதல் கூடாதென்பதனை விளக்கவே, 'நடுங்காத் தவம்' என்று விசேடித்தார்.

" புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் "

—குறள் - வாய்மை - 8

என்று பொய்யாமொழியார் கூறிய விழுமிய கருத்தின்படி, புறத்துறவினும் மனத்துறவே சீரியது. தவமாகிய துறவுக்கு இலக்கணத்தைத் தேவர் கூறுங்கால், 'நாகம், தன் அகத்துள்ள நஞ்சினைக் கான்று புறத்தோலை உரித்துத் தள்ளுவது போன்று, ஒரு தூய மகன் தன் அகப்பற்றும் புறப்பற்றும் அகற்றி மாசறத் திகழல் வேண்டும்' என்று வகுக்கின்ருர்.

" படநாகந் தோலுரித்தால் போல்துறந்து."

—சிந்தா - கேமசரி - 135

இதற்கு உரைவரைந்த உச்சிமேல் புலவர் கொள்ளும் நச்சினுர்க்கினியர், 'நாகம் தோலுரிக்கும்பொழுது நஞ்சும் காலும்' என்று தெளிவுபட விளக்கியுள்ளதை ஆராய்க.

எனவே, ஒவ்வோர் ஆணும் பெண்ணும் இம்மையில் ஒழுக்க நிலையில் மாருமல் திகழ்ந்து, மறுமையில் என்றும் மாருத விழுமிதாய வீட்டின்பம் அடைதல் வேண்டும் என்பது முனிவர் கருத்து.

இதனைப் போன்றே பல விழுமிய கருத்துகள் இழுமென் மொழியால் உரைக்கப்பெற்று, எட்டு வனப்புக்களுள் ஒன்ருகிய 'தோல்' என்னும் வனப்பானது, கற்ருேரனைவரும் போற்றத் தக்க சிந்தாமணியில் மிளிருதலைக் காணலாம்.

பண்டைத் தமிழர் அரசியல்

இந்தியா, சீனு முதலிய நாடுகளில் முற்காலத்தில் மன்னர்கட்குப் பெருமதிப்பு இருந்துவந்தது. மன்னர்களெல்லோரும் கடவுளின் அமிசமாகவே மக்களால் கருதப்பெற்று வந்தனர். குடி மக்கள் யாவருக்கும் பொதுவான 'ஒரு தந்தை' என ஒரு நாட்டு மன்னன் அந் நாட்டுக் குடிகளிடம் உரிமைபெற்று வந்தான்.

முற்காலத்து அரசர்கள் யாவரும் வழிவழியாகவே நாட்டை ஆளும் உரிமை பெற்றனர். தமிழ்நாட்டு மன்னர்களும் இத்தகைய உரிமையையே எய்தி, நாட்டை ஆண்டுவந்தனர். தமிழ்நாட்டு மன்னர்களுக்குத் திருமாலையே புலவர் உவமை கூறி வந்தனர். இது தொல்காப்பியர் காலத்திலிருந்தே வழக்கிலிருந்தது என்பது,

" மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலை "

என்ற தொல்காப்பியப் புறத்துறை நூற்பாவால் இனிது விளங்கும். ஆழ்வார்கள் காலத்தில் தமிழ் மன்னர்கள் திருமாலெனவே போற்றப்பெற்று வந்தனர். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்பது ஆழ்வாரொருவர் வாக்கு.

" நெல்லும் உயிரன்றே ; நீரும் உயிரன்றே ;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் "

என்பது புறநானூறு என்னும் சங்கநூல் கூற்று.

உழவினை உயிர்நிலையாகக் கருதிய தமிழர், மன்னனே உலகிற்கு உயிர் என்று கருதி வாழ்ந்துவந்தனர். போர் முதலிய குழப்பங்கள் இன்றி, அமைதி நிலவினாலன்றி உழவர்கள் தங்கள் உழுதொழிலைச் செவ்வனே நடத்தமுடியாது எனக் கருதிய பண்டைத் தமிழ் மக்கள், மன்னனை ஜனசமூகத்தின் உயிரெனவே கருதியதில் தவறில்லை. எல்லாப் பண்புகளுமுடைய மன்னரும் குடி மக்களின் இன்ப வாழ்வையே பெரிதாகக் கருதி வாழ்ந்துவந்தனர். அளவில்லாத அதிகாரத்தை அரசர்கள் அறத்தின் வழியே செலுத்தி அரசியல் நடாத்திவந்தனர்.

அரசியல் நடாத்தும் அரசர்கள் அரசியல் நுட்பங்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். வடமொழியில் அரசர்கள் பயின்று அரசியல் நன்கு நடாத்துதற்கு என, அரசியல் நுட்பங்களைக் கோவைப்படுத்தி முதல்முதலில் நூலெழுதின பெருமை சாணக்கியர் என்பார்க்கு உரித்தாயிற்று. இவர் சந்திரகுப்தர் காலத்தவர். அவர் காலத்திற்கு முன் அரசியல் பற்றிய நூல்கள் வடமொழியில் இருந்தனவாகத் தெளியக் கூடவில்லை. சாணக்கியர் எழுதிய நூலுக்கு 'அர்த்த சாஸ்திரம்' என்று பெயர். மனு, பராசரர், பிரகஸ்பதி, உசானர், சுக்கிரன், காமந்தகர் முதலியோர் கூறிய பொருள்களைத் தொகுத்துத் தாமும் சில புதியனவாகச் சேர்த்து அர்த்த சாஸ்திரத்தைச் சாணக்கியர் இயற்றினர் என்று அறிந்தோர் கூறுவர்.

பழந்தமிழ் நூல்களுள் பலவும் அரசியல் நுட்பங்களைப்பற்றிப் பலபடக் கூறுகின்றன. அவற்றுள் திருக்குறள் என்னும் ஒப்புயர்வற்ற நூல் எழுபது அதிகாரங்களால்—எழுநூறு குறட்பாக்களால்—அரசியல் நுட்பங்களையெல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனியென நன்கு விளக்கிக் காட்டுவது. ஆண்டுக் கூறியுள்ள பொருள்களைத் தொகுத்து உணர்வது பண்டைத் தமிழரசர்களுடைய அறிவாற்றல்களை அறிவதற்கு உரிய சிறந்த கருவியாம். ஆதலால் ஈண்டு அப் பொருள்களைத் தொகுத்துக் காட்டுவாம்.

படை, குடி, பொருள் (கூழ்), அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் ஏறெனக் கருதப்பெறுவான். ஈகை, அறிவு, ஊக்கம், அஞ்சாமை ஆகிய நான்கும் மன்னன்பால் இருத்தற்குரிய இயல்பான குணங்கள். அறவழியில் இருந்து மாறுபடாதவைகளைச் செய்து அறமல்லாதவற்றைக் கடிந்து தனது வீரத்திற்கு இழுக்கு வாராது நடப்பவனே நல்ல அரசன். காண்பதற்கு எளியவனாகவும் கடுஞ்சொல் அற்றவனாகவும் இருக்கும் அரசனை உலகம் பெரிதும் புகழும். குடிகளின் கருத்தையும் நலத்தையும் தழுவியே அரசன் செங்கோல் செலுத்துதல் வேண்டும்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்."

அறநூலிலும் நீதி நூலிலும் உள்ள முறைப்படி குடிகளைக் காப்பாற்றும் அரசன் இறைவனாக (தெய்வமாக)க் கருதப்

பெறுவான். குணமும் சீலமும் உள்ள அரசன், அமைச்சர் கடிந்து சொல்லும் பொருள்களையும் பொறுமையுடன் கேட்பான். அமைச்சர் செவி கைத்துப்போகும்படி இடித்துப் புத்தி மதி கூறும்போதும், குடிகள்பாலுள்ள குறைகளை எடுத்து அறிவுறுத்தும்போதும் அவற்றைக் கேட்டுத் தன்னைத் திருத்திக் கொண்டு ஒழுகும் வேந்தனது ஆட்சி யாவராலும் மிகவும் விரும்பத்தக்கதாக இருக்கும். அரசன் இத்தகைய சிறந்த குணங்களெல்லாம் அமைந்துள்ளவனாக இருக்கவேண்டுமானால் அவன் கல்வியறிவு நிரம்பியவனாக இருத்தல் வேண்டும். கல்வி அறிவு நிரம்பிய அரசன் மன்னுயிர்க்கு மிகவும் பயன்படுவான். இது பற்றியே எவ்வுயிர்க்கும் பொதுவான கல்வியைக் குறளாசிரியர் அரசியலில் வைத்துச் சிறப்பித்தார். கல்வியறிவுடன் கேள்வியறிவும் அரசர்க்குப் பயன்மிகத் தருவதாகும்.

" அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். "

தன்னைக் காக்கும் படையாகவும், பகைவரால் அழிக்க முடியாத அரணாகவும், அரசனுக்கு உதவுவது அறிவு. கல்வி கேள்விகளினால் வந்த அறிவோடு உண்மை அறிவும் அரசனுக்கு வேண்டும்.

செருக்கும் சிறுமையும் இல்லாமல், சினம் தன்னிடத்தே தோன்றவிடாமல் அரசன் ஆட்சிபுரிதல் வேண்டும். அளவிறந்த மகிழ்ச்சி அரசனுக்குத் தீங்குவிளைவிக்கும். அந்தணர், அருந்தவர், பெரியோர், தாய் தந்தையர் முதலியவரை மன்னவன் வணங்குதல் வேண்டும். தீங்கு தோன்றுவதற்கு முன்னமேயே அதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யாத அரசன் ஆட்சி கெடும். குற்றத்தைப் பிறர்பால் அறிந்து, அவரைக் கண்டிக்க முந்துவதற்கு முன்னர்த் தன்பால் நிகழும் குற்றங்களை அறிந்து அவற்றை நீக்குதற்கு மன்னவன் முயலவேண்டும். பொருளால் அடையக்கூடிய நன்மைகளை அரசன் அடைவது அவன் தகுதிக்கு ஏற்புடையது.

பெரியோரின் நட்பைப் பெறுதலே அரசன் அடைதற்குரிய செல்வங்கள் எல்லாவற்றினும் சிறந்த செல்வமாம். அறிவுடையோரைத் தன் சிறந்த நண்பர்களாகக் கொண்டொழுகும் அரசன் சிறந்த அரசனும்.

அமைச்சர்கள் துணையைக் கொண்டே அரசன் தன் அரசாட்சியைச் செய்யவேண்டி இருத்தலால், அரசனுவான் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் சிறந்துயர்ந்த அமைச்சர்களை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். அமைச்சர் இல்லாத அரசனுக்குத் துணை வேறு பல இருந்தும் அவை எல்லாம் துணையாய்க் கருதப்பெறமாட்டா. அறிவுறுத்திச் சொல்லும் அமைச்சருடைய மன்னனுக்குப் பகைவர் தோன்றி வளர்வது இல்லை. தான் செய்ய முனையும் செயலைச் சிறந்த அறிவாளிகளோடு கலந்துகொண்டு அரசன் செய்யக் கடவன்.

பகைவர்மேல் படையெடுத்துச் செல்ல விரும்பும் அரசன் நன்கு ஆய்ந்து பின்னரே செல்லுதல் வேண்டும். நன்கு எண்ணித் துணிவு பெற்றுப் பின்னர் ஒரு செயலைச் செய்யப் புகுதல் நன்று. செயலைத் தொடங்கிவிட்டுப் பின்னர் அதை முடிக்கும் உபாயத்தைக் கருதுவது பெருந்தவறுகும். தான் செய்யப் புகும் செயலின் அளவையும், அதனைச் செய்து முடிக்கத் தனக்குள்ள ஆற்றலையும், அதனைத் தடுக்க எதிர் நிற்கும் பகைவருடைய வலிமையையும், தனக்கும் பகைவர்க்கும் துணை செய்ய நிற்போருடைய வலிமையையும் நன்கு அறிந்த பின்னரே அரசன் செயலின்கண் இறங்கவேண்டும். வருவாய்க்குத் தகுந்த செலவு அரசனுக்கு மிக இன்றியமையாதது. பகைவர்மேல் போருக்குச் செல்லும் அரசனுக்குப் போர் செய்தற்குரிய காலத்தை அறிவது இன்றியமையாதது.

> " பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
> வேந்தர்க்கு வேண்டும் பொழுது. "

ரஷியாவின்மீது மாரிக்காலத்தில் படையெடுத்துச் சென்றதால் ஹிட்லருக்குப் பெருந்தோல்வி உண்டாயிற்று. வெற்றியை நோக்கி நின்ற ஜெர்மனிக்கும் பொருந்தாக் காலமே வீழ்ச்சியை அளித்தது. சிறந்த அனுபவமுடைய அரசர், பகைவரை வெல்லுதற்கு ஏற்ற காலம் பார்த்துக்கொண்டு காத்திருப்பர். திண்மையுடைய அரசர் பகைவர்மேல் உடனே படையெடுத்துச் செல்லாது காலம் நோக்கி நிற்பது, புலியொன்று தான் குறித்த விலங்கின்மீது பாய்வதன்முன் பதுங்கி இருப்பதற்கு ஒப்பாகும். காலத்தோடு இடமும் அறிந்து பொருதல்வேண்டும். வல்லமையில்லாத வீரரும் இடமறிந்து போர் செய்வாராயின் வெற்றி பெறுவர்.

சிங்கத்தைக் குகைக்குள் சென்று தாக்கவும் முதலையைத் தண்ணீரில் வெல்லவும் முயல்வது மடமையாம்.

எவரையும் ஆராயாமல் அரசன் தன்பால் பணியாற்றுதற்குத் தேர்ந்தெடுத்தல் பேதைமையாம்.

" வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். "

அரசன், 'ஒருவனைத் தொழிற்குரியவனா?' என்று நன்கு ஆராய்ந்து பார்த்துப் பின்னரே அவனை அத் தொழிற்கு உரியவனாக்கல் வேண்டும். தொழில் செய்பவரிடத்து அரசனுக்கு அளவிறந்த அன்புவேண்டும். தன் சுற்றத்தினரைத் தன்பாலிருந்து நீங்காத வண்ணம் வேந்தன் போற்றி ஒழுகுதல் வேண்டும். அவரவர் தகுதி அறிந்து நடந்தால் சுற்றத்தவர் அரசனை நீங்காது கூடி வாழ்வர். அளவிறந்த மகிழ்ச்சி அரசன்பால் மறதியை உண்டாக்கிவிடும்.

அரசனுக்கு வென்றி தருவது உண்மையில் அவனுடைய வேலன்று; அவனது கோடாத செங்கோலே. அதிகாரத்தாலும் மிருக பலத்தாலும் குடிகளை அடக்கி ஆளுதல் அரசனுக்குப் பெருந்தவறும். அன்பிலா ஆட்சியே அரசனுக்கு வென்றியைக் கெடுப்பது. அன்பாட்சியே தடையிலா வென்றியைத் தருவது.

குற்றவாளிகளைத் தண்டித்தல் அரசனுக்கு வழுவாகாது. அஃது அவன் கடமையேயாம். களவு, கொள்ளை, வஞ்சகம், கொலை, பிறர்மனை புகுதல் முதலிய செய்பவரை மன்னவன் கடுமையாகத் தண்டித்தல் வேண்டும்.

ஆறிலொரு பங்கை அரசன் வரியாகப் பெறவேண்டும். இது தக்கதே எனினும் அதனையும் கொடுமையாக வசூலித்தல் அடாது. கடுமையான வரிகள் விதித்து அடக்கு முறையைக் கையாளும் மன்னன், வேலினைக் காட்டி வழிபறி செய்யும் கள்வனுக்கு ஒப்பானவன். கொடுந் தண்டனைகள் விதிப்பதாலும் கடுமொழிகள் புகல்வதாலும் மக்களுடைய ஆதரவை மன்னவன் இழந்து விடுவான். கொடுங் கோன்மையால் மன்னவன் தன் நாட்டை இழப்பான். சோம்பலில்லா அரசன், நாட்டையெல்லாம் தன் ஒரு குடைக்கீழ் வைத்து ஆளுவான். அஃதுடைய அரசன் பகைவருக்கு விரைந்து அடிமையாவான். விடா முயற்சி உடையவனாயிருத்தல் அரசனுடைய சிறப்பான தொழி-

லாம். துன்பம் வந்தபோதும் அரசன் ஊக்கம் குன்றாதிருத்தல் வேண்டும்.

அரசனுக்கு இன்றியமையாத அங்கமாக இருப்பவன் அமைச்சன். அமைச்சன் இயற்கை அறிவோடு நூலறிவு வாய்ந்தவனாதல் வேண்டும். அறிவு நுட்பம் வாய்ந்த அமைச்சர்களுக்கு ஆலோசனைகள் முந்தி நிற்கும். தொழில் வெற்றிக்குக் கருவி, காலம், வினை செயல்வகை இவற்றை நன்கு ஆராய்தல் வேண்டுமாதலால் இவற்றை நன்கு ஆராய வல்லவனே சிறந்த அமைச்சனாவான். குடிகளுடன் பழகி அவர்கள் இயற்கையை அமைச்சன் நன்கு கண்டறிவான்; அவர்களுடைய நன்மையில் கண்ணும் கருத்தும் உடையவனாவான்; தந்திரங்களை ஏற்ற இடத்துக் கடைப்பிடிப்பான்; பகைவருக்குத் துணையானவரைப் பிரித்து விட்டுத் தன் அரசனுக்குத் துணையாயிருப்பவரைக் கொடையினாலும் இன்சொல்லாலும் நீங்காதவாறு போற்றிக் கொள்வான்; உபயோகமுள்ளவர்கள் பிரிந்திருந்தால் அவர்களை நண்பர்களாக்கிக் கொள்வான்.

அரசர்களுடைய மொழிகளை அமைச்சன் பொன்போலப் போற்றுதல் நன்று. எனினும், அரசன் தவறான வழியில் செல்லுங்கால் நன்மை பயப்பனவற்றையே அமைச்சன் எடுத்துக் கூறுதல் வேண்டும். எனவே, சொல் வன்மையுடைமை அமைச்சனுக்கு உரியதொரு சிறந்த கருவியாம். ஒன்று சொல்லுங்கால் இனிமையாகச் சொல்லுபவனும், சோர்வின்றிச் சொல்லுபவனும் என்றும் எவராலும் வெல்லப் பெறார். திறம்பட ஒழுங்காகப் பேசுதல் அமைச்சனுக்கு இன்றியமையாதது. உலக இயற்கையை அறிந்து அதன்படி செயல்களைச் செய்தல் வேண்டும். அரசனை அறவழிப் படுத்தித் தீய வழியில் செல்லாதவாறு அமைச்சன் தடுத்தல் வேண்டும். குளிர் போக்கிக்கொள்ள விரும்புவார், தீயினை மிக அணுகாமலும் மிக அகலாமலும் இருத்தல்போன்று, அரசனிடம் பயமின்றி வாழ விரும்பும் அமைச்சன் அவனை மிக அகலாமலும் மிக அணுகாமலும் இருந்து தன் கடமைகளை ஆற்றுதல் வேண்டும். குறிப்பறிந்து, சமயம் நோக்கி வெறுப்பில்லனவும் பயனுள்ளனவும் அரசன் வேண்டுவனவுமான சொற்களை அமைச்சன் அரசனிடம் கூறுதல் வேண்டும். பயனில்லனவற்றை என்றும் அமைச்சன் கூறலாகாது.

தூதுவர்கள் அரசியலுக்கு இன்றியமையாதவர்கள். அன்பு, அறிவு, சொல்வன்மை இவை தூதுவர்க்கு இன்றியமையாத குணங்களாம். இன்றும் தூதுவர்கள் பல நாடுகளிலும் இருந்து தொழில் புரிதலைக் காண்கின்றோம். வேற்றரசரிடம் தூதுவர் ஒன்று சொல்லுங் காலத்துத் தொகுத்தும் கடுஞ்சொல் நீக்கியும் அவர் மகிழுமாறு கூறுதல் வேண்டும். எனினும் தம் அரசர் கூறியவற்றைக் கூறுங்கால் வேற்றரசர் அச்சுறுத்துவாராயினும் தூதுவர் அஞ்சாது தொழிலாற்றுதல் வேண்டும். தமக்குத் தீமை வருவதாயினும் அஞ்சாது தம் அரசன் கூறியவற்றை வேற்றரசனிடம் கூறி விடுபவரே சிறந்த தூதராவர்.

அரசவையில் கல்வி கேள்வி முதலியவுடைய முதியோர்கள் பலர் இருத்தல் வேண்டும். ' ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்' என்று சிலம்புச் செல்வம் குறிக்கும் தொடர்களால் பண்டைக் காலத்துச் சபைகளின் வகைகள் உணரப்படும். அவைக்கு அஞ்சாமை அவைக்கண் இருப்பார்க்கு முதற்குணமாக வேண்டப்படும். எனவே,

" ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு "

எனத் திருவள்ளுவர் கூறுவராயினர். அவையில் உள்ள உறுப்பினர்கள் எழுப்பும் வினாக்களுக்குத் தக்க விடை அளிப்பதற்கு அமைச்சர்கள் அளவை நூல்களை நன்கு பயின்றிருத்தல் வேண்டும். நாவன்மையில்லாத அமைச்சர் ஒன்றுக்கும் பயன்பட மாட்டார்.

உழவர், அறிவர், செல்வர் எனும் முத்திறத்தாரும் கூடி வாழும் நாடே சிறந்த நாடெனப்படும். அவர் வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. உழவு, வாணிகம் இவற்றால் பொருள் வரவு ஏற்படும். பசி, பிணி, பகை, இவை இல்லாத நாடு பொன்னுடாம்.

நாடு இயற்கைவளமுடையாதாதல் வேண்டும். ஆறுகள், கேணிகள், மலையரண்கள் முதலியன இயற்கை வளங்களாம். இவற்றால் நாடு நீர்வளமும் நிலவளமும் உடையதாகும். அரண் நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பாற்றும். நீராலும், மலையாலும், காட்டாலும், பெருவளியாலும் அரண் நன்கு அமையும். இவையெல்லாம் அரண்களாக இருப்பின் பகை

வர்கள் நாட்டிற்குள் எளிதில் புகுந்து நாட்டினர்க்கு வருத்தத்தை விளைவித்தல் முடியாது.

நாடாளும் வேந்தனுக்கு,

"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும்"

பொருளாம்.புதையற்பொருளும் உறவினர்கள் இல்லாமல் இறந்து போன பொருளும் அரசனுக்கு உரியன. உல்கு பொருளாவது சுங்கப்பொருள். வியாபாரம் காரணமாக இப்பொருள் வசூலிக்கப்படும். ஒன்னார்த் தெறு பொருளாவது பகைவரை வென்று அவர்பால் திறையாகப் பெறும் பொருளாம். குடிகளிடம் வரியாக வாங்கும் பொருளும் அரசனுக்கு உரியதாம். எனினும் இப்பொருளை இனிய வழியில் ஈட்டுதல் வேண்டும் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. ஒன்னாரிடம் திறையால் பெறு பொருளும் அறவழியாகவே பெறவேண்டும், அறப்போரே நிகழ்த்த வேண்டும். இப்போருக்கும் அச்சமின்றிப் பொரவல்ல படை அரசனுடைய மேலான செல்வமாம்.

படை சிறந்த தலைவனால் நடத்தப் படுதல் வேண்டும். சிறிய படையாயினு அரசனிடத்தில் அன்புடையதாயின், பகைவர் பெரும்படையையும் அஃது எளிதில் வென்றுவிடும். தன் தோற்றத்தாலேயே பகைவர் நெஞ்சு திடுக்கிடும்படி அணி வகுத்துச் செலுத்தப்படும் படையை நடத்தும் படைத்தலைவனை இல்லாத படை, பயனும் புகழும் எய்துதல் இல்லை.

படை கொண்டு பகை வெல்லும் ஆற்றலுடைய அரசன் கூடுமான வரையில் பகை ஏற்படாதவாறு அரசு புரிவதே சிறப்பாம். பகையையும் நட்பாக மாற்றிக் கொள்ளவல்ல பெருமையுடைய அரசனடியில் உலக முழுவதும் தங்கிவிடும். வீரர் பகை கொண்டாலும் கொள்ளலாம்; பெருமை வாய்ந்த அமைச்சர் பகையை அரசன் ஒருபோதும் கொள்ளலாகாது.

நல்லரசு செலுத்தும் அரசன் தானும் கள்ளும் உண்ணுதல் ஆகாது; பிறர் அதனை உண்ணவிடுதலும் அடாது; சூதாடுதல் செல்வமொடு எல்லா நற்குணங்களையும் தேய்த்தொழிக்கும். ஆதலால் சூதினைத் தன் நாட்டிலிருந்து அறவே நீக்கி விட வேண்டும்.

அரசாட்சிக்கு, ஒற்றரும் நீதிநூலும் இரண்டு கண்களாக அரசனுக்கு வேண்டப்படுவன. தன் நாட்டிலும், பிற நாட்டி

லும் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளையும் அறிந்து, நல்லன கொண்டு தீயன நீக்கி, அரசாட்சி செலுத்துவதற்கு ஒற்றர் உதவியும் நூலறிவும் எவ்வளவு இன்றியமையாதன என்பதை நோக்கு மிடத்தும் அவை அரசனுக்குக் கண்கள் என்பதன் சிறப்பு இனிது விளங்கும். ஆனால் ஒற்றரை ஆளுமிடத்து அரசன் மிக விழிப்புடையவனாக இருத்தல் வேண்டும். ஒற்றர்களும் அரச னிடத்து அன்பும் தம் கடமையாற்றுதலில் கருத்தும் உடைய ராதல் வேண்டும். பகையரசர்களால் ஒற்றர்கள் ஒறுப்பு அடைய நேருங்கால், தம் உயிர் போதற்கும் அஞ்சாது தம் மனத்தில் இருக்கும் மறையினை வெளிப்படுத்தாது நிற்கவல்லவரே நல்லொற்றராவர்.

இதுகாறும் கூறியவாற்றால் பண்டைத் தமிழரசர் கல்வியறி வுடையவராய், படை, குடி, கூழ், நட்பு, அமைச்சு, அரண் என்னும் அங்கம் ஆறும் உடையவராய், அறவழி நின்று அர சாட்சி நடாத்தி வந்த திறன் இனிது விளங்கும். பண்டைத் தமிழரசர் அரசாட்சி முறையை அறியுங்கால் தமிழர் யாவரும் பெருமை கொள்ள இடமுண்டன்றோ?

பால் பண்ணை

மக்களின் உணவுப் பொருள்களில் மிகச் சிறந்தது பால். பாலை அமிழ்தமென்று பல தேசங்களிலும் மதிக்கிறார்கள். சேக்கிழாரின் 'அமுத மதுரப்பால்' என்னும் சொற்றொடர் இவ்வுண்மையை நினைவூட்டுகிறது. உடல் வளர்ச்சிக்கும், நோயற்ற வாழ்வுக்கும் பெருந்துணையாக இருப்பது பால். ஆகையால் தான், "பாலும் நெய்யும் உணலுற்றார், பாரில் கொடிய பிணியற்றார்" என்று ஓர் அறிஞர் சுருங்கச் சொல்லி இருக்கிறார்.

இக்கால உணவு ஆராய்ச்சி நிபுணர்களும், பால் மிகச் சிறந்த உணவு என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறார்கள். அதிலும் சிறப்பாகக் குழந்தைகளுக்கும், கர்ப்பம் தரித்த பெண்டிருக்கும், முதியோருக்கும், நோயாளிகளுக்கும் பால் மிக இன்றியமையாத உயர்ந்த உணவுப் பொருளாகும். அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ள நம் மாகாண மக்களுக்குப் பால் அத்தியாவசியமானதோர் உணவுப் பொருளாகும். ஏனென்றால், அரிசியுணவினால் கிடைக்காத பல முக்கிய உணவுச் சத்துகள் பாலை உண்ணுவதால் கிடைக்கின்றன. எனவே, நம் மாகாண மக்கள் வேறு சில மாகாணத்தாரைவிட முக்கியமாகப் பால் குடிக்கவேண்டும். பாலில் கொழுப்புச் சத்து விசேஷமாகக் காணப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின் ஏ-யைப் பாலிலிருந்து எளிதில் பெறமுடியும். பற்கள், எலும்புகள் என்பவைகளின் வளர்ச்சிக்கு அவசியமான கால்ஷியமும் பாஸ்பரஸும் பாலில் காணப்படுகின்றன. இந்தக் காரணத்தினால், பால் குழந்தைகளின் சிறந்த உணவாக விளங்குகிறது. பாலில் உள்ள கொழுப்புச் சத்துகள் எளிதில் ஜீரணமாகக் கூடியவை. ஆதலின், பால் முதியோருக்கும் நோய் வாய்ப்பட்டவருக்கும் கூடச் சிறந்த ஆகாரமாக மதிக்கப்படுகிறது. பாலிலுள்ள கொழுப்புப் பகுதியைப் பிரித்தெடுத்து, வெண்ணெயாகவும், நெய்யாகவும் நம் நாட்டினர் உண்டு வருகிறார்கள். நெய்யிலும் வெண்ணெயிலும் மிக முக்கியமான வைட்டமின் ஏ காணப்படுவதால், அவைகளும் சிறந்த உணவுப் பொருள்களா-

கின்றன. வெண்ணெயும் நெய்யும் அல்லாமல் பாலிலிருந்து மேலும் பெறப்படும் மோர், தயிர் ஆகிய பொருள்களும் மிக நல்ல உணவுப் பொருள்களாகும். பாலில் காணப்படும் உடல் வளர்ச்சிச் சத்துகளான புரோடீன்கள் மோரிலும் தயிரிலும் விசேஷமாக இருக்கின்றன. எனவே, பாலும் பாலின் திரிபுகளான தயிர், நெய், மோர், வெண்ணெய் ஆகிய பொருள்களும் மிகச் சிறந்தவைகளாக நம் முன்னோர்களால் கொண்டாடப்பட்டிருக்கின்றன. அவையே 'ஆன் ஐந்து' அல்லது பஞ்சகவ்யம் எனப்படுபவை. அவை கடவுளர்களுக்குக்கூட உகந்தவை என்று நம் முன்னோர்கள் மதித்தார்கள். "நூலால் நன்று நினைமின்கள் நோய் கெடற் பாலாம் ஐந்துடன் ஆடும் பரமனர்" என்னும் அப்பர் சுவாமிகளின் வாக்கு இதற்கொரு சான்றாகும்.

மக்களின் உடலுக்கு உறுதி பயக்கும் பாலைத் தந்து உதவி செய்யும் பசுக்களை நம் நாட்டினர் பெரிதும் அன்புடன் பேணி வந்திருக்கிறார்கள். இன்றுங் கூடப் பசுவைத் தெய்வமாகக் கொள்வோர் நம் நாட்டில் பலர் உண்டு. மணிமேகலை என்னும் பழைய தமிழ்க் காவியத்தில் காணப்படும் சில அடிகள், அந்தக் கால மக்கள் பசுக்களை எவ்வாறு பாராட்டி வந்தார்கள் என்பதை விளக்குகின்றன :

"விடுநில மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட்கு எல்லாம்
பிறந்தநாள் தொட்டுஞ் சிறந்ததன் தீம்பால்
அறம்தரு நெஞ்சோடு அருள்சுரந்து ஊட்டும்"

பசு என்னும் அந்த நூலின் அடிகள் நினைவில் இருக்கத் தக்கவை.

அன்றியும், நம் நாட்டில் அழகுத் தெய்வமாகவும், மகிழ்ச்சித் தெய்வமாகவும் கொண்டாடப்படும் கண்ண பிரானே, ஆக்களையும் அவற்றின் இனங்களையும் காத்தானென நூல்கள் முழங்குகின்றன.

"குன்றெடுத்து ஆநிரை காத்தபிரான்
கோவலனாய்க் குழல் ஊதிக்
கன்றுகள் மேய்த்துத்தன் தோழரோடு
கலந்துடன் வருவானைத் தெருவில் கண்டு"

என்னும் பெரியாழ்வார் திருமொழியினால், அம்மணிவண்ணன் ஆநிரைகளையும் அவைகளின் கன்றுகளையும் மிக்க அன்புடன் மேய்த்துக் காத்துப் போற்றிய அருமை விளங்குகிறது.

முன்காலத்தில் மாத்திரமல்ல; இக்காலத்திலும் மாடு கன்று களைச் செல்வமாகவே நம்மவர் கருதுகிறார்கள். விவசாய நாடாகிய நமது நாட்டில், பால் தொழிலே இன்றைக்கும் கூட முக்கியமான தொழிலாக விளங்குகிறது. டாக்டர் வ்ரைட் என்னும் நிபுணரின் கணக்குப்படி சுமார் 70 கோடி மணங்குப் பால் இந்தியாவில் உண்டாகிறது. ஆகையால், இந்த நாட்டில் பால் உற்பத்தியின் மதிப்பு, சுமார் 300 கோடி ரூபாய் என்று அவர் கணக்கிடுகிறார். முக்டெஸார் என்னுமிடத்தில், 'இம்பீரியல் வெட்டரினெரி ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்'டின் டைரக்டரான மிஸ்டர் எப். வேர் என்பவர் பால், பாலால் தயாராகும் பொருள்கள் இவைகளின் மதிப்பு, குறைந்தது 540 கோடி ரூபாயாவது இருக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறார். டாக்டர் அக்ராயிட் சுமார் 2 கோடியே 20 லட்சம் டன் பால் உண்டாகிறது என்று கணக்கிட்டிருக்கிறார். 'இம்பீரியல் கவுன்ஸில் ஆப் அக்ரிகல்சரல் ரிஸர்ச்சின்' அட்வைஸரி போர்டு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், 2 கோடியே 30 லட்சம் டன் பால் இந்த நாட்டில் கிடைக்கிறது என்ற கணக்கு இருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து பால் தொழில் நம் நாட்டின் மிக முக்கியமான தொழில் என்பது ருசுவாகிறதல்லவா?

உலகத்திலேயே அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அடுத்தபடியாக நிற்பது, நம்நாட்டுப் பால் உற்பத்தியின் மொத்த அளவுதான். அமெரிக்காவைத் தவிர மற்ற நாடுகளெல்லாம் நம்மைவிடக் குறைவாகத்தான் பால் தருகின்றன. இந்திய நாடானது, இங்கிலாந்து, ஸ்காட்லந்து நாடுகளைவிட நான்கு மடங்குப் பாலையும், டென்மார்க்கு நாட்டைவிட ஐந்து மடங்குப் பாலையும், ஆஸ்திரேலியாவைவிட ஆறு மடங்குப் பாலையும், நியூ ஜீலந்தைவிட ஏழு மடங்குப் பாலையும், மொத்தத்தில் தருகிறது.

நம் நாட்டு மொத்தப் பாலில் 100க்கு 50 சதவிகிதம் எருமைப்பால்; நூற்றுக்கு 44 சத விகிதம் பசுவின் பால்; நூற்றுக்கு 3 சதவிகிதம் ஆட்டுப்பால்.

நமது நாட்டில் மக்களின் தொகை மிக அதிகமாக இருப்பது போலவே, மிருகங்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாக

இருக்கிறது. அப்படி இருந்தும் அவைகளால் நமக்கு விசேஷமான பயன் கிடைக்கவில்லை. ஐரோப்பா, ருஷ்யா முதலிய நாடுகளில் எவ்வளவு கறவை மாடுகள் இருக்கின்றனவோ அவ்வளவு மாடுகள் நம் நாட்டில் இருக்கின்றன. ஆனால், அங்கே அந்த மாடுகள் தருகிற பாலில் ஐந்தில் ஒரு பங்குதான் நம்முடைய மாடுகள் தருகின்றன. கானடா நாட்டில் கிடைக்கும் பாலைப் போல் நான்கு பங்கு பால்தான் இந்தியாவில் கிடைக்கிறது. ஆனால், அதற்காகக் கானடா நாட்டைவிட 18 பங்கு மாடுகளை இந்தியா படைத்து வளர்க்கிறது. இதிலிருந்து நம்முடைய மாடுகளின் கறவை மிகக் குறைவாக இருக்கிறதென்று விளங்குகிறதல்லவா? டாக்டர் வ்ரைட் கணக்கிட்டிருக்கிறபடி, ஒரு கறவை மாடு ஒரு வருஷத்தில் இந்த நாட்டில் சராசரி 600 பவுண்டு பாலைத் தருகிறது. அதாவது நாள் ஒன்றுக்கு 4 முதல் 6 பவுண்டு பால் கொடுக்கிறது. 'இம்பீரியல் கவுன்ஸில் ஆப் அக்ரிகல்சரல் ரிசர்ச்'சின் அட்வைஸரி போர்டார் ஒரு மாடு வருஷத்தில் 750 பவுண்டு பால் கறக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். மற்ற நாட்டுக் கறவையுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், நம் நாட்டு மாடுகள் மிகக் குறைந்த அளவு பாலைத் தருகின்றன என்று புலனாகிறது. அமெரிக்காவிலே மாடு ஒன்றுக்கு வருஷத்தில் சுமார் 4 ஆயிரம் பவுண்டு பாலும், எகிப்தில் 2,500 பவுண்டு பாலும், நியூ ஜிலந்தில் 5 ஆயிரம் பவுண்டு பாலும் கிடைக்கின்றது. மாடு ஒன்றுக்கு 4 ஆயிரம் 5 ஆயிரம பவுண்டு பால் எங்கே? 600, 700 பவுண்டு பால் எங்கே? எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்! நம் நாட்டு மாடுகளின் பாலைப் பெருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைச் சிந்தியுங்கள்.

ஆனால், நம் நாட்டுப் பாலின் தன்மை சற்று உயர்வாக இருப்பது நமக்கு ஓரளவு ஆறுதலைத் தருகிறது. இந்தியப் பசும் பாலில் உள்ள கொழுப்புச் சத்து ஐரோப்பியப் பசும் பாலில் உள்ள கொழுப்புச் சத்தைவிட நூற்றுக்கு 25 முதல் 50 பங்கு வரையில் அதிகமாக இருக்கிறது. எருமைப் பாலிலோ இரண்டத்தனை அதிகக் கொழுப்புச் சத்து நம் நாட்டில் காணப்படுகிறது. நம் நாட்டு மாடுகள் தரும் பாலின் அளவு மிகக் குறைவாயிருந்தாலும், அதில் உள்ள கொழுப்புச் சத்து அதிகமாக இருப்பது சிறிது அதிருஷ்டந்தான்.

நம் நாட்டு மாடுகளில் பல ஜாதிகள் குறைபாடு உடையவைகளாகக் காணப்பட்டாலும், சில நல்ல ஜாதிப் பசுமாடுகளும் அங்கங்கே இருக்கின்றன. சிந்து மாகாணத்தில் சிந்தி, தார், பர்கார் என்னும் இனங்களும், பஞ்சாப்பில் சத்திவால் என்னும் இனமும், கத்தியவாரில் கிர் என்னும் இனமும், சென்னை மகாணத்தில் ஓங்கோல் இனமும் நல்ல பால் தரும் ஜாதிப் பசு மாடுகள்.

எருமை மாடுகளிலே பஞ்சாப், ஐக்கிய மாகாணம், ராஜ புதனம், வடசிந்து ஆகிய மாகாணங்களிலுள்ள முர்ரா அல்லது டெல்லி எருமையும், கத்தியவாரிலுள்ள ஜபாரா பாடி என்னும் வகையும், குஜராத்திலுள்ள சுர்த்தி அல்லது சரோட்டார் என்னும் ஜாதியும், மேஹசானு என்னும் ஜாதியும் நல்ல பால் தரும் ஜாதிகளாகும். இந்தச் சில நல்ல ஜாதிமாடுகள் மற்ற நாட்டு நல்ல ஜாதிமாடுகளைப்போல் நிறையப் பால் தருகின்றன. 1931-ஆம் ஆண்டில் ஓர் இந்தியப் பால் பண்ணையில் ஒரு பசு 8,829 பவுண்டு பால் கொடுத்ததாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. இங்கிலாந்திலே வியாபார முறையில் நடத்தப்படும் பால் பண்ணையில் 7,000 பவுண்டு பால் ஒரு மாட்டிலிருந்து ஒரு வருஷத்தில் கிடைத்தால் போதும் என்று எண்ணுகிறார்கள். ஆகவே, நல்ல ஜாதி மாடு, இந்தியாவிலும், இங்கிலாந்துக்குக் குறையாமலே பால் தரக்கூடும் என்று புலனாகிறது. வட இந்திய ராணுவப் பால் பண்ணை ஒன்றில் நல்ல சத்திவால் மாடுகளைக் கொண்டு 20 வருஷத்துக்குள் நாள் ஒன்றுக்கு மாடு ஒன்றுக்கு ஐந்தரைப் பவுண்டிலிருந்து 17 பவுண்டு பால் கிடைக்கும் படியாக அபிவிருத்தி செய்ய முடியுமென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இந்திய மக்களின் உணவானது சத்தாகவும், சிறந்ததாகவும் இருக்கவேண்டுமானால், இந்தியர் ஒவ்வொருவரும் இன்னும் பலமடங்கு அதிகமான பாலை உட்கொள்ள வேண்டும். 1943-ஆம் வருஷத்தில் அமெரிக்காவில் உணவு, உணவுச் சத்து சம்பந்தமாக நடைபெற்ற ஐக்கிய தேச மகாநாட்டில் ஒவ்வொருவரும் சராசரி 21 பவுண்டு பாலையாவது நாள்தோறும் உட்கொண்டால்தான் திடசரீரிகளாக மனிதர்கள் வாழ முடியும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். டாக்டர் அக்ராய்ட் கணக்கிட்டிருக்கிறபடி, ஒவ்வோர் இந்தியனும் குறைந்தது 15 அவுன்சு

பாலே, பாலாகவாவது, பாலில் செய்த பொருள்களாகவாவது உட்கொள்ளவேண்டும்; வளரும் குழந்தைகள் நாள்தோறும் 8 அவுன்சு பாலேயாவது குடிக்கவேண்டும்.

ஆனால், வேறு பஞ்சங்களைப்போல் பால் பஞ்சமும் நம் நாட்டிலே காணப்படுகிறது. இந்தியாவில் சராசரி ஒவ்வொருவரும் உட்கொள்ளும் பாலின் அளவு சுமார் 4½ அல்லது 5 அவுன்சுகளே. அந்த 4½, 5 அவுன்சுகளிலும் சுமார் நூற்றுக்கு 27 பங்குதான் பாலாக உட்கொள்ளப் படுகிறது, பாக்கிப் பகுதி நெய், வெண்ணெய், கோவா, தயிர் முதலிய உருவங்களில் உட்கொள்ளப்படுகிறது. மற்ற மாகாணங்களை விடச் சென்னை மாகாணத்தில் உட்கொள்ளப்படும் பாலின் அளவு மிகக் குறைவு. டாக்டர் அக்ராய்டும் பி. ஜி. கிருஷ்ணனும் 1937-ஆம் வருஷம் எடுத்த கணக்கின்படி நம் மாகாண மக்களில் ஒவ்வொருவரும் சுமார் 2 அவுன்சு பாலேயே உட்கொள்ளுகிறார்கள். சென்னை நகரத்திலே 1935-ஆம் ஆண்டு எடுத்த கணக்கின்படி பாலாக 2·3 அவுன்சும், பால் பொருள்களாக 4·6 அவுன்சுமாக மொத்தம் சராசரி 6·9 அவுன்சு தான் ஒருவர் உண்கிறார். சில முக்கியமான அயல் நாடுகளில் ஒவ்வொருவரும் உட்கொள்ளும் பால் அளவைவிட நாம் உட்கொள்ளும் அளவு மிகமிகக் குறைவு. உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் உட்கொள்ளும் அளவு பால் 44 அவுன்ஸ்; கனடாவில் 56 அவுன்ஸ்; டென்மார்க்கில் 40 அவுன்ஸ்; இங்கிலாந்தில் 40 அவுன்ஸ்; நியூஜிலந்தில் 55½ அவுன்ஸ்; ஸ்விட்சர்லாந்தில் 49 அவுன்ஸ்; அமெரிக்காவில் 35½ அவுன்ஸ். இந்தியாவிலோ 9 அவுன்ஸுதான்.

சரியான சத்துள்ள உணவில் தலைக்கு நாள் ஒன்றுக்கு 8 அவுன்சு பால், பாலாகவே சேரவேண்டும். அந்தக் கணக்கின்படி நம் நாட்டு மக்களுக்கு வருஷத்தில் 320 லட்சம் டன் பாலாவது தேவை. 230 லட்சம் டன் தான் இப்போது கிடைக்கிறது, அதிலும் கன்றுகள் குடித்ததுபோக, பாக்கியில் நூற்றுக்கு 27 பங்குதான் பாலாகப் பருகப் படுகிறது. அப்படியில்லாமல் கிடைக்கும் மொத்தப் பாலில் பாதியளவு பாலாக உட்கொள்ளப்பட்டால் கூட, 320 லட்சம் டன் பாலே மக்கள் குடிக்கவேண்டுமானால், பால் உற்பத்தியை மூன்று

மடங்காகப் பெருக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் நோயின்றித் திடமாக வாழமுடியும்.

பால் பண்ணை என்றால், தக்க நில இட வசதிகளுடனும், சரியான கட்டிட ஏற்பாட்டுடனும், லாபமுறையில் பால் தொழில் செய்வதற்கு அநுகூலமாகச் சுமார் 75 மாடுகளுடன் நடத்தப்பெறுவது என்று கொள்ளப்படுகிறது. அப்படிப் பார்த்தால், இவ்வகையான பால் பண்ணைகள் இந்த நாடு முழுவதிலும் 75, 80க்கு மேல் இல்லை என்று கூறலாம். அதிலும் சுமார் ஒரு டஜன் பண்ணைகள்தாம் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுபவை; மற்றவை ராணுவம், ஸிவில் முதலிய சர்க்கார் இலாக்காக்களுக்கும் சுதேச சமஸ்தானங்களுக்கும் சொந்தமானவை. எனவே, நல்ல ஏற்பாட்டுடன், மாடுகளுக்கு வேண்டிய தீனிகளை உற்பத்தி செய்துகொண்டு, பால் பொருள்களை உண்டாக்கும் பால் பண்ணைகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

நம் நாட்டில் பெரும்பாலான விவசாயிகள் மிகவும் சிறு விவசாயிகள். அவர்களால் சிக்கனமான முறையில் பால் பண்ணைகளை நடத்துவதற்கு முடியவில்லை. கிராமங்களில் கூட்டுறவு முறையில் பால் பண்ணைகளை நம் விவசாயிகள் நடத்துவார்களானால்தான், நல்ல முறையில் லாபத்துடன் நடத்தமுடியும். கூட்டுறவுப் பால் பண்ணைகளின் உதவியால் மாட்டுத் தீனிகளை விவசாயிகள் குறைந்த விலைக்குப் பெறலாம்; பாலைத் தக்க முறையில் விற்கலாம்; சிறந்த முறையில் தூரத்திலுள்ள நகரங்களுக்குக் கூட அனுப்பலாம். இவ்வகையான பால் பண்ணைகள் டென்மார்க்கு தேசத்தில் மிகச் சிறப்பாக நல்ல லாபத்துடன் நடைபெறுகின்றன. ஆகையால், பால் பண்ணைகளை விருத்தி செய்வதில் சர்க்காரும் மக்களும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவாக, பால் தொழிலை விருத்தி செய்தல் வேண்டும். மாடுகளுக்குத் தீனிப் பொருள்கள் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் சர்க்காரும் பெரிதும் உதவி செய்யவேண்டும். மாடுகளின் தீனிப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். நல்ல இனங்களை விருத்தி செய்ய வேண்டும். அவைகள் பலவகை நோய்களால் வாடி நலியாமல் நோய்களை முன்னெச்சரிக்கையாகத் தடுக்கும் முறைகளை அறிய

வேண்டும். அந்த அறிவைப் பரப்ப வேண்டும். நோய்களைத் தடுக்கவேண்டும்.

இப்போது நகரங்களில் பால் கஷ்டம் மிக அதிகமாக இருக்கிறது. அதை நிவர்த்திக்க நகர்ப்புறங்களில் பால் பண்ணைகளை ஏற்படுத்தவேண்டும். அவைகளைக் கூட்டுமுறையில் அமைக்கலாம்; அது முடியாவிட்டால், தனிப்பட்டவர்களே அந்தப் பண்ணைகளை ஏற்படுத்தும்படி ஊக்கமளிக்கலாம். அரசாங்கம் அவர்களுக்குப் பல வகையிலும் உதவிபுரியலாம். நகர பரிபாலன சபைகளுங்கூடப் பால் பண்ணைகளை நடத்தலாம். நியூஜீலந்தில் வெல்லிங்டன் நகரசபை நடத்தும் முனிஸிபல் பால் பண்ணையில் ஓர் ஆண்டில் மிச்ச லாபம் 7,053 பவுன். லண்டன் முதலிய பட்டணங்களில் மிகப் பெரிய பால் பண்ணைகள் இருக்கின்றன. உதாரணமாக, லண்டன் யுனைடெட் டெய்ரிஸ் லிமிடெட் நாள்தோறும் 30,000 மணங்கு பாலைக் கையாளுகிறது. அதன் மூலதனம் 7 கோடி ரூபாய். அந்தக் கம்பெனியின் ஆட்கள் 10 லட்சம் வீடுகளுக்கு நாள்தோறும் பாலைக் கொண்டுபோய்க் கொடுக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஷெப்பீல்டு பார்மஸ் கம்பெனி நாள்தோறும் 42,309 மணங்கு பாலைக் கையாளுகிறது.

ஆதலால், நகர சபைகளாவது, வேறு ஸ்தாபனங்களாவது பெரிய நகரங்களுக்குக்கூட நல்ல முறையில் முட்டுப்பாடின்றிப் பால் தருவதற்கு ஏற்றபடி பெரிய பால் பண்ணைகளை வைத்து நடத்தி, இந் நாட்டு மக்களின் உடலையும் உயிரையும் வளர்க்க வேண்டும்.

பால் பண்ணைகளை விருத்தி செய்து குறைந்த விலையில் சிரமமின்றி நல்ல பால் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்தால் தான், இந் நாட்டு மக்களும் வீரர்களாயும் தீரர்களாயும் அறிஞராயும் சுதந்தர வாழ்க்கை படைத்து அதைச் சிறப்பாக நடத்தமுடியும் என்பது உறுதி.

நமது நாட்டின் பொருளாதார நிலை

இந்திய நாடு மிகப் பழைய நாடு. பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்னிருந்தே செல்வமும் சிறப்பும் செறிந்து விளங்கி நின்ற நாடு; மிகப் பெரிய நாடு; பலவகைத் தட்ப வெப்ப நிலைகளுள்ள நிலப் பரப்புகளைத் தன்னுள்ளே அடக்கிய தனிப் பெரும் நாடு; பல வேறு தன்மையனவான நீர்வளம், நிலவளங்களைக் கொண்டு விளங்கும் உயரிய நாடு.

மிகக் குளிர் நிலையிலிருந்து மிகுந்த உஷ்ண நிலையைப் பெற்ற பகுதிகள் ஈறாகப் பல வேறு சீதோஷ்ண ஸ்திதி உடைய பரந்த நிலப் பரப்பையுடைய நாடு இது. 1,773,000 சதுரமைல் பரப்புடைய இந் நாட்டில் பலவகை நிலவளங்களும் காணப்படுகின்றன. ஆகையால் பல வேறு வகைப் பொருள்களும் கிடைப்பதற்கு வசதி இயற்கையிலேயே அமைந்திருக்கிறது.

இந்தியாவின் பல பக்கங்களிலும் மழை பல அளவில் பெய்கிறது. சில இடங்களில் மிகக் கன மழை; வேறு இடங்களில் மிகக் குறைவான மழை; சிரபுஞ்சியில் வருஷத்தில் 460 அங்குல மழை; சிந்தில் சில பக்கங்களில் 3 அங்குல மழை; இவ்வாருக மழை பல அளவினதாகப் பல பகுதிகளிலும் பெய்கின்றது.

பருவக்கால மழையை நம்பியே பல்லாயிர மக்கள் இந்நாட்டில் வாழ்கின்றனர். மழையானது போதிய அளவு பெய்யாது போனல், பயிரிட முடியாது பரிதவிக்கும் மக்கள் பலர் இந்நாட்டில் காணப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம், நூற்றுக்குச் சுமார் 68 பேர் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். இந் நாட்டில் காண்பதைப்போல பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற நிலையை உலகில் வேறு எந்த நாகரிக நாட்டிலும் காணமுடியாது.

இவ்விதத் தாழ்ந்த நிலை இந் நாட்டிற்கு ஏற்பட்டது கடந்த சுமார் 150 ஆண்டுகளிலேதான். ஏறக்குறைய கி. பி. 1800–ஆம் வருஷம் வரையிலே நம் நாட்டின் செல்வ நிலை உயர்வாகவே

இருந்தது. கிழக்கு இந்தியக் கம்பெனியாரால், இந் நாட்டைச் சுற்றிவந்து அப்போதைய பொருள் நிலையை விரிவாக அறிக்கையொன்றில் குறிக்கும்படி பணிக்கப்பட்ட டாக்டர் புக்கனன் என்பவர் சுமார் 1800 வருஷத்திற்குமுன் இந்நாட்டின் பல பாகங்களும் செழிப்பாக இருந்தன என்றும், பல வேறு தொழில்களிலும் மக்கள் ஈடுபட்டிருந்தனர் என்றும், பல பக்கங்களிலும் வசித்த மக்கள் செல்வத்துடன் சிறப்பாக வாழ்ந்து வந்தனர் என்றும் விவரமாக எழுதியிருக்கிறார். மேல்நாட்டு இயந்திரப் போட்டியாலும், நாட்டு மக்கள் அரசியல் அதிகாரத்தை இழந்து சுயேச்சை அற்றவர்களாக ஆகிவிட்டபடியாலும், இந்நாட்டின் பொருள் செழிப்பதற்கான காரியங்களைச் செய்ய முடியாமற் போய்விட்டபடியாலும், இந்நாட்டில் நன்றாகச் செழித்து மேலோங்கி நின்ற கைத்தொழில்கள் அழிந்து விட்டன. அதனால் மக்கள் இடர்ப்படலாயினர். வெளி நாட்டுப் போட்டி ஏற்பட்டபோது இந்நாட்டுக் கைத்தொழில்களைக் காப்பதற்கு ஜனநாயக அரசாங்கம் இல்லாமற்போயிற்று; வேறு வகைகளில் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கும் தக்க முயற்சிகளை மேற்கொள்வாரில்லை.

எனவே, ஐரோப்பிய நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் உயர்ந்த மஸ்லின்களையும், காலிகோக்களையும் அனுப்பிச் செல்வம் செழித்து நின்ற நாடு, இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்து ஏராளமான துணிகளை இறக்குமதி செய்துகொள்ளும் நிலைக்கு வந்துவிட்டது. பிற நாடுகளிலிருந்து குண்டூசி முதல் பெரிய இயந்திரங்கள்வரையில் நம்முடைய அன்றாட வாழ்வில் வேண்டிய பொருள்களில் அநேகமாக எல்லாவற்றையும் வெளி நாடுகளிலிருந்து வாங்கிப் பயன்படுத்துகிறோம். நாம் வெளிநாட்டுச் சாமான்களை எவ்வளவு தூரம் நம்பி வாழ்கிறோம் என்பது வெளிநாட்டுச் சாமான்களின் முட்டுப்பாடு ஏற்பட்ட யுத்த காலத்திலே வெளிப்படையாகத் தெரிந்த தல்லவா? இவ்வாறு பல பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து வாங்கினால் இந்நாட்டுத் தொழில்கள் எப்படி விருத்தி அடையும்? இந்நாட்டுத் தொழில்கள் மேலோங்கி வளராவிட்டால் இந் நாட்டு மக்களுக்குப் பிழைப்பு ஏது? ஒரு நாட்டில் பலவகைக் கைத்தொழில்களும் ஆலைத்தொழில்களும் விவசாயமும் செவ்வையாக நடைபெற்றால்தான் அந் நாட்டின் பொருள் உற்பத்தி அதிகரிக்கும்.

செல்வச் செழிப்பு ஒரு நாட்டில் உண்டானால் அந்நாட்டு மக்கள் பசி, பிணி முதலிய தொல்லைகளின்றி, வாழ்க்கையின் எல்லா நலன்களையும் அநுபவித்துக்கொண்டு நீண்ட காலம் சுகமாக வாழலாம்.

உலகிலுள்ள மற்ற நாடுகளில் சராசரி ஆள் ஒன்றுக்குக் கிடைக்கும் வருமானத்தோடு நம் நாட்டில் கிடைக்கும் வருமானத்தை ஒப்பிட்டால் பொருள் நிலையில் நாம் எவ்வளவு பிற்போக்கான நிலையில் இருக்கிறோம் என்பது எளிதில் புலனாகும். பிற நாட்டு மக்களின் வருமானத்தையும் பார்ப்போம்.

யு. எஸ். ஏ.	89	பவுன்கள்
யுனைட்டெட் கிங்டம் (United Kingdom)	76	,,
எகிப்து	21	,,
இந்தியா	5	,,

இவ்வாறாக நம் நாட்டு மக்களின் வருமானம் மிகக் குறைவாக இருப்பதால் அவர்களால் வாழ்க்கையில் இன்றியமையாத பொருள்களைக் கூடப் பயன்படுத்த முடியவில்லை. வயிறார உண்பதற்குக்கூட இத் துர்ப்பாக்கிய நாட்டில் பல கோடி மக்களுக்கு வசதி இல்லை. இந்நாட்டிலுள்ள 40 கோடி மக்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு மக்கள், அதாவது 10 கோடிக்கு அதிகமான மக்கள் சாதாரண காலங்களிலேயே போதிய அளவு உண்பதற்கில்லை என்று விவசாய ஆராய்ச்சிக் குழு ஒன்றைச் சார்ந்த (Imperial Council of Agricultural Research) மந்திரக் கூட்டத்தார் (advisory board) வெளியிட்டுள்ள குறிப்பறிக்கை யொன்றிலேயே காட்டப்பட்டிருக்கிறது. உண்ண உணவும் உடுக்க உடையும் பெற முடியாது திண்டாடும் மக்கள் எவ்வாறு வீரர்களாயும், தீரர்களாயும் வாழ முடியும்? இந் நாட்டு மக்களின் சராசரி வாழ்நாள் மற்ற நாட்டினருடைய வாழ்நாளை விட மிகக் குறைவாக இருப்பது இயற்கை தானே? இப்போதைய நிலையில் குறைந்த ஆயுள் நிலை இயற்கையெனினும் எவ்வளவு கொடுமையான நிலை இது? ஏனைய நாட்டு மக்கள் நீண்ட நாள் வாழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டு விளங்க, இந் நாட்டு மக்கள் பசியாலும் பிணியாலும் வருந்தி வாடி இறந்து படுவது எத்துணைத் துன்ப நிலை!

நாகரிக ஆட்சி நடைபெறும் நாட்டில் இங்ஙிலை காணப்படுவது எவ்வளவு கேவலம்!

இந் நாட்டு மக்கள் முழு மனிதர்களாக வாழ வேண்டுமானால், ஆண்மையையும் வீரத்தையும் மறுபடியும் பெற வேண்டுமானால், ஆண்களும் பெண்களும் வாழ்க்கையில் எல்லா நலன்களையும் பெற்று விளங்க வேண்டுமானால், நாட்டின் பொருள் நிலையை உயர்த்த வேண்டும். இத் தேசத் தொழில் துறைகளையும் வேளாண்மையையும் உயர்த்தினால்தான் இந் நாட்டுப் பொருள் நிலையும் மேல் ஓங்கும். ஆகையால் இந்நாட்டினர் அனைவரும் எல்லா வகையாலும் முயன்று இந் நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்க வேண்டும். அப் பெரிய முயற்சி செய்வதற்கு அரசாங்கத்தின் பேருதவியும் வேண்டும். இந் நாட்டு அரசியல் அதிகாரம் முழுவதும் நம் நாட்டினர் கையிலேயே இருந்தால் எளிதில் இந் நாட்டினர் துணை கொண்டு, இந்நாட்டின் சீரையும் சிறப்பையும் மேலோங்கச் செய்ய முடியும். நாட்டின் செல்வ நிலையை உயர்த்த மக்களும் பெரும்பாடு படல் வேண்டும்; அரசாங்கமும் பலவகையாலும் உதவி புரிதல் வேண்டும்.

விவசாயமே முக்கியத் தொழிலாக உள்ள நாடு இது. இந் நாட்டில் மக்களுக்கு வேண்டிய உணவு விளைவிக்கப்படவில்லையென்றால் அது வருந்தத்தக்கதொரு நிலையல்லவா? "கொல்லன் தெருவில் ஊசி விற்காதே" என்று முதியோர் கூறுவர். அப் பழமொழி இந் நாட்டைப் பொறுத்த வரையில் பொய்த்துவிட்டது. விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்ட இந் நாட்டில் பலவகை உணவுப் பொருள்களும், பழம் முதலியவைகளும், டின்களில் அடைத்த பழங்கள், பால் முதலியவைகளும் பல நாடுகளிலிருந்தும் கொண்டுவந்து இறக்குமதியாகி விற்பனையாகின்றன. இது எவ்வளவு துரதிருஷ்ட நிலை! விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் உள்ள நாட்டில் இவை உற்பத்தி செய்யப்படவில்லையானால் இதைவிடக் கீழான நிலை வேறு இருக்கவும் கூடுமோ?

சாதாரண காலங்களில் இந்நாட்டில் அரிசி, கோதுமை முதலிய தானியங்களின் உற்பத்தி 6 கோடி டன்கள். அதில் சேதம் காரணமாகவும் விதைக்காகவும் தள்ளிவிட வேண்டியது நூற்றுக்கு 12½ பங்கு. அந்தக் கழிவுபோக உணவுக்காக எஞ்சிநிற்கும்

தானியங்களின் அளவு 5 கோடியே 25 லட்சம் டன்கள் ஆகும். மிகக் குறைந்த பட்சம் தேவையான உணவுப் பொருள் ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 18 அவுன்ஸ் தானியம். இதைக் கொண்டு கணக்கிட்டால் இந்நாட்டு மக்களுக்கு 5 கோடியே 40 லட்சம் டன் தானியங்களாவது அவசியம் வேண்டும். ஆகையால் தானிய உற்பத்தியை நூற்றுக்குப் பத்துப் பங்காவது அதிகமாக்க வேண்டும்.

பருப்புத் தினுசுகளின் உற்பத்தி 85 லட்சம் டன். அதில் உண்பதற்குக் கிடைப்பது 75 லட்சம் டன்களே. தலைக்கு 3 அவுன்ஸ் விதம் இந் நாட்டு மக்களின் உணவுக்கு 90 லட்சம் டன்களாவது வேண்டும். ஆகையால் பருப்புவகைகளின் உற்பத்தியை 20 சதவிதம் அதிகப்படுத்த வேண்டும்.

வெல்லம் சர்க்கரை இவைகளின் உற்பத்தி 53 லட்சம் டன். ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 1.8 அவுன்ஸ் விதம் தேவையைக் கணக்கிட்டால் உணவுச்சத்தின் விருத்திக்காக இன்னும் அதிகமாகச் சர்க்கரையை உற்பத்தி செய்யவேண்டும்.

காய்கறிகளின் விளைவு இந்நாட்டில் 90 லட்சம் டன்கள். இது ஆள் ஒன்றுக்கு 3 அவுன்ஸ் அளவாகவே இருக்கிறது. சத்தான உணவு வேண்டுமானால் 6 அவுன்ஸ் காய்கறிகளாவது அவசியமாக விளைவிக்கவேண்டும். ஆதலால் காய்கறிகளின் உற்பத்தியை இரட்டிக்கும்படி செய்தல் மிகவும் அவசியம்.

எண்ணெய், கொழுப்பு இவைகளின் உற்பத்தி 19 லட்சம் டன்கள். அதாவது ஆள் ஒன்றுக்கு 3/5 அவுன்ஸ்தான் நாள் தோறும் கிடைக்கும் நிலை காணப்படுகிறது. சத்தான உணவுகள் $1\frac{1}{2}$ அவுன்ஸ் ஆவது முக்கியமாக வேண்டும். ஆகையால் இவைகளின் உற்பத்தியை $2\frac{1}{2}$ மடங்காக அதிகப்படுத்த வேண்டும்.

பாலின் மொத்த உற்பத்தி 2 கோடியே 30 லட்சம் டன். இதில் நூற்றுக்கு 27 பங்கு அதாவது 62 லட்சம் டன்தான் பாலாகக் குடிக்கப்படுகிறது. ஏனையது பாலின் பலவகைப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்நாட்டு மக்களுக்குப் போதிய அளவு பால் வேண்டுமானால் பால் உற்பத்தியை 3 மடங்கு அதிகமாக்க வேண்டும்.

இவ்வாறு, விவசாயப் பொருள் உற்பத்தியை அதிகமாக்குவது சாத்தியமான காரியந்தான். நீர்ப்பாசன வசதிகளை

விருத்தி செய்வதன் மூலம் 100க்கு 50 பங்கு விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்கலாமென்று கணக்கிட்டிருக்கின்றனர். சாகுபடி செய்யக்கூடிய தரிசு நிலங்கள் 1 கோடியே 70 லட்சம் ஏக்கர்கள் என்று கூறுவர். இந் நிலப்பரப்பில் லாபகரமாக எவ்வளவு நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியுமோ அவ்வளவையும் திருத்திப் பயிர் செய்ய வேண்டும். மழை அறுத்தோடியதால் நல்ல செழிப்பான நிலப்பகுதிகள் செழுமையை இழந்து கட்டான் தரையாகவாவது அல்லது கடும் பாறையாகவாவது போகாதவாறு நிலத்தின் செழிப்பைப் பாதுகாக்கவேண்டும். நல்ல எருவை உபயோகப்படுத்துவதன்மூலம் விளைவை நூற்றுக்கு 30 பங்கு விதம் அதிகப்படுத்த முடியும் என்று நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். தழை எருவை மக்கள் அதிகமாக உபயோகிக்கும்படி செய்ய வேண்டும். நல்ல விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் 10 முதல் 15 சதவிகிதம் விளைவை அதிகமாக்கக் கூடும் என்று கண்டுபிடித்துள்ளனர். இவ்வாறாக எல்லா வகையாலும் விவசாயப் பொருள் உற்பத்தியை அதிகமாக்கினால் நாட்டின் செல்வம் சிறப்புறும்.

விவசாயத்தை விருத்தி செய்தல் மாத்திரம் போதாது. செல்வம் பெருகவேண்டுமானால் தொழில்களும் மிகவும் விசேஷமாகப் பெருக வேண்டும். இந் நாட்டில் தொழில்களை விருத்தி செய்வது ஏனைய நாடுகளில் செய்வதை விட எளிது. இந் நாடு மிகப் பெரிய நாடு. இதில் 40 கோடி மக்கள் வாழ்கின்றனர். இந் நாற்பதுகோடி மக்களின் பொருள் நிலையும் சிறிதளவு உயர்ந்தாலும அவர்கள் வாங்கக் கூடிய பொருள்களின் அளவும் எவ்வளவோ அதிகமாகும். அதனாலேயே பொருள்களின் உற்பத்தியும் பெருகக் கூடும்.

நாம் ஏனைய நாடுகளில் நமது தொழிற்சாலைப் பொருள்களைக் கொண்டுபோய் விற்கவேண்டும் என்ற தேவை அதிகம் இல்லை. நம் நாட்டு வியாபாரத்துக்குப் போதிய அளவு நாம் பொருள் விளைவித்துத் தந்தாலே நம் நாட்டுத் தொழில் துறைகள் இன்னும் எத்தனையோ மடங்கு அதிகமாகிவிடும். பல தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் நம் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இப்பொழுது அவை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து தொழிற்சாலைகளிற் செய்யப்பட்ட வேறு பொருள்களாக இங்கே வந்து இறங்கி

உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. மூலப் பொருள்களை யெல்லாம் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடாது அவைகளை இந் நாட்டிலேயே பயன்படுத்தித் தொழில் விருத்தி செய்தால் இந் நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பல ஆயிரக் கணக்கான பொருள்களை உண்டாக்கலாம். அதனால் செல்வம் சிறக்கும். இந் நாட்டில் தொழிலாளர்கள் எளிதில் கிடைக்கின்றனர், ஏராளமாகவும் கிடைக்கின்றனர். ஆகையால் மிகவும் இன்றியமையாத சில இயந்திரங்களையே இந்த நாட்டில் உபயோகப்படுத்த வேண்டும். ஆட்களின் அவசி யத்தையும் எண்ணிக்கையையும் மாத்திரம் குறைக்கக் கூடிய இயந்திர சாதனங்களை இந்நாட்டில் பயன்படுத்த வேண்டிய தில்லை. அவ்வகை இயந்திர சாதனங்கள் போதிய அளவு ஆள் கிடைக்காத மேல் நாடுகளுக்குத்தான் பிரயோஜனம். பல் லாயிரக்கணக்கான மக்கள் வேலை யில்லாமல், ஒரு குறைந்த அளவே வேலை செய்தும் வாழும் நமது நாட்டில் ஆள் தேவை யைக் குறைக்கும் இயந்திரங்கள் தீமையையே விளைவிக்கும்.

இந் நாட்டின் ஜீவ நாடி கிராமங்கள். இந்தியாவாகிய உடலில் பொருளென்னும் இரத்தம் குறைந்துவிட்டபடியால் இந் நாடிகளில் தாது குறைந்துபோய்விட்டது. இந் நாட்டிற்குப் புதிய சக்தியை ஊட்டவேண்டும். பொருளாதார இரத்தப் பெருக் கத்தை அதிகமாக்க வேண்டும். இந்தியா திட சரீரம் பெறும்படி செய்தல்வேண்டும். அவ்வாறு செய்யவேண்டுமானால் எல்லாப் பொருள் விருத்தித் திட்டங்களும் கிராமங்களையே அடிப்படை யாகக் கொண்டவைகளாக இருப்பது மிகவும் அவசியம். கிராமங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் உயர் நிலைக்கு வந்தால் தான் இந்நாடு உன்னத நிலையை அடையும். இந்த உண்மையைத் தான் உலகம் போற்றும் உயர் பெரியார் மகாத்மா காந்தி அவர்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டி விளக்கிக் கூறு கின்றனர். இந்த உண்மையை உணர்ந்து பொருட் பெருக் கத்தைக் கிராமத்திலிருந்து தொடங்கி நாடெங்கும் பரவச் செய்தால் இந்நாடு பழைய உன்னத நிலைக்குக் கூடிய சீக்கிரம் வந்துவிடும் என்று கூறவும் வேண்டுமோ?

பூண்டி நீர்த்தேக்கம்

சென்னைமா நகரத்தின் மக்கள் தொகை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, ஏழுரை லட்சம் என்று அறிவிக்கப்பட்டது; இப்போதைய மக்கள் தொகை சுமார் பன்னிரண்டிலிருந்து பதினான்கு லட்சம் இருக்கும் என்று மதிப்பிடுகின்றனர். பம்பாய், கல்கத்தா முதலிய பெரு நகரங்களுள் ஒவ்வொன்றின் நகரசபை வருமானத்தில் சென்னைமா நகரசபையின் வருமானம் நான்கில் ஒரு பங்கே எனினும், இடப் பரப்பில் சென்னைமா நகரம் அவற்றுள் ஒவ்வொன்றனையும் விட மிகமிகப் பெரியது. இத்தகைய பெரிய நகரத்திற்குத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கின்றது என்பது அறிவு முதிராத குழந்தைகளுக்கும் நன்கு தெரியும்.

சென்னைமா நகரத்திற்குப் புழலேரி என்னும் 'ரெட் ஹில்ஸ்' ஏரியிலிருந்தும், சோழவரம் ஏரியிலிருந்துமே குடி தண்ணீர் கிடைக்கின்றது. இவ்விரண்டு ஏரிகளுக்கும் குசஸ் தலையாற்றிலிருந்து தண்ணீர் வருகின்றது.

தாமரைப்பாக்கம் என்ற இடத்தில் குசஸ்தலை ஆற்றிற்கு ஓர் அணை கட்டி யிருக்கின்றார்கள். புழலேரி சோழவரம் ஏரி என்னும் இரண்டின் நீர் பிடிக்கும் இடப்பரப்பு 3½ சதுர மைல். குசஸ்தலை ஆற்றில் வெள்ளம் வந்தால்தான் இரண்டு ஏரிகளும் நிறைதல் கூடும். குசஸ்தலை ஆற்றிலோ, எல்லா நாட்களிலும் தண்ணீர் வந்துகொண் டிருப்பதில்லை. ஆண் டொன்றிற்குப் பத்து மாதங்களில் ஆற்றில் வெள்ளம் இராது. ஓர் ஊற்றுக் கால்வாய் மட்டும் அதன் கரையோரமாகக் காணப்படும். வடகிழக்குப் பருவக் காற்று வீசும் காலங்களில் குசஸ்தலையாற்றில் வெள்ளம் வரும். அப்பொழுது நாலைந்து நாட்கள் வரையில், கரைபுரள ஆற்றில் வெள்ளம் ஓடும். பிறகு ஒரு மாதம் வரையில், ஏராளமாக அதில் வெள்ளம் ஓடிக் கொண்டிருக்கும். இந்தக் காலத்தில்தான் மேலே குறிப்பிட்ட இரண்டு ஏரிகளும் நிறையும். இந்த இரண்டு ஏரிகளுக்கும் தண்ணீர் வரவு, வருவாய்க் கால்களைப் பொறுத்தது. இந்த

இரண்டு ஏரிகளுக்கும் நீர் பாய்வது. சிறப்பாகத் தாமரைப் பாக்கம் அணைககட்டினையும் சோழவரம் ஏரியையும் சேர்க்கும் நீர்க்கால், தன்னுள் தண்ணீர் கொள்ளும் அளவினைப் பொறுத்துள்ளது.

அணைக்கட்டுக் கட்டி யிருப்பதனால் தண்ணீர், ஓரளவு வீண் செலவாகின்றது. வெள்ளம், வருவாய்க்கால் மட்டமாக நின்று, பல நாள் பாய்ந்தால், அஃது ஏரிகளைச் செவ்வனே நிரப்பிவிடும். வெள்ளம், வருவாய்க்கால் மட்டத்திற்குமேல் வேகமாகச் சில நாட்கள் பாய்ந்தால், வெள்ளத்தின் ஒரு பகுதி தான் வருவாய்க் காலிற்குள் போகும். மிகுதியான தண்ணீர், அணைக்கட்டின்மீது வழிந்து ஓடி வீணாய் விடும்.

1939-ஆம் ஆண்டில் ஒரு பெரு வெள்ளம் வந்தது. ஆனால் அது, சில நாள் வரையில்தான் ஓடிக்கொண் டிருந்தது. வருவாய்க் காலில் நீர் பத்து நாட்களே பாய்ந்தது. ஏரிகளும் நிரம்பவில்லை. வருவாய்க்கால் மட்டத்திற்கு மேற்பட்டு வீணாக ஓடிக்கழிந்த தண்ணீர் மட்டும், வேறோர் இடத்தில் தேக்கப் பட்டிருந்தால், அவ்விடத்திலிருந்து புழலேரியை அந்த ஆண்டில் இருமுறை நிரப்பியிருக்க முடியும்.

புழலேரியும், சோழவரம் ஏரியும் நிரம்பிவிட்ட பின், ஓராண்டில் மழையே இல்லாவிட்டால், அந்த ஆண்டில் செலவாகும் தண்ணீர்போக மிகுதி யிருக்கும் நீர் அடுத்த ஆண்டிற்குப் போதுமானதாகாது. மேலும், ஓர் அளவு நீர் எப்பொழுதும் ஏரிகளில் இருந்து கொண்டே இருத்தல் வேண்டும்.

சில ஆண்டுகளில், உதாரணமாக 1921-22, 1926-28 முதலிய ஆண்டுகளில், ஆற்றில் பாய்ந்த நீர் நகரத்திற்கு வேண்டிய அளவுக்கே மிகவும் குறைவாக இருந்தது. ஆகவே, நீர் தேக்கி வைப்பது இன்றியமையாதது என்பது காணப் பட்டது. 1938-39-இல் நகரத்திற்குக் குடிநீர் குறைவுபட்டது. அப்போது 1937-ஆம் ஆண்டில் வீணாகக் கழிந்த நீரைத் தேக்கி வைத்திருப்பின் புழலேரியை மறுமுறை நிரப்பி யிருக்கலாமே என்ற எண்ணம் நகரசபையாருக்கு ஏற்பட்டது. 1932-ஆம் ஆண்டில் வீணாகக் கடலுக்குள் சென்றுவிட்ட நீரைத் தேக்கிச் சேமித்து வைத்திருந்தால், 1940-ஆம் ஆண்டில் சென்னையில் தண்ணீர்ப் பஞ்சமே ஏற்பட்டிராது.

1939-ஆம் ஆண்டின் முடிவில் பருவமழை தவறிவிட்டது காரணமாக, 1940-ஆம் ஆண்டில் சென்னைக்குப் போதிய அளவு நீர் வசதி கிடைக்காமல் போய்விட்டது. மேலும், 1923-ஆம் ஆண்டில், சென்னைக்கு 90 மிலியன் கன கஜ அளவு தண்ணீரே கொடுக்கப்பட்டிருந்தது; 1938-ஆம் ஆண்டில் 130 மிலியன் கன கஜ அளவு தண்ணீர் கொடுக்கவேண்டி வந்து விட்டது.

புழலேரி சோழவரம் இவற்றைச் சுற்றியுள்ள நிலங்களுக்கு இரண்டு ஏரிகளிலிருந்தும், பாய்ச்சலுக்கு நீர் அனுமதிக்கப்பட்டிருந்தது. 1870-ஆம் ஆண்டில் எந்த எந்த நிலங்கள் எந்த எந்த அளவில் நீர்ப் பாய்ச்சல் பெற்று வந்தனவோ, அந்த அந்த நிலங்கள் அந்த அந்த அளவில் நீர்ப் பாய்ச்சல் பெற உரிமையுண்டு என்று ஹைகோர்ட்டில் தீர்மானிக்கப் பட்டிருந்தது. எனவே சென்னைமாநகரத்தாருக்குக் குடிநீர் அளவினை அதிகப் படுத்த வேண்டின் அந்த நிலங்களுக்குரிய நீர்ப் பாய்ச்சல் உரிமையைச் சென்னைக் கார்ப்பொரேஷன் விலை கொடுத்து வாங்கியாக வேண்டும்; சோழவரம், ரெட்ஹில்ஸ் ஏரிகள் அதிகமான தண்ணீரையும் பெற ஏற்பாடு செய்தல் வேண்டும். இவற்றையெல்லாம் பரிசிலனை செய்த அறிஞர்கள் நீர்ப் பாய்ச்சல் உரிமையை வாங்கிக்கொண்டு விடுவதால் மட்டும் நகரத்திற்கு அதிகமாக நீர் வசதி செய்துவிட முடியாது என்ற முடிவிற்கு வந்தார்கள்; பூண்டி என்ற இடத்தில் ஒரு நீர்த் தேக்கம் கட்டினால், அது மிகவும் உபயோகமானதாக இருக்கும் என்பதைக் கண்டார்கள்.

பூண்டி என்னும் ஊருக்கருகே, குசஸ்தலையாற்றின் மேற்புறத்தில் தாழ்ந்த குன்றுகள், ஆற்றினை இருபுறமும் வளைத்துக் கொண்டிருத்தலைக் காணலாம். இடைவெளியில் ஆறு பாயும் இடம் 2000 அடி அகலமுள்ளது. ஆற்றின் அடிப் புறத்திலிருந்து 24 அடி உயரம் வரையில் தண்ணீர் பிடித்துப் பாய்கின்றது. இந்த இடைவெளியில், 6-11-37-இல், 24 அடி ஆழம் வெள்ளம் ஓடிற்று. ஆற்றிற்கு இடப் 'புறமாயுள்ள குன்று, தொடர்ச்சியாகச் சென்று, சித்தூர்ப் பீட பூமியை அடைகின்றது; வலப் புறமுள்ள குன்று, புள்ளறம்பாக்கம் 'ரிஸர்வ்' காடுகளால் நிறைந்திருக்கின்றது; இந்தக் குன்று, சுற்றியுள்ள நில மட்டத்தை விட 130 அடி உயரமுள்ள ஒரு தனிக் குன்றாகவே இரண்டு மைல் நீளம் செல்கின்றது. குசஸ்தலையாறு, இந்தக்

குன்றுகளிடையே சென்று விஷ்ணுவாக்கம் மடு வழியாகப் பாய்ந்து, தாமரைப்பாக்கம் அணைக் கட்டிற்குமேலே இரண்டரை மைலில் குசஸ்தலையாற்றில் கலக்கின்றது.

1909-ஆம் ஆண்டில், திரு. வேலாயுத முதலியார் என்னும் மிராசுதார் ஒருவர், தாமரைப்பாக்கம் அணைக்கட்டிலிருந்து 19 மைல் மேலே, குசஸ்தலையாற்றில் ஓர் அணை கட்டிப் பக்கத்தில் உள்ள ஊர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டுமென்று அரசாங்கத்தினரைக் கேட்டார். முதலியார் யோசனையைச் செங்கற்பட்டு 'எக்ஸிகியூடிவ் எஞ்சினியர்' பரிசிலனை செய்தார். அணை கட்டச் சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் ஆகுமென்று காணப்பட்டது. அப்படித்தான் செலவு செய்து அணை கட்டினாலும், அதனால் அரசாங்கத்தாருக்கு ஏற்படும் வருமானம் மிகவும் குறைவேதான் என்று ஏற்பட்டதால் அணை கட்டும் யோசனையை விட்டுவிட்டார்கள்.

பின்னர்ப் பூண்டியைப் பரிசிலனை செய்து, ஒரு நீர்த் தேக்கம் கட்ட வேண்டும் என்று நகர சபை தீர்மானம் செய்தது. திரு. கே. வேங்கடசாமி நாயுடுகாரு சென்னை மேயராக இருந்த காலத்தில், அப்போதைய கமிஷனராக இருந்த திவான்பஹதூர் சுப்பைய நாயுடுகாரு, பூண்டி நீர்த்தேக்கத் திட்டத்தைக் குறித்து அரசாங்கத்தாருக்கு எழுதினார்கள். காலஞ்சென்ற எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் சென்னை மேயராக இருந்தபோது பூண்டித் திட்டத்தைப் பரிசிலனை செய்வதற்கு நகரசபை ரூ. 25,100 செலவு செய்ய அனுமதி தந்தது. 'ஸ்பெஷல் ஆபீஸர்' ஒருவரை நியமனம் செய்து இதனைப் பரிசிலனை செய்யும்படி நகரசபை ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

25 ஆண்டுகளுக்குச் சென்னைமா நகருக்கு ஏற்படும் அதிகப்படியான தண்ணீரின் தேவையை இந்தத் திட்டத்தின் மூலமாக நிறைவேற்றி வைக்க முடியும் என்று அரசாங்க நீர்ப்பாசனத் தலைமை எஞ்சினியர் தெரிவித்தார். நில உரிமைகளை வாங்குவது, கட்டிடம் முதலியன எழுப்புவது இவற்றிற்கு நாற்பதிலிருந்து ஐம்பது லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் அவர் தெரிவித்தார். அரசாங்கத்தினரும் நிலப்படம் முதலியவைகளைத் தயார் செய்யும்படி சொல்லினர். ஆனால், இந்தத் திட்டம், சிறப்பாகச் சென்னைமா நகருக்கே தண்ணீர் வசதியை அதிகரிக்கச் செய்வ

தால், நகர சபையையே முழுச் செலவினையும் மேற்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தினர் தெரிவித்தனர்.

அரசாங்கத்தார் கருத்தினை அறிந்த நகர சபை, இந்தத் திட்டத்திற்குச் செலவாகும் முழுச் செலவினையும் அரசாங்கமே கொடுத்து, அதில் பாதியைக் கடனாகவும், பாதியைத் தாராள உதவி (Grant) ஆகவும் மதிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது; மற்றும், பூண்டித் தேக்கம், அரசாங்கப் பொதுப்பணி இலாக்காவிற்கு (P. W. D.)ச் சொந்தமானாலும், அதிலுள்ள ஆயக்கட்டுதார்களுடைய உரிமையும், அரசாங்கத்தின் உரிமையும் அந்தத் தேதியில் இருக்கும் உரிமையளவிற்குத் தான் கார்ப்பொரேஷனைப் பாதிக்கும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியது. இதற்கிடையில் அரசாங்கத்திலிருந்து பூண்டித் திட்டத்தைப் பரிசிலனை செய்து ஓர் அறிக்கை நகர சபைக்கு வந்தது. அதில் பூண்டியை உரிமையாக்கிக்கொள்ளுதல், கட்டடம் முதலியவைகள் எழுப்புதல் ஆகியவற்றின் செலவில் மூன்றில் ஒரு பங்கு, தாராள உதவி (Grant) ஆகவும், மீதி மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் அரசாங்கம் கார்ப்பொரேஷனுக்கு உதவும் என்று தெரிவிக்கப்பட்டது.

பூண்டித் தேக்கம், பொதுப்பணி இலாகா (P. W. D.) விடம் இருக்குமானால், அதற்குரிய செலவுகள் கார்ப்பொரேஷன் பணத்திலிருந்து கொடுக்கப்படவேண்டும். ஹைகோர்ட்டுத் தீர்மானத்தின்படி, 5.0 மில்லியன் கன அடி தண்ணீரை வருஷாந்தரம் நீர்ப்பாசனத்திற்காக அரசாங்கத்தினர் வைத்துக் கொள்ளுவர். அதற்குரிய வருமானம் அரசாங்கத்தைச் சாரும். மிகுதியில், எவ்வளவு நீர் நகர வசதிக்கு உரிமையாக்குவதென்பதையும், மேற்கொண்டு நீர்ப்பாசனத்திற்கு எவ்வளவு நீர் விடுவது என்பதையும் நகரசபையும் பொதுப்பணி இலாகாவும் (P. W. D.) தீர்மானிக்க வேண்டும். மேற்கொண்டுள்ள தண்ணீரை, ரெவின்யு போர்டார் மூலம் புழலேரி சோழவரம் முதலியவற்றால் சாகுபடி செய்ய நீர்ப்பாசனம் பெற்று வந்த நிலங்களுக்கு மற்றப் பயிர்கள் விளைவித்துக் கொள்ள உபயோகப்படுத்திக் கொள்ளும்படி அனுமதி கொடுக்கப்படும்.

இவ்வாறு, மேற்கொண்டு நீர்ப்பாசனத்திற்கு அளிக்கும் தண்ணீரின் வருமானத்தில் 2/3 பங்கு கார்ப்பொரேஷனுக்கு உரிமையாகும். நகரத்திற்கு உரிமையாக்கும் நீருக்கு நகரசபை

முன்போலவே 1000 கன கஜத்திற்கு ஒரு ரூபாய் வீதம் கொடுத்து வரும். அரசாங்கப் பொதுப்பணி இலாகா பூண்டித் தேக்க வேலைகளைச் செய்யும்.

இவையனைத்தையும் நகரசபை ஏற்றுக் கொண்டது; ஆனால் இப்பொழுது பெற்று வரும் 377 மிலியன் கன அடிகளுக்கே பணம் தரும் என்று கூறிற்று. அரசாங்கம் நகரசபை முதலியவற்றின் உரிமைகளைச் சரிவர விவரமாக நிர்ணயிக்க வேண்டும் என்றும் நகர சபை தீர்மானித்தது. இந்தப் பூண்டித் தேக்க ஒப்பந்தம் இன்றும் அரசாங்கத்திற்கும் நகரசபைக்கும் இடையே கடிதப் போக்குவரத்திலேயே இருக்கின்றது. பக்கிங்காம் கர்நாடிக் மில்காரர்கள் இவ்வொப்பந்தத்தில் பங்காளிகளாக இருக்க விரும்பினால் அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று அரசாங்கத்தார் அபிப்பிராயப்பட்டனர். இதற்கு நகரசபை அனுமதி தரவில்லை.

பூண்டித் தேக்கம், 2500 மிலியன் கன அடி நீர் கொள்ளும் ஒரு நீர்த்தேக்கம். இது 'ரெட்ஹில்ஸ்' ஏரியை விடச் சற்றுப் பெரியது. நீர் பரவியுள்ள இடம் $12\frac{1}{2}$ சதுர மைல். இந்தத் தேக்கம் ஏற்பட்டதால் மூன்று ஊர்கள் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன; 15 ஊர்கள் சிறிது காலம் சிறிதளவு தண்ணீரில் மூழ்கியிருக்கும்.

பூண்டித் தேக்கத்தின் முக்கிய உறுப்புக்கள்

1. குசஸ்தலையாற்றிற்குக் குறுக்கே மிதமாகச் செலவிடும் கருவி (Regulator) ஒன்று போட்டு அணைகள் கட்டி ஆற்றைத் தடுத்தல்.

2. வலப்புறம் $2\frac{1}{2}$ மைலில் திருவள்ளூர் ஊற்றுக்கோட்டைப் பாதைக்கு நேராக ஓர் மண்கரை கட்டுதல்; ரெகுலேடர் அணையோடு சேர்த்து 2500 மிலியன் கன அடி கொள்ளும் நீர்த் தேக்கம் அமைத்தல்; (இது 'ரெட்ஹில்ஸை' விடப் பெரிய நீர்த்தேக்கம்.)

3. குசஸ்தலையாற்றுக்குக் குறுக்கே ஒரு வாராவதி அமைத்தல்; (இந்த வாராவதி இல்லாவிடில் இப்போது இருக்கும் போக்குவரத்துக்கள் பாதிக்கப்படும்.)

4. இந்த வேலைகளைப் பார்க்க இருக்கும் சிப்பந்திகளுக்கு வீடுவசதிகள் அமைத்தல்.

நீர்த்தேக்கத்தின் அமைப்பு

நீர்த் தேக்கத்திற்கு வலப்புறத்திலும், பூண்டிக் குன்று களுக்குத் தென்புறத்திலும் நிலம் ஆற்றிலிருந்து சரிவாயுள்ளது. ஆதலின் தண்ணீரை நீர்த் தேக்கத்தில் வைத்துவைக்க 2½ மைல் அகலமுள்ள ஒரு மண் கரை கட்டவேண்டுவது அவசியமாயிற்று. இந்தக் கரை திருவள்ளூர் ஊற்றுக் கோட்டைப் பாதைக்குப் பக்கமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பாதைதான் நீர்த்தேக்கத்தின் கிழக்கெல்லை. இடப் புறத்தில் நிலப்பரப்பு, நீர்த் தேக்கத்தை நோக்கிச் சரிவாக இருப்பதால் அந்தப் பக்கத்திற்கு அணைவேண்டுவது இல்லை.

கீழ்க்கண்ட ஏரிகள் ஆயக் கட்டுக்களோடு நீர்த் தேக்கத்தில் சேரும் :—

1. ராமஞ்சேரி. 2. திருவளம்பாடூர் ஏரி. 3. வேம்பாக்கம் ஏரி. 4. புல்லம்பாக்கம் சிற்றேரி. 5. தங்கலூர் ஏரி. 6. கொளத்தூர் ஏரி. 7. மேலகரம் ஏரி. 8. குட்டலூர் ஏரி. 9. சிங்கனேரி. 10. பூதேரி. 11. ஆரம்பாக்கம் மங்கலேரி. இந்த ஏரிகளின் ஆயக் கட்டுக்கள் மிகவும் வளம் பொருந்தியவை என்றாலும் அவை தண்ணீரில் கிடக்கவேண்டும். திருவள்ளூர் ஊற்றுக்கோட்டைப் பாதைக்கு மத்தியில் 33-ஆம் மைலுக்கும் 35-ஆம் மைலுக்கும் நடுவிலுள்ள "ரிசர்வ்" காடு தண்ணீரில் மூழ்கியிருக்கும்.

பூண்டிக்குக் கீழே குசஸ்தலையாற்றில் இரண்டு அணைக் கட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் தாமரைப்பாக்கம் அணைக் கட்டு, வள்ளூர் அணைக்கட்டு என்பன. 1917-ஆம் ஆண்டிலிருந்து 1938-ஆம் ஆண்டு வரையில் கிடைக்கும் அதிகப்படியான நீரைப்பற்றிப் புள்ளி விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. வள்ளூருக்குக் கிடைக்கின்ற மேல்கொண்ட தண்ணீர் கடலுக்குள் செல்கின்றது. தாமரைப்பாக்கத்திலிருக்கும் அதிகப்படியான நீர் இந்த இரண்டு அணைக்கட்டுக்களுக்கும் மத்தியிலுள்ள ஆயக்கட்டுக்களாலும் உபயோகப்படுத்தப் படுகின்றது. பூண்டியின் நீர்பிடிக்கும் இடத்தின் பரப்பு, தாமரைப்பாக்கத்தின் மேல் உள்ள நீர் பிடிக்கும் பரப்பில் பதினொன்றில் பத்துப் பங்குதான் இருக்கும். ஆகவே, தாமரைப்பாக்கம் அணைக்கட்டின்

மேல் வழியும் தண்ணீரில் பதினொன்றில் பத்துப் பங்கு பூண்டித் தேக்கத்தில் சேர்க்கமுடியும் என்று கணக்கெடுத்துக் கொண்டார்கள். பெருத்த வெள்ளம் அங்கே வந்தது 1874-ல் தான். தாமரைப்பாக்கம் அணைக்கட்டில் வழிந்தோடின நீர் 1,15,000 க்யூசக்ஸ் (Cusecs) என்று மதிப்பிடப்பட்டது. புதிய பூண்டி பாரேஜ் (Baarrage) முன் இருந்ததைவிட நூற்றுக்கு 14 வீதம் அதிகமாகத் தண்ணீரை வாங்கும் வண்ணம் அமைக்கப் பட்டுள்ளது.

புள்ளி விவரங்கள் தயாரிக்கும்பொழுது நகரத்திற்கு அனுப்பப்படும் தண்ணீரும் சாகுபடிக்கு அனுப்பப்படும் தண்ணீரும் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டன.

நகரத்திற்கு 1935 லிருந்து 1939 வரையில் கொடுக்கப் பட்ட தண்ணீரின் புள்ளி விவரம் வருமாறு:—

1935	1414	மிலியன் கன அடி
1936	1418	,, ,,
1937	1383	,, ,,
1938	1492	,, ,,
1939	880	,, ,,

1938-ஆம் ஆண்டில் மழை சரிவரப் பொழியாத காரணத்தால், 1939-ஆம் ஆண்டில் தண்ணீர், நகரத்திற்குக் குறைந்த அளவிலேயே விடப்பட்டது. ஆனல், 1938-ல், 1500 மிலியன் கன அடிக்குத் தண்ணீர் விடப்பட்டது. அப்போதைய சென்னைமா நகரின் மக்கள் தொகை 7·35 லட்சம் ஆகும். எனவே தலைக்கு 35 காலன் வீதம் தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஆண்டிற்கு ஒருமுறை மக்கள் தொகை 12,000 அதிகமாகிறது. இதைக்கொண்டு தலைக்கு 35 காலன் வீதம் தண்ணீர் கொடுக்கப்பட்டால் எதிர்காலத்தில் தண்ணீரின் தேவை கீழ்க் கண்ட முறையில் அதிகமாகும்.

ஆண்டு	மக்கள் தொகை	வேண்டும் அளவு நீர். மிலியன் கன அடி	ரெவின்யூ போர்டின் எண் மிலியன் கன அடி
1938	7·35	1500	1350
1948	8·55	1745	1650
1958	9·75	1990	1950
1968	10·95	2235	2250

இதை யொட்டி நகரத்தின் தேவை 2000 மிலியன் கன அடி யாகும். இது 1958-ல் ஏற்படும் தேவையானுலும், இதையே கணக்கில் எடுத்துக்கொண்டு விடுவோம். பூண்டித் தேக்கத்தில் ஓர் ஆண்டில் தேக்கப்படும் நீர் இவ்வளவு என்பதை நிர்ண யித்தல் வேண்டும். மழையில்லாத காலத்தை இதனில் விடுத்துவிடுவோம் :

மாதம்	1938-ல் நீரின் அளவு	வருங்காலத்தின் அளவு
ஜனவரி :	120	160
பிப்ரவரி :	120	160
மார்ச்சு, ஏப்ரல், மே, ஜுன் ஜுலே, ஆகஸ்டு :	130	172
செப்டம்பர், அக்டோபர் :	125	168
நவம்பர், டிசம்பர் :	115	156

இப்போதை விட 500 மிலியன் கன அடி அதிகம் கொடுக் கப்படவேண்டி யிருக்கும்.

நீர்ப்பாசனம் :

1870-ஆம் ஆண்டிற்கு முன்னும் பின்னும் புழலேரியிலும் சோழவரம் ஏரியிலும் உள்ள ஆயக் கட்டுக்களுக்கு (7424 ஏக்கர்) நீர்ப்பாசன உரிமைகள் ஸ்திரப்படுவதற்கு 377 மிலியன் கன அடி தேவை. ரெவின்யூ போர்டார் முதல் இரண்டு போகப் பயிர்களுக்கு முறையே 22 ஏக்கரும் 11 ஏக்கரும் ஒரு மிலியன் கன அடிக்கென்று தீர்மானித்தார்கள்.

ஆயக்கட்டு 1870க்கு முன்னும் பின்னும்	முதல் போகம்	இரண்டாம் போகம்
புழலேரி	4271 ஏக்கர்	379 ஏக்கர்
சோழவரம்	3153 ,,	65 ,,
	7424 ,,	444 ,,
	22 வீதம்	11 வீதம்.

மொத்தம் 377 மி. கன. அடி. 337 மி. கூ. அ. 40 மி. கூ. அ.

ஏரியில் தண்ணீர் குறைந்தால் எவ்வளவு தண்ணீர் பாய்ச்சலுக்குக் கொடுக்கப்படும் என்று முடிவு செய்வது கடின மான விஷயம். மழை குறைவாக இருந்த காலத்தில் சாகு

படிக்குத் தண்ணீர் குறைவாகவே கொடுக்கப்பட்டது. தண்ணீர் அதிகமாக இருந்த காலத்தில் சாகுபடிக்கு வேண்டிய அளவு தண்ணீர் கொடுக்கப்பட்டது. அதிகமாகவும் குறைவாகவும் மழைபொழிந்த காலத்தினை நீக்கி, புழலேரியில் 25 அங்குலம் மழை சராசரி ஆண்டுதோறும் பொழிந்தது என்று சொல்லலாம். 1938-39-ல் 13.5" (அங்குலம்) மழைதான் பொழிந்தது. சாதாரண காலத்தில் மழை 16" (அங்குலங்களே) பொழிந்தது. 22 ஏக்கர் களுக்கு ஒரு மிலியன் கன அடி வீதம் 12·481 தண்ணீர் தலை களில் இருக்கும்" அதனோடு 161 உபயோகமுள்ள மழையையும் அது பெறுகின்றது. நல்ல மழையோடு சேர்த்துப் பயிர்களுக்கு 28·48" அளவு நீர் தலையில் வேண்டும். மழை அதிகம் இல்லாத காலங்களில் 18·48" தண்ணீராவது அறுவடைக்குப் பக்குவம் செய்யப் பயிர்களுக்கு வேண்டி யிருக்கும். இது 15 ஏக்கருக்கு ஒரு மிலியன் கன அடி வீதமாகும். எனவே 15 ஏக்கர் வீதம் 7,500 ஏக்கர்கள் கொண்ட ஆயக் கட்டுக்களுக்கு முதல் போகம் பயிருக்குத் தண்ணீர், நீர்ப்பாசனத்திற்குக் கொடுப்பதென்பது ஏற்பட்டது. இரண்டாம் போகம் பயிர், மழையில்லாத வெயிற் காலத்தில் விளைவதால் அதற்கு 30" என்று தீர்மானிக்கப் பட்டது. மொத்தம் 444 ஏக்கர் பயிருக்கு இரண்டாம் போகத் திற்கு 30" தண்ணீர் தலையில் இருக்க வேண்டுமானால் 48 மிலியன் கன அடி வேண்டும். ஆகவே மாதந்தோறும் நீர்ப் பாய்ச்சலுக்கு வேண்டும் தண்ணீர் இவ்வளவு என்பது அட்ட வணையில் தோராயமாக அறுதி யிடப்பட்டிருக்கின்றது :

முதல் பயிர்	பருவமழை	செப்டம்பரிலிருந்து ஜனவரிவரை. ஆயக்கட்டு 7500 ஏக்கர்.
செப்டம்பர்	4·6"	125 மிலியன் கன அடி.
அக்டோபர்	4·6"	125 ,, ,,
நவம்பர்	2·4"	65 ,, ,,
டிசம்பர்	2·4"	65 ,, ,,
ஜனவரி	4·6"	125 ,, ,,
	18·6"	505 ,, ,,

இரண்டாம் பயிர்	பருவ மழை	பிப்ரவரியிலிருந்து ஜூன்வரை ஆயக்கட்டு 444 ஏக்கர்
பிப்ரவரி	6″	9·6 மிலியன் கன அடி
மார்ச்சு	6″	9·6 ,,
ஏப்ரல்	6″	9·6 ,,
மே	6″	9·6 ,,
ஜூன்	6″	9·6 ,,
	30″	48·0 ,,

அட்டவணையில் மொத்தம் 553 கன அடி என்று கண்டிருக்க ரெவின்யூ போர்டார் 377 என்று கூறியுள்ளனர். அட்டவணை விவரங்கள் ஒவ்வோராண்டும் மழை தவறிய ஆண்டு என்று அனுமானித்துக்கொண்டு புள்ளி விவரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே சாதாரண காலங்களில் முதல் போகம் ஆயக்கட்டுக்கள் 7500 ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சலாம்.

புதிய நீர்த் தேக்கத்தில் புதிய நீர்ப்பாய்ச்சல் உரிமை எவருக்கும் இல்லை. பூண்டி நீர்த் தேக்கம் செய்வதெல்லாம் நகரத்தின் தண்ணீர் வசதியை அபிவிருத்தி செய்வதும், சோழவரம், புழலேரியின் கீழுள்ள தற்போதைய ஆயக்கட்டு நிலங்கள் முதலியவற்றிற்கு ஏற்பட்டிருக்கிற உரிமை அளவிற்கு வேண்டும் தண்ணீர் கொடுப்பதுமேயாகும்.

இந்தப் புதிய நீர்த்தேக்கம், 25 ஆண்டு வரையில் சென்னைமா நகரத்திற்கு நன்றாகத் தண்ணீர் வசதி செய்ய உதவுகிறது. ஆனால் மக்கள் தொகை அதிகமாகுமானால் பிற வழிகளிலிருந்தும் தண்ணீரைச் சேகரிக்கவேண்டிய அவசியம் ஏற்படும். இந்தப் புதிய திட்டத்தின் மூலம் குசஸ்தலையாற்றிலிருந்து மிகுதித் தண்ணீர் மழை குறைவான காலங்களில் உபயோகிக்கப் பயன்படும். நல்ல மழைக் காலங்களில் வரும் அதிகப்படியான தண்ணீரை உபயோகிக்க முடியாவிட்டாலும், தண்ணீர் ஆவியாக மாறும் காரணத்தால், சாதாரணப் பொருட் செலவில் அதிக நீர் சேமித்து வைக்க முடியவில்லை. இதனை இன்னும் பெருக்கவேண்டுமானால் வேறு புதிய மூலங்களை ஆராய்தல் வேண்டும். உதாரணமாக, குசஸ்தலையாற்றின் வடக்கிலுள்ள ஆரணியாற்றைப் பெருக்கலாம். இந்த ஆற்றில் ஒரு நீர்த்

தேக்கம் ஏற்படுத்தி அதிக நீர் கொடுக்கலாம். இது சாதாரண காலங்களில் வேண்டியிராது. மழை முற்றும் தவறிய காலங்களில் இஃது உபயோகப்படும். எதிர்காலத்தில் ஆரணி யாற்றினை நாம் எதிர்பார்ப்பதால் 'கேஜ்'கள் (அளவு கருவிகள்) போட்டு, எந்த அளவு தண்ணீர் இங்கிருந்து பெறலாம் என்று தெரிந்துகொள்ளலாம்.

இதற்காக, நகரசபைச் செலவில் அரசாங்கத்தார் ஆரணி யாற்றில், திருவள்ளூரிலிருந்து ஊத்துக்கோட்டை செல்லும் பாதையில் மேயர் காஸ்வே அருகில் அளவு கருவிகள் வைத்து, நீர்மட்ட அளவை 1942-1944 வரையில் மூன்று வருடக் குறிப்புகள் எடுத்திருக்கின்றார்கள். பூண்டிக்குச் செலவானது மொத்தம் 65 லக்ஷம் ரூபாய்கள்; இவற்றில் 25 லக்ஷம் கிராண்டாகக் கவர்ன்மெண்டார் கார்ப்பொரேஷனுக்குக் கொடுத்தார்கள். மிகுதி 40 லக்ஷம் ரூபாய்கள் கார்ப்பொரேஷனுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது.

பூண்டித் தேக்கத்தின் முழு உபயோகத்தையும் சென்னை நகரம் இப்பொழுது பெறவில்லை. இரண்டாவது காண்ட்யூட் ஒன்று பூண்டியிலிருந்து கொண்டுவர ஏற்பாடாகி இருக்கிறது. அப்பொழுதுதான் பூண்டியின் முழு உபயோகத்தையும் நகர சபை பெறும்.

இத்தகைய தேக்கத்தைத் தம் பெரு முயற்சியினால் ஆரம்பித்துவைத்த காலஞ்சென்ற சத்தியமூர்த்திக்குச் சென்னை நகரம் என்றும் கடமைப்பட்டதாகும். பூண்டித்தேக்க வேலை ஆரம்ப நாள்முதல், அதற்கு வேண்டிய உதவிகள் புரிந்த கார்ப்பொரேஷன் இலாகா எஞ்சினியர் ஸ்ரீ வி. முனிசாமி ஆசாரி அவர்கள் சேவையும் பாராட்டுதற்குரியது.

திருப்பாவை

பாார்க் கோதை பாடல் நூற்றேழுபத்து மூன்று; அவற்றைக் 'கோதை தமிழ்' என்று அறிஞர் போற்றுவர். கோதை என்கிற ஆண்டாள் இயற்றிய திருப்பாவை தமிழர் பாராட்டிற்குரியது. சிறந்த உபநிடதப் பொருள்களை வெளியிடும் சிறந்த நூல் அது என்று உரையாசிரியர்கள் கூறுவர். ஒவ்வொரு பாடலும் 'எம்பாவாய்' என்று முடிவதாலும், மார்கழி நோன்பு என்ற பாவை நோன்பைப் பற்றிக் கூறுவதாலும் இப் பாடல்கள் 'திருப்பாவை' எனப் பெயர்பெற்றன. இந்த நோன்பு கன்னிப் பெண்களால் நோற்கப்பட்டு வந்தது. வேதங்களில் இந்த நோன்பிற்கு ஆதாரம் இல்லை. 'மேலையார் செய்வனகள்' என்று ஆண்டாள் கூறுவதிலிருந்து இந்த நோன்பு பழங் காலத்திலிருந்து அனுஷ்டானத்திலிருந்து வந்தது என்று தெரிய வருகிறது. பாகவதத்தில், இருபத்திரண்டாவது அத்தியாயத்தில், இந் நோன்பு திருவாய்ப் பாடியிலுள்ள பஞ்சலக்ஷம் குடி ஆயர் மங்கைகளால் நோற்கப் பட்டது என்று தெரிகிறது. மார்கழி மாதத்தில், அருணோதய காலத்துக்குமுன் கோகுலத்துப் பெண்கள் யமுனை யாற்றங் கரைக்குச் சென்று நீராடி ஈர நுண் மணலால் காத்யாயனி தேவியின் உருவத்தைச் சமைத்து, அத் தேவிக்குச் சந்தனம், மலர், தூபம், பழம் முதலியன கொண்டு பூசை செய்து வந்தனர். இந்த நோன்பு நோற்பதால் தாம் விரும்பிய காதலரை அடையத் தேவி அருள்வாள் என்பது அவர்கள் நம்பிக்கை. நோன்பின் முடிவில் கண்ணபிரான் இவ் வாயர் மகளிர் முன் தோன்றி அவர்கள் கோரிக்கையைப் பூர்த்தி செய்தான் என்று பாகவதம் கூறுகிறது. ஆண்டாள் திருப்பாவையில் கூறப்படும் நோன்புக்கும் மூலம் இந் நோன்பேயாகும். ஆண்டாள் மடலூராமல் நோன்பை மேற்கொண்டது தமிழ் நூல்களில் பெண்கள் மடலூர்தல் வழக்கின்மை பற்றியே யெனலாம்.

" ... ... மானேக்கின்
அன்ன நடையா ரலரேச ஆடவர்மேல்

மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டு ''

என்னும் திருமங்கை மன்னன் வாக்கு இதை வலியுறுத்தும்.

'நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்' 'நம் பாவைக்குச் சாற்றி நீராடினுல்', 'பிள்ளைக ளெல்லோரும் பாவைக் களம் புக்கார்!' என்னும் திருப்பாவைத் தொடர்கள் பிரதிமை வைத்து வணங்கும் வழக்கைக் குறிப்பன ஆகும். திருமாலை யன்றிப் பிற தெய்வங்களை வணங்கி யறியாத ஆண்டாள் தேவி விரதத்தை ஆதாரமாகக் கொண்ட பிரபந்தத்தைப் பாடினது பொருந்துமோ வெனின், ஆண்டாள் காரிய சித்தியை உத்தேசித்தும், பண்டைய (பாகவத) வழக்கை யொட்டியுமே இவ் விரதத்தை மேற்கொண்டனள் எனலாம். 'உன்னையும் உம்பியையும் தொழுதேன்' என்று ஆண்டாள் காமனையும் அவன் தம்பியையும் தொழப்புக்கதைப் படிக்கும்பொழுது, ஆண்டாள் இந் நோன்பை மேற்கொண்டதனுல் அவளது திருமால் பக்திக்கு யாதோர் இழுக்கும் நேர்ந்தது என்று கூறுவது பொருந்தாது. மாணிக்கவாசப் பெருமானுடைய 'திருவெம்பாவை'த் தலைக் குறிப்பு 'சக்தியை வியந்தது' என்பது :

'பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்'

என்ற தொடர்கள் சக்தி வணக்கத்தைக் குறிக்கும். மாணிக்க வாசகப் பெருமானும் தேவியின் விரதத்தை மகளிர் கொண்டாடிய முறைப்படியே திருவெம்பாவையில் பெயர்த்துக் கூறுகின்ருர்.

சம்சாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; ஆண்டாள், தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். எனவே, ஆசாரியன்மார்கள் ஆண்டாளை, 'ஆழ்வார்கள் தஞ் செயலை விஞ்சும் தன்மையள்' என்ன வியந் துரைத் தார்கள். நாயகி பாவத்தில், ஆழ்வார்கள் தாமான தன்மையை விடுத்து பிராட்டிமாரின் தன்மையை மேற்கொள்ள வேண்டியிருந்தது; எனவே அவர்கள் காதல் மேட்டு மடையாகும். கோலச் சுரி சங்கை மாயன் செவ் வாயின் குணம் வினவும் ஆண்டாளின் காதல் பள்ள மடையாகும். கவி

யுகத்தை மறந்து கால வெள்ளத்தை நீந்திச் சென்று ஆண்டாள் துவாபரயுகத்திற்குச் செல்கிருள். ஸ்ரீ வில்லிபுத்தூர் திருவாய்ப் பாடியாகவும், திருமுக்குளம் முதலிய தீர்த்தங்கள் யமுனையாக வும், அங்கே தன்னுடனிருக்கும் சிறுமிகள் இடைப் பெண்களாக வும், அவர்களில் தானும் ஓர் இடைச்சியாகவும், வட பெருங் கோயிலே ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகையாகவும், 'உள்ளுறங்கி யும் நின்றவளுகிய பெருமானை நினைத் தனுசந்தித்து இவ ருள்ளம் திருவாய்ப் பாடியிலே குடி போய் பாவனு சக்தியாலே அனுபவம் முற்றி, இடை நடையும், இடை முடியும், இடைப் பேச்சும் முடை நாற்றமுமாய்த் திரிந்தது' என்று வியாக்யான கர்த்தர்கள் கூறுகின்ருர்கள். ஆண்டாளின் அனுபவம் ஒரு ஞானுத்மாவின் அனுபவவாகும். அவள் திருப்பாவை உள் ளுரைப் பொருள்கொண்டு சிறந்த உபநிடதத் தத்துவங்களைப் போதிப்பதாகும்.

'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னுளால், நீராடப் போதுவீர் போதுமினே' என்று திருப்பாவைத் தொடங்கு கிறது. சம்சாரமாகிய கடலிலே மூழ்கி உறங்கிக் கொண்டிருப் பவர்களை ஆண்டாள் துயிலுணர்த்துகிருள், துயிலெழுப்பிய பின் அவர்களை பகவானுடைய கல்யாண குணங்களின் இன்ப வெள்ளத்தில் முழுகவேண்டு மென்கிருள்.

மார்கழி மாதம் சம சீத உஷ்ணமுடைய மாதமானமை யின், ஆன்ருேர் இம் மாதத்தை இத் தகைய நோன்புகளுக்குச் சிறந்த மாதமாகக் கருதினர்போலும். ஆண்டாள் அதிகாலை யில் எழுந்திருந்து வீடு வீடாகச் சென்று இடைப் பெண்களை நீராட அழைக்கிருள். அச் சிறுமிகள் 'சீர் மல்கும் ஆய்ப் பாடிச் செல்வச் சிறுமியர்கள்' என்று அழைக்கப் படுகிருர்கள். மார் கழி நீராடுவதால் நாராயணன் தங்களுடைய கோரிக்கைகளைத் தீர்ப்பான் என்று ஆண்டாள் கூறுகிருள். பிறகு நோன்பிற் குரிய கரணங்களைப்பற்றி ஆண்டாள் நமக்குக் கூறுகிருள். நெய் பால் முதலியவற்றை உண்ணுமல் விரதமிருந்து அதிகாலையில் நீராடி, மையிட்டுக் கொள்ளுதல், மலர் சூட்டிக் கொள்ளுதல் முதலிய செய்து கொள்ளாமல், செய்யத் தகாதவைகளைச் செயல் நீக்கி, அமங்களமானவும் அனர்த்தத்தை விளைப்பனவுமாகிய சொற்களைச் சொல்லாதொழிந்து நல்ல சொற்களை வழங்கிப் பிரம்மசாரிகளுக்கும், துறவிகளுக்கும் வேண்டிய

அளவு ஐயம் இட்டு உய்யும் வழியை எண்ணிச் சந்தோஷமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு நோன்பிருந்தால் நாட்டிலுள்ள தீமை யொழிந்து, மாதம் மாரி மூன்றுமுறை பொழிந்து, பயிர்கள் செழிக்கும். பசுக்களும் வரையாது நல்ல பாலைக் கொடுக்கும் என்று ஆண்டாள் கூறுகிறாள். பிறகு மழைக்கடவுளை நோக்கி ஆண்டாள், 'கடலிலுள்ள ஜலத்தை வற்றக் குடித்து ஆகாயத்திற் சென்று பரந்து வியாபித்துக் கருநிற வண்ணனுன திருமால் நிறத்தை யொத்த மேகமாகி, அவனுடைய வலக் கையிலேயுள்ள பாஞ்சசன்னியத்தைப் போல் சத்தம் செய்து, சாரங்கமென்னும் அவனுடைய வில்லிலிருந்து புறப்படும் பாணங்கள்போல உலகத்தில் மழை பொழிவிக்க வேண்டும்' என்று கோருகிறாள்.

வீடு வீடாகச் சென்று ஆண்டாள் நீண்ட துயிலிலிருக்கும் பெண்களை நீராட அழைக்கிறாள். அவர்களுள் ஒருத்தி இன்னும் பொழுது விடியவில்லையே என்கிறாள். ஆண்டாளோ பல பிரமாணங்களால் அவர்களுக்குப் பொழுது விடிந்ததை உணர்த்துகிறாள். 'பொழுது புலர்ந்ததை உணர்ந்து பறவைகள் இரை தேடுகைக்கு எழுந்து சிலம்புகின்றன; பறவைக்கு அரசனான கருடனுடைய கோயிலில் உள்ள சாமத்தை உணர்த்தும் சங்கம் முழங்குகிறது; மகா சாதுக்களான முனிவர்களும் யோகிகளும் துயில் விழித்து அரி என்று பகவானுடைய நாமத்தை உச்சரிப்பது கேட்கிறது; பாரத்வாஜ பட்சிகள் ஒன்றோடொன்று கீசுகீசென்று பேசும் ஆரவாரத் தொனி கேட்கிறது; கழுத்திலே அணிந்துள்ள அச்சுத் தாலியும் ஆமைத் தாலியும் கலகலவென்று சப்திக்கத் தங்கள் கைகளில் மத்தைக் கொண்டு ஆயர்மகளிர் தயிர் கடையும் ஓசையும் கேட்கிறது; கீழ்த் திசையில் வானம் வெளுத்தது; எருமைகள் சிறு வீடு மேயப் புறப்பட்டுவிட்டன.'

நல்ல நித்திரையில் இருக்கும் அப்பெண்ணுக்கு எழுந்திருக்க மனம் வரவில்லை. இன்னும் சற்றுப் போர்த்துக் கொண்டு உறங்கலாம் என்று அவள் எண்ணுகிறாள். ஆண்டாளோ, எல்லாப் பெண்களும் நீராடுகைக்குப் புறப்பட்டு விட்டார்களென்றும், இவளை அழைத்துச் செல்வதற்காகவே அவர்களையும் தான் நிறுத்தி வைத்திருப்பதாகவும் கூறுகிறாள். 'மாமான் மகளே' என்று அவளை உறவு காட்டி அழைக்கிறாள். அவள்

துயிலுணர்ந்த பாடில்லை என்றறிந்ததும், 'மாமீர் அவளை யெழுப்பீர்' என்று அவள் தாயை நோக்கிக் கூறுகிறாள். அவள் ஊமையா, அன்றிச் செவிடா, அன்றி இப்பொழுதுதான் நித்திரைக்குச் சென்றாளா, அல்லது மந்திர வயத்தினாலே பெருத்த தூக்கத்திற்கு ஆளானாளோ வென்றெல்லாம் கேள்விகளைப் போடுகிறாள். கும்பகர்ணன் இறந்தபோது அவன் தூக்கத்தை இவளுக்கு உயில் எழுதி வைத்து இறந்து போனானோ என்று ஆண்டாள் நகைச் சுவை ததும்பக் கேட்பது நாம் படித்து இன்புறத்தக்க தொன்றாகும். சோம்பல் முறித்துக் கொண்டிருக்கும் மற்றொரு பெண்ணைத் துயிலுணர்த்தும் ஆண்டாள்,

'எல்லே! இளங் கிளியே இன்னம் உறங்குதியோ'

என்று கொஞ்சிப் பேசுகிறாள். படுத்துக் கொண்டிருக்கும் அவள் நெஞ்சில் இரக்க உணர்ச்சி தோன்ற,

'பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய்'

என்று கூறுவது படித்து இன்புறுதற்குரியது. சுக்கிரன் கீழ்த் திசையில் உதயம் ஆகி வியாழன் அஸ்தமித்து விட்டது என்று வானசாஸ்திரம் படித்த ஆண்டாள் கூறுகிறாள். சரித்திர அறிஞர் ஆண்டாளுடைய இவ் வாக்கு அவளுடைய காலத்தை ஒருவாறு உணர்த்த ஏதுவாக உள்ளது என்று கூறுகிறார்கள். 'மற்றப் பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் சென்றிருக்கிறார்கள். நீயும் அவர்களோடு கூடிக் குடைந்து நீராடுவதைத் தவிர்த்து உறங்கிக் கொண்டிருக்கிறாயே' என்று கூறுகிறாள். 'எங்களை நீ முன்னம் வந்து எழுப்புவதாகக் கூறி இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறாயே! உன் செய்கை நன்று நன்று!' என்று நகைக்கிறாள். இன்னம் உறங்குதியோ என்றதும், 'சில்லு சில்லென்று அழையாதேயுங்கள். இதோ வந்துவிடுகிறேன்' என்று உள்ளே இருந்து குரல் கேட்கிறது. 'உன்னுடைய உறுதிமொழியையும் பேச்சு வல்லமையும் நாங்கள் முன்னமேயே அறிவோம்' என்று வெளியில் உள்ளவர்கள் பதிலிறுக்கிறார்கள். 'நீங்கள் சொல்லுவதுபோல் நானே ஆகக்

கடவேன். இப்பொழுது உங்களுக்கு நான் செய்ய வேண்டுவ தென்ன ?' என்று கேட்கிருள். ' நீ எங்களுடன் வந்து சேர்ந்து கொள். எல்லாரும் போந்தாரா என்றும் நீயே வந்து கணக் கெண்ணிப் பார்த்துக்கொள் ' என்கிருள். இப்படியாக எல்லாப் பெண்களும் ஒன்று கூடி நந்தகோபனுடைய அரண்மனேக்கு வருகிருர்கள்.

நந்தகோபனுடைய கோயில் காப்போனேயும் வாயில் காப்போனேயும் உள்ளே தங்களேச் செல்லவிட வேண்டுமென்று கேட்கிருர்கள். கண்ணபிரான் முன்னரே தங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிஞனென்றும் விடமாட்டேன் என்று அபசகுனமாக ஒன்றும் சொல்ல வேண்டாம் என்றும் வாயில் காப்போனே வேண்டுகிருள். பிறகு உள்ளே சென்று, நந்தகோபன், யசோதை, கண்ணபிரான், பலதேவர் முதலியவர்களே எழுப்பு கிருர்கள். நந்தகோபன் முதலியவரை எழுப்பியும் கதவு திறக்கப் படாமையிஞலே, நப்பின்னேப் பிராட்டியை 'சீரார் வளே யொலிப்ப வந்து திறவாய்' என்று வேண்டுகிருர்கள். பொழுது விடிந்தது என்பதை அறிவிக்க, கோழி கூவிற்று, குயிலினங்கள் இடைவிடாமல் கூவின என்று கூறுகிருர்கள். நப்பின்னே கதவைத் திறக்கப் புகவும், கண்ணபிரான் அவளேச் சென்று கதவைத் திறக்க ஒட்டாமல் கட்டியணேத்துப் பிடித்துக் கொண்டான். ஆனல் வெளியேயுள்ள பெண்களோ, அவனே உணர்த்துதற்காக அவளே வேண்டுகிருர்கள். புருஷாகார பூதையான பிராட்டி சற்று மனம் கனிந்து கதவைத் திறப்பாள் என்று அவளேத் திரும்பவும் எழுப்புகிருர்கள். நப்பின்னேப் பிராட்டி எழுந்து வந்து அவர்களோடு கலந்துகொண்டு நாமெல் லோரும் சேர்ந்து அவனேத் துயிலுணர்த்துவோம் என்று, எல்லோருமாகக் கண்ணனுடைய வீரத்தைப் பாடித் துயி லுணர்த்துகிருர்கள். ' அரசர்கள், அகங்காரம் அடங்கினவர் களாய் உன் வாயிற்படியில் உன்னருளுக்குக் காத்திருக்கு மா போலே நாங்களும் காத்துக் கொண்டிருக்கிரேம், எங்களுக்கு அருளவேண்டும் ' என்கிருள்.

" சீரிய சிங்கா தனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய் "

என்று தாம் வந்த காரியத்தைத் தானே அறிந்து அருள வேண் டும் என்று இறைவனே வேண்டுகிருர்கள். ' உன்னுடைய திரு

வடியையே பறையாகக் கோரி வந்தோம். எங்களுக்கு அருள வேண்டும்' என்கிருர்கள். கண்ணன், 'நீங்கள் வந்த காரியம் யாது?' என வினவ, பெண்கள், 'மழை பெய்விக்க வேண்டி நாங்கள் நோற்கும் நோன்பிற்கு நீ உபகரணங்களை அருளவேண்டும்' என்கிருர்கள். சங்கு, பறை, கோல விளக்கு, கொடி, விதானம், பல்லாண்டு பாடுவோர் முதலானேரை அருளவேண்டுமென்கிருர்கள். நோன்பு நோற்ற பிறகு ஆடையாபரணங்களால் தங்களை அலங்கரித்துக்கொண்டு, கூடியிருந்து பாற்சோறு உண்ணவேண்டுமென்கிருர்கள். இறைவனுடைய திருவடித் தாமரைகளுக்கு நித்திய கைங்கரியம் செய்வதே தங்கள் முக்கிய நோக்கமென்று கூறி, அந்தக் கோரிக்கையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளோடு திருப்பாவை முடிகிறது.

ஆண்டாளுடைய திருப்பாவை, வைணவ மக்களால் பெரிதும் ஓதப்பட்டுவரும் ஒரு பிரபந்தமாகும். ஆண்டாள் திருப்பாவையையொட்டி மாணிக்கவாசகப் பெருமான், 'திருவெம்பாவை' ஒன்றைப் பாடியுள்ளார். இவ்விரண்டிற்கும் உள்ள ஒற்றுமைகள் பல. மாணிக்கவாசகப் பெருமானும் மார்கழி நீராட்டத்தைப்பற்றிக் கூறுகிருர். இருவருடைய மழைப் பாட்டும் ஒன்ருகவேயுள்ளது. இவ்விரண்டு பிரபந்தங்களும் தமிழருடைய அழியா நிதியங்கள்.

திருப்பாவை, திருவெம்பாவை என்னும் பிரபந்தங்கள், 'பாவைப் பாட்டு' என்று வழங்கி வந்தன. புத்த பிரானைப் பற்றிய பாவைப் பாட்டு ஒன்று யாப்பருங்கல விருத்தியின் இறுதிச் சூத்திர உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. சமணர் மார்கழி நோன்பைக் கொண்டாடுதற்கென்று பாராயணம் செய்யும் திருவெம்பாவை ஒன்றும் உள்ளது. கடைச் சங்க நூலாகிய பரிபாடல்,

> "தாயருகா நின்று தவத்தைந் நீராடல்
> நீயுரைத்தி வையை நதி"

என்று, சங்க காலத்தில் கன்னிப் பெண்கள் வையை நீராடி, நோன்பு நோற்கும் வழக்கினைக் கூறும். இந்நீராடல் தைமாதத்தில் நிகழ்வதாக அது கூறும். மலையாள நாட்டில், மார்கழித் திருவாதிரையைக் கடைசி நாளாகக் கொண்டு இதுபோன்ற திருவிழா வொன்று இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத் திருவிழா பண்டைத் தமிழர் வழக்கையொட்டியது என்று கூறலாம்.

ஆண்டாள் திருப்பாவையும் அத்தகைய திருவிழாவை யொட்டியதே என்று சொன்னேம். ஆண்டாளின் தோற்றம் தெய்வத் தோற்றம். அவள் திருப்பாவை, கவிதைக் கடல். அவளுடைய உவமைகள் நமக்குப் பொழுது புலர்வைத் தெளி வாக உணர்த்துகின்றன. உலகத்திற்கு விடிவெள்ளிபோல் தோன்றிய ஆண்டாள், விடிவை வேண்டி உலகைத் துயி லெழுப்புகிருள். இறைவனுடைய அருள்மழையையே அவள் வேண்டுகிருள். தான் பெற்ற இன்பம் இவ்வையம் பெற வேண்டி, 'எம்மை நீராட்டேலோ' என்று நாட்டுக்காக மன் ருடுகிருள். அகவிருளையும் புறவிருளையும் ஒருங்கே போக்க வல்லது ஆண்டாள் திருப்பாவை.

"... ... ...கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதுவும் வம்பு"

என்று ஒரு வைணவப் பெரியார் கூறுகிருர். "மாரி மலை முழைஞ்சில்", "ஆழி மழைக்கண்ணு" என்ற பாடல்கள் உயர்ந்த கவிச்சித்திரங்கள்.

"மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே"

என்ற பாடலிலே சிங்கத்தின் கமனத்தைக் காண்கிறேம். சிங்க கர்ஜனை நமது காதில் ஒலிக்கிறது. பாட்டின் வேகம் நமது உள்ளத்தைத் தட்டி யெழுப்புகிறது.

மாணிக்கவாசகப் பெருமானுடைய திருவெம்பாவையையும் ஆண்டாள் திருப்பாவையையும் ஒத்து நோக்குவோமானல் அவற்றுள் கருத்து ஒற்றுமை இருப்பதைக் காணலாம்.

"நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

என்ற திருப்பாவையோடு,

"போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்"

என்ற திருவெம்பாவையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

" நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணமூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் "

என்பது திருப்பாவை ;

" ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான் "

என்பது திருவெம்பாவை.

" மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ "

என்ற திருவெம்பாவையோடு,

" எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய் "

என்ற திருப்பாவைச் சொற்றொடர்களை ஒப்பிட்டுப்பாருங்கள்.

" எல்லே யிளங்கிளியே " என்ற திருப்பாவையோடு முழுதும் ஒத்திருக்கும், " ஒண்ணித் திலநகையாய் " என்ற பாடலைப் படிக்கும் நாம் இவ்விரண்டு பிரபந்தங்களுக்கும் உள்ள ஒற்றுமையை நன்கு உணர்கிறோம். காலை வர்ணனையும், நகைச்சுவை மிகுந்த பாடல்களும் இவைகளில் காணப்படுவது படித்து இன்புறத்தக்கனவாம். இந்த இரண்டு பிரபந்தங்களும் தமிழருடைய அழியா நிதிகள். ஆகவே இவற்றைப் போற்றுவோமாக !